T. 2421

# திரு அருட்பா

MANUSCRIPTS LIBRARY MADRAS 24

பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு

௨-வது புத்தகம்

வசனப் பகுதி



வெளியிடுவோர் :

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

பவழக்காரத் தெரு : : சென்னை

1933

C.F. Old 506, New 264—83,619—23-11-56.

**LIBRARY.**

**Book No.**

**Date of purchase** **Price**

**This book should be returned on or before the date last marked below :—**

30.3.66

# திரு அருட்பா

## வசனப் பகுதி

முதற் பதிப்பு ... 23-5-1931
இரண்டாம் பதிப்பு ... 22-4-1934

[All Rights Reserved]

THE PROGRESSIVE PRINTERS, MADRAS.

உ

திருச்சிற்றம்பலம்

# திரு அருட்பிரகாச வள்ளலார்

என்னும்

## சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# திரு அருட்பா

## உ. வசனப் பகுதி

இரண்டாம் பதிப்பு

சென்னை

பி.எ., எம். எல்., (அட்வொகேட்)

**ஆ. பாலகிருஷ்ண பிள்ளை அவர்கள்**

சுவாமிகள் தெய்வத் திருக்கரத்தால் எழுதிய மூல ஏடுகள் சுவாமிகளிடம் தொண்டு பூண்டு அவர்களை அடுத்திருந்த அன்பர்களின் கை எழுத்துப் பிரதிகள் முதலியவற்றினின்றும் எடுத்து ஆராய்ந்து தொகுத்துக் குறிப்புக்கள் எழுதிய

இது

சென்னை ஆசிரியர் நூற்பதிப்புக் கழகத்தாரால்

அடக்க விலைப் பதிப்பாக

அச்சிட்டு வெளிப்படுத்தப்பட் டிருக்கிறது.

---

கலியுகாதி௵ ௫௦௩௫-ல் நிகழும் பவ௵

சித்திரை௴ ௧௦உ: சன்மார்க்க ஆண்டு ௬௭.

22-4-1934

# எச்சரிக்கை

வருஷக் கணக்கான பெருமுயற்சியாலும் பேருழைப்பாலும் பெருஞ்செலவாலும் எய்திய இப்பதிப்பின் பலப்பல சிறப்பியல்புகளைச் சிலர் கவர்ந்து வருவதை இங்குக் கண்டிக்க வேண்டிய இன்றியமையாமையைக் குறித்துப் பெரு வருத்தமுண்டாகிறது. அவர்கள் அவற்றைத் தங்கள் உழைப்பால் அடைவித்ததாகப் பாசாங்கு செய்தும் அவற்ருேடு சிற்சில சமயம் தங்கள் சொந்தச் சரக்கைக் கலந்து அவற்றைத் திரிபுபடுத்தியும் பொது ஜனங்களை ஏமாற்றி வருவதுமல்லாமல், அதனுல் இப்பதிப்பிற் குப் பொருள் நஷ்டத்தை உண்டாக்குகிருர் கள். இந்த இழிவான துர்ச்செய்கை சாதா ரண மனுஷத்தனத்திற்கும் நல்லொழுக்கத் திற்கும் சட்டத்திற்கும் ஒருங்கே விரோத மானது. ஆதலால், இப்பதிப்பின் எல்லா உரிமைகளுக்கும் உரிய இதன் பதிப்பாசிரி யர் அவ்வுரிமைகளைக் காப்பாற்றிக்கொள் வதற்கான நடவடிக்கையை வேண்டும் போது எடுத்துக்கொள்வார் என்று இதன் மூலம் எச்சரிக்கை செய்யப்படுகிறது.

## ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள்
## கையெழுத்தின் ஸ்வரூபம்



[இது இறுக்கம் ஸ்ரீ இரத்தின முதலியார்க்கு எழுதிய 10-வது திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்டது—திருமுகப்பகுதி 49-ம் பக்கம் பார்க்க.]

ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் திருக்கரத்தால் எழுதிய
திருப்பாடல்களின் ஸ்வரூபம்

க



[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]

# ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் திருக்கரத்தால் எழுதிய திருப்பாடல்களின் ஸ்வரூபம்

க

திருச்சிற்றம்பலம்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

திருச்சிற்றம்பலம்

# பொருளடக்கம்


| எண் பிரிவு | எண் | உட்பிரிவு | | பக்கம் |
|---|---|---|---|---|
| பாயிரம் | | | | |
| | i. | திருநாமத்தின் ஸ்வரூபம் | ... | 5 |
| | ii. | திருப்பாடல்களின் ஸ்வரூபம் | ... | 6 |
| | iii. | வசனப்பகுதி முன்னுரை | ... | 9 |
| | iv. | பிரார்த்தனை | ... | 31 |
| | v. | ஆசாரிய ஸ்துதி | ... | 32 |
| | vi. | திரு அருட்பா மகிமை | ... | 32 |
| க. மநுமுறைகண்ட வாசகம் | | | .... | 1 |
| உ. ஜீவகாருண்ய ஒழுக்கம் | | | | |
| | | முதற் பிரிவு | ... | 106 |
| | | இரண்டாவது பிரிவு | ... | 155 |
| | | மூன்றாவது பிரிவு | ... | 169 |
| ௩. சன்மார்க்க விண்ணப்பங்கள் | | | | |
| | 1. | சிறு விண்ணப்பம் | ... | 18[illegible] |
| | 2. | பெரு விண்ணப்பம் | ... | 197 |
| | 3. | ஞான விண்ணப்பம் | ... | 212 |
| | 4. | சங்க விண்ணப்பம் | ... | 221 |
| அநுபந்தம் | | | | |
| | 1. | மநுநீதிகண்ட புராணம் | ... | 225 |
| | 2. | மநுநீதிகண்ட புராண வசனம் | ... | 236 |
| | 3. | மநுச்சோழ சரிதக் கல்வெட்டு | ... | 241 |
| | 4. | மூவர் அம்மானைப் பாடல் | ... | 242 |
| | 5. | தியாகராஜர் குறவஞ்சி | ... | 243 |
| | 6. | ஜீவகாருண்யஒழுக்கம் முதற் பதிப்பின் தலைப்பும் அறிவிப்பும் | | 245 |
| | 7. | சிறு விண்ணப்பத்தின் ஸ்வரூபம் | ... | 247 |
| | 8. | பிரயோக விளக்கம் | ... | 254 |
| | 9. | இப்பதிப்பின் சிறப்பு | ... | 256 |

# வசனப்பகுதி முன்னுரை

ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளது திருப்பாடல்கள் கல்நெஞ்சத்தையும் கரைத்து உருக்கும் தன்மையனவாக ஆயிரக் கணக்கில் அபரிமிதமாய் இருப்பதால், அவர்களுடைய வசன ரூபமான நூல்கள் ஏற்ற பிரசித்தியில்லாமல் இருக்கின்றன. 'திரு அருட்பா'ப் பாடல்களைக் கேள்வியால் மட்டும் அறிந்திருப்பவர்க்கு இவ் வசன நூல்களின் இருப்பேகூடத் தெரியாதுபோலும். இவற்றுள், மநுமுறை கண்ட வாசகத்தை நடையளவில் தமிழ் உபாத்தியாயர்களும் மாணாக்கர்களும் ஜீவகாருண்ய ஒழுக்கத்தைப் பொருளளவில் சன்மார்க்க அன்பர்களில் சிறந்த விசேஷப் படிப்புள்ளவர்களும் ஒருவாறு தெரிந்திருந்தாலும், அவர்களது சன்மார்க்க விண்ணப்பங்களை எவ்வளவினவென்று அறிந்த தமிழ் அறிஞர்களும் ஓதும் சன்மார்க்க அன்பர்களும் மிகச் சிலரே யாவர். வருத்தந்தரும் இந் நிலைமையின் காரணங்களை ஆராய்ந்து விவகரிப்பதைக் காட்டிலும், இவ் வசன நூல்களைப் பலவகையிலும் நன்றாக அறிந்து ஓதி உணர்வதிலுள்ள பயனைக் குறிப்பதே தக்க பணியாகும்.

தவஞ் செய்து பெற்ற தம் குமாரனது தேர்க் காலில் அகப்பட்டு இறந்த சேங்கன்றின் கொலைப் பாதகத்திற்காக, அக் குமாரனைத் தமது தேர்க் காலில் ஊர்ந்து நியாயஞ் செய்த சோழர்பெருமானுடைய செயற்கருஞ் செயல் தமிழ் நாட்டில் தொன்றுதொட்டுப் போற்றப்பட்டு வருகிற தொன்றாம். 1 ஆகவே, இவ் வருஞ் செயலை விஷயமாகக் கொண்டு அவ்வக் காலங்களில் பற்பல சிறு நூல்களும் பெரு நூல்களும் உண்டா

1. பாயிரம் 2-வது அடிக்குறிப்பையும் (அநுபந்தம்) 484-வது அடிக் குறிப்பையும் பார்க்க.

யிருத்தல் வேண்டும். அவற்றுள் இன்னும் உயிரோடிருப்பன சிலவேயாக,[2] வழங்கிவருவன இரண்டே போலும். இவை மநுநீதி கண்ட புராணமும் மநுமுறை கண்ட வாசகமுமே யாம். மநுமுறை கண்ட வாசகமானது, பலருக்கும் உபயோக மாகச் சாஸ்திர விளக்கச் சங்கத்தார் கேட்டுக்கொண்டபடி, மநுநீதிகண்ட புராணத்தை விரிவுள்ள வாசக நடையாகச் சுவாமிகளால் எழுதப்பட்டது என்று தெரிகிறது.[3] பெரிய

---

2. தஞ்சாவூர் அரண்மனைப் புத்தக நிலையத்தில் இருக்கும் மூன்று சுவடிகளில் ஒன்று தேரூர்ந்த சோழ புராணம் என்பது: ‘இது மனுச்சோழன் தன் மகனால் இறந்த பசுங்கன்றினுக்காகத் தன் மகனைத் திருவாரூர் தெருவிற் கிடத்தித் தேரூர்ந்ததைக் கூறுவது. விருத்தமும் வண்ணமும் பிறவும் விரவி வர சாதாரண நடையில் எழுதப்பட்டுள்ளது. . . . ஆசிரியர் பெயர் முதலியவை தெரியவில்லை.’

இரண்டாவது தேரூர்ந்த சோழன் கதை என்பது: ‘இது திருவாரூரில் அரசு புரிந்த மனுச்சோழன் தன் மகன் பசுங்கன்றைக்கொன்ற குற்றத்திற்காக அவனைத் தேர்க்காலில் ஊர்ந்து மனுமுறை செய்த சரித்திரத்தைக் கூறும் வசனநூல். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அச்சிடப்படவில்லை.’

மற்றொன்று தியாகராஜர் குறவஞ்சி என்பது: ‘இது பல துறைகளின் மூலமாகத் திருவாரூரில் வீற்றிருக்கின்ற தியாகராஜப் பெருமானுடைய பெருமையை விளக்குவது....இது மகாராட்டிர அரசன் ஷாஜி மகராஜன் காலத்திற் செய்யப்பட்டிருக்கிறது. இவரது காலம் 1684-1714 A. D. இதனைச் செய்தவர் பெயர் முதலியவை தெரியவில்லை. இது அச்சிடப்படவில்லை.’ இதனிடையே கூறப்பட்டிருக்கிற மனுச்சோழ சரித்திரத்தை அநுபந்தத்திற் பார்க்க.

திருவாரூர் தியாகராஜர் கோவில் சுவரில் பொறித்துள்ள இம் மநுச்சோழ சரித்திரத்தையும், மூவர் அம்மானையில் உள்ள இதைச் சார்ந்த பாடலையும் அநுபந்தத்தில் காண்க.

3. நூல் 1-வது அடிக் குறிப்பைப் பார்க்க.

புராணத்துள் நகரச் சிறப்பை இச் சோழர்பெருமானது சரித மூலமாக் விளக்கியிருப்பதால், அந் நகரச் சிறப்புப் படலம் மநு நீதிகண்ட புராணம் என்று வழங்கி வந்திருக்கின்றது.[4] அதுவே இவ்வாசகத்தின் முதனூல் போலும். ஐம்பது செய்யுட்களை கொண்ட அப் புராணமும் அதனை வசன ரூபமாக ஸ்ரீ திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் எழுதியிருப்பதும் இந்த நூலின் அநுபந்தத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

வாசகத்தின் கதைப்போக்கிற்கும் புராணத்தில் சொல்லப்பட்டிருப்பதற்கும் சிற்சில வேறுபாடுகள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை: அரசிளங்குமரன் வீதி உலாப் போனதாகப் புராணங் கூற,[5] அவன் சிவதரிசனம் செய்யப் போனதாக வாசகம் கூறும்;[6] தன் தேர்க் காலில் அகப்பட்டிறந்த கன்றைக் கண்டு வருந்தும் தாய்ப்பசுவைப் பார்த்தபின் வீதிவிடங்கன் பிராயச்சித்தம் செய்துகொள்ளச் சென்றான் என்று புராணம் கூற,[7] கன்றிறந்து கிடக்கும் இடத்தை விட்டு வீதிவிடங்கன் போனபின்னரே தாய்ப்பசு கன்றைத் தேடி வந்து கண்டு வருந்தியது என்று வாசகங் கூறும்;[8] தமது குமாரனுக்குப் பதிலாகத் தன் உயிரை ஈந்த தமது மந்திரியின் உயிர்க்கு ஈடாகத் தம் உயிரை அரசர் கொடுக்கத் துணிந்ததாக வாசகம் கூற,[9] இது குறித்துப் புராணம் எதுவும் கூறாது. வாசகத்திற்கும் புராணத்திற்கும் இன்னும் சில வேறுபாடுகள் இருந்தாலும் அவையெல்லாம் ஒருவாறு விரித்துக் கூறுதல் என்னும் உத்தியின்பாற் படும்.

---

4. (அநுபந்தம்) 476-வது அடிக் குறிப்பையும், (புராணம்) 227-வது பக்கத்தையும் பார்க்க.

5. (புராண வசனம்) பக்கம், 237. 6. பக்கம், 20.

7. (புராணம்) பக்கம், 229, 230.

8. பக்கம், 42. 9. பக்கம், 84, 95.

அவற்றுள் முக்கியமாவன : சோழநாட்டு வளப்பம், திருவாரூர்ச் சிறப்பு, மநுச்சோழரது குணாதிசயங்கள், அவரது அரசாட்சியின் தூய்மை, அவரது புத்திரப்பேறு, வீதிவிடங்கன் தேர் ஊர்ந்து செல்லும் காட்சி, திருவாரூர் ஸ்திரீ புருஷ ஜனங்களின் தெளிவு, வீதிவிடங்கன் துயரம், பசுவின் துயரம், அரசரின் துயரம், அரசரின் நியாய விசாரணை, கலாவல்லபனின் அருஞ் செயல், வீதிவிடங்கன் பிரார்த்தனை, அரசரின் பிரார்த்தனை, அரசரின் அருஞ்செயல், கடவுட்காட்சி, அரசரின் ஆநந்தாநுபவம், இறந்தவர் உயிர் பெற்றெழுதல், முடிவு.

இவ் வேறுபாடுகளும் இவ் விரிவுகளும் ஓர் நூலாசிரியர் என்ற முறையில் சுவாமிகளால் புனைந்து கூறப்பட்டனவா அல்லது அவற்றிற்கு எந்த அளவிலாவது வேறு பண்டை நூல்களில் ஆதாரம் இருந்தனவா என்பதை அந் நூல்களது ஆராய்ச்சி இன்றிச் சொல்வது கூடாது[10]. அங்ஙனம் அந் நூல்களில் முழு ஆதாரம் இருப்பதாக மதித்துக்கொண்டாலும், அவற்றுள் பெரிய புராண வரலாற்றுக்கும் குறிப்புக்கும் வேறுபட்ட சிலவற்றை வாசகத்தில் போற்றிக்கொண்டிருப்பது கவனிக்கத்தக்கது[11]. இங்ஙனம் போற்றிக்கொண்டிருப்பதன் காரணத்தை அறிய விரும்பும் எவரும் வாசகத்

---

10. தேரூர்ந்த சோழ புராணத்தையும் தேரூர்ந்த சோழன் கதையையும் ஆராய்ச்சி செய்ய இது வரையில் சமயம் வாய்க்கவில்லை. பாயிரம் 2-வது அடிக் குறிப்பையும் அநுபந்தத்தையும் பார்க்க.

11. பிற்காலத்தில் சுவாமிகள் ஸ்தாபித்த சுத்த சமரச சுத்த சன்மார்க்கம் என்னும் சத்தியப் பொது நெறியின் சில முதன்மையான அம்சங்கள் முதனூலொன்றைப் பின்பற்றிய இவ்வாசகத்தில் இடம் பெற்றிருப்பது சுவாமிகளது மற்ற நூல்களைப் பயின்றவர்களுக்குத் தெரியாது போகாது.

தின் முக்கியமான விஷயமாகிய அரசரின் நியாய விசாரணையி னின்றும் அதை ஒருவாறு புலப்படுத்திக் கொள்ளலாம்.[12]

ஆறறிவுள்ள ஆண்மக்களிற் சிறந்த அரசிளங்குமரன் உயர் பிறப்பின னாதலாலும், அவன் தெய்வ வழிபாடு செய்யச் சென்றன னாதலாலும், இறந்தது சிற்றறிவே உள்ள சேங்கன்றாதலாலும், அவ்விறப்பும் ஊழ்வினை காரணமாக நேரிட்டதாதலாலும், அதனால் வந்த பாவம் பிராயச்சித்தத்தால் நீரக் கூடிய தாதலாலும், அதற்காக அவ் வரசகுமாரனை உயிரிழக்கச் செய்வது நியாயமற்றது என்பது பூர்வ பக்ஷம்.

தெய்வ வழிபாடு செய்வதற்குத் தேரூர்ந்து போவது அறிவுள்ள செயல் அல்ல என்றும்; அங்ஙனம் சென்றபோது பசுவின் கன்றைக் கொன்றது செருக்கினால் மறதிபற்றி நிகழ்ந்த கொடுஞ் செய்கை என்றும்; காமக்குரோதாதிகளால் பாவங்களைச் செய்வதற்கு ஜீவனே ஆகாமிய கர்த்தா வென்று சொல்கிற உத்தம மார்க்கத்தை யுடையோர் கன்றிறந்ததற்கு ஊழ்வினையைக் காரணமாகக் கொள்ளமாட்டார்களென்றும்; பிராயச்சித்தம் அநித்தியமாகிய தேகத்தில் அபிமானமும் அசுத்தமாகிய பிரபஞ்சத்தில் ஆசையும் வைத்த கருமிகளுக்கே தகுதியல்லது, நித்தியமாகிய சிவத்தில் அபிமானமும் சுத்தமாகிய சிவபோகத்தில் ஆசையும் வைத்தவர்களுக்குத் தக்கதல்ல வென்றும்; உயிர்களெல்லாம் சிற்சத்தியின் உருவமாதலாலும், எல்லா உயிர்களுக்கும் இறைவனே தனுகரணங்களைக் கொடுத்தலாலும், அவனது சிற்சத்தியாகிய உயிரினை அவன் கொடுத்தருளிய உடம்பில் நின்றும் நீக்குதல் நினைக்கப்படாத அபராத மென்றும்; எந்தெந்த உயிர்களும் இயல்பினா லல்லாமல் இமிசையினால் உடம்பை விட்டுப் பிரியும்படி நேரிட்டால்

12. இம் முன்னுரையிலும் நூலிலும் காணும் சிற்சில சொற்களின் பிரயோகத்தை அநுபந்தத்திற் காண்க.

அந்தந்த உயிர்களுக்கு அந்தந்த உடம்புகளை விட்டு நீங்கும் போது உண்டாகும் வருத்தமும் அந்தந்த உயிர்களுக்கு இறந்த உடனே மறு பிறப்பினால் உண்டாகும் வருத்தமும் மிகக் கொடுமையானவை என்றும்; ஓர் உயிரைப் பிறப்பிக்கும் சுதந்தரமுடைய இறைவன் ஒருவனே அதை இறப்பிக்கவும் சுதந்தரமுடையவனல்லது, ஓர் உயிரைப் பிறப்பிக்கும் சுதந்தரமில்லாத நமக்கு ஓர் உயிரை இறப்பிக்கும் சுதந்தரமும் இல்லை என்றும்; உயிர்க்கொலையாகிய பாவ நிவர்த்திக்கு, பரமேசுவரன் ஆன்மாக்கள்தோறும் விகற்பமில்லாமல் நிறைந்திருக்கிறபடியால் மாயையின் காரியமாகி வேறுபட்ட அறிவை நோக்காமல் அப் பரமேசுவரனை நோக்கி, எல்லா உயிர்களையும் சமமாக எண்ணி நடக்கவேண்டுமென்றும்; ஆதலால், கொலைப் பாதகம் செய்த புத்திரனைப் பிராயச்சித்தம் செய்வித்தால், மீளா நரகத்தில் அப் புத்திரனை விழுத்துவதுமன்றி அவ்வாறு நியாயஞ் செய்த அரசரும் விழுந்து வருந்துவது நிச்சயமென்றும்; பசுவின் கன்றைக் கொன்ற பாதகத்திற்கு ஈடாகப் புத்திரன் உயிரை இழக்க வைப்பதே அரசநீதி என்றும்—விவரித்ததே முடிவாகும்.

இங்ஙனம் உயிர்களின் தன்மையையும், உயிர்களுக்குத் தனுகரணங்களை அடைவிக்கும் நோக்கத்தையும் கர்த்தாவையும், இறப்பின்கண் எல்லா உயிர்களுக்கும் உள்ள சமத்துவத்தையும், உயிர்க்கொலையின் ஒன்றான விலக்கையும், மனிதப் பிறப்பின் ஆன்ம சுதந்தரத்தையும், ஊழ் பிராரத்தம் பிராயச்சித்தம் முதலியவற்றின் அதிநுட்பமான ஏமாற்றல்களையும் வாசகத்தில் அறிந்தோர்கள், உயிர்களின் பசித்துன்ப முதலிய கொடுமையையும், அதை நீக்குதலே அறிவு விளங்கிய ஜீவர்களின் மேலான கடவுள் வழிபாடென்பதையும், எந்தக் காரணத்தை முன்னிட்டும் கொலைத் துன்பத்தை விளைத்த புலால்

முதலியவற்றால் உயிர்களின் பசித்துன்பத்தை நீக்குதல் உயிர்களின் ஆன்மநேய ஒருமைப்பாட் டுரிமைக்கு முற்றிலும் மூரஞ்ஞது என்பதையும் முறைப்படுத்தி உபதேசிக்கும் சுவாமிகளது ஜீவகாருண்ய ஒழுக்கம் என்னும் அடுத்த நூலைப் பயில்வதற்குப் பலவகையில் தகுதியுள்ளவர்கள் ஆவார்கள் என்பதில் ஐயமில்லை.

மநுமுறைகண்ட வாசகத்தைச் சுவாமிகள் பிறர் வேண்டுகோட் கிணங்கி, முதனூல் ஒன்றைப் பின்பற்றி—ஒருவாறு வித்துவான் என்னும் தன்மையில்—இயற்றினார்கள் என்று கூறலாம். ஆனால் தமது வாழ்க்கையில் தாம் ஓர் வித்துவானாக விளங்குவதைக் குறித்துச் சுவாமிகள் ஏகதேசமும் கருதியவர்களல்லர் என்பது நிச்சயம். சன்மார்க்க முகங்கொண்டிருக்கும் பரந்த உலகத்தின் பொல்லாத காலம் அவர்கள் ஒருகால் அங்ஙனம் கருதி யிருப்பார்களானால், தமிழ்நாட்டில் சென்ற நூற்றாண்டின் இலக்கிய இலக்கண மஹா வித்துவான் என்ற சிறப்புப் பெயர் வேறு எவர்க்கும் வந்திராது.13 இது

---

13. "(மஹா வித்துவான்) மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் (ஆறுமுக) நாவலர் அவர்களிடத்தில் ஒரு சமயம் பேசிக்கொண்டிருந்த பொழுது 'இராமலிங்கசுவாமிகள் துறவடையாமல் நாவலர் வித்துவான் முதலிய பெயர்களை ஏற்றிருந்தால் தங்களுக்கு இலக்கண வித்துவான் என்றும் எனக்கு இலக்கிய வித்துவான் என்றும் பெயர் கிடைத்திராது' என்று சொன்னதாக வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்து பாலியத்தில் சுவாமிகள் மேட்டுக் குப்பத்திலிருக்கும்போது குருக்கள் வீட்டில் தங்கி பலருக்கும் தொண்டு செய்யும் பாக்கியம் பெற்ற முத்து அய்யர் என்பவர் சொன்னதாக ஞாபகம்."—அய்யர் ஊழியன், கீழ்வேளூர் ஸ்ரீ அ. அருணாசல முதலியார்.

வித்துவான் தன்மையிலுள்ள சுவாமிகளது இலக்கிய இலக்கணக் கல்விச்செறிவை உணர விரும்புபவர்கள் வியாக்கியானப் பகுதி, திருவருட்பா வரலாறு, திருமுகப்பகுதி 89-வது பக்கம் முதலியவற்றைப் பார்ப்பார்களாக.

இப்படியாக, மற்றுச் சுவாமிகள் கருதியதுதான் என்ன என்றால்: இது குறித்துத் தாம் அபேத நேயம் பாராட்டிய ஓரன்பருக்கு அவர்கள் எழுதி யிருப்பதை உணர்வோமாக:—

பிரம விஷ்ணு ருத்திராதிகளுடைய பதங்களும் அந்தக் கர்த்தாக்களும் அவர்களால் சிருட்டி திதி சங்காரம் செய்யப்பட்டு வருகிற தேகாதி பிரபஞ்சங்களும் அனித்தியம். ஆகலில் நித்தியமாகியும் என்றும் ஒரு தன்மை யுள்ளதாகியும் சச்சிதானந்த வடிவமாகியும் அகண்ட பரிபூரண வஸ்துவாகியும் விளங்கிய சிவமே நமக்குப் பொருள். அன்றியும், தாய் தந்தை குரு தெய்வம் சிநேகர் உறவினர் முதலியவர்களும் மேற்குறித்த சிவத்தின் திருவருளே யல்லது வேறில்லை. நாம் பல சனனங்களையுந் தப்பி மேலான இந்த மனிதப் பிறவி யெடுத்தது சிவத்தின் திருவருளைப் பெறுவதற்கே. எவ்வகைப் பிரயாசத்தினுலாவது அந்த அருளை அடைய வேண்டும். அந்த அருள் எவ்வகையால் வருமென்றால்— எல்லா உயிர்களிடத்திலும் தயவும் பிரபஞ்சத்தில் வெறுப்பும் சிவத்தினிடத்தில் அன்பும் மாறாது நம்மிடத்திருந்தால் அவ்வருள் நம்மை யடையும். நாமும் அதனை யடைந்து எதிரற்ற சுகத்தி லிருப்போம்.14

அரிபிரமாதிகள் எத்துணையும் பெறுதற்கு அரியதாகிய சிவ சம்பந்தத்தை முன் செய்த தவப் பயனுற் பெற்றனம். அங்ஙனம் பெற்ற நாம் சிவாநந்த போக சாத்தியத்தைக் காலமுண்டாக அடைதல் வேண்டும்.15

ஸ்வயம்பிரகாசமான இவ்வாசகங்களை விளக்க வேண்டுவோரும் விளக்க வருவோரும் முக்காலத்தும் இல்லை என்னலாம்.

அருள் விஷயத்தில் அவர்களது கருத்து இங்ஙனமானல், இவ் வுலகத்தைப் பம்பரமாக ஆட்டிவைக்கும் பொருள் விஷ

14. திருமுகப் பகுதி, பக்கம், 35. 15. திருமுகப் பகுதி, பக்கம், 69.

யத்தில் அவர்களது கருத்து எதுவோ என்றால்: கோடீசுவரர் லக்ஷாதிபதிகள் என்று போற்றப்பட்ட இரண்டொருவரைக் குறித்துச் சுவாமிகள் சொல்ல நேர்ந்ததைக் கவனிப்போமாக:—

இவரைப்போல் ஆயிரம் பணக்காரர்களை அரை நிமிடத்தில் அதிட்டிக்கலாம். நமக்கு இவர்களெல்லாம் ஒரு திரண மாகத் தோற்றுகின்றார்கள். இவர்கள் லக்ஷியம் வேண்டுவ தில்லை. நாம் சிவபெருமான் திருவடிகளுக்கு அடிமை யானோம். நமக்கு ஒரு விதத்தாலும் குறைவில்லை. இது உண்மை.

ஐயா! நானோ புத்தி தெரிந்த நாள் தொடங்கி இதுபரியந்தமும் இந்தப் பிணவுடம்பும் இதற்குக் கொடுக்கின்ற பிண்டதண் டங்களும் பெருஞ்சுமையாக இருக்கின்றதே! ஐயோ, இது என்றைக்குத் தொலையும்! என்று எண்ணி எண்ணி இளைத் துத் துன்பப்படுகின்றவனாக இருக்கிறேன். இப்படிப்பட்ட இந்த நாய்க்குப் பணம் என்ன செய்ய! ஐயா! என்னைக் குறித்துத் தாங்கள் பணவிஷயத்தில் பிரயாசமெடுத்துக் கொள்ளவேண்டாம்.[17]

பொருள் பட்ட பாடு இதுவாக, பொருளுக்கு விரோதக் கட்சியில் இருப்பதாகக் கருதப்படும் கல்வியையும் அதனால் வரும் புகழ் முதலியவற்றையும் குறித்து அவர்களது மனப் பான்மை என்ன என்று அறிய விரும்பினால், தமது திருப் பாடல்களைத் திரட்டி அச்சிட விரும்பிய பேரன்பர்களுடைய இடையறாத வேண்டுகோளினைச் சார்ந்து அவ்வப்போது அவர்கள் எழுதியிருப்பதைப் பார்ப்போமாக:—

நான் சென்னப்பட்டணம் விட்டு இவ்விடம் வந்த நாள் தொடங்கி நாளது வரையில் பாடிய பாடல்கள் பல. அவை

16. திருமுகப் பகுதி, பக்கம், 42.

17. திருமுகப் பகுதி, பக்கம், 101.

களை முழுதும் எழுதி வைக்கவேண்டும் என்கிற லக்ஷியம் எனக்கு இல்லாமையால் அப்படி அப்படி சிதறிக் கிடக்கின்றன.18

தாங்கள் வரவிட்ட பங்கி தபாலில் அடங்கிய புத்தகமும் கடிதமும் முன்னும் பின்னுமாக வரப்பெற்றேன். இவற்றுள் பங்கி தபாலில் அடங்கிய புத்தகத்தைக் கண்டபோது பசியில்லாதவன் பழஞ்சோறு கண்டாற்போலும் குறிப்பில்லாதவனாக இருந்தேன். ஏனெனில் திருவருள் சாட்சியாகத் திருவடிக் கண்ணன்றி வேறொன்றையும் என் மனம் விரும்புகிறதாகத் தோற்றவில்லை. என்றால், இந்தப் பனையேட்டையும் அதில் வரைந்த சிறுபிள்ளை விளையாட்டையும் தானே விரும்பும். விரும்பாது. விரும்பாது. யாரோ தங்களுக்கு வீணாக அலுப்புண்டு பண்ணினார்கள். அது குறித்து வியசன மடைந்தேன். 19

அக்கடிதத்திற் குறித்த விஷயம் எனக்கத்துணை அவசியமின்றாயினும் தங்கள் கருத்தின்படி இறைவன் என் உள்ளிருந்து பாடுவித்தவைகளை மாத்திரம் தாங்களாயினும் ம-ா-ா செல்வராய முதலியாரவர்களாயினும் தாங்கள் வரைந்தபடி செய்துகொள்ளலாம். இனி எழுதுவதற்கு சமயமின்று. ஆகலின், இங்ஙனம் அமைதி செய்தாம். 20

முன்னோர் கடிதத்தில் நான் குறித்த பாயிரத்தை இன்னுஞ் சில தினஞ் சென்ற பின்னர் அனுப்புகிறேன், தற்காலம் என் நினைவு விரிதற்கின்மையால். 21

சுருங்கக் கூறுமிடத்து அவர்கள் கருதி விரும்பியது பின்வரும் அவர்களது பிள்ளைச் சிறு விண்ணப்பத் திருப்பாடலினால் ஐயந்திரிபின்றி அறியக் கிடக்கிறது:

---

18. திருமுகப் பகுதி, பக்கம், 46.
19. திருமுகப் பகுதி, பக்கம், 72, 73.
20. திருமுகப் பகுதி, பக்கம், 74, 75
21. திருமுகப் பகுதி, பக்கம், 77

கருணையே வடிவாய்ப் பிறர்களுக்கு அடுத்த கடுந்துயர் அச்சமாதிகளைத், தருண நின்னருளால் தவிர்த்து அவர்க்கு இன்பந் தரவும் வன்புலை கொலை இரண்டும், ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க உஞற்றவும் அம்பலந்தனிலே, மருவிய புகழை வழுத்தவும் நின்னை வாழ்த்தவும் இச்சைகாண் எந்தாய்.22

இவ்வகையாகத் தெய்வ வாழ்க்கையில் ஈடுபட் டிருப்பவர்களை அதில் ஈடுபட விரும்புபவர்கள் அடுத்து வாழ முயலுவது இவ்வுலகின் தொன்றுதொட்ட இயல்பு. அப்படித் தம்மை அடுத்து முயன்றவர்களுக்குச் சுவாமிகள் தமக்கு அனுபவமான 23 சன்மார்க்கத்தைப் போதித்து வந்தார்கள். அந்தச் சன்மார்க்கம் என்னவெனில் :—மனிதப் பிறவி ஆன்ம லாபம் 24 பெறுவதற்காகவே கொடுக்கப்பட் டிருக்கிற தென்றும்; 25 ஆன்ம லாபம் கடவுள் தயவின்றிக் கைகூடா தென்றும் ;26 கடவுள் தயவு ஒருவன் தயாவடி வடைந்தாலன்றி எய்தா தென்றும் ;27 தயா வடிவம் ஜீவ தயவு இன்றி வாரா தென்றும் ;28 ஜீவ தயவு எல்லார்க்கும் ஓர் அளவு இயல்பாக இருக்கிறதென்

---

22. ஆறாந் திருமுறை, பிள்ளைச்சிறுவிண்ணப்பம், திருப்பாடல் 22, 19-21, 23-வது பாடல்களையும் பார்க்க.

23. ஆறாந் திருமுறை 'அகத்தே கறுத்து' முதலிய திருப்பாடல்களையும், கீர்த்தனைப் பகுதி, வசனப் பகுதி, வியாக்கியானப் பகுதி, உபதேசப் பகுதி, திருமுகப் பகுதி, தனிப்பாசுரப் பகுதிகளையும் பார்க்க.

24. வசனப் பகுதி, பக்கம், 155-162.

25. திருமுகப் பகுதி, பக்கம், 35, 97; வசனப் பகுதி பக்கம், 106, 155, 156.

26. வசனப் பகுதி, பக்கம், 107, 162.

27. வசனப் பகுதி பக்கம், 107, 108, 164; உபதேசப் பகுதி, பக்கம், 49, 50, 95, 96.

28. வசனப் பகுதி, பக்கம், 107, 165.

றாலும்,[29] ஜாதிசமய முதலிய பேதங்கள் அறவே ஒழியாமலும், ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை நிறைந்து விளங்காமலும் அது ஆழ்ந்து விரிவடைந்து உரங்கொள்ளா தென்றும்;[30] பேத ஒழிவும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை விளங்குதலும் சத்விசாரமின்றிக் கூடா வென்றும்;[31] சத்விசாரம் கடவுளின் இயற்கை உண்மை விளங்கினாலன்றி உண்டாகா தென்றும்[32] கூறுவது சன்மார்க்கமாகும். அதாவது, கடவுளின் இயற்கை உண்மை விளங்கி, சத்விசாரம் செய்து, பேதங்களை ஒழித்து, ஆன்மநேய ஒருமைப்பாட்டினை அடைந்து, ஜீவகாருண்யம் ஸ்திரப்பட்டு, அதை இடைவிடாது நடத்தி, தயாவடிவடைந்து, கடவுள் தயவைப் பெற்று, ஆன்ம லாபம் அடையப் பெறுவதென்பதே சன்மார்க்கநெறியாகும்.[33] இது வைதிக நெறியின்பாற்பட்ட ஆறு அந்தங்களையும் சமரசப்படுத்துவதால் ஷடாந்த சமரச சன்மார்க்க மென்றும்,[34] அவ் ஆறு அந்தங்களையும் கடந்து நிற்பதால், ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்கமென்றும்,[35] சத்தென்னும் முடிவான பொருளின் அல்லது கடவுளின் உண்மையைத் தெரிவிக்கின்ற தாதலால் சன்மார்க்க மென்றும்,[36]—இம்மார்க்கம் அழைக்கப்படுகின்றது. இது எல்லாச் சமயங்களுக்கும் எல்லா மார்க்கங்களுக்கும் உண்மைப் பொது நெறியாகி எக்காலத்தும் விளங்குவதால் சமரச

---

29. வசனப் பகுதி பக்கம், 109, 110.
30. வசனப் பகுதி, பக்கம் 196; உபதேசப்பகுதி, பக்கம்,31.
31. வசனப் பகுதி,பக்கம், 196 ; உபதேசப்பகுதி, பக்கம், 49.
32. திருமுகப் பகுதி, பக்கம், 130 ; உபதேசப் பகுதி, பக்கம், 49, 50, 127, 128.
33. உபதேசப் பகுதி, பக்கம், 29-31, 100, 106, 113-135, 165, 166, 180-211.
34. உபதேசப் பகுதி, பக்கம், 65-71, 121-124, 126.
35. உபதேசப் பகுதி, பக்கம், 65-71, 121-124, 126.
36. உபதேசப் பகுதி, பக்கம், 123, 124,

சுத்த சன்மார்க்கம் என்றும் சத்திய மார்க்க மென்றும் பெயர் பெறும்.37

சுவாமிகளை அடுத்து முயன்றவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகப்படவே, சன்மார்க்கத்தில் தலைப்பட்டிருக்கும் தம்மையும் அவர்களையும் தொகுப்பாகக் குறிப்பதற்கும் இங்ஙனம் வழிவழியாகச் சன்மார்க்கத்தை அநுஷ்டானத்தில் விளக்கி அதைக் காலக்கிரமத்தில் எல்லா உயிர்களுக்கும் அடைவிப்பதற்கும், சன்மார்க்க சத்திய சங்கம் என்று ஓர் சங்கத்தை அவர்கள் சுமார் 1865-ம் வருஷத்தில் ஸ்தாபித்தார்கள்.38

பின்னர் சன்மார்க்கம் நடைமுறையில் வருவதற்குச் சங்கத்தாரின் பொது நிலையங்களாக ஒன்றற்கொன்று இன்றியமையாத மூன்று சன்மார்க்கத் தெய்வ நிலையங்களைச் சுவாமிகள் ஏற்படுத்தினார்கள். சன்மார்க்கத்தின் உயிர்நிலை ஜீவகாருண்ய ஒழுக்கம் என்றும், ஜீவகாருணய ஒழுக்கத்திற்கு ஆதாரம் சத்விசார மென்றும், ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் முடிவு தயா வடிவுற்றுக் கடவுளருளைப் பெறுத லென்றும் கண்டோம். ஜீவகாருண்ய ஒழுக்கமாகிய கடவுள் வழிபாட்டினைச் சங்கத்தார் பொதுவில் நடத்துவதற்காகச் சத்திய தருமச் சாலை என்னும் தெய்வ நிலையத்தைச் சுவாமிகள் 1867-ம் வருஷத்தில் வடலூரில் ஸ்தாபித்தார்கள்.39 ஜீவகாருண்ய ஒழுக்கத்திற்கு ஆதாரமான சத்

---

37. திருமுகப் பகுதி, பக்கம், 130; உபதேசப் பகுதி, பக்கம், 121.

38. திருஅருட்பா வரலாறு, பாடல், 32, 42, 62; பிள்ளைச் சிறு விண்ணப்பம், திருப்பாடல் 21. உபதேசப் பகுதி, பக்கம், 94, 101, 102.

39. திருமுகப் பகுதி, பக்கம், 125, 136 138, 161 162; உபதேசப் பகுதி, பக்கம், 117.

விசாரம் என்னும் தெய்வப் பிரார்த்தனையைச் சங்கத்தார் பொதுவில் செய்யும் பொருட்டு, எல்லா ஜீவர்களிடத்தும் உயிர்க்குயிராகக் கடவுள் இருக்கிறார் என்னும் இயற்கை உண்மையை விளக்கஞ் செய்யும் ஓர் அதிஅற்புதமான கட்டடத்தை நிர்மாணித்து, அதற்குச் சத்திய ஞான சபை யென்று பெயரிட்டு, 1871-ம் வருஷத்தில் வடலூரில் மேலே சொன்ன சத்திய தருமச்சாலையை அடுத்து அதை அவர்கள் ஸ்தாபித்தார்கள்.[40] பிறகு, ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் முடிவான சித்தி நிலையைத் தாம் அடைவதைச் சங்கத்தார்க்கு விளக்கி அதை அவர்கள் பின்பற்றுவதற்காகச் சித்திவளாகம் என்னும் தெய்வ நிலயத்தை 1870 முதல் தாமிருந்த—வடலூரை யடுத்த—மேட்டுக் குப்பமென்னும் கிராமத்தில் 1873-ல் அவர்கள் ஸ்தாபித்தார்கள்.[41]

ஜீவகாருண்ய ஒழுக்க மென்னும் நூல் மேற்சொன்ன சத்திய தருமச்சாலையை ஸ்தாபித்தபோது, அதன் நோக்கமாகிய சன்மார்க்க அனுஷ்டானத்தை விளக்குவதற்காகச் சுவாமிகளால் சன்மார்க்க சங்கத்தார்க்கு உபதேசிக்கப்பட்டதாகும்.[42] சுவாமிகளது ஸ்வானுபவத்தினின்றும் உருக்கொண்ட இது ஓர் முதனூலாகும். இதுவே அவர்களது முதன்மையான சாஸ்திர நூல். இது காரணகாரிய முறையாக எழுதப்பட்டிருப்பதால், இதைச் சிரத்தையாகப் பயிலும் எவரும் சுவாமிகளது மார்க்கத்தை உள்ளங்கை நெல்லியென உணர்வார்களென்பதில் ஐயமில்லை. இந்நூலின் சுருக்கம் பின்வருமாறு:—

ஆன்மலாபம் அடைவதற்காகவே மனிதப் பிறப்பு கடவு

40. வசனப் பகுதி, பக்கம், 195; திருமுகப் பகுதி, பக்கம் 130.
41. திருமுகப் பகுதி, பக்கம், 131, 132, 143; உபதேசப்பகுதி, பக்கம், 187, 191, 192.
42. வசனப் பகுதி பக்கம் 154. திருமுகப் பகுதி, பக்கம், 125.

ளால் கொடுக்கப்பட்டதென்றும்; கடவுளின் பூரண இயற்கை இன்பத்தைப் பெறுவதே ஆன்மலாபம் என்றும்; கடவுளின் இயற்கை இன்பம் கடவுளின் இயற்கை விளக்கத்தைக் கொண்டே அடையக்கூடும் என்றும்; கடவுளின் இயற்கை விளக்கத்தை ஜீவகாருண்ய ஒழுக்கத்தினாலன்றி வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக்கூடாதென்றும்; ஜீவகாருண்ய ஒழுக்கமென்பது ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக்கொண்டு தெய்வ வழிபாடு செய்து வாழ்தல் என்றும்; ஜீவர்களெல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கை யுண்மை ஏகதேசங்களாய்ச் சர்வ சக்தியுடைய கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஒத்த உரிமையுள்ள சகோதரர்களாதலால், 43 ஒரு ஜீவன் பசி தாகம் பிணி இச்சை எளிமை பயம் கொலை முதலியவற்றால் துக்கத்தை அநுபவிக்கக் கண்டபோதும் துக்கப்படுமென்றறிந்தபோதும் மற்றொரு ஜீவனுக்கு உருக்கமுண்டாகும் என்றும், ஆன்மாக்கள் ஜீவர்களாகி அதிகரித்து ஆன்ம விளக்கமும் அருள் விளக்கமும் அடைவதற்குப் பூதகாரிய தேகங்கள் உரிமையாக இருக்கின்றனவென்றும்; பூதகாரிய தேகங்களுக்கு மாயை முதற்காரணமாதலால், அந்த மாயையின் விகற்ப ஜாலங்களாகிய பசி கொலை முதலியவைகளால் அந்தத் தேகங்களுக்கு அபாயம் நேரிடுமென்றும்; ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும், பசி கொலை முதலியவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்தி செய்துகொள்ளத் தக்க அறிவும் சுதந்தரமும் இல்லாத ஜீவர்கள் விஷயத்தில், அவைகளை நிவர்த்தி செய்விக்கத்தக்க அறிவும் சுதந்தரமும் உள்ள ஜீவர்கள் வஞ்சியாமல் தயவினால் நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யத்திற்கு முக்கிய லக்ஷியம் என்றும்; மாற்றிக்

43. உபதேசப் பகுதி பக்கம், 159.

கொள்ளக்கூடாத கெடுதி பசியினாலும் கொலையினாலும் தேகத்திற்கு நேரிடுகிறதாதலால் பசி நீக்கலும் கொலை நீக்கலும் பரஜீவகாருண்ய மென்றும்; பசியால் வருங் கொலை ஆகாரத்தாலன்றி வேறு வகையால் நிவர்த்தி செய்விக்கப்படாதிருக்க, பகை முதலியவற்றால் வருங் கொலையை அநேக உபாயங்களால் நிவர்த்தி செய்விக்கக் கூடுமாதலால், கொலையால் வரும் துன்பத்தைப் பசியால் வரும் துன்பத்திலமைத்து வற்புறுத்தப்படுகிறதென்றும்; பசியைஆகாரத்தினால் நிவர்த்திசெய்விக்கின்ற ஜீவகாருண்ய ஒழுக்கம்—மிருகம் பறவை முதலிய ஜீவர்களுக்கு நியதியாகாரமட்டும் அருளால் அமைந்திருக்க, மனிதர்களுக்கு நியதியாகாரத்தோடு ஆகாமிய முயற்சி ஆகாரமும் வேண்டப்படுவதால்—மனிதர்களிடத்தே பெரும்பான்மை நடத்தப்படவேண்டும் என்றும்; ஒரு ஜீவனைக் கொன்று மற்றொரு ஜீவனுக்கு மாமிசத்தால் பசியாற்றுதல் ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகாதென்றும்;44 மாமிச ஆகாரத்தால் வரும் விளக்கம் அசுத்த மாயாகரண விளக்க மென்றும்; மரம் புல் நெல் முதலியவைகளின் வித்து காய் தழை முதலியவற்றைப் புசிப்பது ஜீவகாருண்யத்திற்கு விரோதமல்ல வென்றும்; மாமிச ஆகாரம் துஷ்ட மிருகங்களுக்குப் பரம்பரையாகாரமே யொழிய நியதியாகாரமல்ல வென்றும்; பசியினால் வரும் துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வரும் இன்பம் மேலான இன்ப மென்றும்; 'அது இம்மையில் யோக சித்திகளாலும் ஞான சித்திகளாலும் வருகின்ற இன்பங்களும் முடிவில் அநுபவிக்கப்படும் மோக்ஷ இன்பமும் ஆகும்' என்றும்; ஆதலின், ஜீவகாருண்யமென்கிற மோக்ஷ வீட்டுத் திறவுகோலைச் சம்பாதித்துக் கொண்ட சமுசாரிகள் சரியை கிரியை யோகம் ஞானம் என்

44. உபதேசப் பகுதி, பக்கம், 57-60, 107, 108.

கிற சாதன சகாயங்களை வேண்டாமல் மோக்ஷ வீட்டில் புகுந்து நித்திய முத்தர்களாய் வாழ்வார்களென்றும்; இத் திறவுகோலைச் சம்பாதியாத விரதிகளுக்கும் பத்தர்களுக்கும் இருடிகளுக்கும் யோகிகளுக்கும் சித்தர்களுக்கும் ஞானிகளுக்கும் மோக்ஷமில்லை என்றும்; இதனால், அறிவு விளங்கிய ஜீவர்களுக்கெல்லாம் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடென்றும்; ஜீவகாருண்ய ஒழுக்கமுடைய சமுசாரிகள் கடவுளருளுக்கு முழுதும் பாத்திரமாகிறார்களென்றும்; ஜீவகாருண்யமில்லாது செய்யப்படுகிற ஞானம் யோகம் தவம் விரதம் ஜெபம் தியானம் முதலியவைகளெல்லாம் பிரயோசனமில்லாத மாயா ஜாலச் செய்கைகளேயென்றும்; ஜீவகாருண்ய ஒழுக்கம் எல்லார்க்கும் ஒன்றாக வேண்டப்படுவதென்றும்; இவ்வொழுக்கமுடையவர்களே யோகிகளென்றும் ஞானிகளென்றும் முத்தர்களென்றும் தெய்வமென்றும்; இவ்வொழுக்கமுடையவர்கள் எந்த ஜாதியாராயினும் எந்தச் சமயத்தாராயினும் எந்தச்செய்கையை உடையவர்களாயினும், தேவர் முனிவர் சித்தர் யோகர் முதலிய யாவராலும் வணங்கத்தக்க சிறப்புடையவர்கள் ஆவார்களென்றும் சர்வசக்தியை உடைய கடவுள் சாட்சியாகச் சுவாமிகள் சத்தியஞ் செய்து ஆணையிட்டிருக்கிறார்கள்.

ஜீவகாருண்ய ஒழுக்கத்தின் அடுத்த பிரிவுகள் முதற்பிரிவில் சொல்லப்பட்ட சிற்சில கருத்துக்களை விரித்துக்கூற ஏற்பட்டனவாகும். எனவே, இரண்டாவது பிரிவில் ஆன்ம இன்ப லாபத்தையும், மூன்றாவதில் ஆன்மாக்களுக்கு முன்னும் பின்னும் தேகம் உண்டென்பதையும் விரித்துக்கூறி இருக்கின்றது. மற்றப் பிரிவுகள் இதுகாறும் கிடைக்கவில்லை.

சன்மார்க்க விண்ணப்பங்கள் நான்கும் மேற்குறித்த சத்தியஞான சபையைக் குறித்து ஏற்பட்டனவாகும்.45 இவற்

றன், சிறு விண்ணப்பமானது மனிதப்பிறப்பிற்கு முன் போந்த பிறவிகளின் வரலாற்றையும், மனிதப்பிறப்பின் அருமையையும், எங்கும் பூரணராகி விளங்குகின்ற உண்மைக் கடவுள் ஒருவரே உண்டென்பதையும், அக்கடவுளை உண்மை அன்பால் கருத்திற் கருதி வழிபாடு செய்யின் அக்கடவுள் திருவருள் நமது கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்குமென்பதையும், சன்மார்க்கத்திற்குச் சமயங்கள் மதங்கள் மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் வருணம் ஆசாரம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் முக்கிய தடை என்பதையும், ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமென்பதையும் விவரித்துக் கூறும்.

பெரு விண்ணப்பத்தில் சுவாமிகள் தமது இப்பிறப்பின் பூர்வோத்தரத்தை அதியற்புதமான நுட்பவகையில் விவரித்திருக்கிறார்கள். சுவாமிகளது சன்மார்க்க வாழ்க்கை வரலாற்றை அறிய விரும்பும் எவர்க்கும் இப் பெருவிண்ணப்பம் ஓர் குன்றாத தெய்வ நிதியமாகும்.

ஞான விண்ணப்பமானது, சமரச சுத்த சன்மார்க்க ஞானிகளின் சித்தி வல்லபத்தையும் அதை அவர்களுக்குக் கொடுத்தருளிய திருவருட் சமுகத்தின் விசேஷத்தையும் கூறி, இவற்றின் மூலம் திருவருட் சமுகப் பெரும்பதியாய இறைவனது இயற்கைத் திருவண்ணப் பெருமையைக் கூறுது கூறியிருக்கிறது.

சங்க விண்ணப்பத்தில், இப்பிறவியில் எடுத்த தேகமே நித்தியமாகிய அருள் தேகமாகுதல் கடவுளது திருவருள் சுதந்தரத்தாலன்றி முடியாதென்பதும், திருவருள் சுதந்தரத்தைப் பெறும் வழியும் தெளிவாக்கப்பட்டிருக்கின்றன.

45. வசனப் பகுதி, பக்கம், 195-197, 212, 221.

மஹோபதேசம் உட்பட்ட சுவாமிகளது பிரசங்கங்கள் சன்மார்க்கத்தின் சாத்திய நிலையைக் குறிக்கும் சித்திவளாகத்தைச் சார்ந்து எழுந்தனவாம்.[46] அவை முழுதும் வசன பூர்த்தியாக இல்லாமல் குறிப்புரைகளோடு பிணைந்து இருப்பதால், அவற்றை உபதேசப்பகுதி என்னும் வேறோர் பகுதியில் தொகுத்திருக்கின்றது. அவற்றை அதில் காண்க.)

இவ்வளவும் நூலின் பொருள்பற்றிக் கூறியவையாகும். இனி, இதன் நடைச்சிறப்பை ஒருவாறு காண்போம். சுவாமிகளது பாடல்களிற்போலவே, அவர்கள் வசன நூல்களிலும் பழக்கமானவையும் புனிதமானவையும் ஆன சொற்களை ஆயிரக்கணக்கில் பார்க்கும்போது, எவரும் வியப்படையாமல் இருக்கமுடியாது. சொற்கோவைகளும் வாக்கியங்களும், புத்தழகு ததும்பும் நமது குழந்தைகளின் முகப்பொலிவே போன்று, சாந்தமும் தூய்மையும் நிறைந்து விளங்குகின்றன. அவை, கடல்மடை திறந்ததுபோல் பெருகும் அவர்களது கருத்துக்களோடும் அகக் காட்சிகளோடும் ஒத்து இயங்கவேண்டுவனவாகும். அக்கருத்து முதலியவற்றின் முதற்காரணமான அவர்கள்தம் ஆன்மாநுபவத்திற்கு முடிவு காணுமாறில்லை. என்னை? வாக்கியமோ விஷயமோ முடிவடைந்தால், அது சொல்லாவது பொருளாவது குறைவுபட்ட காரணத்தாலன்றாதலின். இங்ஙனம் பெருவாரியாகக் கருத்தும் பிறவும் எழுந்தாலும், முறை பிறழ்ச்சி தெளிவின்மை முதலிய குற்றங்கள் ஒருபோதும் ஓர் அளவும் உண்டாவதில்லை. ஆன்ம உருக்கத்தினால் உள்ளும் புறமும் ஊடுருவியிருப்பது அவர்கள் நடையின் தனிச்சிறப்பு. ஆகவே, ஆரவாரமான போலியுணர்ச்சி அதில் மருந்துக்கும் கிடைக்காது.

---

46. உபதேசப் பகுதி, பக்கம், 194, 207.

அவர்களுடைய எல்லா வசன நூல்களிலும் இனிய ஓசைக் கூறுகள் அளவுபட்டு நேர்மையாக அமைந்திருந்தாலும், சன் மார்க்க விண்ணப்பங்களில் காணப்படும் இன்னோசையானது நமது செவிகளின் மூலம் முன்பின் கண்டறியாத ஓர் சுவையை நமக்கு ஊட்டி நம்மையே நாம் மறக்கச் செய்கிறது. இச் சிறப்புக்களுக்கெல்லாம் அடிப்படையாக ஒரு மாப்பெரும் புலமை இருந்தே தீரவேண்டும். எனினும், அவர்கள் நடையை நாம் எவ்வகையில் பார்த்தாலும், அது ஓர் புலமை வயப்பட்ட கைவினையாகத் தோன்றுவதில்லை. இதுவே அவர்களது ஆன்மாநுபவத்தில் அமைந்து கிடக்கும் தெய்வப் புலமையின் லக்ஷணம்போலும்.

சுவாமிகள் நடையே தமிழ் வசன இலக்கியத்தில் முதல் முதலாகத் தோன்றிய ஜீவத்தன்மை பொருந்திய நடையாகும். இந்த ஜீவத்தன்மை வாய்ந்த நடையின் பெரும்பயனை ஆங்கில நூற்பயிற்சியுள்ள சிறுபிள்ளைகளும் அறிவார்கள். ஜீவத் தன்மையுள்ள இந்நடையின் மூலம் தான், சிலர்க்கு மட்டும் காலங்கழிப்பதற்காக என்று மூலைமுடுக்கில் ஒதுங்கிக் கிடந்த கல்வியானது, இளஞாயிறுபோல் எழுந்து நாட்டின் மக்க ளிடையே விரைவில் பரவத் தொடங்கியது. காலமென்னும் இடுகாட்டில் முன்னும் பின்னுமாகப் புதைக்கப்பட்ட இலக்கிய இலக்கணங்களின் ஆவிகளால் அறையப்பட்டதும், மக்களது பேச்சில் தோன்றி விளங்கும் உயிர்ச்சொற்கள் விரவாது கத் தரிக்கப்பட்டதும், வாழ்க்கையில் இல்லாத விநோதங்களை உண்டுபண்ணுவதற்காக' நகாசு செய்யப்பட்டதும் ஆன உயி ரற்ற நடையில் ஒரு சிலர்க்காக எழுதிய விஷயமும் தெளிவற் றுக் குறுகியும், உரமற்று வெளுத்தும், மெலிவுற்று அவலக்ஷண மாகியும் குற்றுயிராக இருப்பது இயல்பு. இவ்வண்ணம் ஒரு சிலர்க்கும் போதிய பயன்தாக் கூடாதிருந்த கல்வியை மக்கள்

பிறப்பினர் எல்லார்க்கும் அடைவித்து, அதைப் பொதுச் சொத்தாக்க வேண்டும் என்னும் தெய்வப் பெருநோக்கம் உடைய இக்காலத்தில், இந்த ஜீவத்தன்மை பொருந்திய நடையின் இன்றியமையாமையைக் குறித்து அதிகம் சொல்ல வேண்டுவதில்லை.

சுவாமிகள் நடையானது ஒருங்கே வேறொருவரால் பின்பற்றக் கூடியதென்று கருதுவதற்கில்லை என்றாலும், அதன் ஓர் ஓர் அம்சத்தினைப் பொதுநலங்கருதும் ஒவ்வொருவர் ஓர் ஓர் வகையில் பின்பற்றி—கல்வியறிவின்றி வாய்செத்த நம் நாட்டின் ஏழை மக்களும் உணர்ந்து புத்துயிர் பெறும்படி—எழுதிவருவதால், அதன் செல்வாக்கு மென்மேலும் வளர்ந்தோங்கி வருகிறது என்பது கண்கூடு. எனவே, எவ்வகையான போலிக்கல்வியும் எம்மாதிரியான கண்மூடித்தனமும் சுருங்கச் சொல்லுகிறதென்னும் போர்வை போர்த்த கருத்துப் பஞ்சமும் இனித் தமிழ் வசன நூல்களில் தலைதூக்கிப் பெருமை பாராட்ட முடியாது. கருத்துணர்ச்சிகளின் ஆழத்திலும் இன்னோசை வளத்திலும் தெய்வப்புலமையிலும் தமிழ் வசனமானது இங்ஙனம் மிகச் சிறப்படைந்த போதும், அது எளிதாகவும் ஆரவாரமற்றும் இருந்து வருகிறது. என்னே தமிழ்த்தாயின் புத்திளமையும் தெய்வப் பொலிவும் இருந்தவாறு! அவளது அளவில் ஆற்றலைக் குறைக்குமாறில்லை![47]

இவ் வசனப் பகுதியின் முதற் பதிப்புப் பிரதிகள் எல்லாம் செலவாய் இரண்டரை வருஷங்களுக்கு மேல் ஆயினும், இதை இப்போது அச்சிட்டிருக்கும் வகையில் பாடபேதங்கள் உள்ளிட்ட ஆராய்ச்சிக் குறிப்புக்களோடும் "சிறுவிண்ணப்ப"த்தின் சுவாமிகள் கையெழுத்து மூலத்தின்

47. பருந்தும் நிழலும், பாயிரம் 5, 6-ம் பக்கங்கள் பார்க்க.

போட்டோ முதலியவற்றோடும் 48 அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டும் என்று மனங்கொண்டிருந்தாதலும், கீர்த்தனைப் பகுதி இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் விவரித்திருக்கும் தடங்கலாலும் இவ்விரண்டாம் பதிப்பு வெளிவர இத்தனை நாளாயிற்று. சன்மார்க்க விருப்பினர்கள் இதைச் சிரத்தை யோடு ஓதி உணர்ந்து எல்லா வகையிலும் பயன்படுத்தித் தங்கள் வாழ்க்கையைச் சன்மார்க்கத்துக்கு ஒத்துச் சீர்ப்படுத் திக் கொள்வார்களாக. தமிழ் மாணக்கர்களும் தமிழிலன்புள்ள பிறரும் இதிலடங்கிய நூல்களின் கருத்துணர்ச்சிகளின் உண்மையையும் வளப்பத்தையும் நயத்தையும் ஆய்ந்து கற்ப தோடு இவற்றில் விளங்கும் தமிழ் வசன நடையின் ஒப்புயர் வற்ற சிறப்புக் கூறுகளையும் அறிந்து பயின்று பயன்பெறு வார்களாக.

இப் பகுதியை இங்ஙனம் ஆராய்ந்து எண்ணிய சிறப்புக்களோடு அச்சிட்டு அடக்கவிலையில் வெளிப்படுத்து வதில் மனப்பூர்வமாக எனக்குத் துணைபுரிந்த ஆன்ம நேயர் களின் விவரங்கள் மற்றப் பகுதிகளைச் சார்ந்த அவ்வகை விவரங்களோடு இவ்வடக்கவிலைப் பதிப்பின் வரலாற்றில் விரைவில் வெளிவரும். அவர்களுக்கு என் மனத்தின்கண் இடையறாது விளங்கும் அன்பையும் நன்றியறிதலையும் வணக் கத்தையும் இப்போது இங்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆ. பா.

# பிரார்த்தனை

ஈன்ற தாயினும் சிறந்த அன்பு செலுத்தி, இடையறாது உழைத்து, கண்ணிமைபோற் காத்து, வினை அறியாத பருவத்திலிருந்தே சீலம் வாய்மை தூய்மை அடக்கம் உழைப்பு பிற உயிர்க்கிரங்கல் முதலிய நற்குண நற்செய்கைகளினின்றும் வழுவா மற் பழக்கி, நான் உலகியற்கல்வி கற்றற் குந் துணைக்காரணமாக அருட்செயலால் வாய்த்த எனது இன்னுயிர்ச் செவி லித் தாயவர்களின் புனித ஆன்மாவுக்கு என் இவ் எளிய திருத்தொண்டின் நற்பய னைத் திருவருள் கூட்டிவைக்குமாக.

# ஆசாரிய ஸ்துதி

எண்சீர் ஆசிரிய விருத்தம்

பராபரம் கோதகலும் அநாமயம் போதநிலை
பகாநலம் வாதமறு சுகோதயம் பாதிதமில்
நிராமயம் காரகமு திலாதசஞ் சீவிதம்நல்
நிராசைகொண் டாருடைய நிகேதனம் சூதமுறல்
வராதஇன் பாரஎனை முனாளில்வந் தேஅருளி
மகாபலம் சேரஅருள் விராவுசெம் பாதநம!
இராமலிந் தார்மனதில் இராதசந் தோஷநம!
இராமலிங் காயநம! இராமலிங் காயநம!

—உபயகலாநிதிப் பெரும்புலவர்
தொழுவூர் ஸ்ரீ வேலாயுத முதலியாரவர்கள் (1867).

# திரு அருட்பா மகிமை

நேரிசை வெண்பா

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோன் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும்—கண்மணியாம்
நங்கள் இராமலிங்கன் நல்லஅருட் பாமுறையைத்
துங்கமுற மாணு தொழு.

—மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம்
ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் (1867).

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திரு அருட்பா

## உ. வசனப் பகுதி

## க. மநுமுறைகண்ட வாசகம்

### காப்பு

நேரிசை வெண்பா

அன்ன வயல்சூழ் அணியாரூர் வாழ்மநுவாம்
மன்னன் முறைகண்ட வாசகத்தைப்—பன்னுதற்கு
நேய மிகத்தான் நினைப்போர்க் கருள்புழைக்கைத்
தூய முகத்தான் துணை.

கங்கைச் சடையான்முக் கண்ணுடையான் அன்பர்தம்முள்
அங்கைக் கனிபோல் அமர்ந்திருந்தான் — அங்கை
முகத்தான் கணங்கட்கு முன்னின்றான் மூவாச்
சுகத்தான் பதமே துணை.

கடல் சூழ்ந்த உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலுஞ் சிறப்புடையதாய், காவிரி என்னுந் தெய்வத் தன்மையுள்ள நதியினால் எந்தக் காலத்திலுங் குறைவு படாத நீர்வளப்ப முடையதாய் [2],

1. மநுமுறை கண்ட வாசகம் எழுதப்பட்ட வரலாறு: இவ்வாசகம் முதன்முதலாக 1854-ம் ஆு ஜூன் மீ

வாழைச்சோலை பலாச்சோலை மாஞ்சோலை தென்னஞ்சோலை கமுகஞ்சோலை கருப்பஞ்சோலை முதலாகிய பலனுள்ள சோலைகள் அணியணியாக ஒன்றையொன்று சூழ்ந்தோங்க[3] அசோகு குருக்கத்தி சண்பகம் பாதிரி முதலான விருக்ஷங்களால் நெருங்கி[4] வண்டுகள் பாடு

---

அச்சான பிரதியில் கீழ்க்கண்டபடி குறித்திருக்கிறது:—"உ சிவமயம் திருச்சிற்றம்பலம் மனுமுறை கண்ட வாசகம் இஃது பலருக்கு முபயோகமாகச் சாஸ்திர விளக்கச் சங்கத்தார் கேட்டுக் கொண்டபடி மநுநீதி கண்ட புராணத்தை விரிவுள்ள வாசக நடையாகச் சிதம்பரம் இராமலிங்கப் பிள்ளையவர்களால் இயற்றப்பட்டு பாளையம் சுப்பராயச் செட்டியாரவர்களால் மேற்படி சங்கத்தாரவர்களது வித்தியானந்த அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. ஆனந்த ௵ ஆனி ௴."

இம் முதல் அச்சுப்பிரதியின்படி இவ்வாசகம் இங்கு அச்சிட்டிருக்கிறது. அதில் 'மநு' வென்று சில இடங்களிலும் 'மனு' வென்று சில இடங்களிலும் இருப்பதை இங்கு மநு வென்றே திரிபில்லாமல் அச்சிட்டிருக்கிறது.

மநு முறைகண்ட வாசகத்தின் இரண்டாம் பதிப்பின் வரலாறு பின்வருமாறு:—" உ சிவமயம் திருச்சிற்றம்பலம் மனுமுறைகண்ட வாசகம் இஃது சிதம்பரம் இராமலிங்கப் பிள்ளை அவர்களா லியற்றப்பட்டு, முன் அச்சிட்ட பிரதிக்கிணங்க பலர் வேண்டுகோளின்படி, மதராஸ் ரிப்பன் பிரஸில் பதிப்பித்து வெளியிடப்பட்டது 2-ம் பதிப்பு, 1886." 'பிரதிக்கிணங்க' என்ற போதிலும், இதன் மூலம் ஏற்பட்ட பேதங்களை எல்லாம் அவ்வவ்விடங்களில் காண்க.

2. நீர்வளப்ப முள்ளதாய்—2-ம் பதிப்பு, 1886. இனி, பின் வரும் இடங்களி லெல்லாம் இப்பதிப்பு 1886 என்று மட்டும் குறிக்கப்படும்.

3. சூழ்ந்தோங்கப் பெற்றதாய்—1886.

4. நெருங்கப் பெற்று—1886.

கின்ற மலர்ச்சோலைகளும் தாமரைத் தடாகங்களும் நீர் நிறைந்து அல்லி நீலம் முதலான புட்பங்கள் மலர்கின்ற ஓடைகளும்[5] பொய்கைகளும் ஏரிகளும் குளங்களும் பல விடங்களிலு முள்ளதாய், செந்நெல் முதலாகிய பயிர்கள் மாறாது முப்போகமும் விளைகின்ற குறைவற்ற விளைவையுடைய வயல்கள் நெருங்கியுள்ளதாய், சிதம்பரம் பஞ்சநதம் மத்தியார்ச்சுனம் சம்புகேச்சுரம் முதலான திவ்வியக்ஷேத்திரங்கள் இடையிடையிலுள்ளதாய், இல்லற தருமத்தில் எள்ளளவும் பிழைபடாது செல்வத்திலும் கல்வியிலும் நிறைவுள்ள குடிகளுக்கிடமானதாய், பல வளப்பங்களுங்கொண்டு பூமிதேவிக்கு முகம்போல விளங்குகின்ற சோழதேசத்தில்[6]; பாதாளலோகத்தைப் பார்த்திருக்கின்ற ஆழமுள்ள அகழியினாற் சூழப்பட்டு இந்திரலோகத்தை எட்டிப் பார்க்கின்ற உன்னதமுள்ள கோபுரங்களையுடைய மதிலும் உப்பானம் நந்தவனம் பூஞ்சோலை முதலானவைகளும் தெய்வதீர்த்தம் பிரமதீர்த்தம் வசந்தவோடை செங்குவளையோடை முதலான நீர்நிலைகளு முள்ளதாய், தேர்நிலைகள் யானைக் கூடங்கள் குதிரைப்பந்திகள் சேனையிடங்கள் ஆஸ்தான மண்டபம் அரசமண்டபம் விசித்திரமண்டபம் விநோதமண்டபம் நியாயமண்டபம் நிருத்தமண்டபம்

---

5. அல்லி நீலம் முதலான புட்பங்கள் மலர்கின்ற நீர்நிறைந்த ஓடைகளும்—1886.

6. தேசத்திலே—1886.

கல்விமண்டபம் கணக்கறிமண்டபம் பாடல்மண்டபம் பரிசனமண்டபம் சித்திரமண்டபம் தேவாசிரியமண்டபம் சித்திரத்தெற்றி சிலம்பக்கூடம் ஆயுதசாலை, அமுதசாலை அறச்சாலைகளும் உடையதாய்[7], ரத்நபீடிகைகளும் கனக மாளிகைகளும் பளிங்கு மாடங்களும் மணிப் பந்தல்களும் மகர தோரணங்களும் மங்கல கோஷங்களுமுள்ள கடைவீதி கணிகையர் வீதி சூத்திரர்வீதி வைசியர்வீதி அரசர்வீதி அந்தணர்வீதி ஆதிசைவர்வீதி சைவர்வீதி வைதிகர் வீதி தபோதனரிருக்கை சைவமுனிவர் மடம் உட்சமயத்தார் உறையுள் முதலான வளப்பங்களை உடையதாய், தியாகராஜப் பெருமான் எழுந்தருளிய கமலாலயம் என்னும் திருக்கோயிலை உள்ளே உடையதாய், சோழராஜர்கள் பரம்பரையாக அரசாட்சி செய்வதற்கு உரிய ராஜதானியாய், நிலமகள் திருமுகத்திலிட்ட திலகம்போல் விளங்கிய திருவாரூர் என்கிற நகரத்தில்[8]; மூன்று சுடர்களிலும் முதற்சுடராகி மேன்மையடைந்த சூரியகுலத்திற் பிறந்து அரசாட்சி செய்துவந்த சோழராஜர்களில் சிறந்தவராய், அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லவராய், உயிருக்கு உறுதியைத் தருகின்ற நல்ல கேள்விகளை யுடையவராய், எல்லா உயிர்களுக்கும் இதஞ்செய்கின்றவராய், வேதமோதுதலும் யாகஞ்செய்தலும் இரப்பவர்க்கித

7. அறச்சாலைகளு முள்ளதாய்—1886.

8. நகரமொன்றுண்டு. அதிலே—1886.

லும் (பிரஜைகளைக் காத்தலும்)[9] ஆயுதவித்தையில் பழகுதலும் பகைவரை அழித்தலும் என்னும் ஆறு தொழில்களும் வீரமுள்ள சேனைகளும் செல்வமுள்ள குடிகளும் மாறாத பொருள்களும் மதிநுட்பமுள்ள மந்திரியும் அன்புள்ள நட்பும்[10] பகைவரால் அழிக்கப் படாத கோட்டையும் உடையவராய், வழக்கை அறிவிப் பவரையும் தங்களுக்குள்ள குறையைச்[11] சொல்லிக் கொள்பவரையும் இலேசிலே தமது சமுகத்துக்கு அழைப்பித்து அந்த வழக்கைத் தீர்த்தும் அக் குறையை[12] முடித்துங் கொடுப்பவராய், பாலொடு பழஞ்சேர்ந்தாற்போல முகமலர்ச்சியோடு இனியவச னஞ் சொல்லுகின்றவராய்[13], பின் வருவதை முன்னே அறிந்துகொள்வதும் உறவினர் அயலார் சினேகர் பகை வர் இழிந்தோர் உயர்ந்தோர் முதலான யாவரிடத்தும் காலவேற்றுமையாலும் குணவேற்றுமையாலும் உண் டாகின்ற நன்மை தீமைகளை உள்ளபடி அறிந்துகொள் வதுமாகிய விவேகமுள்ளவராய், அகங்காரம் காமம் கோபம் லோபம் மோகம் பொறாமை வஞ்சகம் டம்பம்

---

9. 'பிரஜைகளைக் காத்தலும்' என்பது 1886-ல் மட்டும் உள்ளது. 1854-ம் ஆம் முதல் அச்சுப்பிரதியில், சுவாமிகள் கையெழுத்தில் இருந்திருக்க வேண்டிய சொற் றொடர் தவறி அச்சில் சேராமல் விடுபட்டிருக்கிறது.

10. 'அன்புள்ள நட்பும்' என்பது 1886-ல் விடு பட்டிருக்கிறது.

11. குறைகளைச்—1886.

12. அக்குறைகளை-1886. 13. சொல்பவராய்-1886.

வீண்செய்கை முதலான குற்றங்களைத் தினையளவுங் கனவிலும் காணாதவராய்[14], தூர்க்குணங்களையுடைய சிறியோர்களைச் சேர்த்துக் கொள்வதைத் மறந்தாயினும் [15] நினையாமல் நற்குணங்களில் நிறைந்து செய்வதற்கு அரிதான செய்கைகளையுஞ் செய்து முடிக்க வல்ல பெரியோர்களைச் [16] சகாயமாகக்கொண்டு செய்யத் தக்க காரியங்களைத் தெரிந்து செய்தும் செய்யத் தகாத காரியங்களைத் தெரிந்து விடுத்தும் எதிராளி வலியும் [17] தன்வலியும் துணையானவர் வலியும்[18] காலநிலைமையும் இடநிலைமையும் அறிந்து காரியங்களை நடத்தியும் அடுத்தவர்களது குணம் வல்லமை ஊக்கம் முதலான தன்மைகளை ஆராய்ந்து தெளிந்து அவரவர் தரங்களுக்குத் தக்க உத்தியோகங்களை அவரவர்களுக்குக்[19] கொடுத்தும் பழமைபாராட்டியும் சுற்றந்தழுவியும் கண்ணோட்டம்வைத்தும் சாதியியற்கை ஆசிரமவியற்கை சமயவியற்கை தேசவியற்கை காலவியற்கை முதலான உலகியற்கைகளை அறிந்து அவ்வவற்றிற்குத் தக்கபடி ஆராய்ந்து செய்தும் நல்லொழுக்கத்துடன்

14. கனவிலும் புரியாதவராய்—1886.

15. சிறியோர் சேர்க்கையை மறந்தாயினும்—1886.

16. நினையாமல், செய்வதற்கு அரிதான செய்கைகளைச் செய்து முடிக்கவல்ல நற்குணங்களை யுடைய பெரியோர்களைச்—1886.

17. பகைவலியும்—1886. 18. துணைவலியும்—1886.

19. அவரவர்க்குக்—1886.

நடப்பவராய், குடிகளுக்கு அணுவளவு துன்பம் நேரிடினும் அதை மலையளவாக எண்ணித் தமக்கு வந்ததுபோல் இரக்கங்கொண்டு மனமுருகுவதனால் தாயையொத்தவராய், அத்துன்பத்தைவிட்டு இன்பத்தை அடையத்தக்க நல்வழியை* அறியும்படி செய்விப்பதனால் தந்தையை யொத்தவராய், அவர்களுக்கு அந்த நல்வழியைப் போதித்து அதிலே நடத்துகின்ற படியால் குருவை யொத்தவராய், அந்தக் குடிகளுக்கு இகபர சுகத்தைக் கொடுப்பதற்கு முன்னின்று அது பற்றி முயற்சிசெய்யும்போது வரும் இடையூறுகளை நீக்குகின்றபடியாலும் அந்த ஒழுக்க வழியிலிருந்து தவறினால் அந்தக் குற்றத்துக்குத் தக்க தண்டனை விதித்து அவ்வழியில் பின்னும் நடத்துகின்றபடியாலும் தெய்வத்தை யொத்தவராய், குடிகளுக்கு ஆபத்து நேரிடும்போது கட்டியவஸ்திரம் அவிழ்ந்தவன் கைகள்போல் உடனே[20] அந்த ஆபத்திலிருந்து நீங்கும்படி கைகொடுப்பதினால் சிநேகனை யொத்தவராய், நல்லகாரியமிது கெட்டகாரியமிது என்று காட்டுகிறபடியால் கண்போன்றவராய், குடிகளுக்கு அச்சம் அவலம் முதலானவை நேரிடாமல் காத்துவருதலால் உயிர்போன்றவராய், குடிகள் தம்மை நினைக்குந்தோறும் 'இப்படிப்பட்ட நற்குண நற்செய்கைகளையுடைய புண்ணியமூர்த்தியை அரசனாகப் பெற்ற

* நல்லவழியே—ரிப்பன் பிரஸ் 5-ம் பதிப்பு, 1924. இனி, இப்பதிப்பு 1924 என்று மட்டும் குறிக்கப்படும்.

20. கைபோலுடனே—1886.

நமக்குக் குறையொன்றும் இல்லை' என்று களிக்கின்ற படியால் பொன்புதையலையொத்தவராய், கைம்மாறு வேண்டாது கொடுத்தலால் மேகத்தையொத்தவராய், அறிவே ஆயிரங் கண்களாகவும் கைகளே கற்பகமாகவும் கண்களே காமதேனுவாகவும் திருமுகமே சிந்தாமணியாகவும் மனோதிடமே வச்சிராயுதமாகவுங் கொண்டபடியால் இந்திரனையொத்தவராய், சிங்காதனமே செந்தாமரையாகவும் அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கு பொருளும்[21] அடைதற்குரிய நான்கு மார்க்கமே[22] நான்கு முகமாகவுங்கொண்டு[23] அந்தந்த மார்க்கங்களில் அந்தந்தப் பொருள்களை விருத்தி பண்ணுகிறபடியால் பிரமனையொத்தவராய், ஆக்ஞைசக்கரமே சக்கராயுதமாகவும் செங்கோலே திருமகளாகவும் சிறந்த பெரும்புகழே திருப்பாற்கடலாகவும் யுக்தமல்லாத காரியங்களை யொழிந்திருப்பதே யோக நித்திரையாகவுங் கொண்டு மண்ணுலகிலுள்ள உயிர்களைக் காத்து வானுலகிலுள்ள தேவர்களுக்கு யாகங்களால் அமுதுகொடுத்து வருகின்றபடியால் திருமாலை யொத்தவராய், சோர்வில்லாமை தூய்மை வாய்மை என்னும் மூன்றுமே மூன்று கண்களாகவும் துணிவுடைமையே* சூலமாகவுங்கொண்டு பாவங்களையெல்லாம் நிக்கிரகஞ் செய்து வருகின்றபடியால் ருத்

21. புருஷார்த்தங்களும்-1886. 22. மார்க்கங்களே-1886.
23. முகங்களாகவுங் கொண்டு—1886.

* துணிவுடைமையைச் — 1924.

திரமூர்த்தியை[24] யொத்தவராய், வாட்டத்தை நீக்கி மகிழ்ச்சி செய்கின்ற அருளுள்ளபடியால் அமுதத்தை[25] யொத்தவராய், சிவபக்தியில் மிகுந்தவராய், பொறுமையில் பூமியை யொத்தவராய், தருமமே உருவாகக்கொண்டு நடுநிலையிலிருந்து மநுநீதி தவறாது விளங்கிய மநுச்சோழர் என்னும் பெயரையுடைய சக்கரவர்த்தியானவர், கலிங்கர் குலிங்கர் வங்கர் கொங்கர் அச்சியர் கொச்சியர் தெங்கணர் கொங்கணர் தெலுங்கர் முதலான தேசத்தரசர்களெல்லாம் திறை கட்டி வணங்க, உலக முழுவதையும் ஒரு குடை நிழலில் வைத்துச் செங்கோல் செலுத்தி அரசாட்சி செய்யுங்காலத்தில்: உலகமெங்கும் புலியும் பசுவும் கூடிப்போய் ஒரு துறையில் நீர்குடித் துலாவியும் சிங்கமும் யானையும் சேர்ந்து திரிந்தும் பருந்துங் கிளியும் பழகி மகிழ்ந்தும் கூகையுங் காகமும் கூடிப் பறந்தும் பூனையும் எலியும் பொருந்தி யிருந்தும் இந்தப்படி மற்றமுள்ள விரோதமாகிய உயிர்களும் ஒன்றாக் கொன்று விரோதமில்லாமல் சிநேகஞ்செய்து வாழ்ந்திருக்கவும், மரங்கள் புல்லுகள் முதலான நடையில்லாத உயிர்களும் வாடுதல் உலர்தல் உதிர்தல் வெட்டுண்ணல் முதலான குறைகளில்லாமல் வளர்ந்தோங்கி வாழ்ந்திருக்கவும், பெருங்காற்று பெருவெள்ளம் பெருமழை தீப்பற்றல் இடிவிழுதல் முதலான உற்பாதங்கள் சிறிதுமில்லாமல் சுகுணமான காற்றும் மிதமான

24. உருத்திரமூர்த்தியை — 1886.
25. அமிர்தத்தை — 1886.

வெள்ளமும் பருவ மழையும் தவறாமல் உண்டாயிருக்கவும், பசிநோய் உடம்புநோய் அவமிருத்து உயிரச்சம் முதலான துக்கங்களொன்றும் சேராமல் சுகமே சூழ்ந்திருக்கவும், பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர் என்கின்ற ஜாதியாரும் பிரமசாரி கிரகஸ்தன் வானப்பிரஸ்தன் சந்நியாசி என்கின்ற ஆசிரமத்தாரும் சைவர் வைணவர் வைதிகர் என்கின்ற சமயத்தாரும் தங்கள் தங்களுக்குரிய ஆசாரங்களில் குறைவுபடாமல் வாழ்ந்திருக்கவும், அன்னதானம் சொர்ண தானம்[26] கோதானம் பூதானம் முதலான தானங்களும் தேவாலயங்கட்டுவித்தல் திருக்குளமெடுத்தல் செழுஞ்சோலை வைத்தல் தண்ணீர்ப்பந்தல் வைத்தல் சத்திரங் கட்டுவித்தல் முதலான தருமங்களும் சாந்திராயண முதலான விரதங்களும் தியானஞ்செய்தல் ஜெபஞ் செய்தல் முதலான தவங்களும் தவறுபடாமல் ஓங்கியிருக்கவும், தியாகேசப் பெருமானுக்கும் மற்றுமுள்ள தெய்வங்களுக்கும் திரிகால பூசைகளும் திருப்பணிகளும் திருவிழா முதலான சிறப்புகளும் குறைவில்லாமல் நடக்கவும் அவரது ஆக்ஞையே செய்வித்துவந்தது.

அவர் ஆளுகைக்குட்பட்ட உலகங்களில்[27], பூவே பறிபடுவது, புனலே சிறைபடுவது, காற்றே அலைபடுவது, கல்லே கடினமுடையது, பாவே வடிப்படுவது,

---

26. சொர்ணதானம் — 1886.

27. அவரது ஒப்புயர்வில்லா அரசாட்சியிலே—1886.

வாழையே குலைபடுவது, வண்டே மதுவுண்பது, பந்தே அடிபடுவது, பரியே கட்டுண்பது, நெல்லே குத்துண்பது, நெற்கதிரே போர்படுவது, வயலே விளைபடுவது, மாதரிடையே குறைபடுவது, தரித்திரமே தரித்திரப் படுவது, தூக்கமே தூக்கப்படுவது, பொய்யே பொய் படுவது: இவையல்லாமல், பொருள் பறிக்கப்படு வோரும், சிறைச்சாலையில் வைக்கப்படுவோரும், பகை வரால் அலைக்கப்படுவோரும், கடின மனமுள்ளவர் களும், வடுப்படுவோரும், குலைபடுவோரும், மதுவுண் போரும், அடிபடுவோரும், கட்டுண்போரும், குத் துண்போரும், போரிற்படுவோரும், விளைபடுவோரும், குறைபடுவோரும், தரித்திரப்படுவோரும், தூக்கப்படு வோரும், பொய்ப்படுவோரும் வேறே யில்லாமல் மேன் மையே[28] விளங்கியிருந்தது.

இந்தப் பிரகாரமாக மந்திரி முதலான உறுதிச் சுற்றங்களுடன் உலகாண்டிருந்த[29] அம் மநுச்சோழ ரென்னும் சக்கரவர்த்தியானவர் புத்திரப் பேறில்லா மல் மனம் வருந்தி அதுபற்றியும்[30] அறுபது வருஷ காலமாக அநேக தானங்களும் தருமங்களும் யாகங் களும் விரதங்களுஞ் செய்தும் புத்திரோற்பத்தி இல்

---

28. வேறே யில்லாமையால் அந்நாட்டில் மேன் மையே—1886.

29. முதலான அங்கங்களுடன் அரசாண்டிருந்த— 1886.

30. மனம் வருந்தி அப்பேற்றைப் பெறும்படி—1886.

லாமையால், "புத்திரச் செல்வம் பெறாதவர் பொருட் செல்வம் பெற்றும் பயனில்லையே; புத்திரன்போல் நமக்கு இந்த அரசச் செல்வம் இம்மை மறுமை இன்பங்களைக் கொடாதே; சந்ததியில்லாவிட்டால் பிற் காலத்தில் கண்களில்லாத முகமும் சூரியனில்லாத பகலும்போல, அரசனில்லாது இவ்வுலகந் தலை தடு மாறிப்போமே; ஆதலால் இனிப் புத்திரனைப் பெற்றுக் கொள்வதற்குத் தக்க முயற்சி நமது ஆண்டவனாகிய தியாகராஜப் பெருமானை வழிபடுவதே யல்லது வே றொன்றுமில்லை; ஆனால் மோக்ஷப் பேறு குறித்து[31] நிஷ்காமியமாக இத்தனை நாளும் வழிபட்டு வந்த நாம் இப்போது புத்திரப் பேறு குறித்துக்[32] காமியமாக நமதாண்டவனை வழிபடுவது தகுதியல்லவாயினும், 'தீராக் குறைக்குத் தெய்வமே முடிவு' என்கின்றபடி எவ்விதத்தினும் தீராத புத்திரனில்லாக் குறையைச் சிவபெருமானது திருவருளாலேதான் தீர்த்துக் கொள்ள வேண்டும்[33]" என்று ஆலோசித்துத் துணிவு கொண்டு, தமது மனைவியாருடன் ஆகம விதிப்படி கம லாலயம் என்னும் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து பயபக்தியுடன் பூங்கோயிலைப் பஞ்சாவரண வலமுஞ் செய்து உட்புகுந்து தியாகராஜப்பெருமா னது சந்நிதிக்கெதிரே அஷ்டாங்க பஞ்சாங்கமாக நமஸ்

---

31. மோக்ஷப் பேற்றைக் குறித்து—1886.
32. புத்திரப் பேற்றைக் குறித்துக்—1886.
33. தீர்த்துக்கொள்ளல் வேண்டும்—1886.

கரித்து வணங்கிய முடியும் மலர்ந்த பொழிகின்ற கண்ணும்[34] துதிக்கின்ற நாவும்[35] கூப்புகின்ற கையும்[36] புளகமெழும்புகின்ற உடம்புங்[37] கொண்டு நின்று[38], 'புத்திரப் பேறில்லாத குறையைத் தீர்த்தருள வேண்டும்'[39] என்று விண்ணப்பஞ்செய்து[40] பல்விதமாகத் தோத்திரஞ்செய்து தமது அரண்மனைக்குச் சென்று—அந்தப் பிரகாரமே [41] நாள்தோறும் போய் வழிபட்டுப் பிரார்த்தித்துக்கொண்டே வந்தார். அவர் செய்யும் வழிபாட்டுக்கும் வந்தனைக்கும் இரங்கித் தியாகராஜப் பெருமான் புத்திரப்பேறுண்டாகும்படி அநுக்கிரகஞ்செய்ய, அந்த அநுக்கிரகத்தால் மகாராஜனுக்கு மகிழ்ச்சி யுண்டாகும்படி தேவியார் வலம்புரிச் சங்கு விலையுயர்ந்த வெண்முத்தினைக் கருப்பங் கொண்டதுபோலத் தமது[42] திருவயிற்றில் கருப்பங்

---

34. நீர்பொழிந்த கண்ணும்—1886.
35. துதிமருவிய நாவும்—1886.
36. கூப்பிய கையும்—1886.
37. புளகமுற்ற வுடம்புங்—1886.
38. 'கொண்டு நின்று' என்பதற்குப் பின்னும் 'புத்திரப் பேறில்லாத' என்பதற்கு முன்னும் 'எம்பெருமானே!'—1886.
39. தீர்த்தருளல் வேண்டும்—1886.
40. விண்ணப்பித்துப்—1886.
41. செல்வர். இந்தப் பிரகாரமே-1886; செல்வர். இந்தப் பிரகாரம்—1924.
42. மகிழ்ச்சி யுண்டாகும்படி வலம்புரிச் சங்கு விலையுயர்ந்த வெண் முத்தினைக் கருப்பங் கொண்டது போலத் தேவியார் தமது—1886.

கொண்டு, பத்து மாதமுஞ் சென்று நல்ல சுப லக்கினத்தில்[43], தர்மதேவதை தாண்டவமாடவும் வானகத்தார் மலர் சொரிந்து வாழ்த்தவும் வையகத்தார் மனங் களிக்கவும், அதிதியாரானவர் ஆதித்தனைப் பெற்றதுபோலவும் மல்லிகைக் கொடி மணமுள்ள மலரைப் பூத்ததுபோலவும்[44], எவ்வெவர்களும் அதிசயிக்கத் தக்க சர்வ லட்சணங்களும் நிறைந்த வடிவுள்ள ஒரு புத்திரனைப் பெற்றார்.

புத்திரன் பிறந்த சந்தோஷமான சமாசாரத்தைப் பாங்கிகள் அதிசீக்கிரமாக வந்து தம்மை மறந்த மனக் களிப்புள்ளவர்களாக எதிர் நின்று "ஆண்டவனே! எங்கள் தலைவியார் திருவயிற்றி லிருந்து தேவரீர் புகழே வடிவாகவும் புண்ணியமே உயிராகவுங் கொண்டு பொன்னுலகத்தைக் காக்கின்ற புரந்தரனும் நாணமடையப் பூவுலகத்தைக் காக்கத் தக்க வல்லமையுள்ள புத்திரசிகாமணி உதயஞ்செய்தது" என்று விண்ணப்பஞ்செய்யக் கேட்ட மநுச் சக்கரவர்த்தியானவர், தூரதேசத்திற் போயிருந்த கப்பல் துறைமுகத்தில் வந்ததென்று சொல்லக்கேட்ட வர்த்தகனைப்போலவும் கூடிப் பிரிந்த மங்கையின் குரலோசை கேட்ட[45] நாயகனைப்போலவும் தாகங்கொண்டு தவிக்குங் காலத்தில் சமீபத்தே தண்ணீருண்டென்று சொல்லக்கேட்ட தேசசஞ்சாரியைப் போலவும் மனங்குளிர்ந்து உடல்

43. சுபதினத்தில் — 1886.
44. மலரைப் பெற்றது போலவும் — 1886.
45. குரலோசையைக் கேட்ட — 1886.

பூரித்து அளவிடப்படாத களிப்புடையவராய், அந்தப் பாங்கிகளுக்கு விலை யுயர்ந்த ஆடையாபரணங்களை வெறுப்படையும்படி பரிசு கொடுத்து, தாம் நீராடி நியமங்கள் முடித்து, வேதவித்துக்களாகிய பிராமணர்களுக்கு விதை தானம் சொர்ன்ன தானம்[46] கன்னிகா தானம் அசுவ தானம் கஜ தானம் பூ தானம் கோ தானம் முதலான தானங்களைக் கொடுத்து, புத்திரன் பிறந்த நாள்தொட்டுப் பன்னிரண்டு வருஷ மட்டுங் குடிகள் வரி கொடாமல் சர்வ மானியமாகத் தாமே அநுபவித்துக்கொள்ளவும் திறை கட்டி வரும் அரசர்கள்[47] ஏழு வருஷமட்டும் அந்தத் திறைகளைக் கட்டாமல் தாங்களே எடுத்துக்கொள்ளவும் சிறைச்சாலையிலிருந்த சத்துருக்களை விட்டுவிடவும் பொக்கிஷசாலையைத் திறந்துவிட்டு நகரிலும் நாட்டிலும் உள்ளோர் யாவரும் தங்கள் தங்களுக்கு வேண்டிய மட்டில் ஏழு நாள் வரையில் எடுத்துக்கொண்டு போகவும் தேவாலயங்களிலெல்லாம் புதிதாகத் திருப்பணிகளும் திருவிழா முதலான சிறப்புகளும் செய்விக்கவும் கட்டளையிட்டு, பின்பு தாம் முன் தேடி வைத்த[48] திரவியத்தைத் தெரியக் கண்டுகொண்டவனைப் போலத் திரை மறைவிலிருந்த அச் செல்வக் குழந்தையை வெளிப்படக் கண்டு மனமகிழ்ச்சியடைந்து இளஞ் சூரியோதயம்போல இந்தப் புத்திரன் இவ்விடத்தில்

46. சொர்ணதானங் — 1886.

47. அரசர்களை — 1886.

48. பின்னர் தான் தேடி வைத்த — 1886.

உதயஞ்செய்தது சிவாநுக்கிரகமே யல்லது வேறல்லவென்று வியப்படைந்து, சோதிட சாஸ்திரங்களில் வல்லமையுள்ள பெரியோர்களைக் கொண்டு ஒப்பற்ற செல்வம் கல்வி வெற்றி முதலிய அதிர்ஷ்டங்கள் நடனஞ்செய்கின்ற சாதக பலனைக் குறித்து, தியாகராஜப் பெருமானது திருவருளால் வந்ததுபற்றி அக் கடவுளின் திருப்பெயர் கொண்டு வீதிவிடங்கன் என்னும் நாமகரணமும் அன்னப்பிராசனம் சௌளம் முதலான சடங்குகளும் மிகுந்த விபவமாகவும் வேதயுக்தமாகவும் அது அது செய்யத் தக்க பருவங்களில் செய்வித்து,[49] அந்தப் புதல்வனை வாசநீராட்டுவித்தும் இனிய உணவுகளை ஊட்டுவித்தும் பொன்னாலும் இரத்தினங்களாலுஞ் செய்த பூஷணங்களைப் பூட்டுவித்தும் மார் மேலுந் தோள் மேலும் மடி மேலும் வைத்து வைத்து முத்தாடியும் திருந்தாத குதலைச் சொற்களைக் கேட்டு மகிழ்ந்தும் கற்பக விருக்ஷத்தின் கனியைக் கேட்கினும்[50] அந்தக் கணமே தருவித்துக் கொடுத்தும் சிறிய விளையாடல்களைச் செய்யக் கண்டு களித்தும் கற்புள்ளவள் கணவனை உபசரிப்பது போல உபசரித்தும் படிப்பில் ஆசையை வைத்தவன் பாடத்தைப் பாராட்டுவது போலப் பாராட்டியும் தன்னை உயர்த்தலைக்க நினைத்தவன் தருமத்தை வளர்ப்பது போல வளர்த்தும் முன் சிறுமையடைந்து பின் செல்வத்தைப் பெற்றவன் அச் செல்வத்தைப் பாதுகாப்

49. செய்வித்தும்—1886. 50. கேட்பினும்—1886.

பதுபோலப் பாதுகாத்தும், புத்திரசம்பத்தினுல் வரும் பயனை அடைந்தவராயிருந்தார்.

இந்தப்படி இணையில்லாத செல்வப் பெருக்கத்தினுல்[51] வளர்க்க வாழையிளங் குருத்துப்போல வளர்ந்து வருகின்ற புத்திரனுக்கு, ஐந்தாம் வயதில் அட்சராப்பியாசஞ் செய்வித்து, ஏழாம் வயதில் சகலதேசத்தரசர்களுக்குந் தெரிவித்து நகரை அலங்காரஞ்செய்வித்து பத்மராகம் கோமேதகம் வயிரம் வைடூரியம் முதலான இரத்தினகசிதமான கல்யாண[52] மண்டபத்தில் வேத வேதாங்கங்களில் வல்லவரான பிராமணர்களும் சாபாநுக்கிரக சாமர்த்தியமுள்ள தபோதனர்களும் ஆசீர்வதிக்கவும் மன்னர் மண்டலீகர் பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் அமைச்சர் உறவினர் சிநேகர் முதலானவர்கள்[53] கண்டு களிக்கவும் சுமங்கலப் பெண்கள் சோபனம் பாடவும் பேரி[54] சங்கம் மிருதங்கம் முதலான மங்கல வாத்தியங்கள் முழங்கவும் நல்ல சுப முகூர்த்தத்தில் வேத விதிப்பிரகாரம் உபநயன கல்யாணஞ் செய்வித்து[55], பலவகைத் தானங்களும் செய்து[56] சகல வேதாகம சாஸ்திரங்களிலும் வல்லமையுள்ள ஆசாரியரைக் கொண்டு வித்தியாரம்பஞ்[57] செய்வித்தார். சில

---

51. பெருக்கத்தில்—1886. 52. கலியாண—1886.
53. முதலானவர்—1886. 54. பேரி—1886.
55. உபநயன கலியாணமும்—1886.
56. 'பலவகைத் தானங்களுஞ் செய்து' என்பது 1886-ல் விடுபட்டிருக்கிறது.
57. வித்தியாரம்பமும்—1886.

நாள்களுக்குள்ளே வீதிவிடங்கனென்னும் அப்புத்திர ஞானவன் வேதங்கள் சாஸ்திரங்கள் புராணங்கள் ஸ்மிருதிகள் இதிகாசங்கள் முதலான கலைகளில் ஆசாரியனைப்[59] பார்க்கிலும் எண்மடங்கு வல்லமையுள்ளவனாகி, யானையேற்றம் குதிரையேற்றம் ரதாரோகணம் வில் வித்தை வாள் வித்தை இந்திர ஜாலம் மகேந்திர ஜாலம் முதலான ஸமஸ்த வித்தைகளையுங் குறைவறக் கற்றுக்கொண்டு, ஆதிசேடனைப் போல் அறிவும் காமனைப்போல் கட்டழகும் ஆண் சிங்கம்போல் ஆண்மையும் மதயானை போல் நடையும் மார்த்தாண்டன் போல் வாய்மையும் கற்பக விருக்ஷம்போல் கொடையும் உடையவனாகி[60], சிவபக்தி சீவகாருண்ணியம் பொறுமை அன்பு ஆசாரம் ஒழுக்கம் ஊக்கம் சாந்தம் சற்சனநேயம் முதலான நற்குணங்களுடன் உயிர்க்கு முடிவு நேரிடுமானாலும் உண்மையே பேசுவதும் உறுதியே சொல்லுவதும் இன்சொல்லே கூறுவதும் இதமே செய்வதும்[61] பயனுள்ள காரியங்களையே பாராட்டுவதும் பிராமணர் தவத்தோர் முதலான பெரியோர்களைக் கண்டால் அன்போடும் அச்சத்தோடும் எதிர்கொண்டு தலையால் வணங்கி வாயால் வாழ்த்துவதுமாகிய நற்செய்கைகளைப் பெற்று[62], மாதாபிதாக்களது மனக் குறிப்பறிந்து அவர் இச்சையின்வழி நடந்து மகிழும்

59. ஆசிரியனை — 1886.
60. கொடையுமுடையவனாய் — 1886.
61. 'இன்சொல்லே கூறுவதும் இதமே செய்வதும்' என்பது 1924-ல் விடுபட்டிருக்கிறது.
62. நற்செய்கைகளையுடையவனாய் — 1886.

படி செய்வித்து[63], இளமைப் பருவத்திற்றானே எல்லாம் அறிந்தவனாகி[64], கண்டோர் கொண்டாடவும் கேட்டோர் மனங்களிக்கவும், இளவரசுப் பட்டத்துக்குத் தகுந்த பருவத்துடனிருந்தான்.[65]

அப்படியிருந்த நாள்களில் ஒருநாள் அவ் வீதிவிடங்கனென்னும் இராஜ புத்திரன் தன் பருவத்துக்கொத்த இராஜகுமாரர்களும் மந்திரி குமாரர்களும் சூழ்ந்துவர தன் பிதாவாகிய மநுச்சோழருடைய சமுகத்துக்கு வந்து பிதாவினது திருவடிகளுக்கு அஷ்டாங்க பஞ்சாங்கமாகத் தண்டனிட்டு எழுந்து தூசொதுக்கியும் உடம்பொடுக்கியும் கைகட்டியும் வாய் புதைத்தும் எதிரே நிற்க, அப்போது மநுச்சக்கரவர்த்தியானவர் நெடுநாள் பிரிந்திருந்த கன்றினைக் கண்ட பசுவைப்போலவும் இடந்தெரியாதிருந்த புதையலை யெதிர்ப்படக் கண்டவனைப்போலவும் கண்கள் களிகூரக் கண்டு, உள்ளமும் உடலும் பூரித்துத் தமது இரண்டு கைகளாலும் தழுவி அணைத்தெடுத்து மடிமேல் வைத்து உச்சிமோந்து முதுகைத் தடவி "எனக்கு நெடுநாளாக விருந்த மனக்குறையைத் தவிர்த்து இம்மை மறுமைப் பயனைக் கொடுக்கும்படி பிறந்த அருமையாகிய அமுதத்தை[66] யொத்த என் புத்திரனே! உன் மனதில் ஏதோவொரு எண்ணமுண்

63. மகிழும்படிச் செய்து—1886.
64. எல்லாமறிந்தவனென்று—1886.
65. பருவமடைந்திருந்தான்—1886.
66. அமிர்தத்தை—1886.

டானதாகத் தோன்றுகின்றது; அவ்வெண்ணம் இன்னதென்று வெளிப்படுத்த வேண்டும்" என்று கேட்க,[67] அது கேட்ட வீதிவிடங்கன் "மூன்றுலகத்திலுங் கேடில்லாத கீர்த்தியை நாட்டிய பெருந்தன்மையுடைய தேவரீரைப் பிதாவாகப் பெற்ற அடியேனுக்கு எண்ணங்கொள்வதற்கு என்ன குறையிருக்கின்றது? நமது குல தெய்வமாகியும்[68] இஷ்ட தெய்வமாகியும்[69] கமலாலயத்தில் எழுந்தருளிய தியாகராஜப் பெருமானைத் தரிசித்துவர வேண்டுமென்னும் எண்ணம் ஒன்றுமாத்திரமுண்டு; இவ்வெண்ணம் இடையூறில்லாமல் நிறைவேறும்படி தேவரீர் திருவுள்ளங்கொள்ளவேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தான்.

அதுகேட்டு அரசனவர் "சர்வ வல்லமையுள்ள சுயம்புவாகியும்[70] கருணைக்கடலாகிய கடவுளாகியும்[71] பிள்ளைக்கலி தீர்த்த பெருமானாகியும்[72] விளங்கிய தியாகராஜப் பெருமானைச் சேவிப்பதற்குத் தடையுண்டோ? தனக்கிணையில்லாத தருமமூர்த்தியைத் தரிசிக்க வேண்டுமானால் தடுப்பவர் யார்? புண்ணியந்தேடப் புத்திரன் தொடங்கினால் தந்தை தடை செய்வானோ? நானே கற்பிக்கவேண்டிய நல்விஷயத்தை நீயே தெரிந்து செய்யத் தொடங்குவது நான் பூர்வஞ்செய்த புண்ணியமல்லவோ? 'பிள்ளை தேடும் புண்ணியம்

67. கேட்டார்.—1924. 68. குலதெய்வமாயும்—1924.
69. இஷ்ட தெய்வமாயும்—1924.
70. சுயம்புவாயும்—1924.
71 கடவுளாயும்—1924. 72. பெருமானும்—1924.

பிதாவுக்கும் உண்டு' என்று பெரியோர் சொல்வது பிழைபடாதென்பதை நானறியேனோ? நெல் முதலான பயிர்க்கு நீர்விடுவோரையும் குருடர்க்குக் கோல் கொடுப்போரையும் இரவில் வந்தவர்க்கு இடங் கொடுப்போரையும் அஞ்சிவந்தடுத்தவர்க்கு அபயம் கொடுப்போரையும் தாகங் கொண்டோர்க்குத் தண்ணீர் கொடுப்போரையும் பசிகொண்டு பரதவிப்போர்க்கு[73] அன்னங் கொடுப்போரையும் சேற்றில் விழுந்து திகைக்கின்றோர்க்குக் கைகொடுப்போரையும் ஆற்று வெள்ளத்தில் அகப்பட்டோரைக் கரையேற்றுவோரையும் சத்திரங்கட்டித் தருமஞ்செய்வோரையும் தடுத்தாலும், குருதரிசனம் சிவஞானிதரிசனம் சிவதரிசனம் செய்வோரை ஒருகாலுந் தடுக்கப்படாது; ஆதலால் புத்திரனே! உனக்குவேண்டிய சிறப்புக்களுடன் சுகமாகப்போய் ஆண்டவனைத் தரிசனஞ் செய்து சிவஞானமும் நீர்க்காயுளும்பெற்று வருவாய்" என்று கட்டளையிட்டார்.

அந்தக்கட்டளையை அன்புடன் தலைமேற்கொண்டு வணங்கி விடைபெற்று, மாதாவினிடத்திற் போய்ப் பக்தியுடனே[74] பணிந்தெழுந்து கைகூப்பி நின்று "அநேக விரதங்களை அனுஷ்டித்து அடியேனைப் பெற்றெடுத்து, கண்களை இமைகள் காப்பதுபோற்[75] காத்து வளர்த்த தாயே! அடியேன் தெய்வசிகாமணியாகிய

---

73. பரிதபிப் போர்க்கு—1886.

74. பத்தியுடனே—1886; பக்தியுடனே—1924.

75. காப்பன போற்—1886.

தியாகராஜப் பெருமானைத் தரிசனஞ் செய்யவேண்டும்; இதற்குத் தந்தையாருடைய சம்மதம் பெற்றுக் கொண்டேன்; இனி உமது உள்ளமும் ஒருமித்தருள வேண்டும்" என்று குறையிரந்துகொண்டான். அது கேட்ட தாயானவர்[76] உருக்கத்துடன் மனமகிழ்ச்சி கொண்டு முகமலர்ந்து முலைகளிலிருந்து பால்பீறிடவும் கண்களில் ஆசைநீரரும்பவும் தம் அருமைத்[77] திருமகனை நோக்கி "இறைவனையும் என்னையும் நற்கதியிற் சேர்க்க வந்த நாயகமே! நாங்கள் முன் செய்த தவப்பயனுமேல கிடைத்த முத்தமே! எங்கள் வருத்தமெல்லாந் தீர்க்கவந்த மாணிக்கமே! கல்வியிற் சிறந்த கண்மணியே! சுந்தர வடிவமுள்ள சூரியனே! சாந்தகுணமுள்ள சந்திரனே! பேரறிவுடைய பிள்ளாய்! நெடுநாளாகப் பலவிதமான தருமம் தானம் தவம் முதலானவைகளைச் செய்து[78] பெற்றுக்கொள்ளாமல், தியாகேசர் சந்நிதிக்கு நடந்து அந்தக் கடவுளின் அநுக்கிரகத்தால் உன்னைப் பெற்றுக்கொண்டோம். அப்படிப்பட்ட பெருங்கருணையுள்ள பெருமானை நீ தரிசிக்கவேண்டுவது அடுத்த காரியந்தான். ஆதலால் நீ போய்க் கண்குளிரக்கண்டு தரிசித்து, 'உபநயனம் முதலான மங்கலக் கோலங்கண்ட நமது[79] கண்கள் மணக்கோலமுங் கண்டு களிப்படைய வேண்டும்' என்று எண்ணியிருக்கிற என்னெண்ணம் விரைவில்

76. தாயானவள் — 1886. 77. தன்னருமை — 1886.
78. முதலியவற்றைச் செய்தும் — 1886.
79. எனது — 1886.

முடியும்படி ஒரு வரத்தையும் பெற்றுவரக்கடவாய்" என்று விடைகொடுத்தார்.[80]

அவ்விடையைப் பெற்றுக்கொண்ட வீதிவிடங்கன் தன் அரண்மனைக்கு வந்து, தயிலம் சந்தனம் கஸ்தூரி பால் தயிர் நெய் பழம் முதலான அபிஷேக திரவியங்களும் மாணிக்கமாலை மரகதமாலை முத்து மாலை பவளமாலை பொன்மாலை வச்சிரமுடி இரத்தின குண்டலம் முதலான திருவாபரணங்களும் கொன்றை மாலை தும்பைமாலை வில்வமாலை சண்பகமாலை முல்லை மாலை மல்லிகைமாலை முதலான திருமாலைகளும் வெண் பட்டு கோசிகப்பட்டு பீதாம்பரம் முதலான திரு வாடைகளும் மற்றும் வேண்டிய திரவியங்களெல்லா மும் தியாகேசர் கோவிலுக்குக் காரியக்காரர்கள் வசத் தில் முன்னதாக அனுப்புவித்து, பின்பு தான் மஞ் சனச்சாலையில் வாசநீராடி வெண்பட்டுடுத்துச் சிவத் தியானத்துடன் திருநீறு தரித்துத் திலகமணிந்து கிரீடம் குண்டலம் கண்டசரம் வாகுவலயம் பதக்கம் சரப்பளி கடகம் ஆழி பொற்பூணூநூல் பொன்னரை ஞாண் உதரபந்தனம் வீரகண்டை முதலான பூஷணங் களும் பூண்டுகொண்டு[81] ஜோதிமயமான பீதாம்பர உத்தரீயம்[82] மேலே தரித்துக்கொண்டு[83] நவரத்தின மிழைத்த வொரு பொற்பிரம்பைக் கையிற் பிடித்துக் கொண்டு, அரண்மனை வாசலைவிட்டு வெளியே புறப்

80. கொடுத்தாள் — 1886.
81. பூண்டு — 1886.
82. உத்தரியம் — 1886. 83. தரித்து — 1886.

பட்டு, வேதபாரகராகிய வேதியர் முதலானவர்களுக்குப் பலபல தானங்கள் செய்து, மனோவேகம்[84] பின்னிடையத்தக்க வேகமான நடையுள்ள நான்கு குதிரைகளைக் கட்டிய* மகாமேருவைப்போல உயர்வுள்ள ரத்தின கசிதமாகிய ரதத்தின்மேல்[85] ஆரோகணித்துக் கொண்டு[86]—வேதவேதியர் மீமாம்சகர் தார்க்கீகர் வையாகரணர்[87] சோதிடர் ஆயுள்வேதியர் வேதாந்தியர் ஆகம சித்தாந்தர்[88] புராணகர்[89] சமய சாஸ்திரப் பிரசங்கர்[90] முதலான வித்தியா வல்லவர்களும் மந்திரி பிரதானி தானாபதி முதலான காரியத்தலைவர்களும் சிநேகர் உறவினர் புரோகிதர் முதலானவர்களும் மன்னர் மண்டலீகர் பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் முதலான அரசர்களும் தங்கள் தங்கள் பெருமைக்குத் தக்க வாகனங்களிலேறிச் சூழ்ந்து வரவும்[91], நெற்றிப் பட்டம் கிம்புரி முதலான அணிகளை அணிந்து அலங்காரஞ் செய்த மதயானைகள் கர்ச்சித்து வரவும்[92],

---

84. மனோவேகமும்—1886. * குதிரை கட்டிய—1886.
85. ரதத்தின் பேரில்—1886.
86. ஆரோகணித்துக் கொண்டனன். அப்போது—1886.
87. வையாகரணிகள்—1886.
88. ஆகம சித்தாந்திகள்—1886.
89. புராணீகர்—1886.
90. பிரசங்கிகள்—1886.
91. சூழ்ந்து சென்றனர்.—1886.

92. அணிகள் சூட்டி அலங்கரிக்கப்பெற்ற மதயானைகள் கெர்ச்சித்துச் சென்றன;—1886;........கர்ச்சித்துச் சென்றன;—1924.

முத்துக்குஞ்சம் முத்துவடம் முத்துவாளி கிண்கிணி மாலை பொற்கலனை முதலான அணிகளால் அலங்கரித்த[93] வல்லியுள்ள குதிரைகள் கனைத்து வரவும்[94], வீரபட்டம் வீரசங்கிலி வீரகண்டை முதலான அணிகளை யணிந்த வீரர்கள் ஆரவாரித்து வரவும்[95], மங்கலப்பாடகர் பாடவும்[96], வந்தியர் மாகதர் புகழவும்[97], மங்கல மங்கையர் வாழ்த்தவும்[98], நாடகக்கணிகையர் நடனஞ்செய்யவும்[99], பட்டாங்கு படிக்கவும், கட்டியங் கூறவும், அஷ்டமங்கலங்களை ஏந்திச் சுமங்கலிகள் சூழ்ந்து போகவும், வெள்ளை வட்டக் குடைகள் நிழற்றவும், வெண்சாமரை வீசவும், மயிற்குஞ்சங்கள் சுழற்றவும், பூந்தட்டேந்தவும், பேரிகை தம்பட்டம் தக்கை உடுக்கை சச்சரி தாளம் மத்தளம் தாரை சின்னம் மல்லரி சங்கம் எக்காளம் ருத்திரவீணை நாரதவீணை தும்புருவீணை இராவணஹஸ்தம் கின்னரி புல்லாங்குழல்[100] முதலான தோற்கருவி துளைக்கருவி கஞ்சக்கருவி மிடற்றுக்கருவி நரப்புக்கருவி[101] என்கின்ற ஐவகையான்[102]

---

93. அணிகளாலலங்கரிக்கப் பெற்ற—1886.
94. கனைத்துச் சென்றன;—1886.
95. ஆரவாரித்துச் சென்றனர்;—1886.
96. மங்கலப் பாடகர் பாடினர்;—1886.
97. மாகதர் புகழ்ந்தனர்;—1886.
98. வாழ்த்தினர்;—1886.
99. நடனஞ் செய்தனர்.—1886.
100. புள்ளாங்குழல்—1886.
101. நரம்புக்கருவி—1886.
102. ஐவகையானும்—1886.

முப்பத்திரண்டு வாத்தியங்களும் முழங்கவும்[103], தேரிற்கட்டிய மணிகளினேசை கணீர்கணீரென்று சத்திக்கவும்[104], ஆடுகின்ற மாதரது அடிகளிற் பூண்ட சிலம்போசை கலீர்கலீரென்று ஒலிக்கவும்[105], சகல மங்கல சம்பிரம ஆடம்பரங்களுடன், மாளிகைகளின் வாயல்கள்தோறும்[106] மலர்ப்பந்தரிட்டு மணிமாலைகள் தூக்கி வாழை கமுகுகள் நாட்டி மெழுகிக் கோல மிட்ட திண்ணைகளில் பூரணகலசங்களும் பொற்பாவை களும் முளைப்பாலிகைகளும் முகவிளக்குகளும் வெண் சாமரைகளும் இணைக்கயல்களும் கண்ணாடிகளும் பூந் தட்டுகளும் மங்கலமாக வைத்து அலங்கரித்தும்[107] பரிமள திரவியங்களைக் கலந்த பனிநீர் தெளித்துத் தூளியெழும்பாமல் தளஞ்செய்தும் ஆடல்பாடல் முதலான விநோதங்களைக் கொண்டு விளங்கிய வீதியினிடத்து[108], தேவேந்திரன் தியாகராஜ தரிச னஞ் செய்யப்போவது போல—அவ்வீதிவிடங்க னென்னும் இராஜ குமாரன்—தேரை[109] நடத்தினன்.

அப்பொழுது, இரதி இந்திராணி முதலான தேவ மாதர்களை யொத்த அவ்வீதியிலுள்ள ஸ்திரீ ஜனங்க

103. முழங்கின.—1886.
104. சத்தித்தன.—1886.
105. ஒலித்தன.—1886.
106. வாயில்கள் தோறும்—1924.
107. அலங்கரித்து,—1886.
108. விநோதங்களைக் கொண்டும் வீதி விளங்கியது. அவ்வீதியி னிடத்து—1886.
109. தன்தேரை—1924.

ளெல்லாம் அப்புத்திரனைக் கண்டு மணமுள்ள மலரை வண்டுகள் சூழ்ந்ததுபோலவும் இனிய சுவையுள்ள தேனை ஈக்கள் சுற்றியதுபோலவுஞ் சூழ்ந்து கொண்டு[110], கலைநெகிழ்ந்தும் கைவளைசோர்ந்தும் கண்ணீர் ததும்பியும் குழலவிழ்ந்தும் கொங்கைகள் விம்மியும் பசலைபோர்த்தும்மையலடைந்த மனத்தவர்களாய், "கரும்பை வில்லாகவுடைய காமனைப்பார்க்கிலும் எண்மடங்கு அழகுடைய இளவரசே! கன்னிகைப்பருவம் உள்ளவளே நான்: என்மேற் கடைக்கண் செய்யாயோ?" என்றும், "எழுதப்படாத சுந்தரவடிவமுள்ள இளங்காளையே! புருஷர்முகம் பாராத பூவையே நான்: என்னைப் புணர்ந்து போகாயோ?" என்றும், "கண்களுக்கு நிறைந்த கட்டழகனே! காவலழியாத காரிகையே நான்: என்னைக் கலந்து போகாயோ?" என்றும், "சுபலக்ஷணங்கள் நிறைந்த சுந்தரவடிவனே! கல்யாணமில்லாத[111] கன்னிகையே நான்: என்மேற் கருணை செய்வாயோ[112]?" என்றும், "மநுச்சக்கரவர்த்தி பெற்ற மதயானையே! சிறு வயதுள்ளவளே நான்: என்னைத் திரும்பிப்பாராயோ?" என்றும், "அதிசயிக்கத்தக்க அழகனே! நிறையழியாத நேரிழையே நான்: சற்றே நின்று போகாயோ?" என்றும், "இந்த ராஜபுத்திரனுக்கு வீதிவிடங்கனென்று பெயரிட்ட[113] பெரி

110. சூழ்ந்து கொண்டனர். அம்மாதர்—1886.
111. கலியாண மில்லாத—1886.
112. செய்யாயோ—1886.
113. பேரிட்ட—1886; பெயரிட்ட—1924.

யோர்க்கு அனந்தந்தரம்[114] அடிக்கடி தெண்டனிட்டா லும் போதாதே" என்றும்[115], "வாசமுள்ள தயிலம் பூசி மணமுள்ள மலர்மாலை சூழ்ந்து வாழைப்பூ இதழ் போல வகிர்ந்து குயில்முகம் போல முடியிட்டுப் பளிங்குச் சிமிழ்க்குள்ளிருந்து தோன்றுகின்ற பருத்த நீலக்கல்போல் தாவள்ளியமான தலைச்சாத்துக்குள் ளிருந்து சிறுகித் தோன்றுகின்ற குடுமியும், பார்க் கின்றவரது பார்வைக்கு இன்பந்தருகின்ற தோற்ற மும் மாறாத மலர்ச்சியும் மனோரஞ்சிதமான அழகும் குளிர்ச்சியும் ஒளியும் பெற்றுச் செந்தாமரை மலர் போல் விளங்கும் முகமும், கருமை மிகுந்து செம்மை கலந்து காருண்ணியந் ததும்பி இங்கிதமறிந்து சிறிதே யிமைத்து மனோரம்மியமாய் மலர்போன்று நீண்ட கண்களும், ஒளிகொண்டு உயர்ந்து நீண்ட நாசியும், குண்டலமணிந்து நீண்டு அகன்ற செவியும், திரிபுண் டரந் தரித்துத் திலகந்தீட்டி[116] அழகு பெற்று அகன்று உயர்ந்த நெற்றியும், பவளம்போற் சிவந்து திரண்ட உதடும், முல்லை யரும்புகள் போலச் சிறுகி[117] நெருங்கி ஒளிவீசும் பற்களும், குறுகி மென்மையாகிச் சிவப் பேறிய நாவும், கண்டசரம் முதலான ஆபரணங்களை அணிந்து வலம்புரிச் சங்குபோல் திரண்ட கண்டமும்,

---

114. அனந்ததரம் — 1886.

115. 'என்றும்' என்பதற்குப் பின்னும் 'வாசமுள்ள' என்பதற்கு முன்னும் 'தம்மிற்றாமே பேசி மனதுருகித் தம்மை மறந்தார்கள். சில மாதரோ' — 1886.

116. திலதந்தீட்டி — 1886; திலகந் தீட்டி — 1924.

117. சிறுத்து — 1886.

மத்தளம் போலத் திரண்டு மந்தர மலைபோல உயர்ந்து கண்டோர்கண்களையுங் கருத்தையுங் கட்டுகின்றசுகந்த மாலை யணிந்த் வெற்றியுள்ள தோளும், வீணைத்தண்டு போல நீண்டுதாழ்ந்து கடகமணிந்த கையும், தாமரை மலர்போற் சிவந்து மிருதுவாகி மழைபோற் சொர்ன்னம்[118] பொழிகின்ற முன்கையும், விளக்கமிகுந்துபதக்க முதலானவை அணிந்து களப கஸ்தூரிகள் பூசிக் கண்ணுடிபோல அகன்று மலைபோல உயர்ந்த மார்பும், சிறுகிஉயர்ந்த[119] வயிறும், ஆழ்ந்து அழகுபெற்ற உந்தியும், யானைத்துதிக்கை போன்று திரண்ட தொடையும், வட்டந்தோன்ருது தசைகொண்டு செழிப்புள்ள முழங்காலும், திரண்டு நீண்ட கணைக்காலும், தாமரை மலர்போன்று வீரகண்டை யணிந்த கால்களும், வரம்பு கடவாத வடிப்பமுள்ள[120] வடிவமுமுடைய இந்த இராஜபுத்திரனைக் கண்டு களிப்பதற்கு நானென்ன தவஞ் செய்தேனோ!" என்றும், "இராஜ சிங்கமாகிய இந்தக் குமரனைச்[121] சிருஷ்டித்தவன் பிரமதேவனே யானால் இவனழகுக்குத் தக்க மாதினை இனி எங்கே உண்டுபண்ணுவானோ!" என்றும், "இவ்வழகனது வடிவைக் கண்டால் உருகாத கருங்கல்லும் உருகுமானல் பேதமையுள்ள பெண்கள் மனம் உருகாதிருக்குமோ!" என்றும், "இவனது பூர்ணசந்திர விம்பம் போன்ற புன்னகையொன்றுமே மூன்றுலகத்திலு

---

118. சொர்ணம்—1886.　　119. சிறத்துயர்ந்த—1886.
120. 'வடிப்பமுள்ள' என்பது 1924-ல் விடுபட்டிருக்கிறது.
121. குமாரனைச்—1886.

முள்ள பெண்களுக்கெல்லாம் பித்தேற்றுமே!" என்றும் பலவிதமாகத் தனித்தனி சொல்லி மோகங் கொண்டு நின்றார்கள்.

அவ்வீதியிலுள்ள வாலிபர் வார்த்திபர் முதலான புருஷ ஜனங்களெல்லாங்கண்டு, "ஆ! ஆ!! இந்தப்புத்திரனே இராஜபுத்திரன்: இவனுக்குமுன் மற்ற இராஜபுத்திரரெல்லாம் இராக்ஷச புத்திரரே" என்றும், "இவன் வடிவே வடிவு: இவன் வடிவுக்குமுன் மற்றவர் வடிவெல்லாம் மரவடிவே" என்றும், "இவன் கற்ற வித்தையே வித்தை: இவனுக்குமுன் மற்றவர் கற்ற வித்தையெல்லாம் மாயவித்தையே" என்றும், "இவன் குணமே குணம்: வேறு[122] குணமெல்லாம் வில்லின் குணமே" என்றும், "இவனே இளவரசு: இவனுக்கு முன் மற்ற இளவரசெல்லாம் பூவரசே" என்றும், "இவனே சீமான்: இவனுக்குமுன் மற்றச் சீமான்களெல்லாங் கலைமான்களே" என்றும்[123], "இவன் வீரமே வீரம்: இவன் வீரத்துக்குமுன் மற்றவர் வீரமெல்லாம் சவ்வீரமே" என்றும், "இவன் யௌவனமே யௌவனம்: இவன் யௌவனத்துக்கு முன் மற்றவர் யௌவனமெல்லாம் வெவ்வனமே" என்றும், "இவன் பாக்கியமே பாக்கியம்: மற்றவர் பாக்கியமெல்லாம் நிர்ப்பாக்கியமே" என்றும், "இவனைப் பெற்றவரே பெற்றவர்: மற்றவரெல்லாம் பெண் பெற்றவரே" என்றும்[124],

---

122. இவனுக்கு முன்மற்றவர் — 1886.

123. 'என்றும்' என்பதற்குப் பின்னும் 'இவன் வீரமே' ன்பதற்கு முன்னும் 'பேசி வியந்தோர் பலர்.' — 1886.

"இந்தக் குணரத்தினமான புதல்வனைப் பெறுதற்கு நமது மகாராஜனும் அவரது மனைவியாரும் என்ன நோன்பு நோற்றாரோ" என்றும், "வெற்றியையுடைய வீரசிங்கம்போன்ற இந்தப் புத்திரனது திருமுகமண்டலத்தில் சாந்தந் ததும்புகின்றதே"[125] என்றும், "இவனது கண்கள் கருணை பொழிகின்றனவே" என்றும், "இவனது வடிவில் அழகு ஒழுகுகின்றதே"[126] என்றும், "நெடுநாளாகக் கண்டுகளிக்கவேண்டுமென்று எண்ணி எதிர்பார்த்திருந்த நமக்கு இன்று தியாகராஜப் பெருமான் திருவருளல்லவோ இந்த இராஜ புத்திரனை இவ்வீதியில் வரும்படி செய்தது? இனி அவ்வருளுக்கு என்ன கைம்மாறு செய்வோம்" என்றும்,[127] "இந்தப் புத்திரன் தியாகேசப்பெருமான் வரத்தினால் தோன்றினான் என்பதை இவனது அற்புதமான வடிவமே[128] காட்டுகின்றதே" என்றும், "நமதரசனுக்குச் சந்ததியில்லாமையால் பிற்காலத்தில் உலகம் என்ன பாடுபடுமோ என்று எண்ணி இளைத்திருந்த நமது துன்பத்தையெல்லாம் நீக்கி இன்பத்தைக் கொடுத்த இப்புத்திரனுக்கு நாம் செய்யும் உபகாரம் ஒன்றுமில்லையே" என்றும், "மநுச்சோழ மகாராஜனைப்போல நம்மையெல்

---

124. 'என்றும்' என்பதற்குப் பின்னும் 'இந்தக் குணரத்தினமான' என்பதற்கு முன்னும் 'பேசினோர் சிலர்.'--1886.
125. ததும்புகின்றனவே—1886.
126. ஒழுகுகின்றனவே-1886; ஒழுகுகின்றதே-1924.
127. 'என்றும்' என்பதற்குப் பின்னும் 'இந்தப் புத்திரன்' என்பதற்கு முன்னும் 'பேசி மகிழ்ந்தோர் சிலர்.'—1886.
128. வடிவம்—1886.

லாம் பாதுகாத்து வருவானென்பதற்கு வேறே அடையாளம் வேண்டுமோ? இவனிடத்திற் கருணை துளும்புகின்ற[129] கடைக்கண்களே காட்டுகின்றன" என்றும்[130] பலவிதமாகத் தனித்தனி சொல்லிக்கொண்டு சூழ்ந்து நின்றார்கள்.

இந்தப் பிரகாரம் அவ்வவ் வீதியிலுள்ள ஸ்திரீ ஜனங்களும் புருஷ ஜனங்களும் பார்த்துப் பார்த்துப் பலவிதமாகப் புகழ்ந்து நெருங்க வீதிவிடங்கன் தேரிலேறிச் செல்லும்போது[131], ஒரு வீதியில், தேரிலே கட்டிய குதிரைகள் தேர்ப்பாகன் வசத்தைக் கடந்து தெய்வத்தின் வசமாகி, அதிவேகமாக அத்தேரை இழுத்துக்கொண்டு சென்றன. அத் தருணத்தில் தாய்ப் பசுவானது பின்னே வர முன்னே வந்த அழகுள்ள ஒரு[132] பசுங்கன்றானது 'இளங்கன்று பயமறியாது' என்ற[133]மொழிப்படியே துள்ளிக் குதித்துக்கொண்டு எதிர்[134] வந்து, இராஜகுமாரனைச் சூழ்ந்து வருகிற சனத்திரள்களுக் குள்ளே ஒருவரும் அறிந்துகொள்ளாதபடி ஊழ்வினையாற் கண் மயக்கஞ் செய்வித்து உட்புகுந்து, அதிவேகமாகச் செல்லுகின்ற[135] தேர்ச் சக்கரத்தில் அகப்பட்டு அரைபட்டு உடல்முறிந்து குடல்சரிந்து உயிர் விட்டுக் கிடந்தது.

---

129. தளும்புகின்ற—1886; ததும்புகின்ற—1924.
130. என்றும் பலர் பலவிதமாக—1886.
131. தேரிலேறிச் சென்றனன். செல்லும்போது-1886.
132. 'ஒரு' என்பது 1924-ல் இல்லை.
133. என்கிற—1924. 134. எதிரே—1924.
135. செல்கின்ற—1886.

உடனே அந்தப் பசுங்கன்று தனது தேர்ச் சக்கரத்தில் அகப்பட்டதைக் கேட்ட வீதிவிடங்கன் இடியோசை கேட்ட நாகம்போலத் திடுக்கிட்டு, நடுநடுங்கித் தேரிலிருந்து கீழேவிழுந்து எண்ணப்படாத துன்பத்தோடும் பயத்தோடும் எழுந்துபோய் அப் பசுங்கன்று இறந்து கிடப்பதைக் கண்டு, மதிமயங்கி மனம் பதைத்துக் கையுங்காலும் நடுக்கெடுத்துப் பெருமூச்சு விட்டு உடம்பு வெயர்த்துச் சோபமடைந்து விழுந்து, சிறிதே தெளிந்தெழுந்து கண்களிலே நீர் ஆறுகப் பெருக நின்று, "சிவசிவா! சிவசிவா!! சங்கரா! சங்கரா!! சம்புவே! சம்புவே!! மஹாதேவா! மஹாதேவா!! தியாகராஜப்பிரபு! தியாகராஜப்பிரபு!! தேவரீரைத் தரிசிக்கவேண்டுமென்று வந்த அடியேனுக்கு இப்படிப்பட்ட இடரும் வரலாமா? நன்றறியாத[136] பாவி இவன் நம்மைத் தரிசிக்கத்தக்கவனல்லனென்று[137] திருஉளங்கொண்டதானே என்னை இந்தப் பழிக்கு ஆளாக்கியது? தேவரீரைத் தரிசனஞ்செய்ய எண்ணி வந்த அடியேன் கால்வருந்த நடந்து பயபக்தியுடனே வந்து தரிசிக்கவேண்டும்: அவ்வாறு செய்யாமல், செல்வச் செருக்கினால் தேரிலேறிக்கொண்டு ஆடம்பரங்களுடன் பக்தி யில்லாது பகல்வேஷக்காரன் போலடம்பவேஷங் காட்டிவந்த அன்பில்லாத பாவியாகிய என் பிழையைக் குறித்து நோவதல்லது, எம்பெருமானிடத்திற்[138] குறை சொல்லத் தகுமோ? இப்படிப்

136. நன்றி அறியாத—1924.
137. தக்கவனல்ல னென்று—1886.

பட்ட பெரும்பாதகம் செய்யத்தானோ பிள்ளையாகப்[139] பிறந்தேன்? விரிந்த பாற்கடலில் விஷம் பிறந்தது போல் மறைநெறி தவறாத மநுவின் வமிசத்தில் எதிரற்ற பாவியாகிய[140] நான் ஏன் பிறந்தேன்? பழிபாவங்களைக் கனவிலும் கண்டறியாத மநுச்சோழராகிய என் பிதாவுக்குப் பெரும்பழியைச் சுமத்தத்தானோ[141] பிறந்தேன்? சிவபெருமானைத் தரிசித்துச் சீர்பெறலாமென்று எண்ணி வந்த எனக்குச் சிவதரிசனங் கிடையாது தீராப் பழி கிடைத்ததே! ஓகோ! 'எண்ணம் பொய்யாகும் ஏனிதம் மெய்யாகும்' என்ற வார்த்தை என்னிடத்திலே இன்று அநுபவப்பட்டதே![142] ஐயோ! நான் கற்ற கல்வியெல்லாம் கதையாய் முடிந்ததே;[143] நான்கேட்ட கேள்வியெல்லாங் கேடாய் முடிந்ததே;[143] நான் அறிந்த அறிவெல்லாம் அவலமாய்விட்டதே;[144] நான் தெளிந்த தெளிவெல்லாம் தீங்காய் விட்டதே;[144] அரஹரா! இப்படிப்பட்ட தீங்கு வருமென்று அறிந்தால் தேரிலேறேனே. பசுவைக் கொலை செய்வதே பாவங்களி லெல்லாம் பெரும் பாவம். அதைப் பார்க்கிலும் பசுங்கன்றைக் கொலைசெய்வது பஞ்சமாபாதகத்

138. என் பெருமானிடத்துக் — 1886.
139. செய்யத்தானோ யான் பிள்ளையாக — 1924.
140. பாவியாகிற — 1886.
141. சுமத்தத்தானோ — 1886.
142. என்கிற வார்த்தைகள் ... அநுபவப்பட்டனவே — 1886.
143. முடிந்தனவே — 1924.
144. விட்டனவே — 1924.

தினும் பதின்மடங்கு அதிகம் என்று பெரியோர் சொல்லக் கேட்டறிந்திருக்கிற நான் இன்று அந்தப் பாதகத்துக்கு ஆளாகியும் உயிரை விடாமல் உடலைச் சுமந்திருக்கின்றேனே ;[145] இளங்கன்று எதிரே வரவும் அதைப் பாராமல் அதன்மேல் தேரைநடத்தியது செல்வச் செருக்கல்லவோ என்று உலகத்தார்[146] பழிக்கும் பழிக்குத்தான் உடம்பெடுத்தேன்; நான் புத்தி பூர்வமாக எள்ளளவாயினும் அறிந்திருப்பேனானால் இப்படிப் பட்ட அபாயம்நேரிடவொட்டேன்; என்ன செய்வேன் என்ன செய்வேன்!! மநுச்சோழர் காலத்தில் அவர் புத்திரன் ஒருபசுங்கன்றைக்கொன்றான் என்னும் பழி மொழியை உலகத்தில் நிலைபெற நாட்டினேனே! நீதி தவறாது உலகத்தை யெல்லாம் ஆளுகின்ற மநுச்சக்கரவர்த்தி யென்னும் மகாராஜனுக்குப் பிள்ளையாகப் பிறக்கும்படியிருந்த நல்வினை இப்போது பேயாகப் பிறப்பதற்குத் தக்க தீவினையாய் விட்டதே! இந்தப் பிறப்பிலே இப்பழியை ஏற்றுக்கொள்வதற்கு முன்பிறப்பில் என்னபாவஞ் செய்தேனோ? தூய்மையுள்ள சூரிய குலத்திற்கு ஆதியாகிய மநுவென்பவரும் அவர் வழிக்குப் பின் வழிவழியாகத் தோன்றிய[147] குலோத்துங்கச் சோழர் திருநீற்றுச்சோழர் காவிரிகரைகண்ட சோழர் மநுநீதிச்சோழர் இராஜேந்திரச்சோழர் இராஜ சூடாமணிச்சோழர் இராஜராஜச்சோழர் உறையூர்ச்சோழர்

145. சுமந்திருக்கிறேனே—1886.
146. உலகத்தோர்—1886.
147. பின் வழியாகத் தோன்றிய—1886.

மண்ணளந்தசோழர் கங்கைகொண்டசோழர் தேவர் சிறைமீட்ட சோழர் மரபுநிலைகண்டசோழர் எமனை வென்றசோழர் சுந்தரச்சோழர் மெய்ந்நெறிச்சோழர், முதலான என் மூதாதைகளாகிய[148] முன்னோர்களெல்லாம் தீமையைச் சேராது செங்கோல்நடத்தி அடைந்த கீர்த்தி இக்காலத்தில் எடுக்கப்படாத பழியைச் சுமந்த என்னால் மறைந்து போகும்படி நேரிட்டதே! ஐயோ! இதை எண்ணும்போது, நான் குலத்தைக் கெடுக்கவந்த கோடாலிக் காம்பானேனே![149] மரபழிக்கவந்தவச்சிராயுதமானேனே! கன்றுக்குப் பாலூட்டாதவனைக் கண்டாலும் பாவமென்று சொல்லுகிற பெரியோர்கள் சேங்கன்றைத் தேர்க்காலிலிட்ட என்னைக் குறித்து என்ன சொல்வார்கள்? இந்தக் கன்று எங்கே பிறந்ததோ? எங்கே வளர்ந்ததோ? எங்கே போக எண்ணியதோ? இங்கே வந்து இறக்கநேரிட்டதே! சுந்தரமுள்ள இக்கன்று இறந்ததைக் கண்ட எனக்கே இவ்வளவு துக்கமுண்டாயிருக்கின்றதே! இதை ஈன்ற தாய்ப்பசு கண்டால் என்ன பாடுபடுமோ? இச்செய்தியை என் பிதாவானவர் கேட்பாரானால் எதாய்முடியுமோ? வார்த்தை மாத்திரத்திலே பழியென்று சரசஞ் செய்கின்றவர்களையுந் தண்டிக்கின்ற தந்தையார் திருமுகத்தில் தகுதியல்லாத பழியைச் சுமந்து தண்டனைக்காளாகிய நான் எவ்வாறு விழிப்பேன்? இனி இவ்வுலகில் பழிக்காளாகி உண்டுடுத்து உலாவி உயிர் வைத்திருக்கமாட்

148. மூதாதைகளான — 1886.
149. கோடரிக் காம்பானேனே — 1886.

-டேன்: இன்றே என்னுயிரை இழந்துவிடுகிறேன்!" என்று பலவிதமாகப் பரிதாபித்து[150] துக்க சமுத்திரத்தில் அழுந்திக் கரை காணுதவனுகி நின்றபோது—உடன்சூழ்ந்துவந்த அந்தணர் அமைச்சர் முதலானோர் ராஜகுமாரனைப் பார்த்துத் தாமும்[151] விசனமடைந்தவர்களாய், 'ஓ விவேகமுள்ள வீதிவிடங்கனே! நீர் என்ன கெடுதி நேரிட்டதென்று இப்படிப் பிரலாபிக்கிறீர்?[152] அந்தப் பசுவின்கன்றை நீர் கொல்ல வேண்டுமென்று கொன்றீரோ? அல்லது அந்தக் கன்று தேர்க்காலில் அகப்படுவதை அறிந்தும் அஜாக்கிரதையாயிருந்தீரோ? அக்கன்று ஓடிவந்ததைச் சூழ்ந்திருந்த நாங்கள் ஒருவரும் அறியோமே: நீர் எப்படி அறிவீர்? அது கர்மவசத்தாலே எல்லார் கண்களிலும் மண்ணைத் தூவி வலிய வந்து மடிந்ததே: அதற்கு நீர் என்ன செய்வீர்? மிருக ஜாதிகளிலே உயர்வுள்ள பசுவின் கன்று இறக்க நேரிட்டதே யென்று எண்ணி யெண்ணிச் சோர்ந்து போகின்றீர். ஆனால் அதற் கென்ன செய்வோம்? பொன்கத்தி என்று கழுத்தரிந்து[153] கொள்ளலாமோ? இதனல் நமக்குப் பழிபாவம் ஒன்றுமில்லை; ஆயினும் இதுபற்றி உமது மனது ஆலைபாய்ந்து அவலங்கொள்ளுகின்றபடியால், வேதத்தில் விதித்திருக்கின்ற பிராயச்சித்தங்களுள் இதற்குத் தக்கது எதுவோ அதைத்

150. பரிதபித்து—1886.
151. தாங்களும்—1924.
152. பிரலாபிக்கின்றீர்—1886.
153. கழுத்தை யரிந்து—1924.

கேட்டறிந்து செய்துகொள்ளலாம்: நீர் சித்தங் கலங்காமல் தேரிலேறும்" என்று சொன்னார்கள்.

அதுகேட்ட வீதிவிடங்கன் "நடுவாகப் பேசுகின்ற நல்லோர்களாக விருந்தும் காலவேற்றுமையால் கருத்துவேறுபட்டு முகநட்பாகப் பேசி முகந்துடைக்கின்றவர்கள்போற் சொன்னீர்கள்: இதென்ன ஆச்சரியம்! பூர்வம் எங்கள் வம்சத்தில் சிபிச்சக்கரவர்த்தி என்பவர் ஒருவர் ஒரு வேடன் துரத்திக்கொண்டு வரப் பயந்து அடைக்கலமாகப் புகுந்த புறுவுக்கு அபயஹஸ்தஞ்செய்து,[154] பின்பு அவ்வேடன் வந்து புறுவைக் கேட்டு வழக்கிட்டபோது, அந்தப் புறுவுக்கு ஈடாகத் தமது சரீரத்திலுள்ள மாமிசத்தை யெல்லாம் அரிந்தரிந்து தராசில் வைத்தும் நிறைகாணாம லிருக்க, அதுகண்டு தாமும் அந்தத் தராசிலேறினார். அவர் பட்சி ஜாதிகளில் சாமானியப் பிறவியாகிய புறுவின் உயிர்க்கொலைக்கே அஞ்சித் தம் உடம்பைக் கொடுத்ததுமன்றி உயிரையுங் கொடுத்தாரானால், அப் பட்சி ஜாதிகளில் விசேடப் பிறப்பாகிய கருடன் முதலான உயிர்களினிடத்து எப்படிப்பட்ட காருண்ணிய முள்ளவராய் இருக்கவேண்டும்? அதனிலும்[155] உயர்ந்த மிருக ஜாதிகளில் எவ்வகைப்பட்ட கிருபை யுடையவராய் இருக்க வேண்டும்? அதனிலும்[155] அம் மிருக ஜாதிகளில் விசேடமாகிய பசுக்களினிடத்தில்[156]

---

154. அபயாஸ்தஞ் செய்து—1924.
155. அதனினும்—1886.
156. பசுக்களிடத்தில்—1886.

எப்படிப்பட்ட இரக்கமுள்ளவராய் இருக்க வேண்டும்? அதனினும்[157] பசுவின் கன்றுகளிடத்தில் எவ்வகைப் பட்ட தயவுள்ளவராய் இருக்க வேண்டும்? அப்படிப் பட்டவருடைய வம்சத்தில் நான் பிறந்தும், இன்று வீதியில் வரும்போது யாரோ பயங்காட்டித் துரத்த, அதனால்நடுங்கி என்னெதிரே அடைக்கலமாகத் துள்ளி யோடி வந்த இந்தப் பசுங்கன்றை அபயஹஸ்தங் கொடாமல்,[158] அநியாயமாகத் தேர்க்காலில் அகப்பட் டிறந்துபோகச் செய்தேனே! இப்படிப்பட்ட என்னை என்ன செய்தால் தீரும்? என்னை இதற்குத்தக்க பிராயச் சித்தஞ் செய்துகொள்ளும்படி சொன்னீர்கள்: எங்கள் வமிசத்திலிருந்த அரசர்கள் இரக்கத்துடன் நீதி தவ றாது அரசு செலுத்தி வந்த கிரமத்தையும் என் பிதா வாகிய மநுச்சோழர் நடுநிலை[159] தவறாமல் எவ்வுயிர்களை யும் தம்முயிர்போலப் பாதுகாத்து வருகின்ற முறை மையையும் அரசர்க்குக் கோபூசை செய்வது கட னென்ற வேதவாக்கியத்தையும் அரசர் பசுக்களுக்கு யாதொரு குறைவும் நேரிடவொட்டாமல் மிகுந்த ஜாக் கிரதையுடன் விருத்தி செய்விக்க வெண்டு மென்கிற பெரியோர் வாக்கியத்தையும், ஐயோ! எங்கே அனுப்பி விட்டு இங்கே பிராயச்சித்தஞ் செய்து கொள்ளு வேன்!” என்று துயரத்துடன் சொல்லினான்.

அது கேட்ட அவ் வந்தணர் முதலானவர்கள்

157. அதனினும்—1924.
158. அபயஸ்தம்—1886; அபயாஸ்தம்—1924.
159. நடுநிலைமை—1886.

"வாராய் இராஜபுத்திரனே! நாங்கள் முகத்துக்கிச்சையாக முன்னென்று பேசிப் பின்னென்று சொல்லுகின்றவர்கள் அல்ல;[160] நெடுநாளாக எங்களுடன் பழகியிருந்தும் எங்கள் சுபாவம் இன்னமும்[161] உமக்கு நன்ருகப் புலப்படவில்லை என்று தோன்றுகின்றது. உலகம் தலைகீழாகுமானாலும் உள்ளபடி சொல்லுவோமேயல்லது புதிதாகத் தொடுத்துப் பொய் பேசமாட்டோம். நாங்கள் சொல்லும் வார்த்தையில் நம்பிக்கை வைத்துக் கேட்கக் கடவீர். அந்தப் பசுங்கன்று ஒருவர் துரத்த அதனால் பயந்து அடைக்கலமாக வேண்டும் என்கின்ற[162] அறிவோடு உமக்கெதிரே ஓடிவந்ததல்ல; அல்லது தானே துள்ளிக்குதித்து ஓடிவந்ததும் அல்ல; அதை இன்னவிடத்தில் இன்ன காலத்தில் இன்னபடி இறக்குமென்று விதித்திருந்த அதன் தலைவிதியே அதனைத் துரத்திக்கொண்டு வந்து தேர்க்காலில் அகப்படுத்திச் சிதைத்துவிட்டது: அதன் விதி அப்படியிருக்க நீர் வீணாக விசனப்படுவதில் என்ன பலன்? 'கும்பகோணத்துப் பள்ளன் கொள்ளைகொண்டுபோகத் தஞ்சாவூர்ப் பார்ப்பான் தண்டங்கொடுத்தான்' என்னும் பழமொழிபோல அதனுயிரை விதி கொள்ளை கொள்ள உம்முயிரைத் தண்டங்கொடுப்பதேன்? நீர் ஒன்றுக்கும் அஞ்சாமல் தேரிலேறும்" என்று சொன்னார்கள்.

---

160. சொல்லுகின்றவர்க ளல்லம்—1886.
161. இன்னம்—1886.
162. என்கிற—1886.

அதுகேட்டு ராஜபுத்திரன் "சிவதரிசனம் செய்ய எண்ணித் தேரிலேறும்போதே கால்தவறியும் இடது தோளும் இடதுகண்ணும் துடித்தும் காட்டிய உற்பாதங்களை ஆலோசியாமல் புறப்பட்ட என் மதியை நினைத்துத் தான் துயரப்படுவேனோ! அரசர் குலத்திற் பிறந்தும் என்னை இழிகுலத்தார் செய்யும் செய்கையைச் செய்வித்த என் விதியை நினைத்துத்தான் துயரப்படுவேனோ! மாசில்லாத சூரிய குலத்துக்கு மாசுண்டாகும்படி செய்ததைக் குறித்துத் துயரப்படுவேனோ! பிதாவுக்குப் பழிசுமத்தப் பிள்ளையாகப் பிறந்ததைக் குறித்துத் துயரப்படுவேனோ! இந்தக் கன்று இறந்ததை நினைத்துத்தான் துயரப்படுவேனோ! இக்கன்றின் இறப்பைக் கண்ட தாய்ப்பசு துக்கப்படுமென்பதை நினைத்துத் துயரப் படுவேனோ! நானொருவன் எதற்கென்று துயரப்படுவேன்! என்ன செய்வேன்! செய்யத் தக்கதொன்றும் இன்னதென்று அறியேனே! ஆயினும் 'முற்ற நனைந்தார்க்கு ஈரமில்லை' என்பது போல முழுதும் பழிப்பட்ட எனக்கு இனி யென்ன துக்கமிருக்கின்றது! இனிப் பெரியோர்சொல் கடக்கப்படாது என்பதுபற்றி உமது சொற்படியே இதோ இரதத்தில் ஏறுகின்றேன்; என்னை எப்படிப் புனிதனாக்க வேண்டுமோ அப்படிச் செய்து கடைத்தேற்றுவது உங்களுக்கே கடன்" என்று சொல்லி, ஏறி, இரதத்தை வந்த வழியே திருப்பிவிட்டுப் பிராயச்சித்தம் அறிந்து செய்விக்கத் தக்க பெரியோர்களிடத்துக்குப் போயினான்.

இந்தப் பிரகாரம் இராஜகுமாரன் போயின பின்பு,[163] இறந்துவிட்ட அக்கன்றை ஈன்ற தலையீற்றுப் பசுவானது தன் கன்று துள்ளிக் குதித்தோடிய வழியே போய் அந்தக்கன்று கீழேவிழுந்து கிடப்பதைத் தூரத்தே கண்டவளவில் குலைகுலைந்து நடுநடுங்கி புத்திமயங்கி ஒன்றுந் தெரியாமல் சூறைக்காற்றில் அகப்பட்ட துரும்பைப்போல் சுழன்று சுழன்று ஓடிச் சமீபத்தில் வந்து, உடல்சிதைந்தும் குடல்சரிந்தும் உயிர்விட்டுக் கிடப்பதைப் பார்த்துச் சோர்ந்துவிழுந்து பிரக்ஞை தப்பிப் பிணம்போற் கிடந்து, பின்பு சற்றே தெளிந்தெழுந்து பெருமூச்சு விட்டு அந்தக் கன்றைச் சுற்றிச் சுற்றிக் கோவென்று அலறி யலறி அதனுடம்பை முகர்ந்து முகர்ந்து, "இதென்ன தீவினையோ! இதென்ன இந்திரசாலமோ! இதென்ன விபரீதமோ! வாலசைத்துக் கால்விசைந்து[164] எனக்கு முன் துள்ளியோட இப்போது பார்த்தேனே! இத் தனை விரைவில் இப்படிப்பட்ட இடியிடிக்கும் என்று எள்ளளவும் அறியேனே! காவிரி முதலான தீர்த்த யாத்திரை செய்தும் சிதம்பரம் முதலான ஸ்தல யாத்திரை செய்தும் திருக்கோயில்களிலும் திருவீதிகளிலும் உள்ள புல் முதலானவைகளை வாயினாற் களைந்து திருப்பணி செய்தும் புல் மேயாமலும் நீர் குடியாமலும் நெடுநாள் விரதம் காத்தும் உன்னைப் பெறப் பட்ட பாடு தெய்வம் அறியுமே! அவ்வளவு பாட்டை

163. போனபின்பு—1924.
164. கால்விசைத்து—1886.

யும் அவலமாக்கிப் போட்டு, சேங்கன்றே! என்னைத் தெருவில் விட்டாயே! உன்னைப் பெறுகிறதற்கு நோற்ற நோன்புகளால் வந்த இளைப்பு இன்னும் ஆறவில்லையே! இதற்குள் இப்படிப்பட்ட ஆறாத பெருநெருப்பை அடிவயிற்றில் வைத்தாயே! இந்தத் துக்கத்தை இனி எந்த விதத்தினாற் சகித்துக்கொள்ளுவேன்! 'பாவிக்குப் பாக்கியந் தக்காது' என்பதற்குச் சரியாகப் பளிங்கு போன்ற நிறமும் பால் வடிகின்ற முகமும் சிறுகித்[165] திரண்ட திமிலும் கடைந்தெடுத்தது போன்ற கால்களும் வாழைச்சுருள் போன்று வளர்ந்த வாலும் சித்திரக்கன்று போன்று சுபலக்ஷணங்களைப் பெற்ற வடிவும் உடைய[166] நீ நிர்ப்பாக்கியமுள்ள எனக்குத் தக்காமற் போய்விட்டாயே! உன்னுடைய சுந்தரமுள்ள வடிவத்தைக் கண்டால் காமதேனுவும் கட்டியணைத்து முகங்குளிர்ந்து முத்தங்கொள்ளுமே! நான் உன்னைப் பற்றியல்லவோ உயிர் தரித்து உலகத்தில் உலாவியிருந்தேன்! இன்னும் ஒருதரம் உன்னழகிய முகத்தைக்கண்டு என்மடி சுரந்து பால் சொரியக்காண்பேனோ! ஐயோ! உன்னை 'ஆயிரங் கன்றுகளிலும் அழகுள்ள கன்று' என்று கண்டோர் சொல்லக் களிப்புடன் கேட்ட என் காதுகளால் இன்று 'இளங்கன்றை இறக்கவிட்டு மலட்டுப் பசுப்போல் வருந்துகின்றதே' என்று பலபேரும்[167] பழித்துப் பேச

165. சிறுத்துத்—1886.
166. வடிவமுமுடைய—1886; வடிவுமுடைய—1924.
167. பலரும்—1924.

கின்ற வார்த்தையை எவ்வாறு கேட்பேன்?" என்று எண்ணியெண்ணி இளைப்படைந்து[168] மூர்ச்சித்து, மறுபடியுந் தெளிந்து இறந்து கிடக்கின்ற கன்றினுடம்பை உற்றுப் பார்த்து இரதத்தின் சக்கரம் ஏறுண்டு இரத்தஞ்சொரிய அழுந்திக் கிடக்கின்ற வடுவைக் கண்டு, "ஓகோ! என் ஏழை மதியால் ஏதோ ஒரு சொற்பமான அபாயத்தால் விழுந் திறந்ததென்று எண்ணி யிரங்கினேனே! இவ்வடுவைப் பார்க்கும்போது தேர்ச்சக்கரம் ஏறுண்டு உடல் சின்னப்பட்டு இறந்ததாகத் தெரியவருகின்றதே! ஆ! ஆ! உனக்கு இப்படிப்பட்ட பெரிய அபாயம் வந்து சம்பவிக்கும்படி நானென்ன பாவஞ் செய்தேனோ! ஓ குழந்தாய்! நீ தேர்க்காலில் அகப்பட்டபோது எப்படிப் பயந்தாயோ! என்ன நினைந்தாயோ! எவ்வாறு பதைத்தாயோ! உயிர்போய் உடல் குழம்பிக் கிடக்கின்ற உன்னைப் பார்க்கப் பார்க்கப் பெற்றவயிறு பற்றி யெரிகின்றதே!" என்று கண்ணீர் விட்டுக் கதறிக் கதறி அழுதழுது[169] புரண்டு புரண்டு விம்மி விம்மி வெதும்பி வெதும்பிப் பெருமூச்சுவிட்டு விழுந்து விழுந்து[170] மெய்ம்மறந்து கிடந்து, பின்பு எழுந்து "என் கன்றினைத் தேர்க்காலில் அழுத்திக் கொன்ற காருண்யமில்லாத கண்மூடியைக் கண்டால் என்னிரண்டு கொம்புக்கும் இரையாக்காது விடு

168. எண்ணி எண்ணி மனமழுங்கி இளைப்படைந்து —1886.

169. கண்ணீர்விட்டுக் கதறி அழுதழுது—1924.

170. பெருமூச்சுவிட்டுக் கீழேவிழுந்து—1886.

வேனே! மைந்தரைப் பெறாத மலட்டுத்தன முள்ளவர்களும் இப்படிச் செய்யத்துணிவு கொள்ளார்கள்![171] ஆ! இது செய்யத்துணிந்தவன் இன்னுமென்ன செய்யத் துணியான்!" என்று வெம்பியும், "துன்பஞ் செய்விக்குந் துஷ்டர்களுக்குங் கொலை செய்கின்ற கொடுந் தொழிலோர்க்கும் இடங்கொடாத இந்த நகரம்[172] இன்று வலியற்ற உயிர்களை[173] மாய்த்து விடுகின்ற வஞ்சகர்க்கும் இடங்கொடுத்ததே! ஐயோ, இதில் அரசனில்லையோ! நீதியில்லையோ! நெறியில்லையோ! இதென்ன அநியாயமோ!" என்று முறையிட்டும்,[174] தன் கன்றை யிழந்ததனால் உண்டாகிய துக்கத்தைச் சகிக்க மாட்டாததாய் வருந்தி, 'நமக்கு நேரிட்ட துக்கத்தை நமது இறைவராகிய மநுச்சோழரிடத்திற் சென்று குறிப்பித்து நிவர்த்தி[175] செய்து கொள்ளுவோம்' என்றெண்ணி, அக்கன்றைப் பசுந்தழைகளால் மூடி,[176] கண்ணீர் சொரிந்து கதறிக்கொண்டே மநுச்சக்கரவர்த்தியின் வாயலில் வந்து,[177] குடிகளுக்குக் குறைவு நேரிட்டால் அதை அரசனுக்கு அறிவிக்

171. துணிவு கொள்ளார்களே—1886.

172. இந்நகரம்—1886.

173. வலியற்ற உயிர்களையும்—1886; வலியற்ற உயிர்களை—1924.

174. முறையிட்டு—1924.

175. நிவிர்த்தி—1886; நிவர்த்தி—1924.

176. மூடிவைத்து—1886.

177. வாயிலில் வந்து—1886.

கும்படி அவ்வரண்மனை வாயலில்[178] கட்டியிருக்கிற ஆராய்ச்சிமணியைத் தன் கொம்பினால் மிகுந்த விசையோடும் வலியோடும் அடித்தசைத்தது.

அப்படி யசைத்தபோது அந்த நகரத்திலுள்ள ஜனங்களெல்லாம், "ஒருகாலத்திலும்[179] கேட்டறியாத ஆராய்ச்சி மணியினது ஓசையை யின்று நூதனமாகக் கேட்டோம்: என்ன விபரீதமோ!" என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ள, அந்த மணியிலிருந்து காத மட்டுங் கேட்கக் கணீரென்று ஓசை யுண்டானது.[180] அவ்வோசையைச் சபாமண்டபத்தில் மந்திரி முதலானவர்கள் சூழச் சிங்காதனத்தின்மேல்[181] வீற்றிருந்த மநுச்சக்கரவர்த்தியானவர் கேட்டு, மாதர்கள் காலிலணிந்த சிலம்போசை கேட்ட மாதவர் போலவும் அழுகுரலோசை கேட்ட அந்தணர் போலவும் சண்டையிரைச்சலைக் கேட்ட சற்சனர் போலவும் புலிமுழக்கங் கேட்ட புல்வாய்போலவுந் திடுக்கிட்டு, திகைப்படைந்து சிங்காதனத்திலிருந்து[182] பெருங்காற்றால் அடியற விழுந்த பனைமரம் போலக் கீழே விழுந்து மூர்ச்சை யடைந்து, சிறிது நேரஞ் சென்று தெளிந்தெழுந்து உடல் நடுங்கி உள்ளம் பதைத்து உயிர் சோர்ந்து நாஉலர்ந்து கண்கலங்கி நடை தள்ளாடி அதிவேகமாக அரண்மனை வாசலுக்கு வருமுன், வாயல்

178. வாயிலில்—1886.
179. காலத்திலாயினுங்—1886.
180. உண்டாயிற்று.—1886.
181. சிங்காசனத்தின்மேல்—1886.
182. சிங்காசனத்திலிருந்து—1886.

காப்பாளர்[183] அரசனுக்கெதிரே அஞ்சி யஞ்சி வந்து அடியில் விழுந்தெழுந்து, "ஆண்டவரே! அரண்மனை வாயலில்[184]. கட்டியிருக்கிற ஆராய்ச்சி மணியை ஒரு தலையிற்றுப் பசுவானது தன் கொம்பினால் அடித்து ஓசை யுண்டாக்கியது" என்று விண்ணப்பஞ்செய்ய, [185] அதுகேட்டு விரைவில்[186] வந்து, அவ்வாராய்ச்சி மணியின் அருகே உடல் மெலிந்து முகஞ்சோர்ந்து கண்ணீர் சொரிந்து கதறி நிற்கின்ற பசுவைக் கண்டு, சாவியாய்ப் போன தன் பயிரைக்கண்ட தரித்திரனைப் போல் மனம் நைந்து நைந் துருகி நொந்து நொந்து வருந்தி, "ஐயோ! சாதுவான இந்தப் பசுவுக்கு என்ன துன்பம் நேரிட்டதோ! இதன் குறையை இன்ன தென்று மதித் தறிந்துகொள்ள வல்லமை யில்லாதவனாக இருக்கின்றேனே!" என்று பதைத்துத் தம் அருகில் அச்சத்துடன் நிற்கின்ற அமைச்சர்களைப் பார்த்து "எனக்குப் புகழும் புண்ணியமும் வரும்படி செய்விக்கின்ற[187] உங்கள் மந்திரிச் செய்கை[188] நன்றாக விருந்தது! உங்கள் அஜாக்கிரதையினால் அல்லவோ இந்தப் பசுவுக்கு ஏதோ வொரு குறை நேரிட்டது!" என்று கோபித்துப் பார்க்க—அது கண்டு அச்சங்

---

183. வாயிற் காப்போர்—1886.
184. வாயிலில்—1886.
185. செய்தார்கள்—1886.
186. கேட்டு அரசன் விரைவில்—1886.
187. புகழும் புண்ணியமும் மேன்மேலும் வருவிக்கின்ற—1886.
188. மந்திரித்துவம்—1886.

கொண்ட மந்திரிகளுள் அப்பசு துயரப்படுவதற்குக் காரணம் இன்னதென்று முன்னே அறிந்தும் அரசனிடத்திற் சொல்வதற்கு அஞ்சியிருந்த ஒரு மந்திரியானவன் 'இனி இதை நாம் மறைத்து வைத்தாலும் வேறொருவரால் வெளிப்படுமாதலால் நாமே அறிந்த மட்டில் அறிவிப்போம்' என்றெண்ணி அரசனை வணங்கித் "தலைவனே! உமது புத்திரன் இன்று ஏறிப் போன இரதத்தின் சக்கரத்தில் இளங்கன்று ஒன்று எதிரே குதித்து வந்து அகப்பட்டு இறந்துவிட்டது; அந்தக் கன்றை யீன்ற இந்தப் பசுவானது ஆற்றுத் துயர்[189] கொண்டு ஆராய்ச்சி மணியை யசைத்தது" என்று சொன்னான்.

அச்சொல்லானது வெந்த புண்ணில் வேலுருவியது போல் மணியொலி கேட்டு வருந்தியிருந்த செவிகளினுள்ளே சென்றுருவிச் சுறுக்கிட்டு வெதுப்ப விழுந்து, விஷந் தலைக்கேறினாற் போல வேதனை யடைந்து, அஞ்சுபுலனும் அறிவுங் கலங்கிப் பஞ்சப் பிராணனும் பதைபதைத் தொடுங்க, பேச்சு மூச்சில்லாமற் சோர்ந்து கிடந்து, அருகி லிருந்த அமைச்சர்கள் செய்த சாந்தோபசாரத்தினால்[190] சோர்வுநீங்கி,[191] அப் பசுவை யடிக்கடி பார்த்துப் பார்த்து, கண்ணீர் கடல் வெள்ளம் போல் பெருகவும் நெருப்பில் விட்ட நெய்யைப் போல் நெஞ்சம் உருகவும் "ஐயோ! இந்தப்

189. ஆறாத்துயர்—1886.
190. சாந்தோபசாரத்தால்—1886.
191. தன் சோர்வு நீங்கி—1886; சோர்வு நீங்கி—1924.

பசுவுக்கு இப்படிப்பட்ட துக்க முண்டாவதற்கு நானே முக்கிய காரணமாக இருந்தேனே; தன் கன்றுக்கு அபாய மொன்று மில்லாதிருக்கினும் சுபாவத்திலே காணுந்தோறுங் கதறி யுருகுகின்ற அன்பையுடைய[192] இந்தப் பசுவானது தன் கன்று இறந்து கிடக்கின்றதைக் கண்டபோது எப்படி யுருகியதோ! என்ன பாடு பட்டதோ! கன்று சமீபத்திலிராமல் சற்றே தூரத்திலிருக்கினும் பார்த்துப் பார்த்துப் பதைக்கின்றதும், அம்மா! அம்மா! என்று அலறுகின்றதுமாகிய சுபாவச் செய்கைகளையுடைய பசுவானது கன்று இறந்து கண் மறைவிற் கிடக்கின்றதை எண்ணி எண்ணி எப்படிப் பதைக்கின்றதோ! ஐயோ! அடிக்கடி அலறுகின்றதே! புலி முதலான துஷ்ட மிருகங்களிலொன்று எதிரிடுமானால் முன்சென்று தன்னுயிரைக் கொடுத்தாயினுங் கன்றினுயிரைக் காக்கவேண்டு மென்னுங் கருத்துள்ள பசுவுக்கு இறந்த கன்றை எதிர்கண்டபோது எப்படி உயிர் பதறியதோ! சிவசிவா! சிறு கன்று தேர்க்காலில் அகப்பட்டபோது எப்படித் துடித்ததோ என்று எண்ணுந்தோறும் என்னுள்ளம் பகீரென்று பதைக்கின்றதே! இந்தப் பசுவானது குள்ளனைக் கொண்டு ஆழம்பார்க்க வந்தது போலவும், பேயைத் தெய்வமென்று பிள்ளைவரங் கேட்க வந்தது போலவும், கொல்லையாள்காட்டியைக் கூலி கேட்க வந்ததுபோலவும், விழலினிடத்து நிழலுக்கு வந்ததுபோலவும், என்னைக்கொண்டு தன் துயரைத் தீர்த்துக்கொள்ள எண்ணி

192. அன்பினையுடைய—1886.

யல்லவோ இவ்வாராய்ச்சிமணியை அசைத்து இவ் விடத்து நிற்கின்றது! இதற்கு என்ன செய்வேன்!

"எமன் கையிலகப்பட்ட உயிர் எந்த விதத்தாலுந் திரும்பாதென்று உலகத்தார் சொல்லும் உறுதியான வார்த்தை வீண்போக, முன்னொரு காலத்தில் தமது நகரத்தில்[193] ஓரந்தணனீன்ற சிறுவன் அகாலத்தில் மரணமடைய, அதுபற்றி அவ்வந்தணன் துயர் கொண்டு தமது சமுகத்தில் வந்து, "சிவநெறி திறம்பாமற் செங்கோல் செலுத்துகிற உமது காவலைக் கடந்து அகாலத்திலே அந்தகன் வந்து இரவும் பகலுந் தவஞ்செய்து யான் அருமையாகப் பெற்ற ஒரு பேறான புத்திரனை உயிர்கொண்டு போனானே; தலைவனே! இது தகுமோ!" என்று முகமும் மனமுஞ் சோர்ந்து முறையிட்டுக்கொள்ள, அதுகேட்டு மனமுருகி நொந்து, சிவபெருமான் திருவடியன்றி மற்றொன்றிலும் மனம் வையாத தமது வல்லமையால் எமலோகத்தி லிருந்த உயிரை மீட்டுக் கொண்டுவந்து முன்னிருந்த உடலில் விட்டு, அவ்வந்தணனை மகிழ்ச்சி செய்வித்து, அன்றுதொட்டு எமனைத் தாமுள்ளவரையிலும் தமது நகரத்திலும் நாட்டிலும் வரவொட்டாமற்செய்த என் குலமுதல்வராகிய சைவச்சோழரைப் போல, அவ்வளவு பெரிதான காரியஞ் செய்யாவிட்டாலும்,[194] இப்பசுங் கன்றின் உயிரொன்றை மாத்திரமாலும் மீட்டுக் கொடுக்க வலியற்றவனாகி யிருக்கின்

193. நமது நகரத்தில்—1886.
194. செய்யாவிடினும்—1886.

றேனே! அவமிருத்து நேரிட்டபோது சஞ்சீவகரணி என்னுந் தெய்வத்தன்மையுள்ள மருந்தைக் கொடுத்துப் பிழைப்பிக்கச்செய்த என் குலத்தலைவர்களிற் சிலர்போல் அம்மருந்தையாயினும் பெற்றுக்கொள்ளத் தக்க தவஞ்செய்தேனே! தமது அஜாக்கிரதையினால் பிற உயிர்க்குக் கெடுதி நேரிட்டபோது அது பொறுமல் தம்முயிரை விட்டுவிட்ட சில அரசர்களைப்போல என் அஜாக்கிரதையினால் நேரிட்ட இப்பசுங்கன்றின் முடிவைக் கேட்டறிந்த நான் உயிரையாயினும் விட்டேனே! அன்னிய தேசத்தரசர் குற்றஞ் செய்தோரைக் கொலைசெய்தாரென்று கேட்டாலும் 'குற்றம் வந்ததென்ன! கொலை செய்ததென்ன!' என்று குலை நடுங்குகின்ற நல்லோர்கள் மரபில், நான்[195] குற்றம் வரவும் கொலைசெய்யவும் அரசுசெலுத்தி, அந்த நல்லோர்கள் இயல்புக்கு நாண முண்டாகத்தானே வீட்டின் வாயலில்[196] வெள்ளெருக்குப் பூத்ததுபோலத் தோன்றினேன்!

"'நாம் அரசாட்சிசெய்ய ஏற்பட்ட நாள்தொட்டு இந்நாள் வரையினும் எவ்வுயிரும் எவ்விதத்திலும் யாதொரு குறையுமில்லாமல் வாழ்ந்து மகிழ்ந்திருக்க, நீதியுடன் முறை தவறாது செங்கோல் செலுத்திவரும்படி சிவானுக்கிரகம் பெற்றோமே' என்பதுபற்றி[197] ஒரு நாழிகைக்குமுன் வரையினும் உண்டாயிருந்த[198] மனக்

195. மரபிற் பிறந்த நான் — 1886.
196. வாயிலில் — 1886.
197. பெற்றோமே யென்று — 1886.

களிப்பையெல்லாம் மண்ணிற் கவிழ்த்தேனே! 'நாமும் பழி பாவங்களுக்குப் பயந்தே அறநெறி தவருது அரசுசெலுத்தி வருகிறேம்,[199] பழைய தரித்திரனுக்குப் பணங்கிடைத்தது போல் நமக்கும் சிவானுக்கிரகத்தால் ஒரு சிறுவன் பிறந்தான், அவனும் கற்றவர் மகிழக் கல்வி கேள்விகளில் நிறைந்து பண்பும் பருவமும் உடையவனுனன் : இனி நமக்கென்ன குறை' என்று எண்ணி எண்ணி இறுமாப் படைந்தேனே! 'புத்திரப் பேறு பெற்றுப் புனிதனுனேம்' என்று பூரித்திருந்தேனே! 'நமது புத்திரன் இளவரசுப் பட்டத்திற் கேற்றவனுனன், இனிக்கல்யாணஞ் செய்விப்போம்' என்று கனவு கண்டிருந்தேனே! 'நமது புத்திரன் நற்குணங்களை யுடையவனுகவிருக்கின்றுன், பெற்றெடுத்த நமது பேர்கொண்டுவருவான்' என்று மனோராச்சியம்பண்ணி மகிழ்ந்திருந்தேனே! இளங்கன்று எதிர்வரவுங் கண்கெட்டுக் கருத்தழிந்தவன் போல்[200] தேரை நடத்தித் திராப்பழிபூண்டான் :[201] ஐயோ! இவன் என் செங்கோலைப் பிடிக்கத்தக்க செல்வப்பிள்ளை யாகாமல் தென்னம்பிள்ளை யானுனே!

"சிவதரிசனஞ் செய்யப் போகிறவன் தேரூர்ந்தே போகப்படாது ; அவ்வாறு போயினும் நாற்புறத்திலும் நடப்போர்களை விலக்கும்படி ஆள் விடுக்கிகளை

198. வரையிலும் எனக்கு உண்டாயிருந்த—1886.
199. வருகின்றேம்—1924.
200. போலத்—1886.
201. திராப்பழி பூண்டானே—1886.

விட்டு, முன்னே பரிக்காரர் வரவுறுத்திப் போகப் பின்னே மெல்லெனத் தேரை விடவேண்டும். அப்படிச் செய்யாமல் பாலியப்பருவம் பயமறியாது என்பதற்குச் சரியாகப் பரபரப்பாகத் தேரை நடத்திப் பசுங்கன்றைக் கொன்றான்:[202] ஐயோ! இவன் கல்வியறிவுள்ளவனாகவிருந்தும் அறிவழிந்து அரசன்பிள்ளையாகாமல் அணிற்பிள்ளை யானானே! கொடிய பாதகங்களிலெல்லாங் கொலைப்பாதகமே தலையென்று[203] வேத முதலாகிய கலைகளில் தானும் படித்தறிந்தான்,[204] சான்றோர் சொல்லவுங் கேட்டறிந்தான்; அப்படியறிந்திருந்தும் அப்பாதகஞ் சேரவொட்டாமல் தன்னைக் காத்துக்கொண்டு பட்டப்பிள்ளையாகாமல் பழிப்பிள்ளையானானே! ஐயோ! புதல்வனைப் பெற்றால் புண்ணியம் பெறலாம் என்றெண்ணிய எனக்கு மலடாயிருந்தாலும் வாழ்வுண்டென்று நினைக்கும்படி நேரிட்டதே! நான் நெடுநாளாகத் தியாகராஜப் பெருமானை வேண்டிக்கொண்டது இப்படிப்பட்ட பெரிய பழிக்காளாகிய பிள்ளையைப் பெறத்தானோ! பிள்ளையென்ன செய்யும்! பெருமான் என்ன செய்வான்! 'மாதா பிதாக்கள் செய்தது மக்களுக்கு' என்னும் பெரியோர் வார்த்தையின்படி நான் செய்த தீவினையே என் புத்திரனுக்கு நேரிட்டதென்று நினைத்து என்னை வெறுத்துக்கொள்ள

202. கொன்றானே—1924.

203. தலைமை யென்று—1886.

204. தாம் படித்தறிந்தான்—1886; தான் படித்தறிந்தான்—1924.

வேண்டுமென்றாலும், இந்தப் பிறப்பில் என் புத்தி யறிந்து ஒரு தீங்குஞ் செய்ததில்லையே! இந்தப் பிறப்பில் இல்லாவிட்டாலும் முற்பிறப்பிலே—

நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ!
வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனோ!
தானங் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ!
கலந்த சிநேகரைக் கலகஞ் செய்தேனோ!
மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தேனோ!
குடிவரி யுயர்த்திக் கொள்ளை கொண்டேனோ!
ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ!
தருமம் பாராது தண்டஞ் செய்தேனோ!
மண்ணோரம் பேசி வாழ்வழித்தேனோ!
உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரஞ் செய்தேனோ!
களவு செய்வோர்க்கு உளவு சொன்னேனோ!
பொருளை இச்சித்துப் பொய் சொன்னேனோ!
ஆசைகாட்டி மோசஞ் செய்தேனோ!
வரவு போக்கொழிய வழியடைத்தேனோ!
வேலையிட்டுக் கூலி குறைத்தேனோ!
பசித்தோர் முகத்தைப் பாராதிருந்தேனோ!
இரப்போர்க்குப் பிச்சை இல்லையென்றேனோ!
கோள் சொல்லிக் குடும்பங் குலைத்தேனோ![205]
நட்டாற்றிற் கையை நழுவவிட்டேனோ!
கலங்கியொளித்தோரைக் காட்டிக்கொடுத்தேனோ!
கற்பழிந்தவளைக் கலந்திருந்தேனோ!
காவல் கொண்டிருந்த கன்னியை அழித்தேனோ!

205. கலைத்தேனோ—1886.

கணவன்வழி நிற்போரைக் கற்பழித்தேனோ!
கருப்பமழித்துக் களித்திருந்தேனோ!
குருவை வணங்கக் கூசிநின்றேனோ!
குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ!
கற்றவர் தம்மைக் கடுகடுத்தேனோ!
பெரியோர் பாட்டிற் பிழைசொன்னேனோ!
பக்ஷியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ!
கன்றுக்குப் பாலூட்டாது கட்டிவைத்தேனோ!
ஊன்சுவை யுண்டு உடல்வளர்த்தேனோ!
கல்லும் நெல்லுங் கலந்து விற்றேனோ!
அன்புடையவர்க்குத் துன்பஞ் செய்தேனோ!
குடிக்கின்ற நீருள்ள குளந் தூர்த்தேனோ![206]
வெய்யிலுக் கொதுங்கும் விருக்ஷ மழித்தேனோ![207]
பகைகொண்டு அயலோர் பயி ரழித்தேனோ![208]
பொதுமண்டபத்தைப் போயிடித்தேனோ!
ஆலயக் கதவை அடைத்து வைத்தேனோ!
சிவனடியாரைச் சீறி வைதேனோ!
தவஞ் செய்வோரைத் தாழ்வு சொன்னேனோ!
சுத்த ஞானிகளைத் தூஷணஞ் செய்தேனோ!
தந்தைதாய் மொழியைத் தள்ளிநடந்தேனோ!
தெய்வ மிகழ்ந்து[209] செருக்கடைந்தேனோ!
என்ன பாவம்[210] செய்தேனோ! இன்னதென் றறியேனே!

---

206. குளத்தைத் தூர்த்தேனோ — 1924.
207. விருக்ஷத்தை யழித்தேனோ — 1924.
208. பயிரை அழித்தேனோ — 1924.
209. தெய்வத்தை யிகழ்ந்து — 1924.
210. இன்னும் என்ன பாவம் — 1924.

"ஐயோ! இந்தப் பசுவின் சோர்ந்த முகத்தில் கண்ணீர் ததும்புகின்றதைக்[211] கண்ட என் கண்களை நுங்கு சூன்றெடுப்பதுபோலப் பிடுங்கி யெறியேனே! 'இதன் கன்றை உன்புத்திரன் தேர்க்காலில் ஊர்ந்து கொன்றான்' என்று சொல்லக்கேட்ட என் செவிகளைச் செம்புநீர் உருக்கிவிட்டுச்[212] செவிடாக்கேனே! இந்தப் பசு ஆராய்ச்சி மணியினால் தன் குறையை யறிவித்த நாழிகைதொட்டு இந்நாழிகை வரையிலும் அக்குறையைத் தீர்ப்பதற்கு வேண்டிய உறுதிமொழியைக் கூறாதிருக்கிற என் நாவைச் சூடுள்ள நெருப்பாற் சுட்டுவிடேனே![213] இதற்குத் துன்ப முண்டாக்கினவன் இன்னானென்று அறிந்தும், அவனை இன்னும் தண்டனை செய்யாது தாழ்த்திருக்கின்ற என் கைகளைக் கத்தியைக்கொண்டு கண்டித்து விடேனே! இதன் கன்றைப் பிழைப்பிப்பதற்குத் தக்க நன்முயற்சியைத்தேடி நாலு திக்குகளிலும் நடவாத என் காலைக் கோடாலி கொண்டு[214] குறுக்கே வெட்டேனே! இதன் மெலிவை யடிக்கடி கண்டும் வற்றியொடுங்காத மலபாண்டமாகிய என் உடம்பை வாளாயுதங் கொண்டு மடித்துக் கொள்ளேனே! இதன் பரிதாபத்தையும் நமக்கு நேரிட்ட பழியையும் எண்ணியும் உருகியழியாத உள்

211. ததும்புகின்றதை—1886.

212. செம்புநீருருக்குவிட்டு—1886; செம்புநீருருக்கி விட்டு—1924.

213. சுடுவேனே—1886.

214. கோடாரிகொண்டு—1886.

ளத்தை வலியவிஷத்தை இட்டு[215] மாய்த்துவிடேனோ! மன்னுயிர்க்கஞ்சி[216] இவைகளில் ஒன்றுஞ் செய்யாது உயிர் வைத்திருக்கின்றேனே! என்ன செய்வேன்! 'பாவிக்குத் தீர்க்காயுசு'[217] என்பதற்குச் சரியாகப் பெரும் பாவியாகிய என்னுயிர் தனக்குத் தானேயும் போகின்றதில்லையே! "நல்ல பூஜாபலத்தினால் தெய்வ பக்தியுடன் செங்கோல் செலுத்தி வருகின்றான் மநுச் சோழன்" என்று மண்ணுலகத்தாரும் விண்ணுலகத் தாரும் புகழ்ந்த புகழெல்லாம் பொய்யாய்ப் போய்விட் டதே![218] நான் அப்புகழை வேண்டினவனல்லை;[219] ஆதலால் அதுபோகட்டும்; உயிரினும் ஒன்பது பங்கு அதிகமாகத் தேடிவைத்த புண்ணியமும் போகின்றதே!

"ஆ! நான் நீதி தவறாது அரசுசெய்கின்றேன் என்பதை நினைத்தால் எனக்கே ஏளனமாக விருக்கின்றதே! செங்கன்றைத் தெருவிற் சிதைக்கவும் ஒருமித்திருந்த என் செங்கோலை அளவுகோ லென்பேனோ! அஞ்சனக்கோ லென்பேனோ! எழுதுகோ லென்பேனோ! ஏற்றக்கோ லென்பேனோ! கத்திரிக்கோ லென்பேனோ![220] கன்னக்கோ லென்பேனோ! குருடன்கோ லென்பேனோ! கொடுங்கோலென்பேனோ! துடைப்பக்கோ லென்பேனோ![221] தூலாக்கோ லென்பேனோ! மரக்கோ

215. விஷத்தைவிட்டு—1886.
216. நிலையிலா வுயிர்க்கஞ்சி—1886.
217. தீர்க்காயுள்—1886.
218. போய்விட்டனவே—1924.
219. வேண்டினவனல்லன்—1924.
220. கத்தரிக்கோல்—1886; கத்திரிக்கோல்—1924.

லென்பேனே! வைக்கோ லென்பேனே! அல்லது இன்று இறந்த பசுங்கன்றாகிய பிரேதத்தைப் புரட்டிச் சுடுகின்ற பிணக்கோ லென்பேனே! என்ன கோலென்று எண்ணுவேன்![222] இளங்கன்றைக் கொலை செய்யவுஞ் சம்மதித்திருந்த[223] என் ஆக்கினா சக்கரத்தைக் கிரகசக்கரமென்பேனே! வருஷ சக்கரமென்பேனே! தண்டசக்கர மென்பனே![224] அல்லது இச்சேங் கன்றைச் சிதைத்த தேர்ச்சக்கர மென்பேனே! என்ன சக்கரமென் றெண்ணுவேன்! இந்தப் பசுவின் கன்றுக்கு அபாயம் நேரிடக் காத்திருந்த என் காவலைச் சிறு பெண் காக்கின்ற திணைக்காவ லென்பேனே! குருடன் காக்கின்ற கொல்லைக்காவ லென்பேனே! புல்லாற் செய்த புருடன் காக்கின்ற புன்செய்க் காவ லென்பேனே! வரும்படி யில்லான் காக்கின்ற வாயற் காவலென்பேனே![225] பயிரைக்காக்க வைத்த பண்ணைக் காவலென்பேனே! வேலைவேண்டிக் காக்கின்ற வெறுங் காவ லென்பேனே! அல்லது இக்கன்றை அடக்கஞ் செய்யக் காத்திருக்கின்ற அரிச்சந்திரன் காவ லென் பேனே! என்ன காவலென்று எண்ணுவேன்![226] என்ன

---

221. துடைப்பங்கோல் — 1886; துடைப்பக்கோல் — 1924.

222. என்ன கோலென்றுதா னெண்ணுவேன் -- 1886.

223. கொலை செய்யச் சம்மதித்திருந்த — 1886.

224. 'வருஷசக்கர மென்பேனே! தண்டசக்கரமென் பேனே!' என்பது 1886-ல் இல்லை.

225. வாயிற்காவ லென்பேனே — 1886.

226. காவலென்றுதா னெண்ணுவேன் — 1886.

செய்வேன்! ஐயோ! இப்படிப்பட்ட பாவியாகிய என்னை மநுவென்று பேரிட்டழைப்பது காராட்டை வெள்ளாடென்றும் அமங்கள வாரத்தை மங்களவார மென்றும் நாகப்பாம்பை நல்லபாம்பென்றும் வழங்குகின்ற வழக்கம் போன்றதல்லது உண்மையல்லவே! இனி, இப்பசுங்கன்று உயிர்பெற் றெழுந்திருப்பதற்கு உபாயம் என் புத்திரனுயிரையன்றி[227] யென்னுயிரையும் என் மனையாளுயிரையும் என்னரசாட்சியையும்—எனக்கு உரித்தாகிய எல்லாப் பொருள்களையுங்[228] கொடுத்துவிட்டால் நேரிடுமென்று சொல்வோருண்டானல், இதோ கொடுத்துவிடுகிறேன்:[229] அவ்வாறு சொல்வோரு மில்லையே! இதற்கு நேரிட்ட துக்கமும் எனக்கிதனாலுண்டாகிய துயரமும் எப்படித் தீருமோ! இப்படியென் றறியேனே! என்ன செய்வேன்!" என்று பலவிதமாகப் பரதவித்திருந்தார்.

இந்தப்பிரகாரம் பரதவித்து வருந்துகின்ற மநுச்சக்கரவர்த்தியை அருகிலிருந்த அமைச்சர்கள் நோக்கிக் கைகுவித்துத் தொழுது நின்று, "ஐ மநுநீதி தவருத மஹாராஜனே! விதி வசத்தாலே வலிய வந்து மடிந்த இளங் கன்றைக் குறித்து நீர் துன்பப்படுவது உயிர்களிடத்து உமக்குள்ள காருண்ணியத்துக்கு இயல்பேயென்று எண்ணி இதுவரையும் எதிரொன்றுஞ் சொல்லாது சும்மா இருந்தோம்; இனிக் காரியக்

227. புத்திர னுயிரையே யன்றி—1886.
228. மற்றெல்லாப் பொருள்களையும்—1886.
229. கொடுத்து விடுகின்றேன்—1924.

கெடுதியில் வாய்மூடிக் கொண்டிருப்பது மந்திரிகளுக்கு அழகல்லவென்றபடியால், நாங்கள் சொல்லும் வார்த்தையைக் கேட்டருளவேண்டும். உமது புத்திரன் சீவகாருண்ணியமே தேகமாகக் கொண்டவன். தான் பூமியதிராது எந்தச் செந்துக்கள் எதிர்வந்து அகப்பட்டுக் கொள்ளுமோவென்று கீழ்நோக்கி அஞ்சி யஞ்சி மெல்லென நடக்கின்றபோது, வேறோர் அதிர்ச்சியினால் நடுங்கிச் சிற்றெறும்புகள் விரைவாக ஊர்ந்து போகின்றதைப் பார்த்துத் திடுக்கிட்டு 'ஓகோ! என்ன பாவம்! இந்த[230] உயிர்களுக்கு நடுக்கம் உண்டாக நடந்தோமே' என்று எண்ணி முகஞ்சோர்ந்து பிரமைகொண்டு நிற்க நாங்கள் அநேகமுறை பார்த்திருக்கின்றோம். அப்படிப்பட்ட கிருபையுள்ளவன் இந்தக் கன்றை அசாக்கிரதையினால் கொன்றானென்று எண்ணுவதற்கு இடமில்லை. அன்றியும் அவருடன் சூழ்ந்துபோன பிராமணர் முதலானோர்கள்[231] தேரைச் சூழ்ந்துபோன எங்களுக்கும் தேர்க்கு முன் நடந்த ஜனங்களுக்கும் தெருவில் நின்று பார்த்திருந்த பிரஜைகளுக்கும் இலேசமுந் தெரியாதபடி அக்கன்று மாயமாகக் குதித்துவந்து மடிந்தது' என்று சொன்னார்கள். அன்றியும் தேர்க்கு முன்னே யானைவீரர் குதிரைவீரர் முதலானோர் அணியணியாக யூகம் வகுத்ததுபோல நெருங்கிப்போக, விருது பிடிப்போர் எச்சரிக்கை சொல்வோர் கட்டியங்கூறுவோர் பட்

230. 'இந்த' என்பது 1924-ல் இல்லை.
231. முதலானோர்களுக்கும்—1886.

டாங்கு படிப்போர் சோர்வு பார்ப்போர் ஆள்விலக்கு வோர் முதலானவர்கள் நடக்க, இத்தனைபேரையுங் கடந்து, தேர்க்குச் சமீபத்தில் சிங்கக்குட்டியா யிருந் தாலும் வரமாட்டாது; இதுவோ கோல் பிடித்தவ னைக் கண்டால் கூப்பிடுதூரம் ஓடுகின்ற இயல்பை யுடைய இளங்கன்று; இந்தக் கன்று அந்தக் காவலை யெல்லாங் கடந்து தேர்க்குச் சமீபத்தில் எதிரே துள்ளியோடி வந்ததென்றால், இந்திரசால மென்று எண்ணவேண்டுவதாக விருக்கின்றது! ஆதலால் அக்கன்றை அதன் விதியே இப்படிப்பட்ட ஆச்சரிய மரணஞ் செய்வித்ததன்றி உமது புத்திரன் செய் வித்ததல்ல. இந்தக் காரியம் இப்படியிருக்க, புத்திரன் கொன்றானென்று அவனை நோவதும் அவனைப் பெற் றதனாற் பழி வந்ததென்று உம்மை நீர் நோவதும், எய்தவன் இருக்க அம்பை நோவதுபோலவும் அம்பு செய்துகொடுத்த கருமானை நோவதுபோலவும் அல் லவோ இருக்கின்றது? நீர் சகல கலைகளையுங் கற்றுக் கேள்வியில் மிகுந்து, அரசர்களெல்லாம் புகழ்ந்து கொண்டாடத்தக்க தன்மையை யுடையவர்: உமக்கு இது விஷயத்தில் நாங்கள் விரித்துச் சொல்ல வேண் டுவதென்ன? இனித் துன்பப்படுவதை விட்டு, 'உயிர்க் கொலை தம்மை யறியாது நேரிட்டாலும் பிறர் செய் யக் கண்டாலும் அதற்குத்தக்க சாந்தி செய்து கொள்ளவேண்டும்' என்னும் விதிப்படி வினைவசத் தால் நேரிட்ட இந்தக்கன்றின் கொலைக்கு முன்னிலை யாகவிருந்த உமது புத்திரனையும் பெரியோர்களைக்

கொண்டு இதற்குத் தக்க பிராயச்சித்தத்தை யறிந்து செய்விக்க வேண்டுவதே உமக்கு முறை" என்று சொன்னார்கள்.

அதுகேட்ட மநுச்சக்கரவர்த்தியானவர் வியர்வு[232] துடிப்பு நகை முதலான கோபக்குறிகள் தோன்ற மந்திரிகளைப் பார்த்து "அமைச்சர்களே! உங்கள் ஞாயம்[233] நன்றாயிருந்தது; நீங்கள் சொல்லிய நீதி உங்களுக்கே ஒப்பாகுமல்லது தருமதேவதை சம்மதிக்குமோ! கன்றையிழந்து வருந்துகின்ற இப்பசுவின் சஞ்சலத்தையாவது சாந்தப்படுத்துமோ! இப்படி நீங்கள் சொல்லியது என் முகத்தைக் குறித்தோ? என் புத்திரன் உயிருக் கிரங்கியோ? அல்லது உங்கள் ஜீவனத்தை எண்ணியோ? எதுபற்றியோ? உலகத்தையாளும் அரசன் ஆசைபற்றியாவது வெகுளி பற்றியாவது தாட்சண்ணியம் பற்றியாவது உறவுபற்றியாவது நடுநிலையாக ஞாயங்கண்டு[234] சொல்லாமல் மாறுபட்டால், அதை மறுத்து 'இது விஷயத்தில் அரசன் நம்மைக் கொல்லுவானாயினுங் கொல்லட்டும், அவனுக்கு உறுதி கூறுவதே நமக்குக்கடன்' என்று நிச்சயித்துக்கொண்டு, ஞாயங்கண்டு[235] நடுநிலையாகச் சொல்வது மதியுடைய மந்திரிகளுக்குத் தருமமாக விருக்க, நீங்கள் அதை நினையாமல் இப்படிச் சொல்லியது என்ன நினைத்தோ?

232. வெயர்வு—1886; வியர்வு—1924.
233. நியாயம்—1886.
234. நியாயங்கண்டு—1886.
235. நியாயங்கண்கு—1886.

சந்திர சூரியர் திசைமாறினாலும் சமுத்திரந் தடைமீறினாலும் மகாமேரு நிலைகுலைந்தாலும் மனங் கலங்காது விவகாரங்களிற் பழுதுவாராது பாதுகாக்கின்ற குணத்தையுடைய நீங்கள், இன்று—நீதியில்லாத சில குறும்பரசரைக் கூடி, அவ்வரசர் தூளியென்றால் நிர்த்தூளி யென்றும்; கரும்பு கசப்பென்றால் எட்டிக்காய் போற் கசப் பென்றும், தாயைக் கொலைசெய்வது தக்கதென்றால் வேதத்தின் முதற்காண்டத்தில் விதித்திருக்கின்றதென்றும், வெள்ளத்திற் கல் மிதக்குமோவென்றால் ஆற்றில் அம்மி மிதக்கக் கண்டோமென்றும், காக்கை வெளுப் பென்றால் நேற்றைப் பொழுதில் நிற்கக் கண்டோமென்றும், கல்லின்மேல் நெல் லுமுளைக்குமென்றால் கொத்தா லாயிரங் குலையா லாயிரமென்றும், கள்ளனைப் பிடிக்கலாமோ வென்றால் பிடித்தால் பெரும் பாவமல்லவோ வென்றும், பொய் ஆயிரமட்டுஞ் சொல்லலாமோவென்றால் ஐயாயிரமட்டுஞ்[237] சொல்லாமென்று விதியிருக்கிறதென்றும், பெண்சாதியுள்ளவனுக்குப் பிள்ளை கொடுப்பது ஆரென்றால் ஐயா! பெண் கொடுத்தவனே பிள்ளை கொடுக்க வேண்டுமென்றும், ஒருவன் மனையாள் மற்றொருவனைக் கூடலாமோ வென்றால்[238] அடக்கத்தில் ஆயிரம் பேரோடு கூடினாலுங் குற்றமில்லை யென்றும், இந்தக் கழுவில் இவனையேற்றலாமோ வென்றால் கழுவுக்குத்தக்க கனமில்லை

---

237. என்றால் ஐயா ஐயாயிரமட்டும் — 1886; என்றால் யாயிர மட்டும் — 1924.

238. கூடலாமென்றால் — 1886.

யென்றும், என் பிள்ளையும் எச்சரிக்கைக்காரன் பிள்ளையும் ஒருவனை யொருவன்[239] உதாசினமாகத் திட்டினூராம் இதற்கென்ன செய்யலாமென்றால் உமது சற்புத்திரன் வாய்க்குச் சர்க்கரையிடவேண்டும் மற்றவன் வாய்க்கு மண்ணிட வேண்டுமென்றும் சொல்லுகின்ற துர்மந்திரிகளைப் போல—ஞாயம் பாராது,[240] நயிச்சிய வார்த்தைகளைச் சொன்னீர்கள்: இது காலவேற்றுமையென்றே யெண்ணுகிறேன்.[241]

“தன்னைக் கொடுத்தாவது தருமத்தைத் தேடவேண்டுமென்னும் பெரியோர் வார்த்தையைப் பிடிப்பது சற்குணமுடையோர்க்குத் தகுதியென்றும் தாய் தந்தை யிடத்திலாயினுந் தராசுக்கோல்போலச்[242] செப்பமாக நின்று தீர்ப்புக்கொடுக்க வேண்டுவது அரசர்க்கு அவசியம் வேண்டிய சற்கருமமென்றும் எனக்கு அடிக்கடி அறிக்கையிட்ட நீங்கள், இன்று, அதோகதியில் தள்ளிவிடத்தக்க அநியாயத் தீர்ப்பை யங்கிகரிக்கப் போதிக்கின்றீர்கள். இது உங்களிடத்து நேரிட்ட அவஸ்தை வசமென்றே யெண்ணுகிறேன். ஒருவரிடத்துத் தண்டனை விதிக்கும்போது எவ்வுயிர்களும் தன்னுயிர்போல் எண்ணுவதும், எந்தப் பொருள் எந்தப் பிரகாரமா யிருந்தாலும் அந்தப் பொருளினுண்

239. ஒருவரை ஒருவர்—1886; ஒருவனை ஒருவன்—1924.

240. நியாயம் பாராது—1886.

241. எண்ணுகிறேன்—1924.

242. தராசு கோல் போலச்—1886.

மையை யறிந்து கொள்வதும், உருவுநோக்காது அறிவை நோக்குவதும், ஊழ்வினை நோக்காது செய்வினை நோக்குவதுமாகிய இப்படிப்பட்ட இலக்கணங்களுக்குப் பொருந்த விதிக்க வேண்டுமென்று எனக்கு அறிவித்துவந்த நீங்கள், இன்று, என்புத்திரன் இரக்கமுள்ளவனென்றும், அவன் அசாக்கிரதையினால் கொன்றதல்லவென்றும், பழவினையாற் பசுங்கன்று மடிந்ததென்றும், அதனால் அதற்குத் தக்க பிராயச்சித்தஞ் செய்விக்க வேண்டுமென்றும், வாதியை மாத்திரம் வரவழைத்துக்கொண்டு நடுக்கொள்ளைக்காரன் ஞாயந்[243] தீர்த்தா னென்பதுபோற் சொல்லி நின்றீர்கள். ஓஹோ! அமைச்சர்களே! உங்களை[244] 'அந்நாளிருந்த[245] அமைச்சர்களல்ல: இந்நாளில் என்னைக்கெடுக்க நினைத்துக்கொண்டு எங்கேயிருந்து வந்தவர்களோ!' என்று எண்ணுகின்றேன். ஐயோ! எனக்கு இப்படிப்பட்ட அநியாயத்தைக் கற்பித்தோ இம்மை மறுமை யின்பங்களை வருவிப்பீர்கள்! என்றும் மீளாத சிவகதியை யடையத் தக்க உறுதி வார்த்தைகளைப் பேசிய நீங்கள், இன்று, என்றும் மீளாத அவகதியை யடையத்தக்க இழிவுள்ள வார்த்தைகளைப் பேச எங்கே கற்றுக் கொண்டீர்களோ! ஆ! ஆ!! இந்த ஓரவஞ்சனையை உற்று நினைக்குந்தோறும் நெஞ்சந் திடுக்கிடுகின்றதே! உங்கள் சொற்படி இது காரியத்தில் உடன்பட்டேனானால் தருமமும் தவமும் சலிப்படையுமே! இக்காலத்

---

243. நியாயந் — 1886.   244. நீங்கள் — 1886.
245. அந்நாளிலிருந்த — 1924.

தில் எனக்கு மேற்பட்டவர்களில்லை யென்று வழக்கு கழிவு செய்து வஞ்சித்துப் பேசுவேனானால், காலம் போகும், வார்த்தை நிற்குமே! மநுநூலில் சொல்லிய நீதியின்படி நடத்துகின்றபடியால் மநுச்சோழன் மநுச்சோழனென்று நெடுந்தூரம் நீண்ட பெயரைச் சுமந்த நான் இதற்குச் சம்மதித்தேனானால், எழுத்தறியாதவன் ஏட்டைச் சுமந்தது போலவும், கண்ணில்லாதவன் கண்ணாடி[246] சுமந்ததுபோலவும், வாசனையறியாதவன் மலர்[247] சுமந்ததுபோலவும் வீணாகவே இந்தப் பெயரை எடுத்துக் கொண்டானென்று[248] ஏழுலகத்தாரும் இகழ்ந்து பேசுவார்களே! இன்றைக்கு என் புத்திரன் செய்த இந்தக் கொடுங் கொலையாகிய பாதகத்துக்குப் பரிகாரஞ் செய்து, இலேசாக விட்டு, நாளைக்கு[249] மற்றொருவன் இதைப் பார்க்கினுஞ்[250] சிறிய கொலை யொன்று செய்யக் கண்டு, அவனைக் கொலை செய்விப்பேனானால், 'தருமமறியாத இவ்வரசன் தனக்கொன்று பிறர்க்கொன்று செய்கின்றான்'[251] என்று பார்த்தவர்களெல்லாம் பழித்துப் பேசுவார்களே; அல்லது 'தன்வீட்டு விளக்கென்று முத்தமிட்டால் சுடாது விடாது' என்பதுபோல என் புத்திரன் செய்த கொலை யென்று ஆசையால்[252] அடக்கிக்

246. கண்ணாடியைச்—1924. 247. மலரைச்—1924.
248. இந்தப் பெயரைக் கொண்டானென்று—1886.
249. நாளை—1886. 250. பார்க்கினும்—1886.
251. செய்கிறான்—1924.
252. புத்திரா பேக்ஷையால்—1886.

கொள்வேனானல், அது பற்றி வரும் பழிபாவங்கள் என்னையடையாமலிருக்குமோ? ஆதலால், இப்பசுவானது அருமையான இளங்கன்றை இழந்து வருந்துகின்றதைத் தவிர்க்க வலியில்லாதவனாகிய நானும், இந்தப் பசுவைப்போல நெடுநாளாக வருந்தி அருமையாகப் பெற்ற என் புத்திரனைப் பழிக்குப் பழியாகக் கொன்று வருத்தங் கொள்வதே தகுதி" என்று சொல்லினார்.

அதுகேட்டு மனங்கலங்கிய மந்திரிகளுக்குள் ஒரு மந்திரியானவர் அரசனை வணங்கித் "தருமநெறி தவறாத தலைவனே! சாவதானமாகத் தயவுசெய்து என் வார்த்தையைக் கேட்டருள வேண்டும். ஆன்மாக்களுக்கு அறிவின் உயர்வு தாழ்வு பற்றியே புண்ணிய பாவங்களும் ஏறிக் குறைந்திருக்கும் என்னுஞ் சுருதி வாக்கியத்தின்படி தர்மார்த்த காம மோக்ஷங்களைப் பெறுதற்கு யோக்கியமான அறிவுள்ள மனிதப் பிறவி யெடுத்த ஜீவர்களுக்குள் ஆனை மதப்பட்டு அடவி அழித்தது[253] என்னும் ஞாயம்போல்[254] மதத்தினல் காமக்குரோத முதலானவைபற்றி[255] ஒருவரை யொருவர் கொலை செய்தாரானல் அக்கொலைக்கு ஈடாகக் கொன்றவரைக் கொலை செய்விக்கக் கடவரென்றும், அப்படியன்றிக் காக்கை யேறிப் பனம்பழம் விழுந்தது என்னும் ஞாயம்போல்[256] வலிமை பகைமை முத

253. அழிந்தது—1924. 254. நியாயம் போல—1886.
255. காமக்குரோதாதிகள் காரணமாக—1886.
256. நியாயம்போல்—1886.

லானவை யில்லாமல் விதிவசத்தால் ஒருவர் இறந்த தற்கு வியாஜமாக முன்னிட்டவர்களை[257] அவ்வாறு இனி முன்னிடவொட்டாம லிருக்கத் தண்டித்து முன்னிட்டதனால் வந்த பாபத்துக்குப் பரிகாரஞ் செய்விக்கக் கடவரென்றும், அப்படியன்றி அமுதம் ஊட்டுகின்றபோது அதுவே விஷமாகிக் கொன்றதென்னும் ஞாயம்போல்[256] நல்ல வழியில் நிறுத்தும் பொருட்டு அச்சமுறுத்தித் தண்டிக்கும்போது அபாயம் நேரிட்டு இறந்ததற்கு வேறு காரணமாகியிருந்த தந்தை குரு அதிகாரி முதலானோர்களை அநசன முதலான அரிய விரதங்கள் தவங்கள் செய்விக்கக்கடவரென்றும், மிருகம் பட்சி முதலான மற்ற உயிர்களுக்கு மனிதர்களால் கொலைநேரிட்டால் அந்தந்த உயிர்களின்[258] தரத்துக்கும் அவரவர் குணகுணங்களுக்குஞ் செய்கைகளுக்குங் காரணங்களுக்குந் தக்கபடி யறிந்து பிராயச்சித்தஞ் செய்விக்கக் கடவரென்றும், பொதுவாக அறநூல்களில் விதித்திருக்கப்பட்ட விதியை இன்றி கன்றின் கொலைபற்றி நீர் செய்விக்க எண்ணிய அபூர்வமான விதி விலக்குகின்றதே: இது தகுதியைக் கடக்கின்ற குற்றமென்று சொல்வதற்கு இடமுண்டுபண்ணுமே" என்றார்.

அதுகேட்ட அரசன் "மந்திரியே! நீர் பயனைத் தரும் விருக்ஷத்திலுள்ள பழத்தைப் பாராது பிஞ்

257. முன்னிட்டு அவர்களை — 1924.
258. அந்த உயிர்களின் — 1924.
259. நிறைந்திருக்கின்ற படியால் — 1924.

சைப் பிடித்ததுபோல் பிடித்தீர். நன்று யிருந்தது உமது வார்த்தை! அறிவின் உயர்வு தாழ்வுகளைப் பற்றிப் புண்ணிய பாவங்கள் ஏறிக் குறையுமென்று பூர்வ பாகத்திற் சொல்லிய சுருதி, உத்தர பாகத்தில்—பரமேசுவரன் ஆன்மாக்கள் தோறும் விகற்பமில்லாமல் நிறைந்திருக்கிறபடியால்,[259] மாயையின் காரியமாகி வேறுபட்ட அறிவை நோக்காமல், அப்பரமேசுவரனை நோக்கி எல்லா உயிர்களையும் சமமாக எண்ணி நடக்க வேண்டும்[260] என்ற உத்தரபாகத்தின்படி, பிறப்பு குணம் சாதி தொழில் முதலான விகற்பங்களை நாடாது உயிர்க்கொலையினிடத்துச் சமானமாகத் தண்டிப்பதே தகுதி; என் புத்திரன் தேரி லேறிக்கொண்டு செல்வச் செருக்கினால் மறதி பற்றியே இப்பசுவின் கன்றைக் கொன்றான். ஆதலால் இவன் காக்கை ஏறிப் பனம்பழம் விழுந்தது போல வியாஜமானவனுமல்லை;[261] அமுதமூட்டி[262] விஷமானதுபோல் நன்மை செய்விக்கப்போய்க் கொலைக்குக் காரணமானவனுமல்ல;[263] ஆனை மதப்பட்டு அடவியழித்தது[264] என்று நீர் சொல்லிய ஞாயத்துக்குச்[265] சரியாக விருக்கின்றான்: ஆதலால்[266] இவனைக் கொல்வதே முடிவு" என்று சொன்னார்.

---

260. நடத்த வேண்டும்—1924.
261. அல்லன்—1886. 262. அமுத மூட்ட—1886.
263. அல்லன்—1886. 264. அழிந்தது—1886.
265. நியாயத்துக்கு—1886.
266. 'ஆதலால்' என்பது 1886-ல் இல்லை, 1924-ல் இருக்கிறது.

அதுகேட்டு மற்றொரு மந்திரியானவர் அரசனைத் தொழுது "மகாராஜனே! சுருதியில் எல்லா 'உயிர்களையும் உயர்வு தாழ்வு நோக்காது சமமாக நோக்க வேண்டுமென்று உத்தரபாகத்தில் விதித்திருக்கின்றது அந்தணரொழுக்கத்துக் கன்றி அரசரொழுக்கத்துக்குப் பொருந்தாதே; அது பொருந்துமானால், பிராமணர் முதலான குலாசாரமும் பிரமசாரி முதலான அசிரம ஆசாரமும்[267] பெரியோர் சிறியோர் நல்லவர் தீயவர் என்கிற கிரமப்பாடுகளும் வேறுபட்டு, உலகநிலை தவறி, அரசாட்சி மழுங்கிவிடுமே. இது ஒழுக்கத்தைக் கடக்கின்ற குற்றமென்று சொல்வதற்கு இடங்கொடுக்குமே: ஆதலால் பூர்வபாகத்தில் விதித்த விதிப்படி அறநூல்களிற் குறித்த ஞாயங்களைக்[268] கொண்டு தீர்ப்பிடுவதே நெறியாகும்" என்று சொன்னார்.

அதுகேட்டு மநுச்சோழர் நகைத்து "அமைச்சரே! நீர் வழிக்குத் துணையாக வருவான்போல் வந்து நடுக்காட்டிற் பயங்காட்டிப் பணம் பறிக்கின்றவன் போலப் பயம் காட்டுகின்றீர். பரமேசுவரன் அவ்வவ்வுயிர்களிடத்திலும் வேறுபடாமல் விளங்குகின்றபடியால் எவ்வுயிர்களையும் பொதுவாக நோக்கவேண்டுமென்று[269] உத்தரபாகத்தின் விதியை நான் அனுசரித்துக்கொண்டது உயிர்க்கொலையாகிய பாவ நிவர்த்திக்கு மாத்திரமே யல்லது மற்றொன்றினு மல்ல. இக்

267. ஆசிரம தருமமும்—1924.
268. நியாயங்களைக்—1886. 269. என்கிற—1924.

கருத்தை அறிந்து கொள்ளாமல் 'கருத்தறியாதவன் சொன்னதே கொள்வான்' என்பதுபோலக் கொண்டு ஒழுக்கங் கடந்த குற்றம் வருமென்று கூறினீர். ஆனால் மற்றவை யெல்லாம் நிற்க, கொலைப்பாதக நிவர்த்திக்கு[270] மாத்திரம் எவ்வுயிர்களையுஞ் சமமாகக் கொள்ளவேண்டுமென்பது எவ்வகையாலென்பீரேல்:- உயிர்களெல்லாஞ் சிற்சத்தியி னுருவ மாகலானும் எல்லா உயிர்களுக்கும் இறைவனே தநுகரணங்களைக் கொடுத்தலானும், அவனது சிற்சத்தியாகிய உயிர்களை அவன் கொடுத்தருளிய உடம்பில் நின்றும் நீக்குதல் நினைக்கப்படாத அபராத மாகலானும், எந்தெந்த உயிர்களும் இயல்பினால் அல்லாமல் இமிசையினால்[271] உடம்பை விட்டுப் பிரியும்படி நேரிட்டால் அந்தந்த வுயிர்களுக்கும் அவ்வவ் வுடம்பை விட்டு நீங்கும்போ துண்டாகும் வருத்தம் பெரிதாக இருக்குமாகலானும், அன்றியும் கொலை செய்யுமிடத்து, கரும்பையும் எள்ளையும் ஆலையினுஞ் செக்கிலும் வைத்தாட்டும் போது நெருக்கி லகப்பட்டு அரைபட்டு நசுக்குண்டு சின்னபின்னப்பட்ட அக்கரும்பிலும் எள்ளிலுமிருந்து ரசமும் நெய்யும் எப்படிக் கலங்கி வருமோ அப்படியே, உடல் நசுக்குண்டு அரைபட்டுச் சின்னமாக அதி லிருந்தும் நடு நடுங்கி அறிவுகெட்டுத் திகைப்படைந்து கலங்கி வருவது எவ்வுயிர்களுக்கும் பொதுவாக லானும், தமக்குக்[272]கொலை நேரிடுவதை அறிந்தபோது

270. நிவிர்த்திக்கு—1886; நிவர்த்திக்கு—1924.
271. இம்சையினால்—1886. 272. தனக்குக்—1924.

உடம்பு நடுங்கியும் பதைத்தும் வியர்த்தும்[273] தடதடத்துந் தள்ளாடியும் கால்சோர்ந்தும் கண்கலங்கியும் இருளடைந்தும் காதுகள் கும்மென்று அடைபட்டும் நாசி துவண்டும் வாய்நீருலர்ந்தும் நாக்குழறியும் வயிறு பகீரென்று திகிலடைந்தும் மனம் திகைத்துப்[274] பறை யடித்தாற்போற் பதபதவென்று அடித்துத் துடித்துத் துக்கமுஞ் சோர்வுங் கொண்டு மயங்கவும் பாய்மரச் சுற்றிலகப்பட்ட காக்கை போலவும் நீர்ச் சுழியிலகப்பட்ட வண்டுபோலவும் சுழல் காற்றில் அகப்பட்ட துரும்புபோலவும் உயிர் சுழன்று சுழன்று அலையவும் உண்டாகின்ற பயங்கரம் எவ்வுயிர்களுக்கும் இயல்பாகலானும், இறந்தவுடன் அவ்வுயிர்கள் இறப்பினாற்பட்ட இமிசையுமன்றி உடனே பிறப்பினாலும் வருத்தமடைந்து துக்கப்பட வேண்டுமாகலானும், நாம் வேண்டி ஒருயிரைப் பிறப்பிப்பதற்குச் சுதந்தர மில்லாதபடியால் நாம் வேண்டி ஒருயிரை இறப்பிப்பதற்கும் சுதந்தரமில்லை; இறப்பிப்பதற்கும் பிறப்பிப்பதற்கும் இறைவனே சுதந்தரமுள்ளவனென் றெண்ணுமல் ஆகாமியத்தால் கொலை செய்வதனால் மீளாநரகம் நேரும் என்றறிந்து கொள்வீர்: ஆதலால் எவ்வுயிர்களிடத்துங் கொலைப்பாதகத்தைச் சமமாகக் கொள்ளவேண்டும். இந்த ஞாயத்தின்படி என் புதல்வனைப் பழிக்குப்பழியாகக் கொன்றுவிடுவதே முடிவு" என்று சொன்னார்.

---

273. வெயர்த்தும்—1886; வியர்த்தும்—1924.
274. திகைத்தும்—1924.

அதுகேட்டு வேறொரு மந்திரியானவர் மநுச் சோழரை வணங்கி "அரசனே! உமது பெயரினால் விளங்கிய மநுநூலிற் குடுமியையும்[275] முகரோமத்தையும் க்ஷவரஞ்செய்து தான் கொன்ற பசுத்தோலைப் போர்த்துப் பசுமந்தையினிடத்தில் வாசஞ்செய்து கோசலத்தினால் ஸ்நானம் பண்ணி, இந்திரியங்களை அடக்கியிருத்தல் கஞ்சிகுடித்தல் அவிசுபண்ணி யுண்டல் பட்டினியிருத்தல் பசுமந்தையினுடன் போதல் பசுக்களுக்கு உபசாரஞ்செய்தல் பசுதானஞ் செய்தல் முதலான செய்கைகளைப் பசுக்கொலை செய்தோர்க்குப் பிராயச்சித்தமாகச் செய்விக்க வேண்டுமென்று விதித்திருக்கின்றதே; அதற்கு மாறாகப் புதல்வனைக் கொலை செய்வீராகில் விதிமாறாட்டமென்னுங் குற்றம் வருவதாகத் தோன்றுகின்றதே" என்று சொன்னார்.

அதுகேட்ட மநுச்சக்கரவர்த்தியானவர் "மந்திரி! நீர் சொன்னது பால்வேண்டி யழுகின்ற குழந்தைக்குப் பழத்தை எதிர்வைத்துப் பராக்குக் காட்டுவது போலிருக்கின்றது. விதிமாறாட்டமென்னுங் குற்றம் வருவதாகத் தோன்றுகின்றதென்று சொன்னீர். அந்த மநுநூல் அநித்தியமாகிய தேகத்தில் அபிமானமும் அசுத்தமாகிய பிரபஞ்ச போகத்தில் ஆசையும் வைத்த கர்மிகளுக்கே[276] அவ்விதி கூறியதல்லது, நித்தியமாகிய சிவத்தில் அபிமானமும் சுத்தமாகிய சிவபோகத்திலாசையும் வைத்த என் பிதா மூதாதை முத

275. குடுமியும்—1886; குடுமியையும்—1924.
276. காமிகளுக்கே—1924.

லானவர்களுக்குக் கூறியதல்ல. உயிர்க்கொலை நேரிட்டால் உயிர்விடக் கடவரென்றே குறிப்பினுற் கூறியிருக்கின்றது. என் பிதா மூதாதைக்கு எவ்விதியோ அவ்விதியே எனக்கும் என் புத்திரனுக்கும் வேண்டத்தக்கது. ஆதலால் விதி மாறுபட்டதாகாது. இந்த ஞாயத்தால்[277] என் புத்திரனை யிழந்துவிடுவதே முடிவு" என்று சொன்னார்.

அதுகேட்ட மற்றொரு மந்திரியானவர் மகாராஜனை வணங்கி "உலகந் தோன்றியது முதல் இதுபரியந்தம் தெய்வ கடாக்ஷத்தினாலும் வல்லமையினாலும் நீதியுடன் உலகாண்ட அரசர்கள் தாங்கள் ஆளுங் காலங்களிற் பசுமுதலான மிருகவர்க்கங்களுள் ஒவ்வொன்றை அகங்காரத்தால் அடித்துக் கொன்ற அந்நியமானவர்களையும் பிராயச்சித்தஞ் செய்வித்தார்களே யல்லது, கொலை செய்வித்தவர்கள் உண்டென்று கேட்டதில்லை. அப்படியிருக்க, உமது புத்திரன் இந்தப் பசுவின் கன்றைக் கொல்லவேண்டுமென்று கறுவுகொண்டு கொன்றவனல்ல:[278] நீரெப்படி அவனைக் கொலைசெய்யும்படி தீர்ப்பிடலாம்? அவ்வாறு தீர்ப்பிட்டால் முன்னோர் செய்கைக்கு முரணானதென்னுங் குற்ற முண்டாகுமே" என்றார். அதுகேட்டு மநுச்சோழரானவர் "மந்திரி! நீர் மரபறியாதவன் மணம் பேச வந்ததுபோற் பேச வந்தீர். முன்னோர் செய்கைக்கு முரணானதென்னுங்

277. நியாயத்தால்—1886.
278. கொன்றவனல்லன்—1886.

குற்றம் வருமே யென்றீர். ஆனால் நான் சொல்வதை நன்றாய்க் கேளும். பூர்வம் என் முன்னோர்கள் ஆளுங் காலங்களில் இப்படிப்பட்ட கொலை நேர்ந்ததேயில்லை. வேறு தேசங்களில் ஒவ்வொரு கொலைப்பாதகம் நேரிட்ட போது தம்முயிரையுங் கொடுத்துப் பழிக்கு ஈடுகட்டி யிருக்கின்றார்கள்.[279] அவர்கள் நிற்க, மற்ற அரசர் களோ வென்றால் தாங்கள் ஆளுங் காலங்களில் தேசா சார முதலான கற்பனைகளைப்பற்றி நூதன நூதனமாக நியாயங்களை யேற்படுத்திக்கொண்டு அவைகளின்படி நடத்தினார்கள். அவ்வரசர்கள் என்னோடு சேர்க்கப் பட்டவர்களல்ல.[280] ஆதலால் என் தீர்ப்பின்படி நடத்துவதே துணிவு" என்றார்.

அதுகேட்டு மற்ற மந்திரிகளெல்லாம் சேர்ந்து வணங்கி நின்று, "மஹாராஜனே! கூறியதே கூறு கின்றார்களென்று கோபஞ்செய்யாமல் யாங்கள் சொல் லும் வார்த்தையைக் கேட்டருள்வீராக: இந்தப் பசுவோ ஐயறிவுள்ள மிருகவர்க்கத்துள் ஒன்று; இது பெற்ற கன்றோ பால் கொடுத்தற்குரிய பசுவாகுவ தல்ல.[281] ஏருழுதற்குரிய எருதாகத்தக்க சேங்கன்று; உமது புத்திரனோ ஆறறிவுள்ள ஆண்மக்களிற் சிறந்த நல்லறிவுடையவன்; அவனோ அக்கன்றைக் கொல்ல வேண்டுமென்று கொன்றவனல்ல;[282] இக்கொலையோ

279. ஈடுகொட்டி யிருக்கின்றார்கள்—1886.

280. சேர்க்கப்பட்டவர்க ளல்லர்—1886.

281. பசுவாகத் தக்கதன்று—1886; பசுவர்க்கத்த தன்று—1924. 282. கொன்றவனல்லன் 1886.

கன்றினுடைய ஊழ்வினையென்று உலகமெல்லாஞ் சொல்லும்; ஆதலால் இதற்குத் தக்க பிராயச்சித்தஞ் செய்விப்பதே முறை" என்று சொன்னார்கள்.

அதுகேட்ட அரசன் "மந்திரிகளே! நீங்கள் உண்மையைக் கண்டறிந்து சொல்வதற்குச் சக்தியற்றவர்கள்போல் இலேசாகச் சொல்லுகின்றீர்கள்: நல்லது நான் சொல்லுகின்றதைக் கேளுங்கள். 'இப்பசுவோ ஐயறிவுள்ள மிருகவர்க்கத்திலொன்று' என்று சொன்னீர்கள்: [283] நன்றாயிருக்கின்றது உங்கள் ஞாயம்! [284] உயர்வு தாழ்வுகளை உயிர்களின் அறிவினிடத்து வைத்துத் தாழ்ந்த அறிவுள்ள மிருகங்களைக் கொன்றால் பிராயச்சித்த மென்றும் உயர்ந்த அறிவுள்ள மனிதர்களைக் கொன்றால் கொலை செய்வதென்றும் சொல்லுகின்ற உங்கள் வார்த்தையின்படியே, இப்பசு மனிதரறிவைப் பார்க்கினும் உயர்ந்த அறிவுள்ளதாக விருக்கின்றது. எவ்வாறெனில், எந்த உலகத்தில் எந்தக் காலத்தில் எந்தப் பசு இந்தப் பசுவைப்போலக் கன்றிறந்ததைக் குறித்து ஆற்றப்படாத துக்கத்தோடும், அதிகாரிகளாலும் பகைவராலும் அயலாராலும் மற்ற உயிர்களாலும் ஒருவர்க்குக் குறை நேரிட்டால் அக்குறையை அரசன் தனக்குத் தெரிவிப்பதற்கு அரண்மனைவாயிலில் ஆராய்ச்சிமணி கட்டுவித்திருக்கிறா னென்று சாதாரண மனிதர்களாலும் அறியப்படாத இந்தக் காரியத்தை அறிந்து வந்து, அந்த மணியைக் கொம்பினாலடித்துச் சத்தமெழுப்பிக் கதறிக் கண்ணீர்

283. சொன்னது—1924. 284. நியாயம்—1886.

வடித்துக்கொண்டு நின்றது? இதனை யெப்போதாவது கேட்டிருக்கின்றீர்களோ? இல்லையே. இந்தப் பசு மாத்திரம் அப்படி அறிந்து செய்ததை யின்று பார்த்து நின்றீர்கள். ஆதலால் இது முன் தவக் குறையால் பசுவுடம்பெடுத்த தாயினும், மனிதப் பிறப்பில் உயர்குலத்தில் மேலான அறிவோடு பிறந் திருக்கிறதாகவே[285] கொள்ளவேண்டும். அன்றியும் பசு எல்லாப் பிறப்பினும் உயர்வு உள்ளதென்றும், அதன் கொம்பி னடியில்[286] பிரம விஷ்ணுக்கள் இருக் கின்றார்களென்றும், காவிரி முதலான புண்ணிய தீர்த் தங்கள் அந்தக் கொம்பி னுனியில் இருக்கின்றன வென்றும், சிவபெருமான் சிரசிலும் சிவசக்தி நெற்றி யிலும் இருக்கின்றார்களென்றும், சுப்பிரமண்யக்கட வுள் நாசியிலும் அசுவினிதேவர் காதுகளிலும் சந்திர சூரியர் கண்களிலும் வருணன் நாவிலும் சரஸ்வதி குரலிலும் கந்தருவர் மார்பிலும் இந்திரன் கழுத்தி லும் உருத்திரர் முதுகிலும் சத்தமாதர்கள் குறியிலும் லக்ஷ்மி குதத்திலும் கங்கை மூத்திரத்திலும் பூமிதேவி வயிற்றிலும் யமுனை சாணத்திலும் திருப்பாற்கடல் முலையிலும் யாகாக்கினி வயிறு முகம் இதயம் என்னும் உறுப்புக்களிலும் அருந்ததி முதலான கற்புள்ளவர் கள் உடம்பிலும் இருப்பார்களென்றும் சொல்லியிருக் கின்றதே. அன்றியும் பரமசிவன் திருமுடிக்கு அபிஷே கஞ் செய்ய யோக்கியமான பால் முதலான திரவியங்

285. பிறந்திருக்கின்றதாகவே—1924.
286. கொம்பினடியிலே—1886.

களைக் கொடுக்கின்றதே. அன்றியும் திருவெண்ணீற்றின் காரணமான திரவியம் பிறப்பதற்கும் இடமாக விருக்கின்றதே. அன்றியும் நான்கு வேதமும் கால்களாகவும் கருமமும் ஞானமும் கண்களாகவும் ஆகமங்களும் சாத்திரங்களும் கொம்புகளாகவும் தருமமே உடலாகவும் தவமே நடையாகவுங் கொண்டு, பரமேசுரனுக்கு வாகனமாக விளங்கிய தருமவிடபத்துக்கு இனமாகவும் இருக்கின்றதே. இப்படிப்பட்ட மேன்மையுள்ள பசுவை ஐயறிவுடைய மிருகவர்க்கத்துள் ஒன்றென்று சொல்லப்படுமோ?[287]

"'இதன் கன்றோ பால்கொடுத்தற்குரிய பசுவாவதில்லை, ஏருழுதற்குரிய எருதாகத் தக்க சேங்கன்று' என்று சொன்னீர்கள்: தேவர்களெல்லாம் பிறப்பதற்குத் தவஞ் செய்கின்ற மகத்துவமுள்ள இந்தத் திருவாரூரிலே பிறந்த எல்லா உயிர்களும் சிவகணங்களென்கிற சித்தாந்தப்படி, இந்த க்ஷேத்திரத்திலே பிறந்த இக்கன்றைச் சிவகணமென்று கொள்வதை விட்டு, சேங்கன்றென்று சொல்லப்படுமோ?[288] புத்திரனோ ஆறறிவுள்ள ஆண்மக்களிற் சிறந்த நல்லறிவுள்ளவன் என்றீர்கள்: சிவதரிசனஞ் செய்யத் தேரூர்ந்து போய்ச் செல்வ மறைப்பினாற் கண் மறைந்து கன்றைக் கொன்றவன் நல்லறிவுள்ளவனென்று சொல்லப்படுவனோ? கன்றிறந்ததை ஊழ்வினையென்று உலகஞ் சொல்லு மென்றீர்கள்: பிராரத்துவ வாதிகளுக்கல்லா

---

287. சொல்லல் தகுமோ—1886.
288. சொல்லல் தகுமோ—1886.

மல்,[289] காமக்குரோதாதிகளாற் பாவங்களைச் செய்வதற்குச் சீவனே ஆகாமிய கர்த்தாவென்று கொள்ளுகிற உத்தமமார்க்கத்தை யுடையோர்க்கு[290] ஊழ்வினையென்று சொல்லத்தகுமோ?[291] இதற்குத் தக்க பிராயச்சித்தஞ் செய்விப்பதே முறையென்றீர்கள்: மலையையெடுத்துண்டு வயிறு நோகின்றவனுக்குச் சுக்கிடித்துக் கொடுத்து சொஸ்தப் படுத்துவார்களோ?[292] அதுபோலக் கொலைப்பாதகஞ் செய்தோர்க்குப் பிராயச்சித்தஞ் செய்வித்துப் பாவநிவர்த்தி செய்யப்படுமோ?[293] அவ்வாறு செய்வேனானால் என்றும்[294] மீளா நரகத்தில் என் புத்திரனை விழுத்துவதுமன்றி, யானும் விழுந்து வருந்துவேன்; இவ்வுலகத்திலும் மீளாத[295] பழிக்கு ஆளாகச் சமைவேன்; அன்றியும் எண்ணிறந்த பெருமை பெற்ற இரவி குலத்திற்கும் என்னை யடுத்திருக்கின்ற உங்களுக்கும் ஒரிழுக்கு வார்த்தையும் உண்டாகும்.[296] ஆதலால், இனி என் சொல்லுக்கிரண்டில்லை: இந்தப் பசுவின் கன்றைக் கொன்ற பழிக்கு ஈடாக என் புத்திரனைக் கொலை செய்வதே நிச்சயமாகிய தீர்ப்பு" என்று சொல்லிவிட்டு, பின்பு மந்திரி

---

289. பிராரத்துவ வாதிகளே யல்லாமல்—1886.
290. உடையோர்கள்—1886.
291. சொல்வரோ—1886.
292. கொடுக்கின் அஃது சொஸ்தப்படுமோ—1886.
293. செய்யின் அப்பாவ நிவாரணமாமோ—1886.
294. 'என்றும்' என்பது 1886-ல் இல்லை.
295. இவ்வுலகத்திலும் என்றும் மீளாத—1886.
296. உண்டாக்கினவனுவேன்—1886.

களுக்குள்[297] கலாவல்லபன் என்கிற மந்திரியைப் பார்த்து "மந்திரி ! என் புத்திரனை யழைத்துப்போய் அந்தக் கன்று இறந்து கிடக்கின்ற வீதியிற் கிடத்தி, நீ தேரிலேறிக்கொண்டு அவனுடம்பின்மேல் தேர்ச் சக்கர மேறும்படி செய்து கொலைசெய்து வருவாய்" என்று கட்டளையிட்டார். அப்போது மற்ற மந்திரிக ளெல்லாம் கைந் நெரித்துக்கொண்டு[298] கண்களிலே நீரரும்ப மனங்கலங்கிப் பிரமைகொண்டு நின்றார்கள்.

கலாவல்லப னென்கிற மந்திரியானவன், கடுந் தவம் புரிந்து பெற்ற கவுத்துவ மணியைக் கடலி லெறிந்துவிட்டு வாவென்றும் பல நாள் வருந்தி வளர்த்த பஞ்சவர்ணக் கிளியைப் பருந்துக் கிரையிட்டு வாவென்றும் செய்தற்கரிய தவஞ்செய்து பெற்ற தேவாமுதத்தைச் சேற்றிற் கழித்து வாவென்றும் சொல்லக் கேட்டவன் போல் திடுக்கிட்டு உணர் வழிந் தும், திகைப்பூண்டு மிதித்தவன்போல் மயங்கி நின் றும், சற்று உணர்வுதோன்ற அது விஷயத்தில் மன மில்லாதவனா யிருந்தும் அரசன் ஆணையைத் தடுப் பதற்கு அஞ்சி வணங்கி விடைபெற்றுக்கொண்டு, அவ் விடம் விட்டுப் புறப்பட்டுத் தளர்ந்த நடையோடு முகங்கருகி நெடுமூச்சு விட்டுக்கொண்டு "சிவசிவா ! சம்போ ! சம்போ ! இந்தப் பாதகஞ் செய்யத்தானோ நான் மந்திரியாக ஏற்பட்டேன் ! கொலை யென்று

297. மந்திரிக்குள் — 1886; 'பின்பு மந்திரிகளுக்குள் கலாவல்லபனென்கிற' என்பது 1924-ல் இல்லை.

298. கைநெரித்துக் கொண்டு — 1886.

சொல்லுகின்றோர்களைப் பார்த்தாலும் பயங்கொள்ளு கின்ற எனக்குத்தானோ இப்படிப்பட்ட விதி வரவேண்டும்! இந்தக் காரியத்தைச் செய்யாது விடுவோமென்றால் அரசன் கட்டளையைக் கடந்தானென்னுங் குற்றம் நேரிடுமென்றும், அல்லது செய்வோமென்றால் நமது உயிர்போற் சிறந்த வீதிவிடங்கன் விஷயத்தில் எப்படிக் கொலைசெய்யத் துணிவு உண்டாகுமென்றும், எண்ணி யெண்ணி என் மனம் இருதலைக் கொள்ளிக்குள் அகப்பட்ட எறும்புபோல் திகைக்கின்றதே! இதற்கு என்ன செய்வேன்! என்ன செய்வேன்!" என்று வருந்திவருந்தி ஒரு கால் முன்வைப்பதும் மற்றொரு கால் பின் வைப்பதுமாகி ஊசலாடுகின்றவனைப் போல்299 அலைந்தும், 'வேந்தன் விஷமுண்ணென்று கட்டளையிடினும் உண்ணவேண்டிய உரிமை நமக்கிருக்கிற படியால் போய்த்தொலைப்போம்'300 என்று சற்றே நடந்து 'எண்ணுதற்கும் யோக்கியமல்லாத இப்பாதகத்தை யெப்படிச் செய்வோம்' என்று சற்றே நின்று நடைத்தூக்கங் கொண்டவன்போல் தெளிந்தும், மயங்கியும், பித்தம் பிடித்தவன்போல் பிதற்றியும், கண்ணீர் சொரிந்து கலங்கினவனாகிப் பின்பு தெளிந்து, 'அரசன் நமக்கும் தந்தையாதலால்301 வீதிவிடங்கன் செய்த குற்றத்தை நாமேற்றுக்கொண்டு நம் முயிரைக் கொடுத்துவிடுவோம்' என்று துணிவுகொண்டு, அக்

299. போல—1924.

300. துலைப்போம்—1886; தொலைப்போம்—1924.

301. நமக்குத் தந்தை யாதலால்—1886.

கன்று இறந்து கிடக்கிற வீதியினிடத்து அணைகடந்த வெள்ளம்போல அதிவேகமாக வந்து நின்று, தன்னரையி லிருந்த உடைவாளை உறையிலிருந் தெடுத் துருவிக்கொண்டு,* தனது கழுத்தில் வைத்து ஊட்டியை அரிந்துகொண்டு உயிரிழந்து விழுந்தான்.

அதுகண்டு சில ஒற்றர்கள் அதிசீக்கிரமாகப் போய் மநுச்சோழரிடத்தில் "ஆண்டவரே! 302 தேவரீர்க்குக் கண்போல் விளங்கிய கலாவல்லபனென்னும் மந்திரியானவர் சேங்கன்றிறந்து கிடக்கின்ற தெருவிற் போய் அரையிலிருந்த உடைவாளைக்கொண்டு தமது கழுத்தை யரிந்துகொண் டிறந்துவிட்டார்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

அதுகேட்ட அரசன் அழிந்த புண்ணில் அம்பு பட்டதுபோல் துடிதுடித்து மிகவும் மனங் கலங்கி "ஓஹோ இதென்ன பாவம்! இதென்ன பாவம்! ஐயோ! கலாவல்லப னென்கிற மந்திரியானவன் நானிட்ட ஏவலைச் செய்வதற்குச் சம்மதித்தவனைபோல் சென்றது 'நம் அரசனுக்குக் கன்றைப்பற்றி வந்த பழி மாத்திரம் போதாது, நாமும் பழி சுமத்துவோம்' என 303 நினைத்துத்தானோ! எனக்கு நேரிட்ட இடரையறிந்தும் எரியுங் கொள்ளியை யேறத்தள்ளுவதுபோலவும், நீண்டெரியும் நெருப்பில் நெய்விடுவதுபோலவும், அவ்விடருக்குமே லிடருண்டாகும்படி செய்தானே! கப்பல்

* உறையிலிருந் துருவி யெடுத்துக் கொண்டு—1886.
302. ஆண்டவனே—1886; ஆண்டவரே—1924.
303. என்று—1886; என—1924.

உடைந்து கலங்கும்போது தெப்பமும் உடைந்தது போல், கன்றின் பழிக்குக் கலங்கும்போது மந்திரி பழி யும் வளைத்துக்கொண்டதே! எனக்கு வந்த துன்ப மெல்லாந் தனக்கு வந்ததாக வெண்ணி, என்னை இர வும் பகலும் காத்திருந்த மதியுள்ள மந்திரியை யினி எக்காலத்திற் காண்பேன்! இதைக் கேட்டவர்களெல் லாம் 'இதென்ன கொடுமையோ! கொள்ளைகொண்ட வனைவிட்டுக் குறுக்கே வந்தவன்மேற் குற்றம் நாட்டி யதுபோலவும், கொண்ட மனையாளிருக்கக் கூலி வாங்க வந்தவளைத் தாலிவாங்கச் சொன்னதுபோலவும், பசுங் கன்றைக் கொன்ற தன் புதல்வனிருக்கவும்,[304] அவனை விட்டு அப்பழியை அமைச்சன்மேல் வைத்து அவ னுயிரை வாங்கச் சொன்ன இவ்வரசன் அநியாயக் காரன்' என்று இகழ்ச்சி செய்வார்களே! அறிவில்லா தவன் செய்த காரியம் பயன்படாதது மாத்திரமோ? பழியும் பாவமுங் கொடுக்குமென்ற பெரியோர் வார்த் தைக்கு இலக்காயினேன்! ஐயோ! நான் என்ன காரி யஞ் செய்தேன்! என்ன காரியஞ் செய்தேன்!"[305] என் றும்[306] "திருவாரூர்ப் பூங்கோயிலினிடத் தெழுந்தரு ளிய தெய்வமே! அடுத்தவர்களுக்கு அருள்செய்கின்ற ஆண்டவனே! உன்னை நம்பியிருக்கின்ற அடியேனை இப்படிப்பட்ட சோதனையுஞ் செய்யலாமோ![307] உன்

---

304. புதல்வனிருக்க—1886.
305. இரண்டாவது 'என்ன காரியஞ் செய்தேன்!' என்பது 1886-ல் இல்லை.
306. 'என்றும்' என்பது 1886-ல் இல்லை.
307. இப்படியுஞ் சோதனை செய்யலாமோ—1886.

திருவடிகளுக்கு ஆளாகியிருக்கிற அடியேனை இப்படிப் பட்ட பழிக்கும் ஆளாக்கலாமோ!'' என்றும்[308] பல விதமாகப் புலம்பிப்[309] பரதவித்துக்கொண்டு, ''பின்னை துக்கம் தருவதான காரியங்களை முன்னே அறிந்து அக்காரியத்தைச் செய்யாதுவிடவேண்டும்; ஆலோசித் தறியாது செய்துவிட்டால் அதுபற்றித் துயரப்படா மல் மேல் செய்யத்தக்க காரியங்களை ஆலசியப்படுத்தா மல் செய்யவேண்டுமாதலால், வருவது தெரியாது மந் திரியை யனுப்பிய நாம் துக்கப்படுவதிற் பயனென்ன? இனி நாமே போய்ப் புத்திரனைத் தேர்க்காலி லூர்ந்து, மந்திரி பழிக்கு நம்முயிரைக் கொடுத்துவிடுவோம்'' என்று எண்ணி, அரண்மனைக்குப் புறத்தில் வந்து, தமது புத்திரனை யழைத்து வரும்படி காவற்காரர் களுக்குக் கட்டளையிட்டார்.

அவர்கள் கண்ணீர் வடிந்த முகத்துடன் ''ஐயோ! மநுநீதி தவறாத மன்னவனுக்கும் இப்படிப்பட்ட ஆபத்து நேரிடலாமோ! நமது இளவரசனாகிய வீதி விடங்கனிடத்திற் சென்று 'ஐயா! உம்மை அரசன் அழைத்துவரச் சொன்னார்' என்று எவ்வாறு சொல் வோம். என்ன செய்வோம்!'' என்று துயர்கொண்டு வீதிவிடங்கன் இருக்கும் அரண்மனைக்குச் சென் றார்கள்.

அதற்கு முன்னதாகவே, பெரியோர்களிடத்துப் பிராயச்சித்த விதியைக் கேட்கப்போன வீதிவிடங்கன்

---

308. என்று—1886.

309. 'புலம்பி' என்பது 1924-ல் இல்லை.

தமது பிதாவினிடத்தில் பசுவானது வந்து முறையிட்ட சமாசாரத்தை ஒற்றர்களாலே கேள்விப்பட்டு 'இனி நமக்கென்ன பிராயச்சித்தமிருக்கின்றது! நமது பிதாவானவர் செய்கிற தீர்ப்பின்படி நடந்துகொள்ளுவோம்' என்று தேகமெலிந்து, மேனி வேறுபட்டு, மனந்தளர்ந்து, முகஞ்சோர்ந்து தனது அரண்மனையினிடத்து வந்திருந்தான். அப்போது அரசன் அனுப்பிய காவற்காரர்கள் அவ்வீதிவிடங்கனைக் கண்டு கை குவித்து எதிர் நின்றார்கள். அவர்களைப் பார்த்து 'நீங்கள் என்ன காரியமாக என்னிடத்தில் வந்தீர்கள்?' என்று கேட்க, அவர்கள் ஒன்றுஞ் சொல்லாது ஊமைகளைப்போல விம்மிவிம்மி அழுது கண்ணீர் வடித்துக் கொண்டு நின்றார்கள். அதுகண்டு வீதிவிடங்கன், 'இவர்கள் ஏதோ ஒரு துன்பமான சமாசாரத்தைச் சொல்ல வந்தவர்கள் நாவெழாமல்310 நடுங்குகின்றார்கள்' என்று அறிந்து "ஓ காவற்காரர்களே! வந்த காரியம் இன்னதென்று சொல்லாமல் துக்கப்படுவதில் பலனில்லை; அந்தக் காரியம் எனக்குந் தெரியும்,311 ஆயினும் துயரப்படாமல் சொல்லுங்கள்" என்றான். அது கேட்டு, "ஐயா! எப்படிச் சொல்வோம்! என்ன செய்வோம்! எங்கே போவோம்! எல்லார் குடியையுங் கெடுக்க எங்கே இருந்தோ தாட்சண்யமில்லாத தலையீற்றுப் பசுவானது ஒன்று வந்து ஆராய்ச்சி மணியையசைத்து, இனி உலகத்தை ஆள்வாரில்லாமல்

310. வந்தவர்கள் அதனால் நாவெழாமல்—1886.
311. எனக்குத் தெரியும்—1886.

அழிந்துபோகும்படி உம்மை அரசன் அழைத்துவரச் செய்வித்தது" என்று சொன்னார்கள்.

அதுகேட்டு வீதிவிடங்கனைச் சூழ்ந்திருந்த உறவினர் சினேகர் முதலானோரெல்லாம் "இப்படிப்பட்ட அவதி நேரிடத்தானோ தியாகேசர் கோவிலுக்குப் போகத் தொடங்கியது! எள்ளளவும் இப்படி வரும் என்று அறியோமே! இதற்கு என்ன செய்வோம்!"[312] என்று அழுது சோர்ந்தார்கள்.[313] அந்தப் பிரகாரமே அரண்மனையிலுள்ள மற்றவர்களும் புலம்பி ஆவலித்தார்கள். இந்த அழுகை யொலியை வீதிவிடங்கன் தாயானவள் கேட்டு, இதென்ன காரணமென்று விசாரித்து, இன்ன காரணமென்று அறிந்து, கொழுகொம் பற்ற கொடியைப்போல் கீழ் விழுந்து[314] மூர்ச்சை யடைந்து, சற்றே அறிவுவரத் தெளிந்து "பாவியாகிய விதி என் பாக்கியத்தை யழித்ததே! தீமையாகிய வினைப் பயன் என் செல்வத்தை யழித்ததே! வஞ்சமாகிய ஊழ் என் வாழ்வை யழித்ததே! பலநாள் வருந்திப் பெற்ற என் வயிறு பற்றுகின்றதே! பகீரென்று பதைக்கின்றதே! ஐயோ! என் புத்திரன் செய்த குற்றத்திற்கு என்னைக் கொன்றாலாகாதோ!" என்று பலவிதமாகச் சொல்லிக் கைநெரித்துக்கொண்டு[315] கண்ணீர்விட்டுக் கொண்டு[316] வயிறு பிசைந்துகொண்டு[317] மாரடித்துக்

312. என் செய்வோம்—1886.
313. என்று சோர்ந்தார்கள்—1924.
314. கீழே விழுந்து—1886.
315. கை நெரித்து—1886.
316. கண்ணீர் விட்டு—1886.

கொண்டு[318] வாயில் அறைந்துகொண்டு[319] மனம் பதைத்துக்கொண்டு[320] மண்ணிற் புரண்டுகொண்டு[321] கோவென்று அழுதழுது புலம்பினுள்.

அப்போது வீதிவிடங்கனென்கிற இராஜபுத்திரன் அழுகின்ற தாய் முதலானவர்களைப் பார்த்து "வீணாக நீங்கள் அழுது புலம்புகின்றதில் என்ன லாபம்![322] பிரமதேவன் முதலான கர்த்தாக்களுக்காணுலும் விதியைக் கடக்கக் கூடுமோ! எலும்பு நரம்பு தோல் முதலான அசுத்தங்களாற் கட்டிய இந்தச் சிறு வீட்டை நிலையென்று நம்பப்படுமோ! என்று பிறந்தார்களோ அன்றே இறந்தார்களென்று நினைக்கவேண்டும்; ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவென்றும், நிலத்தில் முளைத்த பூண்டுகள் நிலத்திலே மடியுமென்றும், சாமானியரான அசேதனர்களும் சொல்லிக்கொள்ளுகின்கின்றார்களே: அறிவுள்ள உங்களுக்குத் தெரியாமற் போனதென்ன? இதுபற்றி எவ்வளவுந் துயரப்பட வேண்டுவதில்லை" என்று பலவிதமான உறுதி வார்த்தைகள் கூறி, அவ்விடத்திலிருந்து புறப்பட்டு மனதில் நாணமும் நடுக்கமும் உண்டாகத் தந்தையாரிடத்திற்கு வந்து தொழுது[323] வணங்கித் தூரத்தே[324] நின்றான்.

---

317. பிசைந்து—1886. 318. மாரடித்து—1886.
319. வாயிலறைந்து—1886.
320. மனம் பதைத்து—1886.
321. 'மண்ணிற் புரண்டு கொண்டு' என்பது 1886-ல் இல்லை. 322. என்ன பிரயோசனம்—1886.
323. போய்த் தொழுது—1886.

அப்படி நின்ற புதல்வனை மநுச்சக்கரவர்த்தியானவர் நேரே பாராதவராய் வேறொருவன் முகத்தைப் பார்த்து, "இவன் இளங்கன்றை யெவ்வாறு கொன்றானோ, அவ்வாறு கொலை செய்யப்படுதற்குத் தக்க குற்றவாளி யாயினான்" என்றார். அப்பொழுது புத்திரன் "பசுங்கன்றைக் கொன்ற பாவியாகிய நான் அப்போதே உயிர்விட்டுப் பழிக்குப்பழி சரிக்கட்டுவேன்; ஆனால் தேவரீர் கட்டளை எப்படி நடத்துகிறதோ,[325] அப்படி[326] நடப்போமென்று அக்கட்டளையை எதிர்பார்த்திருந்தேன்" என்று விண்ணப்பம் பண்ணிக்கொண்டான். உடனே அரசனானவர்[327] கொலை வீரர்களை அழைப்பித்து, "இந்தக் குற்றவாளியை ஏற்பாட்டின்படி கடுங்காவல் செய்து கன்று இறந்துகிடக்கின்ற வீதியிற் கொண்டுபோய்க் கிடத்துங்கள்" என்று கட்டளையிட்டார். அந்தக் கட்டளைக்கு அஞ்சி அவ்வீரர்கள் உருவிய கத்தியோடு சூழ்ந்து நடுவே இராஜபுத்திரனைக் காவல் செய்து நடத்திக்கொண்டு போக, மநுச்சக்கரவர்த்தியும் மலைபோல் உயர்ந்த ஒரு தேரிலேறிக்கொண்டு பின்னே நடந்தார்.

அதுகண்ட அந்நகரத்திலுள்ள ஜனங்களெல்லாம் "இந்த இராஜகுமாரனுக்கு ஐசுவரியமும் அழகும் அறிவும் குறைவில்லாது கொடுத்த தெய்வம் இடை

---

324. தாரத்திலே—1924.
325. நடப்பிக்கிறதோ—1886.
326. அப்படியே—1924.
327. அரசன்—1886.

யிலே இந்தப் பழிக்கு ஆளாகச் செய்து, நல்விதி நடுவே யிருக்கக் கோணியவிதி குறுக்கே வந்ததென்று சொல்வதற்குச் சரியாக்கியதே! இன்பத்தை யநுபவிக்கின்ற இளமைப் பருவத்தில் எடுக்கப்படாத பழி வந்து சூழ்ந்து, சோறுண்ணும்போது தொண்டை விக்கிக் கொண்டதென்பதுபோல் துன்பத்தை யுண்டு பண்ணியதே! கல்யாணக் கோலங் கொள்வதற்கு இசைந்துவரும் பருவத்தில் செல்வத் திருமேனிக்குத் தீங்கு உண்டாகும்படி, வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியுடைந்த தென்பதுபோல நேரிட்டதே![328] சிவதரிசனத்துக்குப் போனவிடத்தில் சேங்கன்றின் பழி வந்து, கிணறு வெட்டப் போனவிடத்தில் பூதம் புறப்பட்டதுபோல் தோன்றியதே! கடைகொள்ளப் போகும்போது கள்ளன் எதிர்ப்பட்டது போல், அருள் பெற்று வரப்போகும்போது இந்தப் புத்திரனுக்கு அந்தக் கன்றானது எமனைப்போல எங்கே யிருந்து எதிர்ப்பட்டதோ! இந்தக் குமாரனைப்பற்றி நமக்கெல்லாமுண்டாகிய இரக்கம் பழி வாங்கவந்த பசுவுக்கும் உண்டாயிருக்குமானால், ஆராய்ச்சிமணியை யசைத்து முறையிட்டுக் கொள்ளாதே! ஐயா! இந்தப் பசுவானது சூரியவமிசத்தை யழிக்கத் துசங் கட்டிக்கொண்டதே! இனி நம்மரசனுக்குப் பிற்காலத்தில் நீதியுடன் அரசாட்சி செய்யத்தக்க அரசனைப் பெறு

328. 'வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி யுடைந்த தென்பது போல' என்பது 1886-ல் வாக்கியத் தொடக்கம்.

மல் எல்லா உயிர்களும் நிலை தடுமாறி நின்று மயங்குமே; இந்த இராஜபுத்திரன் முன்பு சேனை சூழத் தேரிலேறி வந்த மங்கலமாகிய கோலத்தைக் கண்டு மகிழ்ச்சி யடைந்த நாம் இப்போது இப் புத்திரன் காவல்சூழக் காலால் நடந்து வருகின்ற பரிதாபமாகிய கோலத்தைப் பார்ப்பதற்கு என்ன பாவஞ் செய்தோமோ! இந்தப் புத்திரனுயிர்க்கு ஈடாக நம்முயிரை யெல்லாங் கொடுத்துவிடுவோ மென்றாலும் அரசன் சம்மதிக்கமாட்டாரே! இந்தப் புத்திரன் உயிரிழந்தால் பின்பு அரசனும் உயிரிழப்பார். பின்பு நாமிருந்து என்ன செய்வது! இதற்கு முன் இறந்துவிடுவதே சுகமாக விருக்கின்றதே! ஆ! ஆ!! நம்மரசனைப் போல இப்படிப்பட்ட அருமையான நீதியோடு அரசு செய்கிறவர்கள் முன்னுமில்லை பின்னுமில்லையே! தியாகராஜப்பெருமான் நமது இராஜனுடைய மனத்தைச் சோதிக்கும்படி யாகவே இப்படிச்329 செய்வித்ததாகத் தோன்றுகின்றதே! தருமதேவதை நமது அரசனது உண்மையாகிய நீதியின் தன்மையைச் சோதிக்கும்படி இவ்விதஞ் செய்ததாகத்330 தோன்றுகின்றதே!" என்று பலவிதமாக அவரவர்களுந் தங்கள் தங்களுக்கு நேரிட்ட ஆபத்தென்று நினைத்தும் புலம்பியும் அதிசயித்தும் நின்றார்கள்.

ஆகாயத்தினிடமாக இவ் வதிசயத்தைப் பார்க்கும்படி வந்திருக்கின்ற தேவர்களெல்லாம் "இந்த

329. சோதிக்கும்படி இவ்விதஞ் —1924.
330. செய்வித்ததாக —1886.

மநுச்சக்கரவர்த்தியானவன் செய்யத் துணிந்த காரியம் இவனுக்கு[331] முன்னிருந்த அரசர்களுக்குச் சொல்லத்தான் கூடுமோ? அல்லது நினைக்கத்தான் கூடுமோ?[332] இம் மனிதர்களைப் பார்க்கிலும் உயர் பிறப்பினராகிய நம்மவர்களுக்குத்தான் செய்யக் கூடுமோ? இவ்வரசன் நீதியிலும் மனோதிடத்திலும் சிறந்தவனாக விருக்கின்றான். இவனுக்குச் சிவகடாக்ஷம் கைகூடுமல்லது மற்றவர்களுக்குக் கூடுமோ? ஆயினும் இன்னும் நடக்கப்போகிற அற்புதங்களை யெல்லாம் பார்த்தறிவோம்" என்று புகழ்ந்துசொல்லி நின்றார்கள்.

இந்தப் பிரகாரமாகச் சொல்லிக்கொண்டு நிற்க, மநுச்சக்கரவர்த்தியானவர் அந்தப் பசுங்கன்று இறந்து கிடக்கின்ற வீதியிற் போய், தமது புத்திரனைக் காவல் செய்து முன்னே நடத்தி வந்த கொலைவீரர்களைப் பார்த்து "இனிக் காலதாமசம் பண்ணாமல் இந்தப் பசுங்கன்றை யெடுத்து அப்புறத்தே வைத்து, அவ்விடத்தில்[333] இவ் வீதிவிடங்கனைக் கிடத்திவையுங்கள்" என்று கட்டளையிட்டார்.

அதுகேட்டுக் கொலைவீரர்கள் மனம் பதைத்து மதிமயங்கி நின்றார்கள். அப்பொழுது தந்தையாகிய மநுச்சக்கரவர்த்தியின் கட்டளையைக் கேட்டு மயங்கி

331. இவர்க்கு—1886.

332. 'அல்லது நினைக்கத்தான் கூடுமோ' என்பது 1924-ல் இல்லை.

333. 'அவ்விடத்தில்' என்பது 1924-ல் இல்லை.

நிற்கின்ற கொலைவீரர்களை வீதிவிடங்கன் பார்த்து, "நீங்களேன் மயங்கி வருந்துகின்றீர்கள்? அந்தக் கட்டளையின்படி நானே செய்துகொள்ளுகிறேன்"[334] என்று சொல்லித் தியாகராஜப்பெருமான் சந்நிதிக் கெதிராகத் திரும்பி இரண்டு கைகளையுங் குவித்துச் சிரசின்மேல்[335] வைத்துக்கொண்டு "சிறு பிள்ளைக்குத் திருப்பாற்கடலை அழைத்துக் கொடுத்த தியாகராஜப் பெருமானே! அகண்ட பரிபூரண சச்சிதாநந்த சுயம் பிரகாச சாட்சாத்கார சிதாகாச சொரூப சின்மய ளுகிய சிவசங்கரனே! அடியேன் பசுங் கன்றைக் கொன்ற பாதகனுயினேன், அதுவும் போதாமல் ஐயோ! எனக்கு நல்வழியைக் கற்பித்துக் கண்போல் விளங்கிய நின்னடிமையிற் சிறந்தவனுகிய மதியுள்ள கலாவல்லபனென்கிற மந்திரியையும் இறப்பிப்பதற்குக் காரணமாகியிருந்தேன்![336] இப்படிப்பட்ட என்போல் பாவிகளெங்கேயுண்டு? என் பிதா தண்டிக்கப்போகிற தண்டனை என் பாதகத்துக்குத் தக்க தண்டனையுமல்லவே! என்ன செய்வேன்! பாவியாயினும் எனக்கு வேறொரு கதியுமில்லாதபடியால், முன் தாயைக் கூடித் தந்தையைக் கொலைசெய்தவனது மாபாதகத்தை மன்னித்து அநுக்கிரகஞ் செய்ததுபோல், அடியேனுக்கும் அநுக்கிரகஞ் செய்யவேண்டும்; என் பிதாவுக்கும் எனக்கும் உரித்தாகியிருந்த மற்றவர்களுக்கும் என்

334. செய்து கொள்ளுகின்றேன் — 1924.
335. சிரசின் பேரில் — 1886.
336. காரணமாகியு மிருந்தேன் — 1886.

னைப் பற்றி வந்த பழிபாவங்களை நீக்கி யருளவேண்டும்; என்பொருட்டு இறந்த மந்திரியை யெழுப்பிக் கொடுத்தருளவேண்டும்; இதோ இந்தப் புலானுடம்பைப் போட்டுவிட்டு வருகிறேன்; என்னையுந் திருவடி நீழலிற் சேர்த்துக்கொள்ள வேண்டும்; இந்தப் பிறப்பிலே யெனக்குத் திருவடி கிடையாதானால் வரும்[337] பிறப்பிலாயினுங் கிடைக்கத் தக்க நல்லறிவும் பேரன்பும் உள்ளவனாகப் பிறப்பிக்க வேண்டும்" என்று சொல்லி விண்ணப்பஞ் செய்துகொண்டு திரும்பி நின்று, மாதா பிதா குரு முதலானவர்களுக்கும் மனத்தினால் வந்தனஞ்செய்து, "இம் மநுச்சோழருடைய செங்கோல் மாறாது நிலைபெற்றிருக்க வேண்டும்" என்று இஷ்ட தெய்வத்தைப் பிரார்த்தித்துக்கொண்டு [338]பஞ்சாட்சரத்தை யுச்சரித்துக்கொண்டு[339] விழுந்து வடக்கே தலையும் தெற்கே காலும் வைத்துக்கொண்டு [340] இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு[341] சிந்தையைச் சிவபெருமான் திருவடித் தியானத்தில் வைத்துக் கொண்டு[342] யோகநித்திரை செய்பவன்போல உடம்பைக் கிடத்தினான்.

அப்போது மநுச்சக்கரவர்த்தியானவர் சிவத்தியானஞ் செய்துகொண்டு, தியாகேசர் சந்நிதியை நோக்கி "அடியேனை யாட்கொண்ட ஆண்டவனே!

---

337. வரு பிறப்பிலாயினுங்—1886; மறு பிறப்பிலாயினுங்—1924. 338. பிரார்த்தித்து—1924.
339. உச்சரித்து—1924. 340. வைத்து—1924.
341. மூடி—1924. 342. வைத்து—1924.

இவ் வீதிவிடங்கனென்பவன் பசுங்கன்றைக் கொலை செய்தானென்பது பிரத்தியட்சமாக உண்மையென்று வெளிப்பட்டபடியால், இந்தக் குற்றவாளியின் கொலைப்பாதகந் தீரத்தக்க தண்டனை செய்வதற்குச் சக்தியில்லாத அடியேன், தேவரீர் திருவுளப் பாங்கின்படி மேலோர் ஏற்படுத்திய தரும நூல்களில் கொலை செய்தவனைக் கொலை செய்யக் கடவரென்று விதித் திருக்கின்ற[343] விதியின்படி, விதி மாறுபட்ட முதலான குற்றங்களுக்குச் சிறிது மிடங்கொடாமல், இவனைக் கொலைசெய்யும்படி திரிகரண சுத்தியாகத் தீர்ப்பிட்டுக் கொண்டு, இதோ தேர்க்காலிலூர்ந்து கொலை செய்யத் தொடங்குகின்றேன். இத் தீர்ப்பினிடத்துத் தேவரீர் திருவடி சாட்சியாக என் மனமறிந்து யாதொரு பிசகும் நேரிட்டதில்லை. என்னையுமறியாது ஏதாகிலுங் குறை நேரிட்டிருக்குமானால் அதைத் தேவரீர் மன்னித்துக்கொள்ள வேண்டும். இந்தக் குற்றவாளியின் பாபாத்மாவை அப் பாபத்தினின்று நீங்கும்வண்ணந் தக்க தண்டனை செய்வித்தருளி, மறு பிறப்பிலாயினும் கடைத்தேறும் வழியைக் கடாக்ஷிக்கவேண்டும்"[344] என்று விண்ணப்பஞ் செய்து கொண்டு, தேரிற்கட்டிய குதிரைகளை விழுந்து கிடக்கின்ற வீதிவிடங்கன் கழுத்தடியிற் சக்கரமழுந்தும் படி நேராக முடுக்கித் தேரை நடத்தினார்.

343. விதித்திருக்கிற—1924.

344. வழி கடாட்சிக்கவேண்டும்—1886; வழியைக் கடாட்சிக்க வேண்டும்—1924.

அப்போது தேர்ச் சக்கரமானது வீதிவிடங்கன் மேல் அழுந்திக் கறகறவென்று இழுத்துக்கொண்டு அதி வேகமாகச் செல்ல, உடல் குழம்பிச் சின்னபின்னப்பட்டு நசுக்குண்டு, கையாற்பிசைந்து ரசம் பிழிந்த மாங்கனியின் கோதுபோல, உடல்வேறு உயிர்வேறாக இறந்தான்.

அதுகண்ட தேவர்களெல்லாம் "அருமையாகப் பெற்ற புத்திரனை நோக்காமல் புண்ணியத்தை நோக்கிய கண்ணியவானே! உனக்குச் சுபகர முண்டாவதாக!" என்று வாழ்த்திக் கற்பகப் பூமாரி பொழிந்தார்கள். தேவதுந்துபிகள் அதிர்ந்தன. அந்நகரத்தாரெல்லாம் "இப்படிப்பட்ட நீதி செலுத்துகின்ற மஹாராஜனை என்ன தவஞ் செய்து பெற்றுக்கொண்டோம்" என்றும், "ஐயோ! இனி எக்காலத்தில் வீதிவிடங்கனைக் காண்போம்" என்றும், இன்பக்கண்ணீரும் துன்பக்கண்ணீரும் விட்டுக்கொண்டு நின்றார்கள்.[345] உடனே மநுச் சக்கரவர்த்தியானவர் மந்திரியின் பழிக்காகத் தன் உயிரைக் கொடுக்கத் துணிந்து தேரிலிருந்து கீழே யிழிந்தார். அப்போது, ஸ்ரீகண்டர் அனந்தேசர் காலச்செந்தீயுருத்திரர் துவாதசருத்திரர் ஏகாதசருத்திரர் புத்தியட்டகர் கூர்மாண்டர் ஆடகர் சதவுருத்திரர் அஷ்டமூர்த்திகள் நீலலோகிதர் கங்காளகபாலர் அசுவாரோகணர் அஷ்டபயிரவர் வீரபத்திரர் சக்ரதரர் நான்முகர் முதலான பதமூர்த்திகளும், கபாலிகன் அசன் புதன் வச்சிரதேகன் பிநாகி

345. விட்டுக்கொண்டே நின்றார்கள் — 1886.

கிருதசாதிபன் உருத்திரன் பிங்கலன் சாந்தன் க்ஷயாந்தகன் பலவான்[346] அதிபலவான்[347] பாசாந்தன் மகா பலவான்[348] சுவேதன் ஜயபத்திரன்[349] தீர்க்கபாகு ஜலாந்தகன்[350] மேகவாகனன் சௌமியகேசன் சடாதரன் லக்ஷ்மீதரன் ரத்நந்திரன் ஸ்ரீதரன் பிரசாதன் பிரகாசன் வித்தியாதிபன் ஈசன் சர்வஞ்ஞன் பலிப்பிரியன்[351] சம்பு விபு கணாத்தியக்ஷன் கிரியக்ஷன் திரிலோசனன் முதலான பதத்தலைவர்களும், இந்திரர் சந்திரர் சூரியர் முதலான தேவர்களும், வசிட்டர் அகத்தியர் புலத்தியர் பராசரர் வியாசர் முதலான முனிவர்களும்,[352] கண்ணுவர் கருக்கர் சதானந்தர்[353] முதலான இருடிகளும்,[354] அசுரர் அந்தரர் ஆகாயவாசிகள் விஞ்சையர் வித்தியாதரர் கருடர் காந்தருவர் இயக்கர் கின்னரர் கிம்புருடர் சித்தர் நிருதர் பூதர் பைசாசர் போகபூமியர் உரகர் முதலான கணங்களும், நந்தி பிங்கிருடி[355] சண்டன் பிரசண்டன் சங்குகன்னன் வாணன் அந்தகன் கும்போதரன் விருபாக்ஷன் முதலான பிரமத கணங்களும் சூழ்ந்து

346. பெலவான் — 1886; பலவான் — 1924.
347. அதிபெலவான் — 1886; அதிபலவான் — 1924.
348. மகா பெலவான் — 1886; மகா பலவான் — 1924.
349. செயபத்திரன் — 1886; ஜயபத்திரன் — 1924.
350. ஜெலாந்தகன் — 1886; ஜலாந்தகன் — 1924.
351. பெலிப்பிரியன் — 1886; பலிப்பிரியன் — 1924.
352. முனிவர்கள் — 1886; முனிவர்களும் — 1924
353. சுதானந்தர் — 1886.
354. இருடிகள் — 1886; இருடிகளும் — 1924.
355. பிங்கிரிடி — 1924.

துதித்து வரவும்; பேரிகை மத்தளம் தாளம் சங்கம் சச்சரி தட்டாரி முதலான வாத்தியங்கள் முழங்கிவரவும்; "எல்லாம் வல்ல இறைவன் வந்தான்! நல்லோர்க்கருளும் நாயகன் வந்தான்! முப்புரமெரித்த முன்னோன் வந்தான்! தப்பிலார்க் கருள்செயுந் தயாநிதி வந்தான்! வள்ளல் வந்தான்! மஹாதேவன் வந்தான்! எள்ளி லெண்ணெய்போ லிருப்பவன் வந்தான்! அன்பர்க்கருளும் ஐயன் வந்தான்! இன்பங்கொடுக்கும் இறைவன் வந்தான்! முத்தொழில் நடத்தும் முதல்வன் வந்தான்! பத்தர்கள் புகழும் பதத்தோன் வந்தான்! தேவர்கள் போற்றுந் தியாகன் வந்தான்! மூவர்கள் வாழ்த்தும் முக்கணன் வந்தான்!" என்று சின்னங்கள் பிடித்து வரவும்; தும்புருநாரதர் யாழிசை பாடிவரவும்; உருத்திரகணிகையர் நடனஞ்செய்து வரவும்; ஒற்றைவெண்குடை சாமரை முதலான மங்கல விருதுகள் நெருங்கி வரவும்; ஆனைமுகக் கடவுளும் ஆறுமுகக் கடவுளும் இருபக்கங்களினு[357] மிசைந்து வரவும்; உலக மாதாவாகிய உமாதேவியார் இடது பக்கத்திலிருக்க, ஜடா மகுட திரிநேத்திர காளகண்ட சதுர்ப்புஜம் முதலானவை விளங்க, தர்ம சொரூபமாகிய இடபவாகனத்தின் மேல் சர்வ மங்கல சக்தியே திருமேனியாகக் கொண்ட தியாகராஜப் பெருமான் எழுந்தருளி, மநுச்சோழ ராஜனுக்குமுன் தரிசனங் கொடுத்தருளி, குளிர்ந்த நிலவு துளும்பி[358] வீச

357. இருபக்கங்களிலு — 1886.
358. தளும்பி — 1886.

கின்ற புன்னகைகாட்டி அரசனுக்கு ஜில்லென்று உடம்பும் உள்ளமும் உயிரும் குளிரும்படி செய்வித்து, கருணையென்னும் வெள்ளம் நிறைந்து பொங்கித் ததும்பி பெருக்கெடுத்து ஒளிகொண்டோங்கி மடை திறந் தோடுகின்ற மலர்போன்ற ' திருக்கண்களால் அருள் நோக்கஞ் செய்து, அவ்வரசனுக் குண்டாயிருந்த விடாய் முழுதுந் தீர்த்து, "நம்மிடத்து நம்பிக்கையும் பேரன்பும் வைத்து மநுநீதிதவறாது அரசாட்சி செய்கின்ற மநுச் சோழனே! நீ நடத்துகின்ற நீதியின் பெருமையை உலகத்தவர் செவ்வையாகத் தெரிந்து கொள்ளும்படி நாமே இவ்வாறு சோதித்தோம்;359 இனி ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்" என்று திருவாய் மலர்ந்தருளி, இறந்துகிடக்கின்ற பசுங்கன்றும் கலாவல்லபனென்னும் மந்திரியும் வீதிவிடங்கனென்னும் இராஜகுமாரனும் உயிர்பெற்று எழுந்திருக்கும்படி கடாக்ஷித்தருளினார்.

அந்தக்ஷணமே360 நித்திரை நீங்கி யெழுகின்றது போல், இளங்கன்றானது உயிர்பெற்று எழுந்து தன் தாய்ப் பசுவினிடத்தில் சென்றது. மந்திரியும் புதல்வனும் உயிர் பெற்றெழுந்து, ஆண்டவனை வணங்கி அருகே மலர்ந்த முகத்தோடு வந்தனை செய்துகொண்டு மகிழ்ந்து நின்றார்கள். அதுகண்டு அந்நகரத்திலுள்ள ஜனங்களும் மற்றவர்களும் தம்மையறியாத பெருங் களிப்புடையவர்களாய்ச் சிலர் "அற்புதம்! அற்புதம்!

359. சோதிப்பித்தோம்—1924.
360. அந்தக்கணமே—1886.

அற்புதம்! அற்புதம்!" என்று ஆடினார்கள்; சிலர் "பண்ணிய பூசை பலித்தது! பலித்தது!" என்று பாடினார்கள்; சிலர் "சூரியகுலந்தோன்றியது! தோன்றியது!" என்று துதித்தார்கள்; சிலர் "துக்கம் நீங்கியது! சுகம் கிடைத்தது!" என்று துள்ளினார்கள்; சிலர் "குறையெல்லாந் தீர்ந்தது! குறையெல்லாந் தீர்ந்தது!" என்று கொண்டாடினார்கள்; சிலர் "கும்பிட்ட தெய்வம் குறுக்கே வந்தது!" என்று குதித்தார்கள்; சிலர் "எம்பெருமான் எதிர்ப்பட்டால் என்ன முடியாது!" என்று எக்களித்தார்கள்; சிலர் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக்கொண்டு ஒரு காதமட்டும் ஓடித் திரும்பினார்கள்; சிலர் "கலக்கந்தீர்ந்தது! களிப்பு வந்தது!" என்று கைகொட்டினார்கள்; சிலர் தோள் தட்டிக்கொண்டும் தொடை தட்டிக்கொண்டும் முகரோமத்தை முறுக்கிக்கொண்டும் முகமலர்ந்துகொண்டும் உடல் நிமிர்த்துக்கொண்டும்[361] உலாவி நின்றார்கள்; சிலர் "வாழ்வு வந்தது!" என்று மனம் பூரித்தார்கள்.

இப்படி அவரவர்களும் அளவில்லாத ஆனந்தமுடையவர்களாய் இழந்துவிட்ட பொருள் எதிர்வரப் பெற்றவர்கள்போல் சந்தோஷ கோஷஞ்செய்து நிற்க, மநுச்சக்கரவர்த்தியானவர் கங்கையும் இளம்பிறையும் விளங்குகின்ற சடாமகுடத்தையும், திரிபுண்டரமுந் திலகமும் திருநோக்கும் விளங்குகின்ற நெற்றியையும், அருள் ததும்பி வழிகின்ற திருநோக்கங்களையும், சங்கு குண்டலமணிந்து தாழ்ந்த செவிகளையும், நறுங்குமிழ்

361. நிமிர்த்திக்கொண்டும் — 1924

போன்று விளங்குகின்ற நாசியையும், வேதமாகிய தெள்ளமுதத்தைக் கொள்ளைகொண்டு உண்ணும்படி அன்பர்களுக்கு அருளிச் செய்கின்ற செம்பவளம் போன்ற திருவாய்மலரையும், வானவர்க்கு உயிர் கொடுத்த மணிகண்டத்தையும், கொன்றைமாலை யணிந்து குலவரைகள்போல் உயர்ந்த திருத்தோள்களையும், மானும் மழுவும் வரதமும் அபயமுங் கொண்ட மலர்க் கரங்களையும், சிவந்து மெல்லென்று திருவருள் பழுத்து ஆனந்தமொழுகிப் பத்தர்கள் மனத்தில் தித்தித் திருக்கும் பாதமலர்களையும், செம்பவள மலைபோன்ற திருமேனியையும், பச்சைக்கொடி படர்ந்ததுபோன்று பார்வதியார் மகிழ்ந்து விளங்குகின்ற பாகத்தையும் கண்குளிரக்கண்டு களிப்படைந்து ஆனந்தநீர் ஊற்று நீர்போலச் சுரந்துசுரந்து விழுந்து விழுந்து மார்பினிடத்து வண்டலாடவும், உடல் குழைந்து விதிர் விதிர்த்துச் சிலிர் சிலிர்த்து மயிர்க் கூச்செறிந்து என்பு நெக்குவிட்டுருகியும், மனங் கனிந்துகனிந்து கசிந்துகசிந்து நெகிழ்ந்துநெகிழ்ந்து படபடவென்று பதறிப்பதறி உருகியுருகி ஆனந்த வெள்ளத்தி லழுந்தியழுந்திப் பரவசமாகியும், "சிவசங்கர சிவசங்கர சிவசங்கர சிவசங்கர சிற்பர தற்பர சிற்குண சின்மய சிவசிவசிவ"362 என்று வாய்நீர்சுரந்து பாடிப்பாடி நாக்குழறித் தழும்பேறியும், "ஹர ஹர" என்று ஆனந்தக் கூத்தாடியும், கண்டுபோல் அனந்த முறை [illegible] விழுந்து விழுந்து வணங்கி உடம்பிற்

362. சிவசிவ — 1886.

வாய்ப்பேயும் உலோபமென்கின்ற உதவாப்பேயும் மோகமென்கின்ற மூடப்பேயும் மதமென்கின்ற வலக்காரப்பேயும் மாச்சரிய[366] மென்கின்ற மலட்டுப்பேயும் மனப்பேயோடு கூடி இரவும் பகலும் ஆட்ட,[367] ஆடியாடி யிளைக்கின்ற அடியேனைக் காத்தருளத் திருவுள்ளமிரங்கித் தரிசனங் கட்டளையிட்டுத்[368] துன்பத்தை நீக்கி யின்பத்தை யளித்த எம்பெருமானே! என்னாண்டவனே! என் தந்தையே! என் தாயே! என் குருவே! என் தெய்வமே! என் குலதெய்வமே! என்னுயிர்த் துணையே! என்னறிவுக் கறிவாகிய இறைவனே! தேவரீர் திருவடிப்புகழை வேதங்களு மறியாது விழித்துக் கொண்டு தேடித்தேடி இளைக்கின்றன வென்றால்,[369] கிருமி கீடங்களினுங் கீழ்ப்பட்ட அசேதனனாகிய அடியேன் எப்படி யறிந்து துதிப்பேன்! தேவரீர் திருவடிக் காட்சி யளிக்கும்படி செய்வித்த இந்தப் பசுவுக்குங் கன்றுக்கும் என்னை யடிமையாகக் கொடுப்பேன் அல்லது வேறென்ன கைம்மாறு செய்வேன்! தேவரீர் திருமேனிக்காட்சி கிடைப்பதற்குக் காரணமாகிய வீதிவிடங்கனென்னும் புத்திரன் இன்றுதான் எனக்குப் புத்திரனாயினான்! தேவரீரது திருவருட்கோலத்தைக் காணப் பெற்ற அடியேனுக்கு இனி என்னகுறை இருக்கின்றது! அன்பர்களுக்கு இன்பமளிக்கின்ற ஆண்டவனே! தேவரீர் கிருபாநோக்கஞ் செய்யப்பெற்று உடல்பூரித்

---

366. மாற்சரிய—1886. 367. ஆட்டம்—1886.
368. தரிசனமருளி—1886.
369. இளைக்கின்ற தென்றால்—1886.

தேன்! உள்ளங்குளிர்ந்தேன்! உயிர்தழைத்தேன்! பசுங் கன்றும் மந்திரியும் மைந்தனும் உயிர்பெற்று எழுந் திருக்கவும் வரம்பெற்றேன்! வாழ்வடைந்தேன்! துக்க மெல்லாம் நீங்கினேன்! சுகப்பட்டேன்! மனத்துக்கு அடங்காத[370] மகிழ்ச்சிகொண்டு நின்றேன்! இனி அடி யேனுக்குத் தேவரீர் திருவடியினிடத்துத் தவறாத தியா னமும் சலியாத அன்பும் தந்தருளி யென்னை அடிமை கொள்ளவேண்டும். குற்றஞ் செய்தாலும் குணமாகக் கொள்கின்ற குணக்குன்றே! பன்றிக்குட்டிக்கு முலை கொடுத்த பரம்பொருளே! புலிமுலையைப் புல்வாய்க்குக் கொடுத்த புண்ணியமூர்த்தியே! கல்லடிக்கும் வில்லடிக் குங் கருணைபுரிந்த கருத்தனே! திருவாரூர்ப்பூங்கோயிலி லெழுந்தருளிய தியாகராஜப் பிரபுவே போற்றி! போற் றி!" என்று தோத்திரஞ் செய்து தொழுதுநின்றார்.

அரசன் செய்த தோத்திரங்களைத் திருச்செவி ஏற்றுக்கொண்டு தியாகராஜப் பெருமான் "நம்மிடத் தில் அன்புள்ள அரசனே! நீ இன்னும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று, நமது அருளே துணையாகக்கொண்டு, இவ்வுலகத்தை யெல் லாம் ஒரு குடைக்கீழ்[371] ஆண்டு, மெய்யறிவு விளங்கி, மாறாத மகிழ்ச்சியோடிருக்கக் கடவாய்! பின்பு எக் காலத்தும் நீளாத பேரானந்த போகத்தை நாம் தரு வோம்" என்று அருள்புரிந்து கணங்களுடன் அந் தர்த்தானமாக எழுந்தருளினார்.

370. மனத்துக்கு மடங்காத — 1886.
371. ஒரு குடையின் கீழ் — 1886.

அதுகண்டு மநுச்சக்கரவர்த்தியானவர் பின்பும் கீழ் விழுந்து நமஸ்கரித்துத் தொழுது ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு, அப்பசுவையுங் கன்றையும் உபசாரத்துடன் நல்ல புல்லுள்ள விடங்களில் மேய்த்து மிகுந்த சுகத்திலிருக்கும்படி செய்வித்து, கலாவல்லனைக் கட்டியணைத்துக்கொண்டு "என் புத்திரன் பழிக்கு ஈடாகச் செய்தற்கரிய செய்கையைச் செய்து கொண்ட அன்புள்ள அமைச்சனே! உன்போலெனக் கினியவர்கள் உண்டோ!" என்று உபசரித்து, பின்பு வீதிவிடங்கனென்னும் மைந்தனை எடுத்து மடிமேல் வைத்து முத்தங்கொண்டு372 உச்சிமோந்து "யான் செய்த புண்ணியத்தால் கிடைத்த புத்திரனே! உன்னை யல்லவோ உயர்வையடைந்தேன்!" என்று உபசரித்து, பின்பு மைந்தனும் மந்திரியுந் தாமுமாகக் கமலாலயமென்னும் கோயிலுக்குச் சென்று, ஆசாரத்தோடும் அன்போடும் விதிப்படி சிவபெருமானைத் தரிசனஞ் செய்து, அபிஷேகாதி சிறப்புகளும் அனேகம் திருப்பணிகளுஞ் செய்வித்துத் தொழுது வணங்கித்துதித்து வலங்கொண்டு விடைகொண்டு புறப்பட்டு, அந்நகரத்திலுள்ள ஜனங்களெல்லாம் மனங்களித்து வாழ்த்திப் புகழும்படி மங்கல வாத்தியங்கள் முழங்க வீதியை வலமாக வந்து, அஷ்ட மங்கலங்க ளேந்திய சுமங்கலிகளும் அந்தணர் அமைச்சர் முதலானவர்களும் வாழ்த்தி மங்கலச் செய்கைகளோடு எதிர் கொள்ள அரண்மனையிற் சென்று, வேதியர் துறவினர் விருந்

---

372. முத்தங் கொடுத்து—1886.

தினர் உறவினர் முதலானோர்களுக்கு அவரவர்க்குத் தக்க வரிசைகளைச் செய்து மகிழ்வித்து, கற்புநிலை தவறாத மனைவியார் மனங்குளிர்ந்து களிக்கும்படி மைந்தனைக் காண்பித்து, மந்திரி முதலானவர்கள் சூழச் சிவாநுக்கிரகத்தால் சிங்காசனாதிபதியாய் உலகத்தையெல்லாம் ஒரு குடை நிழலில் வைத்து அறநெறிப்படியே அரசாட்சி செய்திருந்தார்.

## வாழ்த்து

### நேரிசை வெண்பா

வாழி மநுச்சோழர் வாழி யவர்மைந்தன்
வாழியவர் மந்திரியாம் வல்லவனும்—வாழியவர்
செங்கோன் முறையவர்தஞ் சீர்கேட் பவர்வாழி
எங்கோன் பதம்வாழி யே.

திருச்சிற்றம்பலம்

**மநுமுறைகண்ட வாசகம் முற்றிற்று**[373]

---

373. மநுமுறைகண்ட புராணத்தை அநுபந்தத்தில் காண்க.

# உ. சன்மார்க்கவிளக்கத்தின் முதற்பிரிவாகிய ஜீவகாருண்ய ஒழுக்கம்[374]

## முதற்பிரிவு[375]

## ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

---

*திருச்சிற்றம்பலம்*

உலகத்தில் மனிதப்பிறப்பைப் பெற்றுக்கொண்டவர்கள் இந்தப்பிறப்பினால் அடையத்தக்க ஆன்மலாபத்தைக் காலமுள்ளபோதே அறிந்து அடையவேண்டும். அந்த ஆன்மலாபம் எதுவென்று அறியவேண்டில்: எல்லா அண்டங்களையும் எல்லாப்புவனங்களையும் எல்லாப்பொருள்களையும் எல்லாச் சீவர்களையும் எல்லா ஒழுக்கங்களையும் எல்லாப் பயன்களையும் தமது பூரண இயற்கை விளக்கமாகிய அருட்சத்தியால் தோன்றி விளங்க விளக்கஞ் செய்விக்கின்ற இயற்கை உண்மை வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கை இன்பத்

---

374. இந் நூலுக் குரிய சுவாமிகளின் கைஎழுத்து மூலம் இதுகாறும் கிடைக்கவில்லை. இதற்காகக் கிடைத்த அன்பர்களின் கைஎழுத்துப் பிரதிகள் நான்கைக் கொண்டு இது இங்கு அச்சிட்டிருக்கிறது. இது முதல் முதலாக 1879-ம் ஹு "அன்பன்-பு-பெ-கிருஷ்ணசாமி" என்பவரால் புதுச்சேரியில் அச்சிடப்பட்டது: இதன் விவரத்தை அநுபந்தத்தில் காண்க. அவ் அச்சுப்பிரதியில் நூல்தலைப்பு பின்வருமாறு காணப்படுகிறது: "உ. அருட்பெருஞ் சோதி துணை. சுத்த சன்மார்க்கத்தில் முதற் சாதனமாகிய ஜீவகாருண்ணிய வொழுக்கம்."

375. 423-வது அடிக்குறிப்பைப் பார்க்க.

தைப் பெற்று, எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரியவாழ்வை இந்த மனிதப்பிறப்பினால் அடையத்தக்க ஆன்ம லாபமென்று உண்மையாக அறிய வேண்டும்.

இயற்கை இன்பத்தைப் பெற்றுத் தடைபடாமல் வாழ்கின்ற அந்தப் பெரியவாழ்வை எதனால் அடையக் கூடுமென்று அறியவேண்டில்: கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளைக்கொண்டே அடையக் கூடும் என்றறியவேண்டும்.

கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளை எதனாற் பெறக்கூடுமென்று அறியவேண்டில்: சீவகாருணிய ஒழுக்கத்தினால் கடவுள் அருளைப் பெறக்கூடுமல்லது வேறெந்த வழியாலும் சிறிதும் பெறக்கூடாது என்று உறுதியாக அறிதல்வேண்டும்.

கடவுள் அருளைச் சீவகாருணிய வொழுக்கத்தினால் பெறக்கூடுமல்லது வேறெந்த வழியாலும் பெறக் கூடாதென்பது எப்படி யென்னில் :—அருளென்பது கடவுள்தயவு,[376] கடவுளியற்கை விளக்கம். சீவ

---

376. தயை — வேலூர் பத்மநாப முதலியார் பதிப்பு, 1885. இனி, கைஎழுத்துப் பிரதிகளில் உள்ள வேறுபாடுகளில் ஒருவாறு பாடபேதங்களாகக் கருதக்கூடியவற்றை மட்டும் "பி-ம்" என்றும், ஆரம்ப அச்சுப் பிரதிகளில், கைஎழுத்துப் பிரதிகளுக்கு மேற் கொண்டு, அங்ஙனம் உள்ளவற்றை அது அது அச்சிடப்பட்ட வருஷத்தாலும் குறிக்கப்படும். குற்றங்களாகவும் குறைகளாகவுங் கொண்ட பெருவாரியான மற்ற வேறுபாடுகளைக் குறிப்ப

காருண்ணிய மென்பது சீவர்கள் தயவு, சீவர்கள் ஆன்ம இயற்கை விளக்கம். இதனால் தயவைக்கொண்டு தயவைப்பெறுதலும் விளக்கத்தைக்கொண்டு விளக்கத்தைப் பெறுதலுங் கூடும். வேறொன்றினால் பெறக்கூடாமை அநுபவமாகலின், சீவகாருண்ணியத்தைக் கொண்டு அருளைப்பெறுதல் கூடும்; வேறொன்றினாலும் பெறக்கூடாமை நிச்சயம். இதற்கு வேறு பிரமாணம் வேண்டாமென் றறியவேண்டும்.

அருளைப்பெறுவதற்குச் சீவகாருண்ணியமே வழியாதலால், ஞானவழியென்பதும் சன்மார்க்கமென்பதும் சீவகாருண்ணிய வொழுக்கம் என்றும், அஞ்ஞானவழியென்பதும் துன்மார்க்கம் என்பதும் சீவகாருண்ணிய ஒழுக்க மில்லாமை யென்றும் அறியப்படும். சீவகாருண்ணியம் விளங்கும்போது அறிவும் அன்பும் உடனாக நின்று விளங்கும்; அதனால் உபகாரசத்தி விளங்கும்; அந்த உபகாரசத்தியால் எல்லா நன்மைகளுந் தோன்றும். சீவகாருண்ணியம் மறையும்போது அறிவும் அன்பும் உடனாகமறையும்; அதனால்உபகாரசத்தி மறையும்; உபகாரசத்தி மறையவே எல்லாத் தீமைகளுந் தோன்றும். ஆகலின், புண்ணியமென்பது சீவகாருண்ணியமொன்றே யென்றும், பாவமென்பது சீவகாருண்ணியமில்லாமை யொன்றே யென்றும் அறியப்படும்.

சீவகாருண்ணிய வொழுக்கத்தினால் வரும் விளக்கமே கடவுள் விளக்க மென்றும், சீவகாருண்ணிய

---

திலுள்ள பெரும் பிரயாசத்தையும் அற்ப பிரயோசனத்தையுங் கருதி, அவற்றை இங்கு விவகரிக்கவில்லை.

வொழுக்கத்தினால் வரும் இன்பமே கடவுள் இன்ப மென்றும்; இவ்விளக்கத்தையும்[377] இன்பத்தையும் பல கால்கண்டு அநுபவித்துப் பூர்த்தி யடைந்த சாத்தியர்களை சீவன் முத்த ரென்றும், அவர்களே கடவுளை அறிவால் அறிந்து கடவுள்மயம் ஆவார்கள் என்றுஞ் சத்தியமாக அறியவேண்டும்.

ஆனால், சீவகாருணிய வொழுக்க மென்ப தென்னெனில்: சீவர்களுக்குச் சீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக்கொண்டு தெய்வ வழிபாடுசெய்து வாழ்தலென் றறியவேண்டும். சீவர்கள் விஷயமாக ஆன்மவுருக்கம் எப்போது உண்டாகு மென்னில்: சீவர்கள் பசி தாகம் பிணி இச்சை எளிமை பயம் கொலை இவைகளால் துக்கத்தை அநுபவிக்கக் கண்டபோதாயினும் கேட்டபோதாயினும் இவ்வா றுண்டாகுமென்று அறிந்தபோதாயினும் ஆன்ம உருக்க முண்டாகுமென்று அறியவேண்டும். சீவகாருணியமுண்டாவதற்கு உரிமை யெதுவென்னில்:- சீவர்களெல்லாம் ஒருதன்மையாகிய இயற்கையுண்மை ஏகதேசங்களாய்ச் சர்வ சக்தியுடைய கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டபடியால், ஒருரிமையுள்ள சகோதரர்களே யாவர்.[378] சகோதரர்களு ளொருவர் ஒரு ஆபத்தால் துக்கப்படுகின்றபோதும், துக்கப்படுவாரென் றறிந்தபோதும் அவரைத் தமது சகோதரரென்று கண்ட மற்றொரு சகோதரருக்கு உருக்கமுண்டாவது சகோதர உரிமையாகலின், ஒரு சீவன் துக்கத்தை

377. அவ்விளக்கத்தையும் — பி-ம். 378. ஆகும் — பி-ம்.

அநுபவிக்கக் கண்டபோதும், துக்கப்படுமென் றறிந்த போதும் மற்றொரு சீவனுக்கு உருக்கமுண்டாவது பழைய ஆன்மவுரிமையென் றறியவேண்டும். சீவர்கள் துக்கப்படுகின்றதைக் கண்டபோதும், சிலர் சீவகாருணியமில்லாமல் கடினசித்தர்களா யிருக்கின்றார்கள்; இவர்களுக்குச் சகோதரவுரிமை யில்லாமற் போவது ஏனென்னில்:— துக்கப்படுகின்றவரைத் தமது சகோதரரென்றும் துக்கப்படுகின்றாரென்றும் துக்கப்படுவாரென்றும் அறியத்தக்க ஆன்மஅறிவுஎன்கிற கண்ணானது அஞ்ஞானகாசத்தால் மிகவும் ஒளிமழுங்கினபடியாலும், அவைகளுக்கு[379] உபகாரமாகக் கொண்ட மனம் முதலான உபநயனங்களாகிய கண்ணாடிகளும் பிரகாச பிரதிபலித மில்லாமல் தடிப்புள்ளவைக ளாக இருந்தபடியாலும் கண்டறியக் கூடாமையாயிற்று. அதனால், சகோதர உரிமை யிருந்தும் சீவ காருணியம் உண்டாகாம லிருந்ததென் றறிய வேண்டும். இதனால் சீவகாருணியமுள்ளவர் ஆன்ம திருஷ்டி விளக்க முள்ளவரென் றறியப்படும்.

சீவர்களுக்குப் பசி தாகம் பயம் முதலியவற்றால் வருந் துன்பங்களெல்லாம் மனம் கண் முதலிய கரணேந்திரிய அநுபவங்களல்லது, ஆன்ம அநுபவங்களல்ல; அதனாற் சீவகாருணியங் கொள்வதில் விசேஷ பிரயோசனம் இல்லையே யென்னில்:—இந்தத் தூல தேகத்தில் சீவனாக இருக்கிற ஆன்மாவும் அறிவுக்

---

379. 'அவைகளுக்கு' என்பது இருகண்களாகக் கொண்ட ஆன்ம அறிவைக் குறிக்கிறது போலும்.

கறிவாயிருக்கிற கடவுள் இயற்கைவிளக்கமுந் தவிர, கரணம் இந்திரியம் முதலிய மற்றவைகளெல்லாம் கருவிகளாகிய தத்துவ சடங்களே யல்லது சித்துக் களல்ல. ஆகலில் சுகதுக்கங்களைச் சடங்கள் அநு பவிக்கவறியா. செம்மண் சந்தோஷித்தது துக்கித் தது என்று சொல்லப்படாது. அது போல், மனஞ் சந்தோஷித்தது துக்கித்தது என்று சொல்லப்படாது. செம்மண்ணினால் தேகவாழ்க்கைக்கு வீடுகட்டிக் கொள்வதுபோல, மன முதலான கரணேந்திரியங் களால் சீவவாழ்க்கைக்குக் கடவுளால் கட்டிக் கொடுக் கப்பட்ட தேகம் ஒரு சிறிய வீடாகும்.[380] இன்பதுன் பங்களை வீட்டிலிருக்கின்றவன் அநுபவிப்பானல்லது, வீடு அநுபவிக்கமாட்டாது. அன்றியும், காசத்தினால் ஒளி மழுங்கப்பட்டு உபநயனங்களாகிய கண்ணாடி களால் பார்க்கின்ற கண்கள் துன்ப விஷயத்தைக் கண்டபோது, அக்கண்கள் நீர்சொரியுமே யல்லாது, கண்ணாடி நீர்சொரிய மாட்டாது. ஆகலில், ஆன்ம திருஷ்டிக்கு உபநயனங்களாக விருக்கின்ற மனம் முத லான கருவிகள் சுகதுக்கங்களை அநுபவிக்க மாட்டா: ஆன்மாவே அநுபவிக்கு மென் றறியவேண்டும். ஒரு சீவனுக்குச் சுகம் நேரிட்டபோது மனம் மகிழ்கின் றது; துக்கம் நேரிட்டபோது மனம் தளர்கின்றது: ஆகலில், சுகதுக்கங்களை அம்மனம் அநுபவிப்பதாக

---

380. கரணேந்திரியங்கள் சீவவாழ்க்கைக்குக் கடவு ளால் கட்டிக் கொடுக்கப்பட்ட ஒரு சிறிய வீடாகும்—பிருங் கிமாநகரம் இராமசாமி முதலியார் பதிப்பு, 1896.

வறியப்படாதோ வென்னில் :— அறியப்படாது. பளிங்கினாற் செய்த வீட்டினுள் இருக்கின்ற வீட்டுத் தலைவனுடைய தேக விளக்கமும் தேகச் சோர்வும் அந்தப் பளிக்கு வீட்டில் பிரதிபலித்துப் புறத்தில் தோன்றுவதுபோலும், கண்களின் மலர்ச்சியும் சோர்வும் அக்கண்களிலிட்ட உபநயனங்களில் பிரதி பலித்துப் புறத்தில் தோன்றுவது போலும், சுகதுக்கங்களால் ஆன்மாவுக்கு உண்டாகிற மகிழ்ச்சியுந் தளர்வும் மனம் முதலான கரணேந்திரியங்களில் பிரதி பலித்துப் புறத்திற் றோன்றுகின்றன. ஆகலில், சுகதுக்கங்கள் ஆன்மாவுக்கே அநுபவமென்றும், சுகதுக்கங்களை அறிந் தநுபவிப்பதற்குக் கரணேந்திரியங்கள் ஆன்மாவுக்கு உபகாரக்கருவிக ளாகுமென்றும் அறிய வேண்டியது.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சீவர்களில் அனேகர் பசி தாகம் பயம் முதலியவற்றால் மிகவுந் துன்பப்படுகின்றது என்னெனில்: முன் தேகத்தில் சீவகாருணிய ஒழுக்கத்தை விரும்பாமல் கடின சித்தர்களாகித் துன்மார்க்கத்தில் நடந்த சீவர்களாதலால், கடவுள் விதித்த அருளாக்கினைப்படி பசி தாகம் பயம் முதலியவற்றால் மிகவுந் துன்பப்படுகிறார்கள்[381] என்றறியவேண்டும்.

முன் தேகம் உண்டென்பது எப்படி யென்னில்: ஒரு வீட்டில் குடிக்கூலி கொடுத்துக் குடித்தனஞ் செய்யவந்த சமுசாரி அதற்குமுன் வேறொரு வீட்

381. துக்கப்படுகிறார்கள் — பி-ம்.

டில் குடிக்கூலி கொடுத்துக் குடித்தனஞ் செய் திருந்தா னல்லது வீடில்லாமல் குடித்தனஞ் செய்ய மாட்டா னென்றும், இப்போது வந்த வீட்டிலுங் கலகம் நேரிட்டால் பின்னும் வேறொரு வீட்டில் குடிபோவான் என்றும் அறிவதுபோல்; இந்தத் தேகத்தில் ஆகாரக் கூலி கொடுத்துக் குடியிருக்க வந்த சீவன் இதற்கு முன்னும் வேறொரு தேகத்தில் அந்தக் கூலியைக் கொடுத்துச் சீவித்திருந்தா னல்லது தேகமில்லாமல் சீவித்திருக்க மாட்டா னென்றும், இந்தத் தேகத்திலுங் கலகம் நேரிட்டால் பின்னும் வேறொரு தேகத்தில் குடிபோவா னென்றும் துணிய வேண்டும். ஆதலால், முன்னும் பின்னும் சீவர்களுக்குத் தேகங்கள் நேரிடும் என் றறிய வேண்டும்.

சீவர்கள் முன் தேகத்தில் செய்த பாப கர்மங் கள் இந்தத் தேகத்திலும் வருமென்பது எப்படியென் னில்:—ஒரு சமுசாரி முன் குடித்தனஞ் செய்திருந்த வீட்டில் தன் தலைவன் கட்டளைப்படி நடவாமல் துன்மார்க்கர்களை வருவித்து அவர்களோடு கூடிப் பழகியிருந்தா னானால், அந்தச் சமுசாரி யந்த வீட் டை விட்டு வேறொரு வீட்டில் குடிவந்த காலத் திலும் அந்தத் துன்மார்க்கர்கள் இந்த வீட்டிலும் வந்து அவனுடன் பழக்கஞ் செய்வார்கள். அது போல், ஒரு சீவன் முன் குடியிருந்த தேகத்தில் கடவுள் கட்டளைப்படி நடவாமல் துன்மார்க்கத்தாற் பாப கர்மங்களை விரும்பிச் செய்திருந்தா னானால்,

அந்தச் சீவன் வேறொரு தேகத்தில் வந்தபோதும் அந்தப் பாபகர்மங்கள் இப்போது வந்த தேகத்தி லும் வந்து அந்தச் சீவனைச் சேருமென் றறிய வேண்டும்.

முன் பிறப்பில் சீவகாருணிய வொழுக்கத்தை விட்டுத் துன்மார்க்கத்தில் நடந்த சீவர்களை இந்தப் பிறப்பில் பசி தாகம் பயம் முதலியவற்றால் துக்கப் படச் செய்வது கடவுள் அருளாக்கினை நியதியென் றால், அந்தச் சீவர்கள் விஷயத்தில் காருணியம் வைத்து ஆகாரம் முதலியவை கொடுத்து அவர்கள் துக்கத்தை மாற்றுவது கடவுள் அருளாக்கினைக்கு விரோத மாகாதோ என்னில்:—ஆகாது. அரசன் தன் கட்டளைக்கு முழுதும் விரோதித்து, கால்க ளுக்கு விலங்கிடப்பட்டுச் சிறைச் சாலையில் இருக் கின்ற பெரிய குற்றவாளிகளுக்கும் தன் சேவகர்களைக் கொண்டு ஆகாரங் கொடுப்பிக்கின்றான். அதுபோல், கடவுள் தம் கட்டளைக்கு முழுதும் விரோதித்துப் பலவகையால் பந்தஞ்செய்யப்பட்டு நரகத்திலிருக் கின்ற பாபிகளுக்கும் தம் பரிவார தேவர்களைக் கொண்டு ஆகாரங் கொடுப்பிக்கின்றார். அரசன் தன் கட்டளைப்படி நடவாமல் வேறுபட்ட சாதாரண குற்ற முடையவர்களைத் தன்னாலவர்கள் பெறத்தக்க லாபத்தைப் பெறவொட்டாமல் உத்தியோகத்தினின் றும் நீக்கி, அவர்களுக்கு நல்லறிவு வருவிக்கின்ற[382] நிமித்தம் அவ்விடத்தை விட்டு வேறிடங்களில்

382. வருகின்ற—பி-ம்.

வெளிப்படுத்துகின்றான். அவர்கள் உத்தியோக மிழந்தபடியால், சுகபோஜன முதலிய போகங்களை யிழந்து ஊர்ப்புறங்களிற் போய் ஆகாரம் முதலியவை குறித்து அலைந்து வருந்துகின்றபோது, தயவுள்ளவர்கள் கண்டு ஆகார முதலியவை கொடுக்கின்றார்கள். அதை அரசன் கேட்டகாலத்திலும் கண்டகாலத்திலும் கொடுத்தவர்களை இரக்கமுள்ள நல்ல சமுசாரிகளென்று சந்தோஷித்து உபசரிக்கின்றானே யல்லது கோபிக்கின்றானில்லை. அதுபோல், கடவுள் தம் கட்டளைப்படி நடவாத சாதாரண குற்றமுடைய சீவர்களைத் தமது சத்தியால் அவர்கள் பெறத்தக்க சுகங்களைப் பெறவொட்டாமல் தாம் கொடுத்த சௌக்கிய புவனபோகங்களை விடுவித்து, அந்தச் சீவர்களுக்கு நல்லறிவு வருவிக்கும் நிமித்தம் அந்தத் தேகத்தில் நின்றும் நீக்கி வேறொரு தேகத்தில் விடுகின்றார். அந்தச் சீவர்கள் சௌக்கிய புவனபோகங்களை யிழந்தபடியால், சௌக்கிய போஜன முதலியவற்றை யிழந்து வேறு வேறிடங்களில் ஆகார முதலியவை யில்லாமல் வருந்தும்போது, தயவுள்ளவர்கள் அந்த வருத்தத்தைக் கண்டு ஆகார முதலியவை கொடுத்தால், அப்படிக் கொடுத்தவர்களை நல்ல இரக்க முள்ளவர்கள் மேன்மேலுஞ் சுகத்தை யடையக் கடவார்களென்று சந்தோஷித்து உபசரிப்பாரல்லது கோபிக்கமாட்டார். ஆதலால், கடவுள் அருளாக்கினைக்குச் சீவர்களிடத்துச் சீவர்கள் காருணியம் வைப்பதே சம்மதமென்று உண்மையாக அறியவேண்டும்.

இந்தச் சீவகாருணியத்தால் இகலோக வொழுக்கம் வழங்குகின்றது. சீவகாருணிய மில்லையாகில், இகலோக வொழுக்க மெவ்வளவும் வழங்கமாட்டா தென்று அறியவேண்டும். எப்படி யென்னில்:—சீவகாருணிய மில்லாதபோது அறிவும் அன்புந் தோன்றா; அவை தோன்றாதபோது கண்ணோட்டமும் ஒருமையும் உபகாரமும் விளங்கா. அவை விளங்காதபோது வலிய சீவர்களால் எளிய சீவர்க ளொழுக்கம் பொறாமை முதலானவைகளால் தடைப்பட் டழிந்துபோம். பின்பு வலிய சீவர்கள் ஒழுக்கங்களும் தாமச ஒழுக்கங்களாகி ஒருவ ரொழுக்கத்தால் மற்றொருவரொழுக்கம் மதத்தினால் சோர்ந்தவிடத்தில்[383] மாறுபட் டழிந்துபோம். சீவகாருணிய வொழுக்கஞ் சிறிது மில்லாத புலி சிங்கம் முதலிய மிருகங்கள் வழங்குகின்ற காட்டில் இகலோக ஒழுக்கம் வழங்கவேயில்லை. அதுபோல், சீவகாருணிய மில்லாத மனிதர்கள் வழங்குமிடத்திலும் இகலோக ஒழுக்கம் வழங்கவேமாட்டா தென் றறியவேண்டும். பரலோக வொழுக்கமுஞ் சீவகாருணியத்தால் வழங்குகின்றது. அதுவில்லையாயின் பரலோக வொழுக்கமும் வழங்கமாட்டாது.[384] எப்படியென்னில்:—சீவகாருணிய மில்லாதபோது அருள்விளக்கந் தோன்றாது. அது தோன்றாதபோது கடவுள் நிலை கைகூடாது. அது

383. சோர்விடத்தில்—பி-ம்; சோர்வடைந்து—1896.

384. வழங்கவேமாட்டாது. அது எப்படி யென்னில்—1896.

கூடாதபோது முத்தியின்பம் ஒருவரும் அடையமாட்டார்கள். அடையாத பட்சத்தில் பரலோக வொழுக்கம் வழங்கவே மாட்டாதென் றறியவேண்டும்.

சீவகாருணிய ஒழுக்கம் மிகவும் வழங்காமையால், துன்மார்க்கப் பிறவியே பெருகி யெங்கும் புல்லொழுக்கங்களே வழங்குகின்றன. எப்படியென்னில்: சீவகாருணிய மில்லாத கடினசித்தர்க ளெல்லாம் அவரவர் கடின செய்கைக்குத் தக்கபடி, சிலர் நரக வாசிகளாகவும், சிலர் சமுத்திர வாசிகளாகவும், சிலர் ஆரணிய வாசிகளாகவும், சிலர் புலி கரடி சிங்கம் யாளி யானை கடமை கடா பன்றி நாய் பூனை முதலிய துஷ்ட மிருகங்களாகவும், சிலர் பாம்பு தேள் முதலிய விஷ செந்துக்களாகவும், சிலர் முதலை சுறா முதலிய கடின செந்துக்களாகவும், சிலர் காக்கை கழுகு முதலிய பக்ஷி சண்டாளங்களாகவும், சிலர் எட்டி கள்ளி முதலிய அசுத்த தாவரங்களாகவும் பிறந்திருக்கின்றார்கள். ஆகலால், புல்லொழுக்கங்களே மிகவும் வழங்குகின்றன என் றறியவேண்டும்.

சீவகாருணியம் — கடவுளருளைப் பெறுவதற்கு முக்கிய சாதன மென்பது மல்லாமல் — அந்த அருளின்[385] ஏகதேச விளக்க மென்றும் அறிய வேண்டும். சீவகாருணியம் ஆன்மாக்களின் இயற்கை விளக்கம் ஆகலால், அந்த இயற்கை விளக்க மில்லாத சீவர்களுக்குக் கடவுள் விளக்கம் அகத்திலும் புறத்திலும் வெளிப்படவே மாட்டாது.

---

385. அதுவே அவ்வருளின் — 1896.

சீவகாருணியத்திற்கு முக்கியமான லக்ஷியம் எது வென்னில்:— ஆன்மாக்க ளெல்லாம் இயற்கை உண்மை ஏகதேசங்களாயும் இயற்கை விளக்கமாகிய அருள் அறிவுக்கறிவாய் விளங்குதற்கு ஒற்றுமை உரிமை இடங்களாயும் இருக்கின்றன வென்றும், அந்த ஆன்மாக்கள் சீவர்களாகி பதிகரிப்பதற்குப் பூத காரிய தேகங்களே உரிமையாக விருக்கின்றன வென்றும், அந்தத் தேகங்களில் ஆன்மாக்கள் சீவர்களாகி பதிகரியாவிடில் ஆன்மவிளக்கம் மறைபடு மென்றும், அதனால் அருள்விளக்கம் வெளிப்படா தென்றும், அப்போது மூட முண்டாகு மென்றும், அதுவே ஆன்மாக்களுக்குப் பந்தமாகு மென்றும், அதுபற்றி அவசியம் பூத காரிய தேகம் வேண்டு மென்றும், பூத காரிய தேகங்களுக்கு மாயை முதற் காரண மாதலால் அந்த மாயையின் விகற்ப ஜாலங்களாகிய பசி தாகம் பிணி இச்சை எளிமை பயம் கொலை என்பவைகளால் அந்தத் தேகங்களுக்கு அடிக்கடி அபாயங்கள் நேரிடு மென்றும், அப்படி அபாயங்கள் நேரிடாமல் கரணேந்திரிய சகாயங்களைப்[386] பெற்ற தம் மறிவைக்கொண்டு சர்வ ஜாக்கிரதையோடு முயற்சி செய்து தடுத்துக் கொள்வதற்குத் தக்க அல்ப[387] சுதந்தரம் சீவர்களுக்கு அருளாற் கொடுக்கப்பட்ட தென்றும், அந்தச் சுதந்தரத்தைக் கொண்டு சீவர்களெல் லாம் தேகங்களிலிருந்து அபாயங்களை நீக்கி ஆன்ம

386. சகாய்களை—பி-ம்; இங்ஙனமே பின்வரும் இடங்களிலும் கொள்க. 387. வல்லப—1885.

லாபத்தைப் பெறுதற்கு முயற்சி செய்யக் கடவ ரென்றும், ஊழ்வகையாலும் அஜாக்கிரதையாலும் பசி தாகம் பிணி இச்சை எளிமை பயம் கொலை என் பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்தி செய்து கொள்ளமாட்டாமல் வருந்துகின்ற சீவர்கள் விஷயத் தில் அவைகளை நிவர்த்தி செய்விக்கத் தக்க சுதந்தர முள்ள சீவர்கள் காருணியத்தால் நிவர்த்தி செய்விக்க வேண்டுமென்றும், அப்படி நிவர்த்தி செய்விப்பதில் பசியினால் வருந் துன்பமுங் கொலையினால் வருந் துன் பமுந் தவிர மற்றவைகளால் வருந் துன்பங்களை[388] மாற் றுவது அபர சீவகாருணிய மாதலால் இவ்வுலக வின் பத்தை மாத்திரம் சிறிதுண்டுபண்ணு மென்றும், பசி யினால் வருந் துன்பத்தையும் கொலையினால் வருந் துன் பத்தையும் நிவர்த்தி செய்விப்பது பர சீவகாருணிய மாதலால் இவ் வுலக இன்பங்களையும் அளவிறந்த சித்தியின்பங்களையும் எக்காலத்து மழியாத முத்தியின் பத்தையும் அருளாலடையப்படு மென்றும், ஊழ்வகை யாலும் அஜாக்கிரதையாலும் அன்னிய சீவர்களுக்கு நேரிடுகிற அபாயங்களை நிவர்த்தி செய்விப்பதற்குத் தக்க சுதந்தரமும் அறிவு மிருந்தும் அவ்வாறு செய் யாமல் வஞ்சித்தவர்களுக்கு இவ் உலகவின்பத்தோடு மோக்ஷ வின்பத்தை யநுபவிக்கின்ற சுதந்தரம் அருளா லடையப்படுவ தில்லை யென்றும், தற்காலத் தில் அநுபவிக்கின்ற புவன போக சுதந்தரங்களையு மிழந்து விடுவ ரென்றும் கடவுள் வேதத்தில் விதித்

---

388. துக்கங்களை—பி-ம்

திருக்கின்றபடியால்; ஊழ்வகையாலும் அஜாக்கிரதை யாலும் பசி கொலை யென்பவைகளால் வரும் அபாயங் களை நிவர்த்தி செய்துகொள்ளத் தக்க அறிவும் சுதந் தரமு மில்லாத சீவர்கள் விஷயத்தில் அவைகளை நிவர்த்தி செய்விக்கத் தக்க அறிவும்சுதந்தரமுமுள்ள சீவர்கள் வஞ்சியாமல் தயவினால் நிவர்த்தி செய்விப் பதே சீவகாருணியத்திற்கு முக்கியமான லட்சிய மென் றும், அதில் சத்தியமாக நம்பிக்கை வைத்துப் பசித்த சீவர்களுக்கு ஆகாரத்தால் பசி நீக்கியும் கொலைப்படும் சீவர்களுக்குச் செய்வகையால் கொலை நீக்கியும் திருப்தி இன்பத்தை யுண்டு பண்ணுவதே மேலான பிரயோ சன மென்றும் அறியவேண்டும்.

பசி கொலை பிணி தாகம் எளிமை பயம் இச்சை யென்பவைகளால் வரும் அபாயங்களை நிவர்த்தி செய் விப்பது விதியாக விருக்கவும், இவ்விடத்துப் பசியினா லும் கொலையினாலும் வரும் அபாயங்களை மாத்திரம் நிவர்த்தி செய்விப்பது விசேஷ மென்று குறித்தது என்னென் றறியவேண்டில்:—சீவகாருணிய ஒழுக்கத் தில் அபர சீவகாருணிய மென்றும் பர சீவகாருணிய மென்று மிருவகையாம் அவற்றில் பசிநீக்கலும் கொலைநீக்கலும் பர சீவகாருணிய மாதலால் விசேஷ மாகக் குறிக்கப் பட்டதென் றறியவேண்டும். அன்றி யும் பசியினால் வருந்துகின்ற சீவர்களுக்குப் பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுடையவர்கள் தாகம் நீங்குதற்குத் தண்ணீர் கொடாம லிரார்கள். தண் ணீர் கொடுப்பது பிரயாசமு மல்ல. தண்ணீர் எளி

குளம் கால்வாய் முதலான இடத்து மிருக்கின்றது. தாகத்தால், மாற்றிக்கொள்ளத் தக்க ஏகதேச அபாயம் நேரிடுமே யல்லது, அதனால் தேகத்திற்கு ஆனி நேரிடாது: பசியினால், மாற்றிக்கொள்ளக் கூடாத கெடுதி தேகத்திற்கு நேரிடும். பசியினால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்விக்கத் தக்க தயவுடையவருக்குப் பிணியினால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதற்குத் தயவுண்டாகாம லிராது. பசி மிகுதியினாலேயே பிணிகள் விருத்தியாகின்றன. ஆகாரப் பக்குவங்களாலேயே அப் பிணிகள் நீங்குகின்றன. பிணிக்கு வேறு மருந்து கொடுப்பினும், பத்திய ஆகாரமே தேகம் நிற்பதற்கு அவசியமான ஆதாரமா யிருக்கின்றது. பிணியோடு தேகத்தை நெடுநாள் வைத்திருக்கக் கூடும்: ஒரு நாளாகிலும் ஆகார மில்லாமல் தேகத்தை வைத்திருக்கக் கூடாது. பசித்தவர்களுக்கு ஆகாரத்தால் பசி நீக்குவிக்கின்ற தயவுடையவர்களுக்கு இச்சையால் வருந் துன்பங்களை நீக்குவிப்பதற்குத் தயவு வராமலிராது. சீவர்களுக்கு உள்ளபடி பசிநேரிடுமாகில் ஆகாரத்தி லல்லது மற்றொன்றிலும் இச்சையே யிராது. ஆகாரங் கிடைக்கில் உண்டு பசி தீர்ந்தவர் தம் இச்சையைச் சிறிய முயற்சிகளால் முடித்துக் கொள்ளவுங்கூடும்; அல்லது சமாதானஞ் செய்து கொள்ளவுங்கூடும். இச்சையோடு பலநாள் தேகத்தை வைத்திருக்கலாம்: பசியோடு ஒரு நாளும் வைத்திருக்கமுடியாது. பசித்த சீவர்களுக்கு ஆகாரத்தால் பசியை நிவர்த்திசெய்விக்கின்ற தயவுள்ளவர்களுக்குச்

சுதந்தர மற்ற சீவர்களது எளிமையை நீக்கத் தயவு வராம லிராது. பசியினால் வருந்துகின்ற எளிமைக்கு மேற்பட்ட எளிமையே இல்லை. எளிமையைச் சிலநாள் சென்று மாற்றிக் கொள்ளக் கூடும்; பசியை அவ்வாறு மாற்றிக்கொள்ளக் கூடாது. எளிமையோடு தேகத்தை வைத்திருக்கக் கூடும்: பசியோடு வைத்திருக்கமுடியாது. பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுடைய வருக்குப் பயத்தை நிவர்த்தி செய்விப்பதில் தயவு வராமலிராது.[389] பசியினால் வரும் பயத்திற்கும் கொலையினால் வரும் பயத்திற்கும் மேற்பட்ட பயமே யில்லை. பயத்தை உபாயத்தால் நீக்கிக்கொள்ளக்கூடும்; பசியை உபாயத்தால் நீக்கிக்கொள்ளக் கூடாது. பயத்தோடு தேகத்தை வைத்திருக்கலாம்:—பசியோடு வைத்திருக்கப்படாது. பசியினால் வரும்அவத்தைகளுந் துன்பங்களும் கொலையினால் வரும் அவத்தைகளுந் துன்பங்களும் தம்முள் ஒத்திருக்கின்றன ஆகலால், பசியினால் வருந் துன்பத்தையும் கொலையினால் வருந் துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பதே சீவகாருண்யத்திற்கு முக்கிய லட்சியமென் றறியவேண்டும்.

பசியினால் வருந் துன்பத்தை நீக்குதலும் கொலையினால் வருந் துன்பத்தை நீக்குதலும் சீவகாருணியத்திற்கு முக்கிய லக்ஷியமாக விருக்கவும், இவ்விடத்தில் பசிநீக்குதலை மாத்திரம் அடிக்கடி வலியுறுத்துவது என்னெனில்:—ஒரு சீவன் பசியினால் கொல்லைப்படு மென்பதை யறிந்து காருணியத்தால் பசியை நீக்கி

389. வாராமலிராது—1879.

உயிர்பிழைப்பிக்கும்படி[390] செய்பவர் வேறுவகையால் உயிர்க்கொலை நேரிட்டால் அதற்கிரங்கி அந்தக் கொலையால் வருந் துன்பத்தை நிவர்த்தி செய்யாமலிரார்கள். கொலையால் வருந் துன்பத்தை நிவர்த்திசெய்வியாதவர்கள்[391] பசியால் வருந் துன்பத்தையும் நிவர்த்தி செய்விக்கத்தக்க தயவுடையவர்களாகார்கள். பசியால் வருங் கொலையை ஆகாரத்தாலன்றி வேறு வகையால் நிவர்த்தி செய்விக்கப்படாது; பகை முதலியவற்றால் வருங் கொலையை அனேக உபாயத்தால் நிவர்த்திசெய்விக்கக் கூடுமாதலால், கொலையால் வருந் துன்பத்தைப் பசியால் வருந் துன்பத்தி லமைத்து அடிக்கடி வலியுறுத்துகின்ற தென் றறியவேண்டும்.

அன்றியும், தாகத்தால் வருந்துகின்றவரும் பிணியால் வருந்துகின்றவரும் இச்சையால் வருந்துகின்றவரும் எளிமையால் வருந்துகின்றவரும் பயத்தால் வருந்துகின்றவரும் பசிவருத்த முண்டாகும்போது அவ்வவ் வருத்தங்களை யெல்லாம் மறந்து பசிவருத்தம் மேற்பட்டு, ஆகாரங்கொடுக்க[392] முயற்சி செய்கின்றார்கள். அன்றி, அரசன் ஆக்கினையால் கொலைக்குற்றம் பற்றிக் கொலைசெய்ய விதிக்கப்பட்ட குற்றவாளியும் பசி வந்தபோது தன் பயத்தையும் துன்பத்தையும் மறந்து அந்தப் பசியை மாற்றிக்கொள்ளுகிறான்.[393] வயித்தி

390. பிழைக்கும்படி — பி-ம்.

391. செய்யாதவர்கள் — 1885.

392. ஆகாரந்தேட — 1885.

393. மாற்றிக்கொள்ள முயலுகிறான் — 1885.

யால் தாம் இறந்துவிடுவது நிச்சயமென்று தெரிந்து கொண்ட வியாதியாளரும் மூப்பாளரும் பசிவந்த போது தமது துன்பத்தை மறந்து பசிநீக்க முயலுகின்றார்கள். பசிக்குத் தயவினால் ஆகாரங் கொடுக்கத் துணிந்தவன் வேறுவகையால் சீவர்கள் இம்சைப்பட்டழிவதற்குச் சம்மதிக்கவேமாட்டான்; ஆகலினும் பசியால் வருந் துன்பத்தை நிவர்த்திசெய்விக்கிற தருமத்தை அடிக்கடி வலியுறுத்துவதென் றறியவேண்டும்.

பசியினால் வருங் கெடுதி எல்லாச் சீவர்களுக்குந் தேகநாசஞ்செய்வது உண்மையானால், எல்லாச் சீவர்கள் பசியையு மறிந்து நிவர்த்தி செய்விக்க வேண்டும்; அப்படி நிவர்த்தி செய்விக்கத் தொடங்கில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட தேவர் மனிதர் நரகர் மிருகம் பறவை ஊர்வன தாபரம் என்கிற இவ்வெழுவகைப் பட்ட அளவிறந்த பேதங்களுடைய சீவர்களது பசியை யறிந்து நீக்குவது அசாத்தியமாகுமே யென்னில்:—தேவர்கள் மனித சுதந்தரத்தினும் மேற்பட்ட சுதந்தரமுடையவர்களாய்த் தங்களுக்கு நேரிட்ட பசியைத் தங்கள் முயற்சியினாலேயே மாற்றிக்கொள்ளத்தக்க வல்லபமுடையவர்க ளாதலால், அவர்கள் பசியைக் குறித்து மற்றவர் யோசிப்பது அவசியமல்லவென்றும், தேவர்களுக்கும் பசிநேர்ந்தால் துன்பமுண்டாகுமே யென்று இரங்குவது மாத்திரம் அவசியமென்றும்; நரகர் தாம் பசியாற்றுவிக்கத் தக்க இடங்களில் இல்லாமல் வேறிடங்களி லிருக்கின்றபடியா

னும், நரகர் பசிக்குத் தண்டனைப் பரிவாரங்களால் பசியாற்றுவித்தலானும், நரகர் பசியைக் குறித்து யோசிப்பது அவசியமல்லவென்றும், நரகரும் பசிநேரிடில் வருந்துவார்களே யென்று இரங்குவது மாத்திரம் அவசியமென்றும்; ஊழ்வகையினால் சிறிதுஞ் சுதந்தரமில்லாத மரம் புல் முதலிய தாபரங்களில் மனிதர் தங்கள் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் முயற்சியால் விளைவிக்கின்ற தாபர வர்க்கங்களுக்குப் பசி குறித்து நீர் விடுவது அவசியமென்றும், மற்றைத் தாபரவர்க்கங்க ளெல்லாம் அருள் நியதியின்படி ஆகாரங் கொடுப்பிக்க உயிர்த்திருக்கின்றன வாதலால் அவைகளுக் கெல்லாம் பசியறிந்து ஆகாரங் கொடுப்பது நமது சுதந்தரமல்ல கடவுள் சுதந்தர மென்றும், அவை குறித்து யோசிப்பது அவசியமல்ல வென்றும், ஆகாரமில்லாவிடில் வருந்துமே யென்று இரங்குதல்[394] மாத்திரம் அவசிய மென்றும்; நிலத்திலும் நீரிலும் ஊருகின்ற உயிர்களுக்கும் பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் அவ்வவற்றின் ஊழ்வகைக்குத் தக்கபடி அருள் நியதி ஆகாரங் கொடுப்பிக்க உண்டு பசியாறுகின்றன வென்றும், அவ்வவைகளுக்குத் தக்க ஆகாரம் அறிந்து கொடுப்பது நமது சுதந்தர மல்ல கடவுள் சுதந்தர மென்றும், அவைகளில் மனிதர் வாழ்க்கைக்குச் சகாயமாகத் தங்கள் சுதந்தரத்தால் சம்பாதித்துக்கொள்ளுகின்ற பசு எருது எருமை கடா ஆடு குதிரை முதலிய சில மிருகங்களுக்கு ஆகாரங்

394. இரங்குவது -- பி-ம்.

கொடுத்துப் பசியாற்றுதல் அவசியமென்றும்; மனிதர்களில் ஆண்மனிதர் பெண்மனிதர்[395] என்றிருவகைப்பட்ட எல்லா மனிதர்களுக்கும் பசியால் வரும் நஷ்டங்களும் துன்பங்களும் பசிநிவர்த்தியால் வரும் லாபங்களும் இன்பங்களும் பொதுவில் ஒரு தன்மையாயிருத்தலாலும், பசியால் வரும் நஷ்டங்களையுந் துன்பங்களையும்[396] மன முதலான அந்தக்கரண விருத்தியினாலும் கண் முதலான இந்திரியங்களாலும் மிகவும் அறிந்துகொள்கின்ற ஆன்மவறிவு ஒத்திருத்தலாலும், மனிதர்களுக்கு ஊழ்வகையினால் அருள் நியதியின்படி கொடுப்பிக்கின்ற ஆகாரமட்டில் சீவித்துத் தேகத்தை வைத்திருக்கக் கூடாமையாலும், தங்கள் முயற்சியாலும் அறிவாலும் சுதந்தரத்தாலும் சம்பாதிக்கின்ற ஆகாமிய ஆகாரத்தாலும் பசியை நீக்கித் தேகத்தை வைத்திருக்கவேண்டுமாதலாலும், ஆகாமியத்தால் சம்பாதிக்கின்ற சிவசுதந்தரம் மனிதர்களுக்கு அருளால் மிகவும் கொடுக்கப்பட்டபடியாலும், ஊழ்வகையால் ஆகாரம் நேரிடாமல் பசித்து வருந்தும்படியாகவும் அந்தப் பசியை நீக்குநிமித்தம் ஒருவரை யொருவர் எதிர் பார்க்கும்படியாகவும் அவர் தயவினால் ஆகாரங் கொடுத்து அப்பசியை நீக்கி அவரை நன்முயற்சியிற் செலுத்தவும் ஆகாரங்கொடுத்தவர் சித்தி முத்திகளை யடையவும் அருள் நியதியாக விதிக்கப்பட்டபடியாலும், மனித தேகம் மற்றச் சீவ தேகம்

---

395. ஆண்மக்கள் பெண்மக்கள் — 1885.
396. நஷ்டங்களும் துன்பங்களும் — பி-ம்.

போல் இலேசிலே எடுக்கக் கூடாதாகலாலும், மனித தேகத்தில் ஆன்ம விளக்கமும் அருள் விளக்கமும் மிகவும் விளங்குதலாலும், இந்த மனித தேகம் போனால் மீளவும் இந்தத் தேகம் வருமென்கிற நிச்சயமில்லாமையாலும், இந்த மனித தேகம் முத்தியின்பம் பெறுதற்கே எடுத்த தேகமாதலாலும், இந்த மனித தேக மாத்திரமே முதற் சிருஷ்டி தொடங்கிக் கடவுள் சம்மதத்தால் சிருஷ்டிக்கப்பட்ட உயர்ந்த அறிவையுடைய தேகமாதலாலும், மனிதர்கள் மாத்திரம் பசியாற்றுவிக்கின்ற சீவகாருணிய விதியைப் பொதுவில் அவசியம் உறுதியாகப் பிடிக்கவேண்டு மென்றும்—கடவுள் விதித்திருக்கின்றபடியால், பசியை ஆகாரத்தினால் நிவர்த்திசெய்விக்கின்ற சீவகாருணிய வொழுக்கம் மனிதர்களிடத்தே பெரும்பான்மை நடத்த வேண்டு மென்று அறியவேண்டும்.

ஊழ்வகைக்குத் தக்கபடி மிருகம் பறவை முதலிய சீவர்களுக்கு அருளால் நியதி யாகார மாத்திரம் இருக்க மனிதர்களுக்கு மாத்திரம் ஊழ் நியதி யாகாரத்தோடு ஆகாமிய முயற்சி யாகாரமும் வேண்டுவது அவசிய மென்றது எப்படி யென்னில் :—மனிதர்கள் பிராரத்தப்படி நியதி யாகாரத்தைப் புசித்துப் பிராரத்த அநுபவத்தை நீக்கிக்கொண்டு,[397] ஆகாமியத்தால் முயற்சி யாகாரத்தைப் புசித்துக் கரணேந்திரிய தேகத்தை வலுவுள்ளதாகச் செய்துகொண்டு, சன்மார்க்க சாதனத்தை அநுசரித்துச் சித்தி முத்தி இன்

397. நீக்கிக்கொள்வதற்கும்—பி-ம்.

பங்களைப் பெறக்கடவரென்று கடவுள் விதித்திருக்கின்றபடியால்,[398] மனிதர்களுக்குப் பிராரத்த ஆகாரமும் ஆகாமிய முயற்சி ஆகாரமும் அவசியம் வேண்டுமென்று அறியவேண்டும். மிருகம் பட்சி ஊர்வன தாபரம் என்கிற சீவதேகங்கள் தண்டனை நிமித்தம் விதித்த தேகங்களாதலால், பிராரத்த ஆகாரம் கடவுள் விதித்த வண்ணம் அருட்சத்தியால் தடைபடாமல் கொடுக்கப்படு மாகலில், ஆகாமிய ஆகாரம் சம்பாதிக்க வேண்டா மென் றறியவேண்டும்.

ஆனால் சீவகாருணியம் எல்லாச் சீவர்களுக்கும் பொது வென்று முதலில் குறிக்கப்பட்டது என்னை யெனில்:—சீவகாருணிய வொழுக்கத்தில் முக்கியமாக எல்லா மனிதர்களுக்கும் பொதுவில் பசியினால் வருந் துன்பத்தை நிவர்த்திசெய்து ஆகாரத்தினால் திருப்தி இன்பத்தை உண்டுபண்ணவேண்டு மென்றும், பசியைப்போல் வேறுவகையினால் சீவகொலை நேரிடுவதானால் அந்தச் சீவகொலையைத் தம்மாற் கூடிய வரையில் எவ்விதத்தி லாயினும் தடைசெய்து உயிர்பெறுவித்துச் சந்தோஷிப்பிக்கவேண்டு மென்றும், பிணி பயம் முதலிய மற்ற ஏதுக்களால் சீவர்களுக்குத் துன்பம் நேரிடில் அத் துன்பங்கள் தங்களால் நீக்கத் தக்கவைக ளாகில் நீக்கவேண்டு மென்றும், மிருகம் பறவை ஊர்வன தாபரம் முதலிய சீவர்களிடத்துப் பயத்தினால் வருந் துன்பத்தையுங் கொலையினால் வருந் துன்பத்தையும் எவ்விதத்தும் நிவர்த்திசெய்ய

---

398. விதித்திருக்கின்றபடியாலும்—பி-ம்.

வேண்டுமென்றும், அவற்றுள் துஷ்ட சீவர்களிடத்தும் சிறிது பயத்தினால் வருந் துன்ப மாத்திரமே யல்லது கொலையினால் வருந் துன்பங்களைச் செய்யப்படாதென்றும்—இவ்வகை முழுதும் சீவகாருணியமேயாதலால் எல்லா உயிர்களிடத்தும் சீவகாருணியம் வேண்டுமென்றுகடவுளால் ஆணைசெய்ததென்றறியவேண்டும்.

மனிதர்கள் தங்கள் வாழ்க்கைக்குச் சகாயமாகச் சம்பாதிக்கின்ற உயிர்களில் சில உயிர்கள் தாமச ஆகாரமாகிய மாமிச ஆகாரஞ் செய்வதானால், அவைகளுக்குப் பசியாற்றுவிக்கும்போது அந்த ஆகாரத்தைக் கொடுத்து ஆற்றுவிக்கப்படாதோ வென்னில்:— ஒரு சீவனைக் கொன்று ஒரு சீவனுக்கு மாமிசத்தால் பசியாற்றுதல் சீவகாருணியவொழுக்கமே யல்ல வென்றும், கடவுள் சம்மதமும் அல்ல வென்றும், இவைகட்கு முழு விரோத மென்றும் அறியவேண்டும். எல்லாச் சீவர்களும் இயற்கை யுண்மை யேகதேசங்களாகிக் கடவுள் இயற்கை விளக்கமாகிய அருளுக்கு இடமாக இருக்கின்றபடியாலும், கடவுள் இயற்கைவிளக்கம் மறைபடும்போது சீவத்தன்மை இல்லாதபடியாலும், கடவுளியற்கை விளக்கமும் ஜீவனியற்கை விளக்கமும் ஒன்றோடொன்று மாறுபடா தாகலாலும், கடவுளியற்கை விளக்கமுஞ் சீவன் இயற்கை விளக்கமும் அந்தந்தத் தேகங்களினும் விளங்குகின்ற படியாலும், ஒரு சீவனை வதைத்து அதனால் மற்றொரு சீவனுக்குப் பசியாற்றுதல் சீவகாருணிய வொழுக்கத்திற்கு முழு விரோத மென்றே அறியவேண்டும்.

புலி சிங்கம் முதலிய மிருகங்கள் மற்றொரு சீவனைக் கொன்று தின்று தாம்ச* ஆகாரத்தால் பசியாற்றித் திருப்தி யின்பத்தை யடைந்து சந்தோஷிக்கின்றன: அந்தச் சந்தோஷம் கடவுளியற்கை விளக்க ஏகதேசமும் சீவன் இயற்கை விளக்க நிறைவும் என்று[399] கொள்ளக்கூடாதோ வென்னில்:—கூடாது. தாம்ச ஆகாரத்தால் பூரண சத்துவமாகிய கடவுளியற்கை விளக்க ஏகதேசமும் ஏகதேச சத்துவமாகிய ஆன்மவியற்கை விளக்கமும் விளங்கா: இருளால் ஒளி விளங்காதது போல். இதைத் தாம்ச ஆகார மென்பது என்னையெனில்: கடவுள் விளக்கம் வெளிப்படாதபடி ஆன்ம விளக்கத்தை மறைத்த இம்சை ஆகார மாதலால் தாம்ச ஆகார மாயிற்று. இந்த ஆகாரத்தால் வந்த திருப்தி யின்ப மாகிய சந்தோஷ விளக்கம் எதனுடைய விளக்க மென்னில்: அஞ்ஞதி பசு கரண மாயாவிளக்கம் என்று அறிய வேண்டும். பசு வென்பது என்னை? ஆணவம் மாயை கன்மம் என்கிற மும்மல பந்தத்தால் ஒன்றுபட்டு அறிவிழந்த ஆன்மாவையே பசு வென்பது. அப் பசுவிற்கு விளக்கந் தோன்றுவது எப்படியென்னில்:—சூரியனை மறைத்த மேகவண்ணத்தி லுள்ள இருளினிடத்தும் சூரியப்பிரகாச விசேஷந் தோன்றுதலால் அவ்விருளும் விளக்கமாக வழங்குகின்றது. அதுபோல், அசுத்த மாயா கரணங்களுந் தாம்சகுணமும் இருள் வண்ண முடைய வாயினும் தம்மால் மறைக்கப்பட்ட பரசீவ

* தாமச—பி-ம். 399. எனவுங்—பி-ம்.

விளக்க விசேஷத்தால் அசுத்த மாயாகரணமும் தாம்ச குணமும் விளக்கமாக வழங்குகின்றன. இதனால், தாமச ஆகாரத்தில் வரும் விளக்கம் அசுத்த மாயாகரண விளக்கமேயென் றறியவேண்டும்.

ஆனால் மரம் புல் நெல் முதலான தாவரங்களும் உயிராகவே சொல்லப்படுகின்றனவே, அவைகளை இம்சைசெய்து ஆகாரமாகக் கொண்டால் அவை தாம்ச ஆகார மல்லவோ, அதனால் வந்த சந்தோஷம் அசுத்த மனோகரண சந்தோஷமல்லவோ வென்னில்:- மரம் புல் நெல் முதலான தாவரங்களும் உயிர்கள் தான். அவைகளை இம்சைசெய்து ஆகாரங்கொண்டால் அது ஏக தேச தாம்ச ஆகாரந்தான்; அந்த ஆகாரத்தால் வந்த சந்தோஷமும் அசுத்த கரண சந்தோஷந்தான். ஆனாலும் அப்படியல்ல. மரம் புல் நெல் முதலான சீவர்கள் பரிச மென்கிற ஓரறிவை யுடைய சீவர்களாதலாலும், அவ்வுடம்பில் சீவவிளக்கம் ஒருசார் விளங்குதலாலும், அவ்வுயிர்கள் தோன்றும் வித்துக்களும் மற்ற வித்துக்கள்போல் சடமாதலாலும், அவ்வித்துக்களை நாமே விதைத்து உயிர் விளைவு செய்யக்கூடு மாதலாலும், அவ்வுயிர்களை வேறு செய்யாமல் அவ் வுயிர்களினிடத்து உயிரில்லாமல் உயிர்தோன்றற் கிடமான சடங்களாகத் தோன்றிய வித்துக்களையும் காய்களையும் கனிகளையும் பூக்களையும் கிழங்குகளையும் தழைகளையும் ஆகாரங்களாகக் கொள்வதே யன்றி அவ்வுயிருள்ள முதல்களை ஆகாரமாகக் கொள்ளாதபடியாலும், அவைகளில் வித்து காய் கனி

முதலானவை கொள்ளும்போது சுக்கிலம் நகம் ரோமம் முதலியுவைகளை வாங்கும்போது இம்சை உண்டாகாமைபோல் இம்சை உண்டாகாதபடியாலும், தாவரவர்க்கங்களுக்கு மன முதலான அந்தக் கரணங்கள் விருத்தியில்லாதபடியாலும் அது உயிர்க் கொலையு மல்ல; துன்ப முண்டுபண்ணுவது மல்ல;[400] அதனால் அது சீவகாருணிய விரோத மாகாது: அந்த ஆகாரத்தால் வந்த சந்தோஷமும் சீவவிளக்க சகித மான கடவுள் விளக்கமே யாகு மென்று அறிய வேண்டும்.

மர முதலிய தாபரங்களில் தோன்றிய வித்துக்களை இனி உயிரேறுதற் கிடமாகிய சடங்க ளென்பது எப்படியென்னில்:-வித்துக்களில் சீவனிருந்தால் நிலத்தில் விதையா முன்னமே விளையவேண்டும்; நிலத்தில் விதைத்த காலத்தும் சில வித்துக்கள் விளையாமலே யிருக்கின்றன. அன்றியும் வித்தென்பது காரணம். இந்தக் காரணம் உடம்பு தோன்றுதற்கே யென்று சிறு பிள்ளைகளாலும் அறியப்படும். அன்றி உயிர் நித்தியம், உடம்பு அநித்தியம்; நித்தியமான உயிர் காரணம் வேண்டாது; அநித்தியமாகிய உடம்பே காரணம் வேண்டும். ஆகலில் வித்துக்களைச் சடமென்றறியவேண்டும். ஆனால் வித்துக்களினிடத்து ஆன்மாக்கள் ஏறுவது எப்படி யென்னில்; நிலத்திற் கலந்த வித்திற்கு நீர்விடில் அந்த நீரின் வழியாகக் கடவுள் அருள் நியதியின்படி ஆன்மாக்கள் அணுத் தேகத்

400. இம்சை யுண்டுபண்ணுவது மல்ல—பி-ம்.

தோடு கூடி நிலத்திற் சென்று அந்நிலத்தின் பக்குவ சத்தியோடு கலந்து வித்துக்களினிடமாகச் செல்கின்றனவென்று அறிய வேண்டும்.

முளைகளையே பிடுங்கப்படாதென்று சிலர் சொல்லுகின்றார்கள்; வித்து காய் இலை முதலியவைகளைப் புசிக்கலாமென்று சொல்வதெப்படியென்னில்:—வித்து நிலத்திற் படிந்தபின் நீர்வழியாக ஆன்மாவானது சென்று பக்குவ சத்தியிற் கலந்து வித்திலேறி முளைத்தபடியால், முளையானது வித்து காய் முதலியவைகளைப்போலச் சடமல்ல. ஆகலால், முளைகளைப் பிடுங்கப்படாதென்பது உண்மையென்றறிய வேண்டும்.

வித்து காய் கனி முதலியவற்றில் உயிர்க்கொலை இல்லாவிடினும் நகம் ரோமம் சுக்கிலம் முதலியவற்றிலிருக்கிற அசுத்தமாவதில்லையோ வென்னில்: தத்துவ விருத்தியும் தாதுவிருத்தியும் இல்லாதபடியால் அசுத்தமுமில்லை.

ஆகலில் மரம் புல் நெல் முதலியவைகளின் வித்து காய் கனி தழை முதலியவற்றைப் புசிப்பது ஜீவகாருணிய விரோதமல்லவென்றறியவேண்டும்.

மாமிச ஆகாரம் புலி முதலாகிய துட்ட மிருகங்களுக்கு நியதியாகார மல்லவோவென்றறியவேண்டில்: அது அவ்வுயிர்களுக்குச் சிருஷ்டி நியதி ஆகாரமல்ல; பரம்பரை வழக்கத்தாற் பெற்ற ஆகாரமாமென்றறியவேண்டும். ஆகலில், அதை நிவர்த்தி செய்வித்துச் சத்துவ ஆகாரங்களைப் புசிப்பிக்கும்படி செய்ய

வுங்கூடும்; ஒரு சீலமுடையவன் கிரகத்தில் வழங்கு கின்ற பூனைக்கும் நாய்க்கும் வேறிடங்களிற் போய் அசுத்த ஆகாரங் கொள்ளாமல் காவல்செய்து அடி நாள் தொடங்கிச் சுத்த ஆகார வழக்கமே செய்விக் கின்றான்; அவைகள் அவைகளைப் புசித்து உயிர் வழங்கி வருகின்றன. அப்படியே புலி சிங்கம் முதலிய துட்ட வர்க்கங்களையும் மேல்நின்று சுத்த ஆகாரத்தில் பழக்குவா ரில்லாமையால் அசுத்தாகாரங்களைப் பழக்கத்தாற் புசிக்கின்றனவென் றறியலாம்.

ஆகலில், ஒரு சீவனைக் கொன்று மற்றொரு சீவ னுக்குப் பசியாற்றுவித்தல் கடவுளருளுக்குச் சம் மதமு மல்ல, சீவகாருணிய வொழுக்கமுமல்ல வென்று சத்தியமாக அறியவேண்டும்.

இந்தச் சீவகாருணிய மென்கின்ற சாதனத்தில் சாத்தியமாகின்ற இன்பம் அபர இன்பமென்றும் பர இன்பமென்றும் இருவகைப்படும்.

இச்சை முதலியவைகளைப் பற்றி உண்டாகின்ற துன்பத்தை நிவர்த்தி செய்விப்பதில் வருமின்பம் அபர வின்பமாகும். அவை இம்மையில் அநுபவிக் கின்ற இன்பங்களில் சிலவென் றறியவேண்டும். அவை எவை யென்னில்: உடுப்பதற்கு வஸ்திரமில்லாமலும் இருப்பதற்கு இடமில்லாமலும் உழுவதற்கு நிலமில் லாமலும் பொருந்துவதற்கு மனைவியில்லாமலும் விரும்பியபடி செய்வதற்குப் பொருள் முதலிய வேறு வேறு கருவிகளில்லாமலும் துன்பப்படுகின்ற சீவர் கள் விஷயத்தில் சீவகாருணியந் தோன்றி, உடுப்ப

தற்கு வஸ்திரம் இருப்பதற்கு இடம் உழுவதற்கு நிலம் பொருந்துவதற்குப் பெண் விரும்பியபடி செய்வதற்குப் பொருள் முதலானவை கொடுத்தபோது, பெற்றுக் கொண்டவர்களுக்கு உள்ளிருந்து முகத்தினிடமாகத் தோன்றுகின்ற இன்ப விளக்கமும் அந்த இன்பத்தைக் கண்டு கொடுத்தவர்களுக்கு உண்டாகின்ற இன்ப விளக்கமும் கடவுள்கரணத்தில் ஏகதேசமும் சிவகரணத்திற் பூரணமுமாகத் தோன்றுகின்றவை யாகலால்—அது[401] அபர வின்ப மென்றறிய வேண்டும்.

அன்றி, தன் வத்திரம் தாழ்ந்ததாகவும் அன்னியன் வத்திரம் உயர்ந்ததாகவும் கண்டு அதில் ஆசை வைத்து வருந்துகின்ற வருத்தமும் கண்டால், காருண்யம் வேண்டாவோ என்னில்:—[402]. . .

பசியினால் வருந் துன்பத்தை நிவர்த்திசெய்விப்பதில் வருமின்பம் பரவின்பமாகும். அவை இம்மையில் போக சித்திகளாலும் யோக சித்திகளாலும் ஞான சித்திகளாலும் வருகின்ற இன்பங்களும் முடிவில் அநுபவிக்கப்படும் மோட்ச வின்பமும் ஆகு மென்றறியவேண்டும். உண்பதற்கு ஆகாரமில்லாமல் சோர்வடைந்த சீவர்களுக்குச் சீவகாருணியத்தால் ஆகாரங் கொடுக்க உண்டு பசிநீங்கிய தருணத்தில், அந்தச்

---

401. 'அது' என்பது இரு கைஎழுத்துப் பிரதிகளில் இல்லை.

402. "அன்றி தன் வத்திரம்... என்னில்" என்பதற்குச் சுவாமிகள் கைஎழுத்தில் இருந்திருக்க வேண்டிய உத்தரம் கிடைத்த பிரதி ஒன்றிலாவது இல்லை.

சீவர்களுக்கு அகத்தினிடத்தும் முகத்தினிடத்தும் தழைந்து பொங்கித் ததும்புகின்ற இன்பமும், அது கண்டபோது கொடுத்தவர்களுக்கு 'அகத்திலும் முகத்திலும் அவ்வா றுண்டாகின்ற இன்பமும், ஆன்ம சகிதமாகிய கடவுள் கரணத்திற் பூரணமாகத் தோன்றுகின்றவை யாகலால், பரவின்ப மென்றது என் றறியவேண்டும்.

வஸ்திரம் இடம் நிலம் பெண் பொருள் முத லானவைக ளில்லாமல் துன்பப்படுகின்றவர்கள், அத் துன்பங்களை மனவெழுச்சியால் சகித்துக்கொண்டு உயிர் தரித்துத் தங்களாற் செய்யக்கூடிய முயற்சியைச் செய்யக்கூடும். பசியினால் துன்பம் நேரிட்டபோது மனவெழுச்சியால் அத் துன்பத்தைச் சகித்துக் கொள்ளக்கூடாது. சகிக்கத் தொடங்கில் உயிரிழந்து விடுவார்கள். பசி நேரிட்டபோது பெற்றவர்கள் பிள்ளைகளை விற்றும் பிள்ளைகள் பெற்றவர்களை விற் றும் மனைவியைப் புருடன் விற்றும் புருடனை மனைவி விற்றும் அந்தப் பசியினால் வருந் துன்பத்தை மாற்றிக் கொள்ளத் துணிவார்க ளென்றால், அன்னியமாகிய வீடு மாடு நிலம் உடைமை முதலியவைகளை விற்றுப் பசியை நீக்கிக்கொள்வார்க ளென்பது சொல்லவேண்டு வதில்லை. உலக முழுதும் ஆளுகின்ற சக்கரவர்த்தி யாகிய அரசனும் பசி நேரிட்ட போது, தனது அதிகாரவுயர்ச்சி முழுதும் விட்டுத் தாழ்ந்த வார்த்தை களால் 'பசிநேரிட்டது: என்னசெய்வது!' என்று அருகி லிருக்கின்ற அமைச்சர்களிடத்துக் குறை

சொல்லுகிறான். பகைவரால் எறியப்பட்டு மார்பிலுருவிய பாணத்தையுங் கையாற் பிடித்துக்கொண்டு எதிரிட்ட பகைவரையெல்லாம் அஞ்சாது ஒரு நிமிஷத்தில் வெல்லத்தக்க சுத்தவீரரும் பசி நேரிட்டபோது, சௌரியத்தை யிழந்து பசிக்கஞ்சிப் பக்கத்தில் நிற்கின்றவரைப் பார்த்து 'இளைப்பு வருமே! சண்டை எப்படிச் செய்வது!' என்று முறையிடுகின்றார்கள். இவ்வுலக போகங்களோடு இந்திரபோக முதலிய போகங்களையும் துரும்பாக வெறுத்து முற்றுந் துறந்து அறிவை யறிந்து அநுபவம் விளங்கிய ஞானிகளும் இந்திரியங்களை அடக்கி மனோலயஞ் செய்து உண்மை நிட்டையிலிருக்கின்ற யோகிகளும் இறந்தோரையும் எழுப்பத்தக்க அளவிறந்த மகத்துவங்கள் விளங்கிய சித்தர்களும் முனிவர்களும் தபசிகளும் பசிநேரிட்ட போது, தங்கள் தங்கள் அநுபவலட்சியங்களை விட்டு அடுத்த ஊரை நோக்கிப் பலிக்கு வருகின்றார்கள்; பலி நேராதபோது நிலைகலங்குகின்றார்கள். சொற்பனத்தில் ஓர் இழிவு வரினும் அதுகுறித்து உயிர்விடத்தக்க மானிகளும் பசி நேரிட்டபோது, சொல்லத்தகாதவரிடத்துஞ் சொல்லி மானங் குலைகின்றார்கள். சாதி சமய ஆசாரங்களில் அழுத்தமுடைய ஆசாரியர்களும் பசிவந்தபோது, ஆசாரத்தை மறந்து ஆகாரத்திற்கு எதிர்பார்க்கின்றார்கள். கல்வி கேள்விகளில் நிரம்பி அறிதற்கரிய நுட்பங்களை யறிந்து செய்தற்கரிய செய்கைகளைச் செய்து முடிக்கவல்லவர்களும் பசி நேரிட்டபோது, அறிவுங் கருத்தும் அழிந்து தடுமாறு

கின்றார்கள். இராப்பகல் தோன்றாத புணர்ச்சியின்பத்திற் பொங்குகின்ற காமிகளும் பசிநேரிட்டபோது, புணர்ச்சியை மறந்து காமத்தைக் கசந்து கலங்குகின்றார்கள். நாமே பெரியவர் நமக்குமேற் பெரியரில்லையென்று இறுமாப்படைகின்ற அகங்காரிகளும் பசிநேரிட்டபோது, அகங்காரங் குலைந்து ஆகாரங் கொடுப்பவரைப் பெரியவராகப் புகழ்கின்றார்கள். ஒருவகைக் காரியங்களில் அனேக வகைகளாக உபசரிக்கச் செய்கின்ற டம்பர்களும் பசிநேரிட்டபோது, டம்பத்தை இழந்து மயங்குகின்றார்கள். இவரிவர் இப்படி இப்படியானால் ஒருவகை ஆதாரமுமில்லாத ஏழைகள் பசிநேரிட்டபோது என்னபாடுபடார்கள்! அந்தக் காலத்தில் அந்த ஏழைகளுக்கு ஆகாரங் கிடைத்தால் எப்படிப்பட்ட சந்தோஷமுண்டாகும்! அந்தச் சந்தோஷத்தைத் தோற்றுவித்தவர்களுக்கு எப்படிப்பட்ட லாபங் கிடைக்கும்! இப்படிப்பட்டதென்று சொல்லுதற்கும்[403] அருமை என்றறியவேண்டும்.

சீவர்களுக்குப் பசியதிகரித்த காலத்தில் சீவ அறிவு விளக்கமில்லாமல் மயங்குகின்றது; அது மயங்கவே அறிவுக்கறிவாகிய கடவுள் விளக்கம் மறைபடுகின்றது; அது மறையவே புருடதத்துவம் சோர்ந்துவிடுகின்றது; அது சோரவே பிரகிருதி தத்துவம் மழுங்குகின்றது; அது மழுங்கவே, குணங்களெல்லாம்

403. அறிவதற்கு—பி-ம்; சொல்லுவதற்கு—ச. மு. கந்தசாமி பிள்ளை பதிப்பு, 1893.

பேதப்படுகின்றன, மனம் தடுமாறிச் சிதறுகின்றது, புத்தி கெடுகின்றது, சித்தம் கலங்குகின்றது, அகங்காரம் அழிகின்றது, பிராணன் சுழல்கின்றது, பூதங்களெல்லாம் புழுங்குகின்றன, வாதபித்த சிலேட்டுமங்கள் நிலைமாறுகின்றன, கண் பஞ்சடைந்து குழிந்து போகின்றது, காது கும்மென்று செவிடுபடுகின்றது; நா உலர்ந்து வறளுகின்றது, நாசி குழைந்து அழல்கின்றது, தோல் மெலிந்து ஸ்மரணைகெடுகின்றது, கை கால் சோர்ந்து துவளுகின்றன, வாக்குத் தொனி மாறிக் குளறுகின்றது, பற்கள் தளருகின்றன, மலசல வழி வெதும்புகின்றது, மேனி கருகுகின்றது, ரோமம் வெறிக்கின்றது, நரம்புகள் குழைந்து நைகின்றன, நாடிகள் கட்டுவிட்டுக் குழைகின்றன, எலும்புகள் கருகிப் பூட்டுகள் நெக்குவிடுகின்றன, இருதயம் வேகின்றது, மூளை சுருங்குகின்றது, சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது, ஈரல் கரைகின்றது,[404] இரத்தமும் சலமும் சுவறுகின்றன, மாமிசம் குழைந்து தன்மை கெடுகின்றது, வயிறு பகீலென் றெரிகின்றது, தாப சோபங்கள் மேன்மேலும் உண்டாகின்றன, உயிரிழந்து விடுவதற்கு மிகவுஞ் சமீபித்த அடையாளங்களும் அநுபவங்களும் மேன்மேலும் தோன்றுகின்றன: பசியினால் இவ்வளவு அவத்தைகளும் தோன்றுவது சீவர்களுக்கெல்லாம் பொதுவாகவே யிருக்கின்றது.

இவ்வளவு அவத்தைகளும் ஆகாரங் கிடைத்த போது உண்டு பசிநீங்க நீங்குகின்றன. அப்போது

404. கருகுகின்றது — பி-ம்.

தத்துவங்க ளெல்லாம் தழைத்து உள்ளங் குளிர்ந்து அறிவு விளங்கி அகத்திலும் முகத்திலும் சீவகளையும் கடவுள்களையுந் ததும்பி ஒப்பில்லாத திருப்தியின்பம் உண்டாகின்றது. இப்படிப்பட்ட இன்பத்தை உண்டு பண்ணுகின்ற புண்ணியத்துக்கு எந்தப் புண்ணியத்தை இணையென்று சொல்லலாம்? இந்தப் புண்ணியத்தைச் செய்கின்ற புண்ணியர்களை எந்தத் தெய்வத்துக்குச் சரியென்று சொல்லலாம்? எல்லாத் தெய்வங்களுக்கும் மேலாகிய கடவுளம்ச மென்றே சத்தியமாக அறியவேண்டும். இதனால் நரகவேதனை சனன வேதனை மரணவேதனை என்கின்ற மூன்று வேதனைகளுங் கூடி முடிந்த வேதனையே பசிவேதனை யென்றும், அகம் புறம் நடு கீழ் மேல் பக்கம் என்கிற எவ்விடத்தும் நிறைந்து எக்காலத்தும் வேறுபடாத மோக்ஷ இன்பமே ஆகாரத்தினு லுண்டாகும் திருப்தியின்பம் என்றும் அறியப்படும்.

பசியில்லாவிடில் சீவர்கள் ஆகாரங் குறித்து ஒருவரை யொருவர் எதிர்பார்க்கமாட்டார்கள்; எதிர் பாராத பக்ஷத்தில் உபகாரச் செய்கை தோன்றாது; அது தோன்றாதபோது சீவகாருணியம் விளங்காது; அது விளங்காதபோது கடவுளருள் கிடைக்கமாட்டாது. ஆகலால், பசியும் கடவுளாற் கொடுக்கப்பட்ட ஓர் உபகாரக் கருவியென்றே அறியவேண்டும்.

பசியினால் துன்பப்படுகின்றவர்கள் ஆகாரத்தைக் கண்ட காலத்தில் அடைகின்ற சந்தோஷமும் தாய் பிதா பெண்டு பிள்ளை காணி பூமி பொன் மணி முத

லானவைகளைக் கண்ட காலத்திலும் அடையார்களா யின், ஆகாரம் உண்ட காலத்தில் உண்டாகும் சந்தோஷம் எப்படிப்பட்டதாக விருக்கும்? ஆகலால் இந்த ஆகாரத்தின் சொரூப ரூப சுபாவங்களும் கடவுளருளின் ஏகதேச சொரூப ரூப சுபாவங்களாகவே அறிய வேண்டும்.

பசியென்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் சீவகாருணியம். பசியென்கிற விஷக்காற்றானது ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரங்கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே சீவகாருணியம். கடவுளியற்கை விளக்கத்திற்கு இடமாகிய சீவதேகங்களென்கிற ஆலயங்கள் பசியினால் பாழாகுந் தருணத்தில் ஆகாரங்கொடுத்து அவ்வாலயங்களை விளக்கஞ்செய்விப்பதே சீவகாருணியம். கடவுள் இன்பத்தைப் பெறுகின்ற நிமித்தம் தேகங்களிலிருந்து குடித்தனஞ் செய்கின்ற சீவராது தத்துவக் குடும்ப முழுதும் பசியினால் நிலை தடுமாறி அழியுந் தருணத்தில் ஆகாரங்கொடுத்து அக்குடும்ப முழுதும் நிலைபெறச் செய்வதே சீவகாருணியம். பசி யென்கிற புலியானது ஏழை உயிர்களைப் பாய்ந்து கொல்லத் தொடங்குந் தருணத்தில் அப் புலியைக் கொன்று அவ் உயிரை இரட்சிப்பதே சீவகாருணியம். பசியென்கிற விஷம் தலைக்கேறிச் சீவர் மயங்குந் தருணத்தில் ஆகாரத்தால் அவ்விஷத்தை இறக்கி மயக்கந் தெளியச் செய்வதே சீவகாருணியம். பசி என்கிற

கொடுமையாகிய தேள் வயிற்றிற் புகுந்து கொட்டு கின்றபோது கடுப்பேறிக் கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆகாரத்தால் அக் கடுப்பை மாற்றிக் கலக்கத்தைத் தீர்ப்பதே சீவகாருணியம். 'நேற்று இராப்பகல் முழுதும் நம்மை அரைப்பங்கு கொன்றுதின்ற பசியென்கிற பாபி இன்றும் வருமே! இதற்கு என்ன செய்வோம்!' என்று ஏக்கங் கொள்கின்ற ஏழைச் சீவர்களது ஏக்கத்தை நீக்குவதுதான் சீவகாருணியம். 'வெயிலேறிப் போகின்றதே, இனிப் பசியென்கிறவேதனை வந்து சம்பவிக்குமே! இந்த விதிவசத்திற்கு என்ன செய்வது!' என்று தேனில் விழுந்த ஈயைப்போல, திகைக்கின்ற ஏழைச் சீவர்களுடைய திகைப்பை நீக்குவது தான் சீவகாருணியம். 'இருட்டிப் போகின்றதே, இனி ஆகாரங் குறித்து எங்கே போவோம்! யாரைக் கேட்போம்! என்ன செய்வோம்!' என்ற[405] விசாரத்தில் அழுந்திய ஏழைச்சீவர்களது விசாரத்தை மாற்றுவதே சீவகாருணியம். 'நடந்து நடந்து காலுஞ் சோர்ந்தது, கேட்டுக்கேட்டு வாயுஞ் சோர்ந்தது, நினைத்து நினைத்து மனமும் சோர்ந்தது: இனி இப்பாவி வயிற்றுக்கென்ன செய்வோம்!' என்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துக் கண்ணீரை மாற்றுவதே சீவகாருணியம். 'பகற்போதும் போய்விட்டது, பசியும் வருத்துகின்றது, வேறிடங்களிற் போக வெட்கங் கடுக்கின்றது, வாய்திறந்து கேட்க மானம் வலிக்கின்றது, வயிறு எரிகின்றது, உயிரை விடுவதற்கும்

405. என்று — 1893.

உபாயந் தெரியவில்லை: இவ்வுடம்பை ஏன் எடுத்தோம்!' என்று மனமும் முகமும் சோர்ந்து சொல்வதற்கு நாவெழாமல் உற்பாத சொப்பனங் கண்ட ஊமையைப்போல் மனம் மறுகுகின்ற[406] மானிகளாகிய சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து மானத்தைக் காப்பதுவே சீவகாருணியம். 'நாம் முன் பிறப்பில் பசித்தவர்கள் பசிக்குறிப் பறிந்து பசியை நீக்கியிருந்தால், இப் பிறப்பில் நமது பசிக்குறிப் பறிந்து பசியை நீக்குவதற்குப் பிறிதொருவர் நேர்வார்; அப்போது அப்படி நாம் செய்ததில்லை, இப்போது நமக் கிப்படிச் செய்வாருமில்லை' என்று விவகரித்துக்கொண்டு தூக்கம் பிடியாமல் துக்கப்படுகின்ற ஏழைச் சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்கித் தூக்கம் பிடிக்க வைப்பதே சீவகாருணியம். தேகமுழுதும் நரம்புகள் தோன்றப் பசியினால் இளைத்து உயிரொடுங்கி மூர்ச்சை மூடியகாலத்தும் அயலாரைக் கேட்பது துணியாமற் கடவுளை நினைத்து நினைத்து நெருப்பிற் படுத்து நித்திரை செய்யத் தொடங்குவாரைப் போல, அடிவயிற்றிற் கொடிய பசி நெருப்பை வைத்துப் படுக்கத் தொடங்குகின்ற விவேகிகளுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசி நெருப்பை ஆற்றுவதே சீவகாருணியம். 'நேற்றுப் பட்டினி கிடந்ததுபோல் இன்றும் பட்டினி கிடப்பது எப்படி? நாம் பாவிய வசத்தால் இன்றும் பட்டினி கிடக்கத் துணிவோமாயினும் பட்டினி சகியாத நமது ஏழை மனைவி வயிற்

406. மனமுருகுகின்ற — பி-ம்.

றாக்கு யாது செய்வோம்? இவள் பசியைக் குறிப்ப தும்[407] பெரிதல்ல, வார்த்திப திசையால் மிகவுஞ் சோர்ந்த நமது தாய் தந்தைகள் இன்றும் பட்டினி கிடந்தால் இறந்துவிடுவார்களே! இதற்கென்ன செய் வோம்? பசியினால் அழுதழுது களைத்த நமது புத்திரர் களது சோர்ந்த முகத்தை எப்படிப் பார்ப்போம்?' என்று எண்ணி எண்ணிக் கொல்லன் உலையிலூத மூண்ட நெருப்பைப்போல், பசிநெருப்பும் பயநெருப் பும் விசாரநெருப்பும் உள்ளே மூண்டபடி யிருக்கக் கன்னப்புடையில் கைகளை வைத்துக்கொண்டு கண் களில் நீர்கலங்க வருந்துகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்து வருத்தத்தை மாற்றுவதே சீவகாருணியம். 'கண் கை கால் முதலிய உறுப்புக்களிற் குறைவில் லாதவர்களாகி ஆகாரஞ் சம்பாதிக்கத் தக்க சக்தி யுள்ளவர்களும் பசியால் வருந்தி இதோ[408] படுத்திருக் கின்றார்கள்: குருடும் செவிடும் ஊமையும் முடமுமாக விருக்கின்ற நமக்கு ஆகாரம் எங்கே வழியாற் கிடைக் கும்! பசி எப்படி நீங்கும்!' என்று தனித்தனி நினைத்து நினைந்துத் துக்கப்படுகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்குவதே சீவகாருணியம். பசியினால் வருந்துகின்றவர்கள் எந்தத் தேசத்தாரா யினும் எந்தச் சமயத்தாராயினும் எந்தச் சாதியாரா யினும் எந்தச் செய்கையாராயினும் அவர்கள் தேச வொழுக்கம் சமயவொழுக்கம் சாதியொழுக்கம் செய் கையொழுக்கம் முதலானவைகளைப் பேதித்து விசாரி

407. குறிப்பது—பி-ம். 408. அதோ—பி-ம்.

யாமல், எல்லாச் சீவர்களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாய்[409] விளங்குவதை அறிந்து பொதுவாகப் பார்த்து அவ்வவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியம். சன்மார்க்க வொழுக்கத்திற்கு ஒத்த சத்துவ ஆகாரத்தால் பசி நிவர்த்தி செய்துகொள்ளத் தக்க மிருகம் பறவை ஊர்வன தாபரம் என்கின்ற உயிர்களுக்குப் பசி வந்தபோது பசி நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியம்.

பசியை நிவர்த்தி செய்துகொள்ளத் தக்க புவன போக சுதந்தரங்களைப் பெறுதற்குரிய அறிவிருந்தும் பூர்வ கர்மத்தாலும் அஜாக்கிரதையாலும் அச் சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் பசியினால் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசி வருத்தத்தை நீக்கித் திருப்தியின்பத்தை உண்டு பண்ணுவதற்குக் காரணமாகிய சீவகாருணியம் என்கின்ற திறவுகோலைக் கொண்டுதான் மோட்சமாகிய மேல் வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அநுபவித்து வாழவேண்டும். ஆகலில், சீவகாருணியமென்கின்ற மோட்ச வீட்டுத் திறவுகோலைக் காலமுள்ள போதே சம்பாதித்துக்கொண்ட சமுசாரிகள் சரியை கிரியை யோகம் ஞானம் என்கிற சாதன சகாயங்களை வேண்டாமல், எக்காலத்தும் அடையாத இன்ப வீட்டை அடைந்து அவ் வீட்டுக் கதவைத் திறந்து

409. பொதுவாக—பி-ம்.

கொண்டு உள்ளே புகுந்து நித்திய முத்தர்களாய் வாழ்வார்கள்.

புண்ணிய பூமிகளை வலஞ்செய்தல் புண்ணிய தீர்த்தங்களி லாடல் புண்ணிய தலங்களில் வசித்தல் புண்ணிய மூர்த்திகளைத் தரிசித்தல் தோத்திரஞ்செய்தல் ஜெபஞ்செய்தல் விரதஞ்செய்தல் யாகஞ்செய்தல் பூசைசெய்தல் முதலிய சரியை கிரியைகளைச் செய்கின்ற விரதிகளும் பத்தர்களும் இருடிகளும், உணவை நீக்கி உறக்கத்தை விட்டு விஷயச் சார்புகளைத் துறந்து இந்திரியங்களை அடக்கி மனோ லயஞ் செய்து யோகத்தி லிருக்கின்ற யோகிகளும், அளவிறந்த சித்தியின்பங்களைப் பெற்ற சித்தர்களும், நித்தியாநித்தியங்களை அறிந்து எல்லாப் பற்றுக்களையும் துறந்து பிரமாநுபவத்தைப் பெற்ற ஞானிகளும், சீவகாருணியம் என்கிற திறவுகோலைச் சம்பாதித்துக் கொள்ளாதவர்களானால், மோட்சமென்கிற மேல்வீட்டிற்கு முன்னும் பின்னுமாக ஏறிச் சமீபத்திற் காத்திருந்து மீளவும் அத் திறவுகோலைச் சம்பாதிக்கத் திரும்புவார்க ளல்லது, கதவைத் திறந்து உள்ளே புகுந்து இன்பத்தை அடைந்து வாழமாட்டார்க ளென்று உண்மையாக அறியவேண்டும். இதனால், அறிவு விளங்கிய சீவர்களுக் கெல்லாம் சீவகாருணியமே கடவுள் வழிபாடென்றும் அறியப்படும்.

அன்றியும், சீவகாருணிய வொழுக்கத்தை உடையவர்களாகி அருந்தல் பொருந்தல் முதலிய பிரபஞ்ச போகங்களை அநுபவிக்கின்ற சமுசாரிக ளெல்லாம்

சர்வ சக்தியை யுடைய கடவு ளருளுக்கு முழுதும் பாத்திரமாவார்கள். ஜீவகாருணிய வொழுக்க மில்லாமல் ஞானம் யோகம் தவம் விரதம் ஜெபம் தியானம் முத லியவைகளைச் செய்கின்றவர்கள்[410] கடவு ளருளுக்குச் சிறிதும் பாத்திர மாகார்கள்; அவர்களை ஆன்மவிளக்க முள்ளவர்களாகவும் நினைக்கப்படாது; ஜீவகாருணிய மில்லாது செய்யப்படுகிற செய்கைக ளெல்லாம் பிர யோஜன மில்லாத மாயாசாலச் செய்கைகளே யாகு மென்று அறியவேண்டும்.

எல்லாச் ஜீவர்களும் கடவுள் இயற்கையுண்மை ஏகதேசங்களாதலாலும் அவரவர் இடங்களிற் கடவுள் அருள் விளக்கம் விளங்குதலாலும், சமுசாரிகளுள் தமது தாய் தந்தை புணர்ந்தோர்[411] மக்கள் துணைவர் முதலிய குடும்ப மட்டில் பசியாற்றிக்கொள்ளத் தக்க அற்ப சக்தியுள்ள சமுசாரிகள் தாய் பிதா மக்கள் துணைவர் முதலிய குடும்பத்தாரைப் பசியினாற் பரத விக்க விட்டு அயலார்க்குப் பசியாற்றத் தொடங்குதலும் தம்மிடத்துப் பசித்து வந்த அயலாரை அந்தப் பசி யால் பரதவிக்க விட்டுத் தம் குடும்பத்தார் பசியை யாற் றத் தொடங்குதலும், கடவுளருக்குச் சம்மத மல்ல. ஆதலால், தமது குடும்பச் செலவைக் கூடியமட்டில் சிக்கனஞ் செய்து[412] இரு திறத்தார் பசியும் நீக்குதல்

---

410. செய்கின்றவர்களும்—பி-ம்.
411. உறவினர்—1885.
412. சிக்கெனச் செய்து—பி-ம்; செட்டாய்ச்செய்து 1896.

வேண்டுமென்றும்; அற்ப சத்தியினுங் குறைவுபட்டுத் தமது குடும்ப மட்டிலும் பசியாற்றுவிப்பதற்குப் பிரயாசையால் மிகச் சிறிய முயற்சியுடைய சமுசாரிகள் தமது குடும்ப மட்டிலாவது பசியாற்றுவித்துக் கொண்டு, தம்மிடத்துப் பசித்து வந்த அயலார் விஷயத்தில் மிகவும் தயவுடையவர்களாகி அவர் பசியை மற்றொருவரைக் கொண்டாவது ஆற்றுவிப்பதற்குத் தக்க முயற்சி யெடுத்துக் கொள்ள வேண்டு மென்றும்; இயல்புள்ள பிரபல சமுசாரிகள் தங்கள் தங்கள் வருவாய்க்குத் தக்கவரையில் தாய் பிதா புணர்ந்தோர் மக்கள் துணைவர் உறவினர் சிநேகர் அதிதிகள்[413] பெரியர்[414] அடிமைகள் அயலார் பகைவர் முதலியவர்களுக்கும், தமது குடும்பத்திற்குச் சகாயமாகத்[415] தேடிய பசு எருது எருமை ஆடு குதிரை தாபர முதலிய பிராணிகளுக்கும், பசியை யாற்றுவித்துத் திருப்தியின்பத்தை உண்டுபண்ணவேண்டு மென்றும்; விவாகம் புத்திரப் பேறு தெய்வம்படைத்தல் முதலிய பலவகைச் செய்கைகளில் வேறு வேறு சடங்குகளும் வேறு வேறு விநோதங்களும் வேறு வேறு பெருமைப்பாடுகளும் குறித்துப் பொருட் செலவு செய்தலை அமைத்து, விவாக முதலிய அந்தந்தச் செய்கைகளிலும் பசித்த சீவர்களுக்குப் பசியை ஆற்றுவித்து இன்பத்தை யுண்டுபண்ணுகின்ற சிறப்பினையே செய்யவேண்டு

413. அடிகள்—பி-ம்; அடியார்கள்—1896.

414. பெரியோர்கள்—1896.

415. சகாய்களாக—பி-ம்; சகாயங்களாக—1896.

மென்றும்—அப்படிச் செய்யில் பசித்தவர் பசி நீங்கி அடைந்த இன்பத்திலும் அனேகமடங்கு அதிகமான இன்பத்தைத் தாம் அடைவார்களென்றும் சத்தியமாக அறிய வேண்டும்.

சமுசாரிகள் விவாக முதலிய விசேஷ காரியங்களில் பந்தலை அலங்கரித்தும், அவ்விடத்தில் வேறு வேறு சடங்குகளைச் செய்வித்தும், ஆடல் பாடல் வரிசை ஊர்வலம் முதலிய விநோதங்களையும் அப்பவர்க்கம் சித்திரான்னம் முதலிய பெருமைப்பாடுகளையும் நடத்தியும், எக்களிப்பில் அழுந்தியிருக்குந் தருணத்தில் பசித்த ஏழைகள் முகத்தைப்[416] பார்க்கவும் சம்மதிக்கவில்லை. இப்படிப்பட்ட சந்தோஷ காலத்தில் தமக்காயினும் தமது மக்கள் துணைவர் முதலியோர்க்காயினும் ஒவ்வோர் ஆபத்து நேரிடுகின்றது. அப்போது அவ்வளவு சந்தோஷத்தையும் இழந்து துக்கப்படுகிறார்கள். இப்படித் துக்கப்படும்போது, அலங்காரஞ் செய்த பந்தலும், சங்கல்ப விகல்பமான சடங்குகளும், ஆடல் பாடல் வாத்தியம் வரிசை ஊர்கோலம் முதலிய விநோதங்களும், அப்பவர்க்கம் சித்திரான்னம் முதலிய பெருமைப்பாடுகளும் அந்த ஆபத்தைத் தடைசெய்யக் கண்டதில்லை. அந்தச் சுப காரியத்தில் உள்ளபடியே பசித்த சீவர்களுக்கு ஆகாரங் கொடுத்துப் பசியை நீக்கி அவர்கள் அகத்திலும் முகத்திலும் கடவுள் விளக்கத்தையும் கடவுளின்பத்தையும் வெளிப்படச் செய்திருந்தார்களானால்,

416. முகம்—பி-ம்.

அந்த விளக்கமும் இன்பமும் அத் தருணத்தில் நேரிட்ட ஆபத்தை நீக்கி விளக்கத்தையும் இன்பத்தையும் சத்தியமாக உண்டுபண்ணு மல்லவா? ஆகலில், விவாக முதலிய விசேஷச் செய்கைகளிலும் தங்கள் தங்கள் தரத்திற்கு ஒத்தபடி பசித்தவர்களது பசியை ஆற்றுவித்துத் திருப்தி யின்பத்தை உண்டுபண்ணுவது முக்கிய மென் றறியவேண்டும். சூலை குன்மம் குஷ்டம் முதலிய தீராத வியாதிகளால் வருந்துகின்ற சமுசாரிகள் தங்கள் தரத்திற்கு ஒத்தபடி பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாக அநுசரித்தார்க ளானால், அந்தச் சீவகாருணிய அநுசரிப்பே நல்ல மருந்தாக அந்த வியாதிகளை நிவர்த்தி செய்து, விசேஷ சௌக்கியத்தை உண்டுபண்ணு மென்பது உண்மை. பலநாள் சந்ததி யில்லாமல் பலபல விரதங்களைச் செய்து வருந்துகின்ற சமுசாரிகள் தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளது பசியை ஆற்றுவிப்பதே விரதமாக அநுசரிப்பார்க ளானால், அந்தச் சீவகாருணிய அநுசரிப்பு நல்ல அறிவுள்ள சந்ததியை உண்டுபண்ணு மென்பது உண்மை. அற்ப வயதென்று குறிப்பினால் அறிந்துகொண்டு இறந்து போவதற்கு அஞ்சி விசாரப்படுகின்ற சமுசாரிகள் தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளுக்குப் பசியை ஆற்றுவிப்பதே விரதமாக அநுசரிப்பார்க ளானால், அந்தச் சீவகாருணிய அநுசரிப்பு தீர்க்காயுளை உண்டுபண்ணு மென்பது உண்மை. கல்வி அறிவு செல்வம் போகம் முதலியவைகளைக் குறித்து

வருந்துகின்ற சமுசாரிகள் தங்கள் தரத்திற்குத் தக்கபடி பசித்த ஏழைகளுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாக அநுசரிப்பார்களானால், அந்தச் சீவகாருணிய அநுசரிப்பு கல்வி அறிவு செல்வம் போகம் முதலானவைகளை உண்டுபண்ணுமென்பது உண்மை.

பசித்தவர்களுக்குப் பசியாற்றுவிப்பதே விரதமாகக் கொண்ட சிவகாருணியமுள்ள சமுசாரிகளுக்குக் கோடையில் வெயிலும் வருத்தாது; மண்ணும் சூடு செய்யாது; பெருமழை பெருங்காற்று பெரும் பனி பேரிடி பெருநெருப்பு முதலிய உற்பாதங்களும் துன்பம்[417] செய்விக்கமாட்டா; விடூசிகை விஷக்காற்று விஷசுரம் முதலிய அஜாக்கிரதைப் பிணிகளு[418] முண்டாகா; அந்தச் சிவகாருணியமுள்ள சமுசாரிகள் ஆற்று வெள்ளத்தாலும் கள்ளர்களாலும் விரோதிகளாலும் கலக்கப்படார்கள்; அரசர்களாலும் தெய்வங்களாலும் அவமதிக்கப்படார்கள்; சீவகாருணியமுள்ள சமுசாரிகளது விளைநிலத்தில் பிரயாசையில்லாமலே விளைவு மேன்மேலும் உண்டாகும்; வியாபாரத்தில் தடையில்லாமல் லாபங்களும், உத்தியோகத்திற் கெடுதியில்லாத மேன்மையும் உண்டாகும்; சுற்றங்களாலும் அடிமைகளாலும் சூழப்படுவார்கள்; துஷ்ட மிருகங்களாலும் துஷ்ட ஜந்துக்களாலும் துஷ்டப் பசாசுகளாலும் துஷ்ட தெய்வங்களாலும் பயஞ்செய்யப்படார்கள்;

417. பயம்—பி-ம்.

418. அசாத்தியப் பிணிகளு—1896.

சீவகாருணிய முள்ள சமுசாரிகளுக்கு எப்படிப்பட்ட ஆபத்துக்களும் அஜாக்கிரதையினாலும் ஊழ்வகையி னாலும் சத்தியமாக வராது.[419] ,,

பசித்தவர்களுக்குப் பசியாற்றுவித்து இன்பத்தை உண்டுபண்ணுகின்ற சீவகாருணிய வொழுக்கமாகிய மேலான விரதமானது தேவர்கள் மனிதர்கள் பிரமசாரி கள் சமுசாரிகள் தபசிகள் சந்நியாசிகள் ஆண்சாதியர் பெண்சாதியர் வார்த்திபர் வாலிபர் உயர்ந்தோர் தாழ்ந்தோர் முதலிய யாவராலும் அவசியம் செய்யத் தக்க தென்பது கடவுளாணை யென் றறியவேண்டும்.

பசித்தவர்க்குப் பசியை நீக்குகின்ற விஷயத்தில் புருஷனைப் பெண்சாதி தடுத்தாலும், பெண்சாதியைப் புருஷன் தடுத்தாலும், பிள்ளைகளைத் தந்தை தடுத்தா லும், தந்தையைப் பிள்ளைகள் தடுத்தாலும், சீஷரை ஆசாரியர் தடுத்தாலும், அடியாரை ஆண்டவன் தடுத் தாலும், குடிகளை அரசன் தடுத்தாலும் அந்தத் தடை களால் சிறிதுந் தடைபடாமல் அவரவர் செய்த நன்மை தீமைகள் அவரவரைச் சேருமல்லது வேறிடத் திற் போகா வென்பதை உண்மையாக நம்பிச் சீவ காருணிய வொழுக்கத்தை நடத்தவேண்டு மென்றும் அறியவேண்டும்.

உள்ளபடி பசியால் வருந்துகின்ற சீவர்களுக்கு ஆகாரங் கொடுக்க நினைத்தபோது, நினைத்த புண்ணி யரது மனம் வேறு பற்றுக்களை விட்டுச் சுத்தக் கரண மாகி நினைத்தபடியால், அந்தப் புண்ணியர்களை யோகிக

---

419. வாராது — பி-ம்.

ளென்றே உண்மையாக அறியவேண்டும். ஆகாரங் கொடுக்க நினைத்தபடி உபசரித்துக் கொடுக்கும்போது, அவ ருண்ணுவது தா முண்ணுவதாக அறிந்து களிக் கின்றபடியால், ஞானிக ளென்றே உண்மையாக அறிய வேண்டும். ஆகாரங் கொடுக்க உண்டு பசி தீர்ந்தவர் களுக்கு அத் தருணத்தில் ஆன்மாவின் உள்ளும் புறத் தும் கீழும் மேலும் நடுவும் பக்கமும் நிறைந்து கரண முதலிய தத்துவங்க ளெல்லாம் குளிர்வித்துத் தேக முழுதும் சில்லென்று தழைய முகத்தினிடமாகப் பூரித்து விளங்குகின்ற கடவுள் விளக்கத்தையும் திருப்தி யின்பமாகிய கடவுள் இன்பத்தையும் பிரத்தி யட்சத்தில் தெரிசித்து அநுபவிக்கின்றார்க ளாதலால், அந்தப் புண்ணியர்கள் கடவுளைக் கண்டவர்க ளென் றும் கடவு ளின்பத்தை அநுபவிக்கின்ற முத்த ரென் றும் அறியவேண்டும். பசி நீங்க உண்டு சந்தோஷித் தவர்கள் இந்தப் புண்ணியர்களைத் தெய்வமாகப் பா விக்கின்றார்க ளாதலால், இவர்களே தெய்வமு மென்று உண்மையாக அறியவேண்டும்.

சீவகாருணிய வொழுக்க முடையவர்களாகிச் சீவர் களைப் பசி யென்கின்ற அபாயத்தில் நின்றும் நீக்கச் செய்கின்ற உத்தமர்கள், எந்தச் சாதியா ராயினும், எந் தச் சமயத்தா ராயினும், எந்தச் செய்கையை யுடைய வர்க ளாயினும், தேவர் முனிவர் சித்தர் யோகர் முதலிய யாவராலும் வணங்கத் தக்க சிறப்புடையர் ஆவர்க ளென்று[420] சர்வ சத்தியை யுடைய கடவுள்

420. ஆவார்கள்—பொ. சுந்தரம்பிள்ளை பதிப்பு, 1892.

சாட்சியாக சத்தியஞ் செய்யப்படு மென்று[421] அறிய வேண்டும்.

இன்னும் இந்தச் சீவகாருணிய வொழுக்கத்தின் விரிவைச் சமரச வேதத்திற் கண்டுகொள்ளலாம்.[422]

பிரபவஹு சித்திரைமீ[423]

திருச்சிற்றம்பலம்

**ஜீவகாருண்ய ஒழுக்கம் முதற் பிரிவு முற்றிற்று.**

---

421. செய்வோ மென்று—1885.

422. 424-வது அடிக் குறிப்பைப் பார்க்க.

423. அதாவது, 1867; இத் தேதிக் குறிப்பு மூன்று கைஎழுத்துப் பிரதிகளில் காண்கிறது. 'சன்மார்க்க விளக்கம்' 'பொதுவேதம்' முதலியவற்றைச் சுவாமிகள் எழுதுவது குறித்து, அவர்கள் அக்ஷய ஹூ சித்திரை மீ (1866, ஏப்ரல், 20) பேரன்பர் ஸ்ரீ இறுக்கம் இரத்தின முதலியார்க்கு எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதைத் திருமுகப் பகுதி, 78,79,80-வது பக்கங்களில் காண்க.

உ

# உ. சன்மார்க்க விளக்கத்தின் முதற்பிரிவாகிய ஜீவகாருண்ய ஒழுக்கம்

## இரண்டாவது பிரிவு424

## ஆன்ம இன்ப வாழ்வு

---

திருச்சிற்றம்பலம்

உலகத்தில் உயர் பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க தலைப்பட்ட ஆன்ம இன்ப சுகத்தைக்

---

424. ஜீவகாருண்ய ஒழுக்கம் இரண்டாவது மூன்றாவது பிரிவுகள் என்று இங்கு அச்சிட்டிருப்பதற்குக் கிடைத்தது சுவாமிகளிடம் தொண்டுபூண்டிருந்த ஓரன்பரின் பழைய கைஎழுத்துப் பிரதியே. அதன் தலைப்பில் "திருச்சிற்றம்பலம். சன்மார்க்க விளக்கம் முதற்பிரிவு—ஜீவகாருண்ய ஒழுக்கம்" என்று மட்டும் குறித்திருக்கிறதே தவிர, அதில் விஷயம் இரண்டாவது மூன்றாவது என்னும் பிரிவில்லாது, தொடர்ந்தே எழுதப் பட்டிருக்கிறது.

முதற்பிரிவின் இறுதியில் "விரிவைச் சமரச வேதத்திற் கண்டு கொள்ளலாம்" என்றிருப்பதைக் கொண்டும், திருமுகப் பகுதி 166, 168-வது பக்கங்களில் பேரன்பர் ஸ்ரீ இறுக்கம் இரத்தின முதலியாரவர்கள் விபவ சுக்ல வருஷங்களில் (1869) ஜீவகாருண்ய ஒழுக்கம் எழுதி முடிந்ததைக் குறித்து வினவுவதைக் கொண்டும், இதில் 168-வது பக்கத்தில் "மூன்றாவது பிரிவில் கண்டு கொள்ளப்படும்" என்றிருப்பதைக் கொண்டும், விஷயத்தின் இயல்பான போக்கை அநுசரித்தும், இது இங்கு ஒருவாறு மூன்று பிரிவினதாகக் கொண்டு அச்சிட்டிருக்கிறது.

இதில் ஒரு பகுதி 1913-ம் ஹு பிப்ரவரி, மார்ச்சு, எப்ரல் மாதங்களின் சித்தாந்தப் பத்திரிகையில் முதல்

காலமுள்ள போதே விரைந்து அறிந்து அடைய வேண்டும்.

அந்தத் தலைப்பட்ட ஆன்ம இன்ப வாழ்வு எத்தனை வகையென் றறியவேண்டில்: இம்மை யின்ப வாழ்வு, மறுமை யின்ப வாழ்வு, பேரின்ப வாழ்வு என மூன்று வகையென்று அறிய வேண்டும்.

அவற்றுள் சிறிய தேககரணங்களைப் பெற்றுச் சிறிய முயற்சியால் சிறிய விடயங்களைச் சில நாள் அனுபவிக்கின்ற இன்பத்தை இம்மை யின்பம் என்றறியவேண்டும்.

இம்மை இன்ப லாபமாவது: மனிதப் பிறப்பில் தேகத்திலும் கரணங்களிலும் புவனத்திலும் போகங்களிலும் குறைவின்றி நல்லறிவு உடையவர்களாய், பசி பிணி கொலை முதலிய தடைக ளில்லாமல், உறவினர் சிநேகர் அயலார் முதலியருந் தழுவ, சந்ததி விளங்கத் தக்க சற்குணமுள்ள மனைவியுடன், விடயங்களைச் சில நாள் அனுபவிக்கின்றதை இம்மை யின்ப லாபம் என் றறியவேண்டும்.

மறுமை யின்பமாவது யாதெனில்: உயர் பிறப்பில் பெரிய தேக கரணங்களைப் பெற்றுப் பெரு

---

முதல் அச்சாயிருக்கிறது. இன்னுமொரு பகுதி இந்த வசனப்பகுதி முதல் பதிப்பில் 1931-ம் ஹூ மே மாதம் முதல்தரம் வெளிவந்தது. எஞ்சியவை இதன்மூலம் இப்போதுதான் வெளியாகிறது.

மேற்கொண்டிருக்கும் மற்றப் பாகங்களும் கிடைக்கும் திருநாளைத் திருவருள் துணைபற்றி இன்னும் எதிர்பார்க்கவேண்டி யிருக்கிறது.

முயற்சியால் பெரிய விஷயங்களைப் பலநாள் அனுபவிக்கின்ற இன்பத்தை மறுமை யின்பம் என் றறிய வேண்டும்.

மறுமை யின்ப லாபம் யாதெனில்: உயர் பிறப்பைப் பெற்று இம்மை யின்ப லாபத்தில் குறிக்கப்பட்ட நற்குணங்க ளெல்லாம் பொருந்த உயர் நிலையில் சுத்த விடயங்களைப் பல நா ளனுபவிக்கின்ற இன்ப லாபத்தை மறுமை யின்ப லாப மென் றறியவேண்டும்.

பேரின்பமாவது: எல்லாத் தேகங்களையும் எல்லாக் கரணங்களையும் எல்லாப் புவனங்களையும் எல்லாப் போகங்களையும் தமது பூரண இயற்கை விளக்கமாகிய அருட்சத்தியின் சந்நிதி விசேடத்தால் தோன்றி விளங்க விளக்கஞ் செய்விக்கின்ற பூரண இயற்கை உண்மை வடிவினராகிய கடவுளின் பூரண இயற்கை இன்பத்தைப் பெற்று, எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் தடைபடாமல் அனுபவிக்கப்படுகின்ற ஒப்பற்ற அந்தப் பெரிய இன்பத்தைப் பேரின்ப மென் றறிய வேண்டும்.

பேரின்ப லாபம் யாதெனில்: யாவுந் தாமாய் விளங்குவதே.

இம்மை இன்பத்தை யடைந்தவர் பெருமை எதுவென் றறியவேண்டில்: அன்பு தயை ஒழுக்கம் அடக்கம் பொறுமை வாய்மை தூய்மை முதலிய சுப குணங்களைப் பெற்று விடய இன்பங்களை வருந்தி முயன்று அனுபவித்துப் புகழ்பட வாழ்தலென் றறிய வேண்டும்.

மறுமை யின்ப லாபத்தை யடைந்தவர் பெருமை யாதென் றறியவேண்டில்: அன்பு தயை முதலிய சுப குணங்களைப் பெற்றுச் சுத்த விடய இன்பங்களை எண்ணியபடி தடைபடாமல் முயன்று பல நாளனுப வித்துப் புகழ்பட வாழ்தலென் றறியவேண்டும்.

பேரின்ப லாபத்தை யடைந்தவர் பெருமை எது என் றறியவேண்டில்:—தோல் நரம்பு என்பு தசை இரத்தம் சுக்கிலம் முதலிய அசுத்த பூத காரியங் களும் அவற்றின் காரணங்களாகிய அசுத்த பிரகிருதி அணுக்களுமாகிய தேகத்தை மாற்றி, மாற்று இவ் வளவு என் றறியப்படாத உயர்ந்த பொன்னாகிய சுத்த பூத காரிய தேகத்தையும், பொன்வடிவாகத் தோன்று தல் மாத்திரமே யன்றி ஆகாயம்போல் பரிசிக்கப் படாத சுத்த பூத காரண தேகத்தையும், தோன்றப்படு தலு மின்றி ஆகாயம்போல் விளங்குகின்ற ஞான தேகத்தையும் பெற்றவர்களா யிருப்பார்கள். உள்ளே மண்ணினது திண்மையால் தறிக்கப்படார்கள்; புறத் தே மண் கல் முதலியவற்றால் எறியினும் அவை அவர் வடிவில் தாக்குவன வல்ல. உள்ளே நீரினது தண்மை யால் குளிரப்படார்கள்; புறத்தே நீரி லமுத்தினும் அவர் வடிவம் அழுந்தாது. உள்ளே நெருப்பினது வெம்மையால் சுடப்படார்கள்; புறத்தே நெருப்பிற் சுடினும் அவர் தேகத்தில் சூடும் வடுவும் தோன்றுவன வல்ல. உள்ளே காற்றினது ஊக்கத்தால் அசைக்கப் படார்கள்; புறத்தே காற்று அவர் வடிவைப் பரிசித் தசைக்கமாட்டாது. உள்ளே ஆகாயத்தினது கலப்

பினால் அந்தரிக்கப்படார்கள்; புறத்தே ஆகாயம் அவர் தேகத்தை அந்தரிக்கமாட்டாது. ஆதாரத்தி லன்றி நிராதாரத்திலும் அவர் தேகம் உலாவும். அவரது கண்கள் முதலிய ஞானேந்திரியங்களும் வாக்கு முதலிய கர்மேந்திரியங்களும் பார்த்தல் முதலிய விஷயங்களையும் பேசுதல் முதலிய விஷயங்களையும் பற்று வன வல்ல; தயையினால் விஷயங்களைப் பற்றவேண்டில், சுவர் மலை முதலிய தடைகளும் அவர் கண்களை மறைப்பன வல்ல. அண்ட பிண்டங்களில் அகம் புறம் முதலிய எவ்விடத்து முள்ள விடயங்களை அவர் கண்கள் இருந்த விடத்திருந்தே கண்டறியும். அண்ட பிண்டங்களி லெவ்விடத்திருந்து பேசினும் அவர் செவிகள் இருந்த விடத்திருந்தே கேட்டறியும். எவ்விடத்திருக்கின்ற ரசங்களையும் அவர் நா இருந்த விடத்திருந்தே சுவைத்தறியும். எவ்விடத் திருக்கின்ற பரிசங்களையும் அவர்மெய் இருந்த விடத்திருந்தே பரிசித்தறியும். எவ்விடத் திருக்கின்ற கந்தங்களையும் அவர் நாசி இருந்த இடத் திருந்தே முகர்ந்தறியும். எவ்விடத்தி லிருக்கின்றவர்களுக்கும் அவரது கைகள் இருந்த விடத்திருந்தே கொடுத்தல் கூடும். எவ்விடத்திலும் அவரது கால்கள் இருந்த விடத்திருந்தே நடத்தல் கூடும். அவரது வாக்கு எவ்விடத்தி லிருக்கின்ற எவ்வெவர்களோடும் இருந்த விடத்திருந்தே பேசுதல் கூடும். மற்ற இந்திரியங்கள் இருந்த விடத்திருந்தே எவ்விடத்தும் ஆனந்தித்தல் கூடும். அவரது மன முதலான கரணங்கள் எப்படிப்பட்ட விஷயங்களையும்

பற்றுவன வல்ல; தயவினால் பற்றத் தொடங்கில் எல்லா உயிர்களினது எல்லாச் சங்கற்ப விகற்பங்களையும் ஒரு நிமிடத்தில் ஒருங்கே நினைத்து விசாரித்து நிச்சயித்துக் கொள்ளும். அவரறிவு ஒன்றையும் சுட்டியறியாது; தயவினால் சுட்டியறியத் தொடங்கில் எல்லா அண்டங்களையும் எல்லா வுயிர்களையும் எல்லாப் பண்புகளையும் எல்லா அநுபவங்களையும் எல்லாப் பயன்களையும் ஒருங்கே ஒரு நிமிடத்தில் சுட்டியறியும். அவர்கள் நிர்க்குணத்தராவார்கள் அல்லது, தாமச இராசத (சாத்துவிக)[425] முதலிய முக்குணங்களாலும் உள்ளே விகாரப்படார்கள்; புறத்தே அவரது குணங்கள் கரணங்களைப்[426] பற்றுவனவல்ல. உள்ளே பிரகிருதியினால் மூடப்படார்கள்; புறத்தே அவரது பிரகிருதி குணங்களைப் பற்றுவனவல்ல. உள்ளே கால தத்துவத்தால் வேற்றுமைப்படார்கள்; புறத்தே காலத்தால் அவரது திருமேனி தடைபடாது. உள்ளே நியதி அளவால் அளக்கப்படார்கள்; புறத்தே நியதியால் அவரது திருமேனி வரைபடாது. அன்றிக் காலம் வித்தை ராகம் புருடன் முதலிய மற்றைத் தத்துவங்களும் தத்துவ காரியங்களும் அவர்களுக்கு இல்லை. மாயையால் பேதப்படார்கள்; சுத்த மகா மாயையைக் கடந்து அதன்மேல் அறிவுருவாக விளங்கு

---

425. 'சாத்துவிக' என்பது பிரதியில் விடுபட்டிருக்கிறது எழுதும் போது நேரிட்ட சோர்வினாற் போலும்.

426. 'காரணங்களை' என்று பிரதியில் இருக்கிறது எழுதும் போது உண்டான வழுப்போலும்.

வார்கள். ஆகாரம் நித்திரை மைதுனம் பயம் என்பவைகளால் தடைபடார்கள். அவர்கள் தேகத்திற்குச் சாயை வியர்வு அழுக்கு நரை திரை மூப்பு இறப்பு முதலிய குற்றங்கள் உண்டாவன வல்ல. பனி மழை இடி வெயில் முதலியவற்றாலும், இராக்கதர் அசுரர் பூதம் பசாசு முதலியவற்றாலும், தேவர் முனிவர் மனிதர் நரகர் மிருகம் பறவை ஊர்வன தாபரம் என்பவைகளாலும் எவ்விடத்தும் எக்காலத்தும் அவர் தேகம் வாதிக்கப்படாது; வாள் கத்தி முதலிய கருவிகளாலும் கண்டிக்கப்படாது. எல்லா அண்டங்களும் அணுக்கள் போலச் சிறிதாகத் தோற்றலும் எல்லா அணுக்களும் அண்டங்கள் போலப் பெரிதாகத் தோற்றலும் அவர் தேகத்திற்கு உரித்து. இறந்தோரை யெழுப்புதல் வார்த்திபரை வாலிபராக்கல் முதலிய கருமசித்திகளும் யோகசித்திகளும் ஞானசித்திகளும் அவர் சந்நிதியில் இடைவிடாது விளங்கும். சிருஷ்டித்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அனுக்கிரகித்தல் என்கின்ற கிருத்தியங்களும் அவர் நினைத்த மாத்திரத்தில் நடக்கும். பஞ்சகர்த்தாக்களும் அவர் கடைக்கண் பார்வையால் தங்கள் தங்கள் தொழில் நடத்துவார்கள். அவர்கள் அறிவு கடவு ளறிவாக இருக்கும். அவர்கள் செய்கை கடவுள் செய்கையாக இருக்கும். அவர்கள் அனுபவம் கடவுள் அனுபவமாக இருக்கும். சர்வ சக்தியு முடையவர்களாய், எக்காலத்தும் அழிவில்லாதவர்களாய், ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களும் அம் மலவாதனைகளும் இல்லாதவர்களாய்,

பேரருள் வண்ண முடையவர்களாய் விளங்குவார்கள். ஜடமாகிய ஒரு துரும்பும் அவரது திருநோக்கத்தால் உயிர்பெற்றுப் பஞ்ச கிருத்தியங்களும் செய்யும். அவரது பெருமை வேதாந்த சித்தாந்த கலாந்த போதாந்த நாதாந்த (யோகாந்தம்)[427] என்கின்ற ஆறந்தங்களிலும் விளங்கும்; அவற்றைக் கடந்தும் விளங்கு மென்று அறியவேண்டும்—இவை பேரின்ப லாபத்தை யடைந்தவர் பெருமை யென்று அறியவேண்டும்.

இம் மூவகை இன்ப லாப வாழ்வையும் எதனால் பெறக்கூடு மென் றறியவேண்டில்: கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளின் ஏகதேசத்தைக் கொண்டும் அருட் பூரணத்தைக் கொண்டும் அடையக்கூடு மென்று அறியவேண்டும்.

இம் மூவகை இன்பங்களில் 'அருளின் ஏகதேசத்தைக் கொண்டு அடையத்தக்கவை எவை? அருட் பூரணத்தைக் கொண்டு அடையத்தக்கது யாது?' என் றறியவேண்டில்: இம்மை யின்ப லாபம் மறுமை யின்ப லாபம் என்கின்ற இரண்டையும் அருளின் ஏகதேசத்தைக் கொண்டு அடையக்கூடு மென்றும் பேரின்ப லாப மென்கின்ற ஒன்றையும் அருட் பூரணத்தைக் கொண்டு அடையக்கூடு மென்றும் அறியவேண்டும்.

கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருள் எந்த

427. 'யோகாந்தம்' என்பது பிரதியில் விடுபட்டிருக்கிறது எழுதும்போது நேரிட்ட சோர்வினாற் போலும்.

வண்ணத்தை உடையது என்றறியவேண்டில்: சொல்லுவார் சொல்லும் வண்ணங்களும் நினைப்பார் நினைக்கும் வண்ணங்களும் அறிவார் அறியும் வண்ணங்களும் அனுபவிப்பார் அனுபவிக்கும் வண்ணங்களும் ஆகிய சர்வ சத்தி வண்ணங்களும் தனது ஏகதேச வண்ணங்களாக விளங்க விளக்கி விளங்குகின்ற பூரண விளக்க வண்ணத்தை யுடையது என்று அறிய வேண்டும்.

அந்த அருள் எவ்விடத்து விளங்குகின்றதென்று அறியவேண்டில்: நோக்குவார் நோக்கு மிடம் நோக்கப்படு மிடம், கேட்பார் கேட்கு மிடம் கேட்கப்படு மிடம், சுவைப்பார் சுவைக்கு மிடம் சுவைக்கப்படு மிடம், முகர்வார் முகரு மிடம் முகரப்படு மிடம், பொருந்துவார் பொருந்து மிடம் பொருந்தப்படு மிடம், பேசுவார் பேசுமிடம் பேசப்படு மிடம், செய்வார் செய்யு மிடம் செய்யப்படு மிடம், நடப்பார் நடக்கு மிடம் நடக்கப்படு மிடம், விடுவார் விடு மிடம் விடுக்கப்படு மிடம், நினைப்பார் நினைக்கு மிடம் நினைக்கப்படு மிடம், விசாரிப்பார் விசாரிக்கு மிடம் விசாரிக்கப்படு மிடம், துணிவார் துணியு மிடம் துணியப்படு மிடம், தூண்டுவார் தூண்டு மிடம் தூண்டப்படு மிடம், அறிவார் அறியு மிடம் அறியப்படு மிடம், அனுபவிப்பார் அனுபவிக்கு மிடம் அனுபவிக்கப்படு மிடம் முதலிய எவ் விடங்களினும் எக் காலத்தும் விளங்குகின்றதென்று அறியவேண்டும்.

அந்த அருளை எதனாற் பெறக்கூடுமென்றறிய

வேண்டில் : சீவகாருணிய[428] ஒழுக்கத்தினாற் பெறக் கூடும் என்றறியவேண்டும்.

சீவகாருணிய ஒழுக்கத்தினால் அருளைப் பெறக் கூடுமென்பது எப்படியென்றறிய வேண்டில்:—அருள் என்பது கடவுள் இயற்கை விளக்கம் அல்லது கடவுள் தயவு. சீவகாருணியமென்பது ஆன்மாக்களின் இயற்கை விளக்கம் அல்லது ஆன்மாக்கள் தயவு. இதனால், ஒருமைக் கரணமாகிய சிறிய விளக்கத்தைக் கொண்டு பெரிய விளக்கத்தைப் பெறுதலும் சிறிய தயவைக்கொண்டு பெரிய தயவைப் பெறுதலும் கூடும். சிறு நெருப்பைக் கொண்டு பெரு நெருப்பைப் பெறுதல் போலவென்றறிய வேண்டும்.

இதனால் சீவகாருணிய ஒழுக்கமே சன்மார்க்கமென்றறியப்படும். சீவகாருணியம் விளங்கும்போது அறிவும் அன்பும் உடனாக விளங்கும்; அதனால் உபகார சத்தி விளங்கும்; அந்த உபகார சத்தியால் எல்லா நன்மைகளும் தோன்றும். சீவகாருணியம் மறையும் போது அறிவும் அன்பும் உடனாக நின்று மறையும்; அதனால் உபகாரசத்தி மறையும்; உபகாரசத்தி மறையவே எல்லாத் தீமைகளுந் தோன்றும். ஆகலில் புண்ணியமென்பது சீவகாருணியமொன்றே யென்றும், பாபமென்பது சீவகாருணியமில்லாமை யொன்றே

---

428. பிரதியில் பெரும்பாலும் ' ஜீவகாருண்யம் ' ' ஜீவன் ' என்றிருப்பனவற்றை முதற்பிரிவுக்கு இயைபுபட இங்குச் சீவகாருணியம்' ' சீவன் ' என்று கொண்டிருக்கிறது.

யென்றும் அறியவேண்டும். அன்றி, சீவகாருணிய ஒழுக்கத்தினால் வரும் விளக்கமே கடவுள் விளக்க மென்றும், அதனால் வரும் இன்பமே கடவுள் இன்ப மென்றும், இவ் விளக்கத்தையும் இன்பத்தையும் பலகா லறிந்து அடைந்து அனுபவித்து நிறைவு பெற்ற சாத்திய ஞானிகளே மேற் குறித்த பேரின்ப லாபத் தைப் பெற்ற முத்தர்க ளென்றும், அவர்களே கடவுளை அறிவா லறிந்து கடவுள்மய மானவர்க ளென் றும் சத்தியமாக அறியவேண்டும்.

சீவகாருணிய ஒழுக்கத்தின் இலக்கணம் என் னென்று அறியவேண்டில்: சீவர்களுக்கு சீவர்கள் விஷ யத்தில் பொதுவாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத் தைக் கொண்டு கடவுள் வழிபாடு செய்து வாழ்தல் என்று அறியவேண்டும்.

சீவர்கள் விஷயமாக உண்டாகின்ற ஆன்ம உருக் கத்தைக் கொண்டு கடவுள் வழிபாடு செய்வது எப்படி என் றறியவேண்டில்: சீவர்களுக்குச் சீவர்கள் விஷய மாக ஆன்மஉருக்கம்—காருணியம்—உண்டாக உண் டாக அந்த ஆன்மாவின் உள்ளிருக்கின்ற கடவுள் விளக்கமாகிய அருள் வெளிப்பட்டுப் பூரணமாக விளங் கும்; அத் திருவருள் விளங்கவே கடவுள் இன்பம் அனுபவமாகிப் பூரணமாகும். அவ் வனுபவம் பூரண மாதலே கடவுள் வழிபாடு என்றறிய வேண்டும்.

ஆன்ம உருக்கம் உண்டாக உண்டாக ஆன்மா வின் உள்ளிருக்கின்ற கடவுள் விளக்கமாகிய அருள் வெளிப்படுவது எப்படி யென் றறிய வேண்டில்: தயிருக்

கும் கட்டைக்கும் கடைதலால் நெகிழ்ச்சி உண்டாக உண்டாக அதன். அதன் உள்ளிருக்கின்ற வெண்ணெயும் நெருப்பும் வெளிப்படுவதுபோல் வெளிப்படுமென்று அறியவேண்டும்.

திருவருள் விளங்க அதனால் "கடவுள் இன்பம் அனுபவமாகிப் பூரணமாவது எப்படி யென் றறிய வேண்டில்: வெண்ணெயும் நெருப்பும் வெளிப்படவே அவற்றின் உண்மைத் தன்மை அனுபவமாகிப் பூரணமாவது போல், கடவுள் இன்பம் பூரணமாகு மென் றறியவேண்டும்.

சீவர்களுக்குச் சீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம் எப்போது வெளிப்படு மென் றறியவேண்டில்: பசி கொலை பிணி ஆபத்து தாகம் பயம் இன்மை இச்சை இவைகளால் சீவர்கள் துக்கத்தை அனுபவிக்கக் கண்டபோதும் கேட்டபோதும் அறிந்தபோதும் ஆன்ம உருக்கம் உண்டாகு மென் றறியவேண்டும்.

பசி என்பது, ஆகாரம் பெறாமையால் வயிற்றினுட்பற்றி நின்று தேகத்தின் அகத்தும் புறத்தும் உள்ள கருவி கரணங்களின் தன்மைகளைச் சுடுதல் செய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்துவித்தற்கு முதற் காரண மாகிய விகற்ப மாயாகாரியப் பிண்டப்பகுதி நெருப்பு; கொலை என்பது, தேகத்தின் அகத்தும் புறத்துமுள்ள கருவி கரணங்களைப் பலவேறு கருவி கரணப் புடை பெயர்ச்சிகளால் பதைப்புண்டாகக் கலக்கஞ்செய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்துவித்தற்கு நிமித்தமாகிய

விகற்ப பூத காரியக் கொடுந்தொழில்; பிணி யென்பது, வாத பித்த சிலேட்டும விகற்பங்களால் மாறுபட்டு, தேகத்தின் அகத்தும் புறத்தும் உள்ள கருவி கரணங் களை நலிவுசெய்து அறிவை மெலிவித்து ஆன்மாவை வெளிப்படுத்துவித்தற்கு நிமித்தமாக நின்ற விகற்ப மாயா காரியப் பிண்டப் பகுதி வேற்றுமை விளைவு; ஆபத்து என்பது, அகங்காரத்தாலும் மறதியாலும் கரும வேறுபாட்டாலும் தேகபோக அனுபவங்களைத் தடுக்கின்ற விக்கினங்கள்; பய மென்பது, தேக முதலிய கருவிகளுக்கு நட்டஞ் செய்வதாகிய விடயங்கள் நேரிட்டபோது கரணங்களுக்கும் அறிவுக்கும் உண்டா கின்ற நடுக்கம்; இன்மை யென்பது, கல்வி செல்வம் முதலிய கருவிகளைத் தற்சுதந்தரத்திற் பெறாமை; இச்சை யென்பது, அடையக் கருதிய விடயங் களில் அருமை குறித்து அவற்றை மேன்மேலும் கருதச் செய்கின்ற சித்த விருத்தி—என்று அறிய வேண்டும்.

இவற்றுள் பசி கொலை என்பவை இம்மை இன் பம் மறுமை இன்பம் பேரின்பம் என்கிற மூன்றையும் தடுத்தலால் முதற்பட்ட தடையென்றும், பிணி பயம் ஆபத்து இன்மை என்பவை இம்மை மறுமை இன் பங்களைச் சிறிது தடுத்தலால் இடைப்பட்ட தடை யென்றும், ஆசை இம்மையின்பத்தைச் சிறிது தடுத்த லால் கடைப்பட்ட தடையென்றும் அறியவேண்டும்.

சீவகாருண்யத்தின் வல்லபம் யாதென் றறிய வேண்டில்: பிற வுயிர்களிடத்துப் பசி கொலை முதலிய

வற்றுள் எதனாற் காருணியந் தோன்றியதோ அதனால் அவ்வுயிர்கள் வருந்தாதபடி அதை நீக்குதற்கு முயல் விப்பது அதன் வல்லப மென் றறியவேண்டும்.

சீவகாருணியத்தின் பிரயோசனம் யாதென் றறியவேண்டில்: உயிர்களுக்கு இன்பம் உண்டுபண்ணு வது அதன் பிரயோசனம் என் றறியவேண்டும்.

இந்தச் சீவகாருணியத்தின்* சொரூப ரூப சுபாவ வியாபக முதலியவைகள் மூன்றாவது பிரிவில் கண்டு கொள்ளப்படும்.[429]

திருச்சிற்றம்பலம்

**ஜீவகாருண்ய ஒழுக்கம் இரண்டாவது பிரிவு முற்றிற்று.**

---

* 'இந்தக் காருண்யத்தின்' என்று பிரதியில் இருப்பது எழுதும் போதுண்டான சோர்வினாற் போலும்.

429. 424-வது அடிக்குறிப்பைப் பார்க்க.

# உ. சன்மார்க்க விளக்கத்தின் முதற்பிரிவாகிய ஜீவகாருண்ய ஒழுக்கம்

## மூன்றாவது பிரிவு[430]

## ஜீவகாருண்யத்தின் சொரூபம் முதலியன.

---

*திருச்சிற்றம்பலம்*

*சீவகாருணிய மாகிய ஆன்ம உருக்கம் உண்டாவதற்கு உரிமை யெது வென் றறியவேண்டில்:—சீவர்களெல்லாம் ஒரு தன்மையாகிய கடவு ளியற்கை உண்மை ஏகதேசங்களாகிக் கடவு ளருட்சத்தியால் பூத காரியதேகங்களில் வருவிக்கப்பட்டபடியால் இச்சீவர்களெல்லாம் ஒருரிமை இனத்தவர்களே யாகும். சகோதரர்களுள் ஒருவர் ஒரு ஆபத்தால் துக்கப்படுவதைக் கண்டபோதும் கேட்டபோதும் அறிந்தபோதும் —அவர் தேகம் தமது சகோதர தேக மென்று தெரிந்து கொண்ட—மற்றொரு சகோதரருக்கு உருக்கமுண்டாவது தேக வுரிமையால் என்று அறிவதுபோல், ஒரு சீவன் ஒரு ஆபத்தால் துக்கப்படுவதைக் கண்ட போதும் கேட்டபோதும் அறிந்தபோதும் அந்த சீவனைத் தமது ஆன்ம இனம் என்று தெரிந்து கொண்ட மற்றொரு சீவனுக்கு உருக்க முண்டாவது ஆன்ம உரிமை யென் றறியவேண்டும்.*

*சீவர்கள் துக்கப்படுவதைக் கண்டபோதும் சிலர் சீவகாருணிய மில்லாமல் கடின சித்தர்களாக விருக்கின்*

---

430. 424-வது அடிக்குறிப்பைப் பார்க்க.

றூர்களே, இவர்களுக்கு ஆன்ம உரிமை யில்லாமற் போவது என்னென் றறிய வேண்டில்: துக்கப்படுகின்ற சீவரைத் தமது ஆன்மஇனமென்றும் துக்கப்படுகின்றா ரென்றும் அறியத் தக்க ஆன்ம அறிவு என்கின்ற கண் ணானது அஞ்ஞான காசத்தால் மிகவும் ஒளிமழுங் கின படியாலும் அவைகளுக்கு[431] உபகாரமாகக் கொண்ட மனமுதலான உபநயனங்களாகிய கண்ணா டிகளும் பிரகாசப் பிரதிபலித மில்லாமல் தடிப்புள் ளவைகளாக இருந்தபடியாலும் கண்டறியக் கூடாமை யாயிற்று. அதனால் ஆன்ம உரிமை இருந்தும் சீவ காருணிய மில்லாமல் இருந்த தென் றறியவேண்டும்.

ஆனால் இந்த ஆன்ம உருக்கம் என்கின்ற சீவகா ருணியத்திற்கு ஆற்ற லெவ்விடத்து உண்டாகு மென்று அறிய வேண்டில்: பசி கொலை பிணி முதலிய தடைகளில் எந்தத் தடைப்பற்றி சீவகாருணியந் தோன்றியதோ அந்தத் தடையை நிவர்த்திசெய்கின்ற விடத்துத்தான் சீவகாருணியத்திற்கு ஆற்ற லிருந்த தென் றறியவேண்டும்.

இதனால், 'சீவர்களுக்குப் பசி கொலை பிணி முத லியவற்றால் வருந் துன்பங்க ளெல்லாம் மனம் கண் முதலிய கரணேந்திரிய அனுபவங்களே யல்லது ஆன்ம அனுபவங்களல்ல: ஆகலில் சீவகாருணியத்தால் விசேஷ பிரயோசன மில்லையே' என்பார்க்கு உத்தரம் யாதென் றறியவேண்டில்:—இந்தத் தேகத்தில் ஆன் மாவும் அறிவுக்கறிவா யிருக்கிற கடவுள் விளக்கமுந்

431. 379-வது அடிக்குறிப்பைப் பார்க்க.

தவிர, கரணம் இந்திரியம் முதலிய மற்றத் தத்துவங்க ளெல்லாம் மூடமாகிய கருவிகளே யல்லது அறிவாகிய ஆன்மாக்க ளல்ல. ஆகலில் சுகதுக்கங்களை அறிவாகிய ஆன்மாக்கள் அனுபவிக்குமே யல்லது மூடமாகிய தத்துவங்கள் அனுபவிக்க அறியா. மனமுதலாகிய கரணங்களும் கண்முதலாகிய இந்திரியங்களும் சீவர் வாழ்க்கைக்குக் கடவுள் அருளால் கட்டிக்கொடுக்கப் பட்ட சிறிய வீட்டின் கருவிகளாகும். இன்ப துன்பங் களை வீட்டிலிருக்கின்றவன் அனுபவிப்பா னல்லது வீட்டின் கருவிக ளாகிய மண் கல் மரம் கால் நீ நீர் முதலியவைக ளனுபவிக்க அறியமாட்டா.

அன்றியும் காசத்தினால் ஒளிமழுங்கப்பட்டு உப நயனங்க ளாகிய கண்ணாடியால் பார்க்கின்ற கண்கள் துன்ப விஷயத்தைக் கண்டபோது—அக்கண்கள் நீர் சொரியுமே யல்லது கண்ணாடி நீர் சொரியாது. ஆக லில் ஆன்ம திருஷ்டிக்கு உபநயனங்களாக விருக்கிற மனமுதலிய கருவிகள் சுகதுக்கங்களை அனுபவிக்க அறியா வென் றறியவேண்டும். ஒரு சீவனுக்குச் சுகம் நேரிட்டபோது மனம் மகிழ்கின்றது, துக்கம் நேரிட்ட போது மனந் தளர்கின்றது; என்றால் சுகதுக்கங்களை அம் மனம் அனுபவிப்பதாக அறியப்படாதோ என்ப வர்க்கு உத்தரம் யாதென் றறியவேண்டில்: பளிக்கு வீட்டினுள் இருக்கின்ற வீட்டுத் தலைவனுடைய தேக விளக்கமும் தேகச் சோர்வும் அந்த வீட்டிற் பிரதி பலித்துப் புறத்தில் தோன்றுவது போலவும், கண் களின் மலர்ச்சியுஞ் சோர்வும் அக் கண்களிலிட்ட உப

நயனங்களில் பிரதி பலித்துப் புறத்தில் தோன்றுவது போலவும், சுகதுக்கங்களால் ஆன்மாவுக்கு உண்டா கின்ற மகிழ்ச்சியும் தளர்வும் மனம் கண் முதலிய கரணேந்திரியங்களிற் பிரதிபலித்துப் புறத்தில் தோன்றுகின்றது.

அன்றியும், ஒரு வீட்டினுள் வைத்த தீபமானது மிகுந்த விளக்கமுள்ளதாக விளங்குகின்றபோது அந்த வீடும் அந்த வீட்டின் கருவிகளும் மிகவும் விளக்க முள்ளதாக விளங்குகின்றன. அந்தத் தீபம் விளக்கம் குறைகின்ற போது வீடும் வீட்டிலுள்ளவைகளும் விளக்கம் குறைகின்றன.

ஆகலில், சுகதுக்கங்கள் மனத்துக்கு அனுபவ மல்ல வென்றும் ஆன்மாவுக்கே அனுபவமென்றும் அனுபவத்திற்குக் கரணேந்திரியங்கள் ஆன்மாவிற்கு உபகாரக் கருவிகள் என்றும் பிரமாணிப்பதே உத்தர மென் றறியவேண்டும்.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சீவர்களில் அநே கர் பசி கொலை பிணி முதலியவற்றால் மிகவுந் துன்பப் படுவது எதனாலென் றறியவேண்டில்: முன் தேகத்தில் சீவகாருணிய ஒழுக்கத்தை விரும்பாமல் விட்டுக் கடின அறிவுள்ளவர்களாகித் துன்மார்க்கத்தில் நடந்த சீவர்க ளாதலால் கடவுள் விதித்த அருளாக்கினைப்படி பசி கொலை பிணி முதலியவற்றால் மிகவுந் துக்கப்படு கின்றார்க ளென் றறியவேண்டும்.

முன் தேகம் உண்டென்பது எப்படி யென் றறிய வேண்டில்:—ஒரு வீட்டில் குடிக்கூலி கொடுத்துக்

குடியிருக்க வந்த ஒரு சமுசாரி அதற்கு முன்னும் வேறொரு வீட்டில் குடிக்கூலி கொடுத்துக் குடித் தனம் செய்திருந்தா னென்றும், வீடில்லாமல் குடித் தனம் செய்யமாட்டா னென்றும், பின் வந்த வீட்டி லும் கலகம் நேரிட்டால் திரும்ப வேறொரு வீட்டில் குடிபோவா னென்றும், தனக் கென்று சுதந்தரமாக ஓர் வீடு கட்டிக்கொண்டால் முன்போல் குடிக்கூலி கொடுத்துக் குடிபோவதைத் தவிர்வா னென்றும் அறிவதுபோல; இந்தத் தேகத்தில் ஆகாரக் கூலி கொடுத்துக் குடியிருக்க வந்த சீவன் இதற்கு முன் னும் வேறொரு தேகத்தில் அந்தக் கூலி கொடுத்துச் சீவித்திருந்தா னென்றும், தேக மில்லாமல் சீவித் திருக்கமாட்டா னென்றும், இந்தத் தேகத்திலும் கல கம் நேரிட்டால் இன்னம் வேறொரு தேகத்திற் குடி போவா னென்றும், தனக் கென்று சுதந்தரமாக நித்திய மாகிய அருட் டேகத்தைப் பெற்றுக்கொண்டால் பின்பு வேறொரு தேகத்தில் குடிபோக மாட்டா னென் றும் அறியவேண்டும்.

சிலர் முன் தேகம் எடுத்ததும் பின் தேகம் எடுப்ப தும் இல்லை; இப்பொழுது எடுத்த தேகம் அழிந்தால், தேகியும் அழிந்துவிடுவா னென்றும் சிலர் முத்தியடை வா னென்றும் சிலர் பாப புண்ணியங்களை எக்காலத் தும் அனுபவிப்பா னென்றும் சிலர் தேகம் இல்லாமல் தேகம் அழிந்தவிடத்தி லிருப்பா னென்றும் பலவாறு வாதிப்பது எதனா லென் றறியவேண்டில்: அவரவர் களும் தேகமே ஆன்மா வென்றும் போகமே முத்தி

யென்றும் கொள்ளப்பட்ட லோகாயத மதத்தாரது கொள்கைக்குச் சம்பந்தப்பட்டவர்களாதலால், மூடமாகிய தேகத்தில் அறிவாகிய ஆன்மாவொருவன் உண்டென்றும் அவனுக்குப் பந்த முத்தி உண்டென்றும் முத்தி யடைகின்ற பரியந்தம் பந்த விகற்பத்தால் வேறு வேறு தேகத்தை எடுப்பானென்றும் பிரத்யட்ச அனுமான முதலிய பிரமாணங்களால் உண்மையை அறிந்துகொள்ள மாட்டாதவர்களென்றும், அவர்கள் கொள்கைக்குப் பிரமாணமும் யுக்தியும் அனுபவமும் இல்லையென்றும் அறியவேண்டும்.

இல்லையென்பது எப்படியென் றறியவேண்டில்:—சீவர்கள் தங்கள் தங்கள் சுதந்தரத்தாலே தேக போகங்களை யடைகின்றார்களென்றால், தங்கள் தங்கள் இச்சைக் கடுத்த தேகங்களையும் போகங்களையும் அடையவேண்டும்: அப்படியின்றிச் சிலர் இச்சைக் கடுத்த பழுதற்ற அங்கமுள்ளவர்களாகவும் சுகங்களை யனுபவிக்கின்றவர்களாகவும் சிலர் இச்சைக்கு அடாத பழுதுள்ள அங்கமுள்ளவர்களாகவும் துக்கங்களை அனுபவிக்கின்றவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆகலில், சீவர்கள் தேக போகங்களைத் தங்களிச்சையால் அடைந்தவர்களல்லவென்றும்; அவரவர்கள் அப்படி அப்படி யடைவது இயற்கை என்றால், இயற்கை என்பது எக்காலத்தும் வேறுபடாமல் ஒரு தன்மையாக இருத்தல் வேண்டும்: அப்படி ஒரு தன்மையாக இராமல் பல வேறு வகைப்படுதலால் இயற்கையல்லவென்றும்; கடவுள் இச்சை யென்றால்,

கடவுள் கருணையும் நீதியும் உடையவராதலில் எல்லாச் சீவர்களுக்கும் ஒரு தன்மையாகச் சுக அநுபவங்களையே அடைவிக்கவேண்டும்: அப்படி யடைவிக்காமையால் கடவுளிச்சை யல்லவென்றும்; கடவுளருளால் சிருஷ்டித்த முதல் சிருஷ்டியில் தமது இயற்கையின்பத்தை அடையும்படி விதித்த விதிகளைப் பழமையாகிய மல வாசனையால் முயற்சி தவறினபடியால், அந்த அநாதிமல வாசனையின் முயற்சி பேதங்களால் பின் பல பல தேக போகங்கள் இரண்டாவது சிருஷ்டியில் நேரிட்டதென்றும்—பிரமாணித் தறியவேண்டும்.

எடுத்துக்கொண்ட தேகம் தவறினால் வேறு தேகம் எடுப்பதில்லை யென்றால், முதல் சிருஷ்டி தொடங்கி இதுவரையில் அழிந்த தேகங்களுக்கு அளவில்லை, அப்படியே ஆன்மாக்களுக்கும் அளவில்லை: ஆகவே இனி ஆன்மாக்கள் தேகங்களை எடுக்காம லிருக்கவேண்டும். அப்படியில்லை: தேகங்களை எடுத்துக்கொண்டே யிருக்கிறார்கள். ஆயின் ஆன்மாக்களை நூதன நூதனமாகச் செய்து அது அதற்கு நூதன நூதனமாகத் தேகங்களை வருவிப்பதென்றால்; நூதன நூதனமாகத் தேகமாத்திரம் செய்யக்கூடும், தேகத்துள் ளிருக்கிற ஆன்மாவை நூதனமாகச் செய்யப்படாது: ஆன்மா எக்காலத்தும் உள்ளதாய் விளங்கப்பட்டது, அது தோன்றுதலும் அழிதலு மில்லை, அதை ஆக்கவும் அழிக்கவும் படாது. ஆன்மாக்களும் குடத்தைப்போல் செய்யப்பட்டதானால், சுக

துக்கங்களை அனுபவிக்க வறியாது, புண்ணிய பாவங்களை அடையமாட்டாது, குடம் அழிவதுபோல் அழிந்து போய்விடும். அழியுமானால், பந்த முத்திகளு மில்லை; புண்ணிய பாவங்களு மில்லை. ஆகலானும் (?) குடம் உடைகின்றபோது குடத்தினுள் இருந்த காற்றும் ஆகாயமும் உடையாம லிருந்தது சிறுவர்களுக்கும் தெரியும்: ஆகலில் தேகம் அழியும்போது தேகத்தினுள் இருக்கின்ற ஆன்ம விளக்கமும் கடவுள் விளக்கமும் அழியா தென்றும், ஆன்மாக்கள் முயற்சி பேதத்தால் தேக போக பேதங்களை யடைவது உண்மை யென்றும் யுக்தியால் அறியவேண்டும்.

ஒரு தாய்தந்தைகளுக்கு ஒரு காலத்தில் இரட்டைப் பிள்ளை பிறக்கின்றது. அவற்றில் ஒரு பிள்ளை சிவந்தது: ஒரு பிள்ளை கறுத்தது; ஒரு பிள்ளை அங்கப்பழு துள்ளது: ஒரு பிள்ளை அங்கப்பழு தில்லாதது: ஒரு பிள்ளை பால் குடிக்கின்றது: ஒரு பிள்ளை பால் குடிக்கில் சத்தி[432] பண்ணுகின்றது; ஒரு பிள்ளை வியாதி யுள்ளது: ஒரு பிள்ளை வியாதி யில்லாதது; ஒரு பிள்ளை இரண்டு வயதில் பேசுகின்றது: ஒரு பிள்ளை பேசத் தெரியாம லிருக்கின்றது—இந்த இரட்டைப் பிள்ளைகளுக்கு இந்தப் பேதம் இவ்விடத்தில் யாதொரு ஏதுக்களு மில்லாமல் வந்ததை யூன்றி விசாரிக்கில், முன் பிறப்பில் எடுத்த தேகத்தின் கர்மமாகிய முயற்சி பேதங்க ளென்றும்; இந்த இரட்டைப் பிள்ளை

432 பிரதியில் 'கொடிக்கில் சத்தி' என்றிருப்பது எழுதும்போது உண்டான சோர்வு போலும். சத்தி—வாந்தி.

களுக்கு மூன்று வயதில் விளையாடும்போது தனித்தனி தாய் தந்தைகள் கொடுத்த தின்பண்டங்களை வைத்துத் தின்னுகின்ற தருணத்தில், இவ் விரண்டு பிள்ளைகளும் தவிர வேறு பிள்ளை யொன்று வந்தால் அதைக் கண்டு இவ் விருவரில் ஒரு பிள்ளை தன் கையி லிருக்கின்ற தின் பண்டத்தைக் கொடுக்கின்றது: மற்றொரு பிள்ளை கொடுக்கப்படா தென்று தடுக்கின்றது; ஒரு பிள்ளை புத்தகத்தை எடுத்துச் சிறுவர் படிக்கின்றது போல் படிக்கின்றது: மற்றொரு பிள்ளை புத்தகத்தைப் பிடுங்கி யெறிந்து படிக்கப்படா தென்று அடிக்கின்றது; ஒரு பிள்ளை பயப்படுகின்றது: மற்றொரு பிள்ளை பயப் படாம லிருக்கின்றது—இப்படியே இந்தப் பிள்ளை களுக்குத் தயை அன்பு அறிவு செய்கை முதலியவை கள் தாய் தந்தையர்கள் கற்பியாத காலத்திற்றானே உள்ளதாகவும் இல்லதாகவும் எப்படி வந்ததென்று ஊன்றி விசாரிக்கத் தொடங்கில், இந்த இரண்டு பிள்ளைகளுக்கும் முன் பிறப்பில் எடுத்த தேகத்தி லிருந்த வாசனை இந்தப் பிறப்பில் இந்தத் தேகத் தில் கற்பியாமல் வந்த தென்றும்—அனுபவத்தால் கருதி யறியவேண்டும். இப்படி யறிந்தால் சிலர் களுக்கு முன்னும் பின்னும் தேக முண் டென்பது நன்றாகத் தெரியும். இப்படி யறியமாட்டாமையால் பிறப்பில்லை என்கின்றார்க ளென் றறியவேண்டும்.

அன்றி, இந்தத் தூல தேகம் அழியாம லிருக் கிறபோதே சொப்பனத்தில் ஆன்மா வேறு வேறு தேக மெடுத்துப் பல பல விசித்திரங்களை யனுபவிக்

கின்ற தானல், இந்தத் தேகம் நீங்கும்போது வேறு தேகமெடுத்து வரசனைக் கடுத்த அனுபவங்களை அனுபவிக்கு மென்பதைச் சொல்லவேண்டுவ தில்லை.

அன்றி, சித்தி விசேஷத்தால் இந்தத் தேகத்திலிருந்த ஒருவன் இந்தத் தேகத்தை விட்டு வேறு தேகத்திற்குப் பிரவேசிக்கின்ருன் என்ருல், இந்தத் தேகம் அழியும்போது இதி லிருந்த ஆன்மா கன்ம பேதத்தால் வேறு தேகத்தில் பிரவேசிக்கு மென்பதைச் சொல்ல வேண்டுவ தில்லை.

அன்றி, ஒரு பட்சியானது கால வேற்றுமையாலும் குண வேற்றுமையாலும் முன் முட்டை யென்கின்ற ஒரு தேகத்தி லிருந்து பின்பு குஞ்சு என்கின்ற மற்ருெரு தேகத்தில் வருகிற தானல், ஆன்மாக்கள் கர்ம பேதத்தால் இந்தத் தேகத்தி லிருந்து வேறு தேகத்தில் வரு மென்பது சொல்லவேண்டுவ தில்லை.

அன்றி, ஒரு குளவியால் ஒரு கிருமி புழு வென்கின்றதேகத்தி லிருந்து குளவி யென்கின்ற தேகத்தில் வருமேயானல், கருமத்தினல் ஒரு ஆன்மா ஒரு தேகத்திலிருந்து மற்ருெரு தேகத்தில் வரு மென்பதைச் சொல்லவேண்டுவ தில்லை.

அன்றி, ஒரு ஆன்மா ஒரு பிறப்பிற்ருனே சிசு தேகத்தி லிருந்து பால தேகத்திலும் பால தேகத்திலிருந்து வாலிப தேகத்திலும் வாலிப தேகத்தி லிருந்து வார்த்திப தேகத்திலும் வரு மானல், அந்த ஆன்மா கன்ம பேதத்தால் வேறு பிண்ட தேகத்தில் வரு மென்பதைச் சொல்லவேண்டுவ தில்லை.

அன்றி, மந்திர தந்திர பேதத்தால் ஒரு பிறப் பிற்றானே பெண் தேகத்திலிருந்து ஆண் தேகத்திலும் ஆண் தேகத்திலிருந்து பெண் தேகத்திலும் ஆன்மாக் கள் வருமானால், கர்ம பேதத்தால் வேறு தேகம் எடுக் கும் என்பது சொல்லவேண்டுவ தில்லை.

அன்றி, ஒரு தாபர தேகத்திலிருந்த ஆன்மாவா னது அந்தத் தேகத்திற்றானே மரகதக் கிருமி என் கின்ற புழு தேகத்தில் வருகின்றது.

அன்றி, ஓர் எறும்பானது அந்தத் தேகத்தி லிருந்தே பிபீலிக பட்சி என்கின்ற தேகத்தில் வரு கின்றது.

அன்றி, ஓர் பாம்பானது அந்தத் தேகத்தி லிருந்தே சர்ப்ப பட்சி யென்கின்ற வேறொரு தேகத் தில் வருகின்றது.

இப்படியே மனிதர் மிருகம் பறவை ஊர்வன நீர் வாழ்வன தாபர முதலிய—அந்தந்தத் தேகங்களி லிருக்கின்ற—ஆன்மாக்கள் அந்தந்தத் தேகத்தி லிருந்தே வேறு தேகங்களை யெடுக்கின்றன வானால்; அந்தந்தத் தேகங்க ளழியும்போது வேறு தேகங்க ளெடுக்கு மென்பது சொல்ல வேண்டுவ தில்லை.

சிலர் 'முன்தேகம் உண்டென்பது உண்மையா னால், அந்தத் தேகத்தில் நீயார்? உன் சரித மெது? சொல்' என்கின்றார்களே; அவர் கேள்விக்கு உத்தரம் என் னென் றறிய வேண்டில்:—எழுபது வயதுள்ள ஒருவனைப் பார்த்து 'உனக்கு ஐந்து வயதில் உன் சரித் திரம் என்ன' வென்று கேட்டபோது, 'நேற்றைப்

பொழுதில் நடந்த என் சரித்திரம் இன்றைப் பொழுதில் அவஸ்தையால் சொல்லத் தெரியாது விழிப்பேனென்றால், என் ஐந்து வயதின் சரித்திரத்தை எப்படிச் சொல்ல மாட்டுவேன்? நீ யெப்படிக் கேட்கக் கூடும்?' என்கின்றான். ஒருபிறப்பில் நடந்த அவனது சரித்திரங்களையே அவஸ்தை பேதங்களால் அறிந்து சொல்ல மாட்டாமல் திகைப்புண்டாவ தென்றால், முன் தேகத்தில் நடந்த சரித்திரங்களை அநேக அவஸ்தையில் திகைக்கின்ற நாம் எப்படி யறிந்து சொல்லக் கூடும் என்பதே உத்தரம் என் றறியவேண்டும்.

சீவர்கள்[433] முன் தேகத்திலே செய்த புண்ணிய

433. இப்பத்தி முதல் கடைசி வரையில் முதற் பிரிவு 113-121-வது பக்கங்களில் உள்ள விஷயமே ஓர் ஓர் இடத்தில் சிறு சிறு சொல் பொருள் வேற்றுமை யோடு காணப்படும். ஜீவகாருண்ய ஒழுக்கம் முதற் பிரிவில் வழங்கும் அடிப்படையான கருத்துக்களைத் தெளிவுபடுத்தவே இரண்டாவது மூன்றாவது முதலிய பிரிவுகள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆதலால், முதற்பிரிவில் கண்ட நியாய தோரணைகள் மீண்டும் பிற்பட்ட பிரிவுகளில் ஓரளவு காணப்படுவது இயல்பே. ஆனால், இரண்டாவது பிரிவில் எடுத்த விஷயம் முடிவடைந்திருப்பதால் அது அழகாக இருக்கிறது. மூன்றாவது பிரிவிலோ எடுத்த விஷயம் முடிவுபடாம லிருப்பதால், அது சிலர்க்கு ஒருவாறு அயர்வு தரலாம். எனினும், இடை இடையே விடுபட்டவையோ அல்லது எஞ்சியவையோ திருவருட் செயலால் கிடைக்கும் வரையில், கிடைத்தவற்றைப் போற்றுவது கடமையாகும். இவ்வுண்மை 1913-ல் சித்தாந்தப் பத்திரிகையிலும், 1924-ல் ஸ்ரீ ச. மு. கந்தசாமி பிள்ளையவர்கள் பதிப்பிலும் வெளிவந்திருந்தவற்றை இப்பதிப்போடு ஒத்திட்டுப் பார்ப்பவர்க்கு அநுபவமாகும்.

பாப கர்மங்கள் இந்தத் தேகத்திலும் வரும் என்பது எப்படி என்று அறிய வேண்டில்:—ஒரு சமுசாரி முன் குடித்தனஞ் செய்திருந்த வீட்டில் துன்மார்க்கர்களை வருவித்து அவர்களோடு கூடிப் பழகியிருந்தானால், அந்தச் சமுசாரி அந்த வீட்டை விட்டு வேறொரு வீட்டுக்குக் குடிவந்த காலத்திலும் அந்தத் துன்மார்க்கர்கள் அந்த வீட்டிலும் வந்து அவனுடன் பழக்கஞ் செய்வார்கள். அதுபோல, ஒரு சீவன் முன் குடியிருந்த தேகத்தில் பாப கர்மங்களை விரும்பிச் செய்திருந்தானால், அந்தச் சீவன் வேறொரு தேகத்தில் வந்தபோது அந்தப் பாப கர்மங்கள் அந்தத் தேகத்திலும் வந்து அந்தச் சீவனைச் சேருமென்றும் புண்ணிய கர்மங்களும் இப்படியே என்றும் அறியவேண்டும்.

முன் பிறப்பில் சீவகாருணிய ஒழுக்கத்தை விட்டுத் துன்மார்க்கத்தில் நடந்த சீவர்களை இந்தப் பிறப்பில் பசி தாகம் முதலியனவற்றால் துக்கப்படச் செய்வது கடவுளருளாக்கினை நியதி என்றால், அந்தச் சீவர்கள் விஷயத்தில் தயவு வைத்து ஆகாரம் முதலியவை கொடுத்து அவர்கள் துக்கத்தை மாற்றுவது கடவுள் அருளாக்கினைக்கு விரோத மாகாதோ என்கின்ற சிறிய கேள்விக்கு உத்தரம் எது என்று அறிய வேண்டில்:—அரசன் தன் கட்டளைக்கு முழுதும் விரோதித்துக் கால்களுக்கு விலங்கிடப்பட்டுச் சிறைச்சாலையிலிருக்கின்ற பெரிய குற்றவாளிகளுக்கும் தன் சேவகர்களைக் கொண்டு ஆகாரங் கொடுப்பிக்கின்றான்.

அதுபோல், கடவுள் தம் கட்டளைக்கு முழுதும் விரோதித்துப் பலவகையால் பந்தம் செய்யப்பட்டு நரகத்தில் இருக்கிற பாபிகளுக்கும் தம் பரிவார தேவர்களைக் கொண்டு ஆகாரங் கொடுப்பிக்கின்றார். அரசன் தன் கட்டளைப்படி நடவாமல் வேறு பட்ட சாதாரண குற்றவாளிகளைத் தன்னால் அவர்கள் பெறத்தக்க லாபத்தைப் பெற வொட்டாமல் உத்தியோகத்தினின்றும் நீக்கி, அவர்களுக்கு நல்லறிவு வருகிற நிமித்தம் அவ்விடத்தை விட்டு வேறிடத்திற்கு வெளிப்படுத்துகின்றான். அவர்கள் உத்தியோகம் இழந்தபடியால், சுக போஜனம் முதலிய போகங்களையும் இழந்து ஊர்ப்புறங்களில் போய் ஆகாரம் முதலியவை குறித்து அலைந்து வருந்துகின்றார்கள். அப்போது, தயவுள்ளவர்கள் கண்டு ஆகாரம் முதலியவை கொடுக்கின்றார்கள். அதை அரசன் கண்ட காலத்திலும் கேட்டகாலத்திலும் ஆகாரம் கொடுத்தவர்களைத் தயவுள்ள நல்ல சமுசாரி என்று சந்தோஷித்து மேலான நிலையில் வைத்து உபசரிக்கின்றானல்லது கோபிக்கவில்லை. அதுபோல, கடவுள் தம் கட்டளைப்படி நடவாத சாதாரண குற்றமுடைய சீவர்களைத் தமது சத்தியால் அவர்கள் பெறத் தக்க இன்பங்களைப் பெறவொட்டாமல் தாம் கொடுத்த சௌக்கிய புவன போகங்களை விடுவித்து, அந்தச் சீவர்களுக்கு நல்லறிவு வருவிக்கும் நிமித்தம் அந்தத் தேகத்தினின்றும் நீக்கி வேறொரு தேகத்தில் விடுகின்றார். அந்தச் சீவர்கள் சௌக்கிய புவன போகங்

களை இழந்தபடியால், சௌக்கிய போஜனம் முதலிய வற்றையும் இழந்து வேறு வேறு இடங்களில் ஆகாரம் முதலியவை இல்லாமல் வருந்துகின்றபோது, தயவுள்ளவர்கள் அந்த வருத்தத்தைக் கண்டு ஆகாரம் முதலியவை கொடுக்கின்றார்கள். அப்படிக் கொடுக்கின்றவர்களை நல்ல தயவுள்ளவர்கள் மேன்மேலும் சுகத்தை அடையக் கடவர்கள் என்று சந்தோஷித்து மேல் நிலையில் வைத்து உபசரிப்பா ரல்லது கோபிக்க மாட்டார். ஆதலால், கடவுள் அருள் ஆக்கினைக்குச் சீவர்களிடத்தில் சீவர்கள் தயவு வைத்து உபசரிப்பதே சம்மத மென்று உண்மை யறிந்து சொல்லுவதே உத்தர மென்று அறியவேண்டும்.

இந்தச் சீவகாருணிய ஒழுக்கத்தால் இகலோக ஒழுக்கம் விளங்குகின்றது. இல்லையாகில், இகலோக ஒழுக்கம் எவ்வளவும் விளங்கமாட்டாது. சீவகாருணியம் இல்லாதபோது அறிவும் அன்பும் தோன்றா. அவை தோன்றாதபோது கண்ணோட்டமும் ஒருமையும் உபகாரமும் விளங்கா. அவை விளங்காதபோது வலிய சீவர்களால் எளிய சீவர்கள் ஒழுக்கம் பொறாமை முதலானவையால் தடைப்பட்டு அழிந்துபோம். பின்பு வலிய சீவர்கள் ஒழுக்கங்களும் மதத்தினால் தாமத ஒழுக்கங்களாகி மாறுபட்டு அழிந்துபோகும். சீவகாருணிய ஒழுக்கம் சிறிதும் இல்லாத புலி சிங்கம் முதலிய மிருகங்கள் வழங்குகின்ற காட்டில் இகலோக ஒழுக்கம் வழங்கவே இல்லை. சீவகாருணியம் இல்லாத மனிதர்கள் வழங்குமிடத்திலும் இகலோக

ஒழுக்கமும் வழங்கவே மாட்டாதென்று அறியவேண்டும். பரலோக ஒழுக்கமும் சீவகாருணியத்தால் வழங்குகின்றது. அது இல்லையாயின் பரலோக ஒழுக்கமும் வழங்க மாட்டாது. சீவகாருணியம் இல்லாத போது அருள்விளக்கம் தோன்றாது. அது தோன்றாத போது கடவுள் நிலை கைகூடாது. அது கூடாதபோது முத்தி யின்பம் ஒருவரும் அடையவே மாட்டார்கள். அடையாத பட்சத்தில் பரலோக ஒழுக்கம் வழங்கவே மாட்டாதென்று அறியவேண்டும்.

சீவகாருணிய ஒழுக்கம் மிகவும் வழங்காமையால் துஷ்டப் பிறவிகளே பெருகித் தீய ஒழுக்கங்களே மிகவும் வழங்குகின்றன. முன் தேகத்தில் சீவகாருண்யம் இல்லாத பாப சீவர்கள் எல்லாம் அவரவர் பாபச் செய்கைக்குத் தக்கபடி, சிலர் நரகவாசிகளாகவும், சிலர் சமுத்திர வாசிகளாகவும், சிலர் ஆரண்ய வாசிகளாகவும், சிலர் புலி கரடி சிங்கம் யாளி யானை கடமை கடா பன்றி நாய் பூனை முதலிய துஷ்ட மிருகங்களாகவும், சிலர் காக்கை கழுகு முதலிய பட்சி சண்டாளங்களாகவும், சிலர் பாம்பு தேள் முதலிய தார்ச் செந்துக்களாகவும், சிலர் முதலை சுறா முதலிய கடின் செந்துக்களாகவும், சிலர் எட்டி கள்ளி முதலிய அசுத்த தாபரங்களாகவும் பிறந்திருக்கின்றார்கள். ஆகலால், தீய ஒழுக்கங்களே மிகவும் வழங்குகின்றனவென்று அறியவேண்டும்.

சீவகாருணியம் கடவுள் அருளைப் பெறுதற்கு

முக்கிய சாதனமாவது மன்றி அந்த அருளின் ஏக தேச விளக்கம் என்றும், சீவகாருணியம் ஆன்மாக் களின் இயற்கை விளக்கம் ஆகலால் அந்த இயற்கை விளக்கம் இல்லாத சீவர்களுக்குக் கடவுள் விளக்கம் அகத்திலும் புறத்திலும் வெளிப்படவே மாட்டா தென்றும் அறிய வேண்டும்.

சீவகாருணியத்திற்கு லக்ஷியம் ஏது என்று அறியவேண்டில்: ஆன்மாக்கள் எல்லாம் இயற்கை உண் மை ஏகதேசங்களாயும் இயற்கை விளக்கமாகிய அருள் அறிவுக் கறிவாய் விளங்குதற்கு ஒற்றுமை உரி மை இடங்களாயும் இருக்கின்றன என்றும், அந்த ஆன்மாக்கள் சீவர்களாகி அதிகரிப்பதற்கு பூத காரிய தேகங்களே உரிமையாகி இருக்கின்றன வென்றும், அந்தத் தேகங்களில் ஆன்மாக்கள் சீவர்கள் ஆகி அதி கரியாவிடில் ஆன்ம விளக்கம் மறைபடும் என்றும், அது மறையில் அருள் விளக்கம் வெளிப்படா தென் றும், வெளிப்படாதபோது மூடம் உண்டாகும் என் றும், அதுவே ஆன்மாக்களுக்குப் பந்தம் ஆகும் என் றும், அது பற்றி அவசியம் பூதகாரிய தேகம் வேண்டு மென்றும், பூத காரிய தேகங்களுக்கு மாயை முதற்கார ணம் ஆதலால் அந்த மாயையின் விகற்ப ஜாலங்களா கிய பசி கொலை தாகம் பிணி ஆபத்து பயம் இன்மை இச்சை என்பவைகளால் அந்தத் தேகங்களுக்கு அடிக்கடி அபாயங்கள் நேரிடும் என்றும், அப்படி அபா யங்கள் நேரிடாமல் கரணேந்திரிய சகாயங்களைப் பெற்ற தம் அறிவைக் கொண்டு சர்வ ஜாக்கிரதை

யோடு முயற்சி செய்து தடுத்துக் கொள்வதற்குத் தக்க சுதந்தரம் சீவர்களுக்கு அருளால் கொடுக்கப் பட்ட தென்றும், அந்தச் சுதந்தரத்தைக் கொண்டு சீவர்கள் எல்லாம் தேகங்களிலிருந்து அபாயங்களை நீக்கி ஆன்ம லாபத்தைப் பெறுதற்கு முயற்சி செய் யக்கடவார்கள் என்றும், மேற்குறித்த பசி கொலை தாகம் பிணி ஆபத்து பயம் இன்மை இச்சை என்ப வைகளால் வரும் அபாயங்களை நிவர்த்தி செய்து கொள்ளத் தக்க சுதந்தரம் இல்லாமல் வருந்துகின்ற சீவர்கள் விஷயத்தில் அவை நிவர்த்தி செய்யத் தக்க சுதந்தரம் உள்ள சீவர்கள் காருண்யத்தால் நிவர்த்தி செய்விக்க வேண்டும் என்றும், அப்படி நிவர்த்தி செய் விப்பதில் பசியினாலும் கொலையினாலும் வருந் துன்பங் களை நிவர்த்தி செய்விப்பது தலைமையான காருணியம் என்றும், அது தவிர மற்றவைகளால் வருந் துன்பங் களை மாற்றுவது அபர சீவகாருணியம் என்றும், அது இவ் உலக இன்பத்தை மாத்திரம் சிறிது உண்டு பண் ணுமென்றும், பசியினால் வரும் துன்பத்தையும் கொலை யினால் வருந் துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பது பரசீவகாருணியம் என்றும், அது இவ்வுலகஇன்பம் எல் லாவற்றையும் அளவிறந்த சித்தி இன்பங்களையும் எக் காலத்தும் அழியாத முத்தியின்பத்தையும் அருளால் அடைவிக்கும் என்றும், அன்னிய சீவர்களுக்கு நேரிடு கிற மேற்குறித்த அபாயங்களை நிவர்த்தி செய்விப்ப தற்குத் தக்க சுதந்தரமும் அறிவும் இருந்தும் அவ் வாறு செய்யாமல் வஞ்சித்தவர்களுக்கு இவ் உலக

இன்பம் அவ்வுலக இன்பத்தோடு மோட்ச இன்பத்தை அநுபவிக்கச் சுதந்தரத்தை (?) அடையப்படுவதில்லை என்றும், தற்காலத்தில் அநுபவிக்கின்ற புவன போக சுதந்தரங்களையும் இழந்து விடுவார்கள் என்றும்—கடவுளருளால் விதிக்கப்பட்டிருக்கின்றபடியால், அபாயங்களை நிவர்த்தி செய்து கொள்ளத் தக்க அறிவும் சுதந்தரமும் இல்லாத சீவர்கள் விஷயத்தில் அவை களை நிவர்த்தி செய்விக்கத் தக்க அறிவும் சுதந்தரமும் உள்ளவர்கள் வஞ்சியாமல் நிவர்த்தி செய்விப்பதே சீவகாருணியத்திற்கு லக்ஷியம் என்று அறிய வேண்டும்.

பசி கொலை தாகம் பிணி ஆபத்து பயம் இன்மை இச்சை என்பவைகளால் வரும் அபாயத்தை நிவர்த்தி செய்விப்பது சீவகாருணியத்திற்கு லக்ஷியமாக இருக்கவும், இவ்விடத்துப் பசியினாலும் கொலையினாலும் வரும் அபாயங்களை மாத்திரம் நிவர்த்தி செய்விப்பது தலைப்படு காருணியம் என்று குறித்தது என் என்று அறிய வேண்டில்:—சீவகாருணிய ஒழுக்கத்தில் பர சீவகாருணியமென்றும் அபர சீவகாருணியம் என்றும் இருவகையாம். அவற்றில் பசி நீக்கலும் கொலை நீக்கலும் பர சீவகாருணியம். மற்றவை அபர சீவகாருணியம் ஆகலில், பர சீவகாருணியம் விசேஷமாகக் குறிக்கப்பட்டதென்று அறியவேண்டும். அன்றியும், பசியினால் வருந்துகின்ற சீவர்களுக்குப் பசியை நிவர்த்தி செய்விக்கின்ற தயவுடையவர்கள் தாகம் நீங்குவதற்குத் தண்ணீர் கொடாமலிரார்

கள். தண்ணீர் கொடுப்பது பிரயாசமுமல்ல. தண்ணீர் ஏரி, குளம், கால்வாய் முதலிய இடங்களிலும் இருக்கின்றது.[434]

திருச்சிற்றம்பலம்

ஜீவகாருண்ய ஒழுக்கம் மூன்றாவது பிரிவு முற்றிற்று

சன்மார்க்க விளக்கத்தின் முதற்பிரிவாகிய
ஜீவகாருண்ய ஒழுக்கம் முற்றிற்று

434. 424, 433-வது அடிக் குறிப்புகளைப் பார்க்க.

சுவாமிகள் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை மிக்க விரிவாக ஏழு பிரிவில் எழுதி உபதேசித்ததாகக் கேள்வி. அது முற்றிலும் உண்மையானால், மூன்றாவது பிரிவின் தொடர்ச்சியும் மற்ற நான்கு பிரிவும் இதுகாறும் கிடைக்காதிருப்பது தமிழ்நாட்டின் தவக்குறை என்றே கொண்டு வருந்திப் பிரார்த்திக்க வேண்டியிருக்கிறது.

# ௬. சன்மார்க்க விண்ணப்பங்கள்

## க. சுத்த சன்மார்க்க

## சத்தியச் சிறு விண்ணப்பம்[435]

திருச்சிற்றம்பலம்

இயற்கை யுண்மைய ரென்றும் இயற்கை யறிவின ரென்றும் இயற்கை யின்பின ரென்றும் நிர்க்குண ரென்றுஞ் சிற்குண ரென்றும் நித்திய ரென்றுஞ் சத்திய ரென்றும் ஏக ரென்றும் அநேக ரென்றும் ஆதிய ரென்றும் அனாதிய ரென்றும் அமல ரென்றும் அருட்பெருஞ் ஜோதிய ரென்றும் அற்புத ரென்றும் நிரதிசய ரென்றும் எல்லா மானவ ரென்றும் எல்லா முடையவ ரென்றும் எல்லாம் வல்லவ ரென்றுங் குறிக்கப்படுதன் முத

---

435. சுவாமிகளது தெய்வத் திருக்கரத்தால் எழுதிய மூலமே இங்கு இதற்கு ஆதாரம். இதற்காகக் கிடைத்த அன்பர்கள் கைஎழுத்துப் பிரதிகள் ஆறு. இவற்றுள் இரண்டில் விண்ணப்பத்தின் இறுதியில் 'ஆங்கிரச ஞு வைகாசி மீ ௩௨ உத்தரஞான சித்திபுரம்' என்றும், வேறொன்றில் 'ஆங்கிரச ஞு வைகாசி மீ' என்றும், மற்றொன்றில் 'ஆங்கிரச ஞு சித்திரை மீ, ஞானசித்திபுரம்' என்றும் குறித்திருக்கிறது. ஸ்ரீ மகாதேவ முதலியாரது நோட்டில் இவ் விண்ணப்பத்தைத் தொடர்ந்து "திரு நிலத்து நல்லருளொடும் அன்பொடும்" என்ற தனிப் பாடல் எழுதியிருக்கிறது. இவ் விண்ணப்பமே சுவாமிகள் எழுதிய முதல் வாசக விண்ணப்பமாக எல்லாப் பிரதிகளிலும் கொண்டிருக்கிறது. இவ் விண்ணப்பத்தின் தலைப்பு சுவாமிகளாலேயே 'திருச்சிற்றம்பலம்' என்பதன் பின் குறிக்கப்பட்டிருக்கிறது.

ஆய அளவு கடந்த திருக்குறிப்புத் திருவார்த்தை களாற் சுத்த சன்மார்க்க ஞானிகள் துதித்தும் நினைத் தும் உணர்ந்தும் புணர்ந்தும் அனுபவிக்க விளங்கு கின்ற தனித்தலைமைப் பெரும் பதியாகிய பெருங் கரு ணைக் கடவுளே! தேவரீர் திருவருட் சமுகத்தில் துரும்பினுஞ் சிறியேமாகிய யாங்கள் சிற்றறிவாற் செய்துகொள்ளுஞ் சிறு விண்ணப்பங்களைத் திருச் செவிக் கேற்பித்தருளி யெங்களை யிரக்ஷித்தருளல் வேண்டும்.

எல்லாச் சத்திகளும் எல்லாச் சத்தர்களும் எல் லாத் தலைவர்களும் அறிந்துகொள்ளுதற்கு மிகவு மரியதாய் எல்லாத் தத்துவங்களுக்கும் எல்லாத் தத் துவிகளுக்கும் அப்பா லப்பாலாய் விளங்கும் ஓர் சுத்த ஞான வெளியில் தமக்கு ஒரு விதத்தாலும் ஒப்புயர்வு சிறிதுங் குறிக்கப்படாத தனிப்பெருந் தலைமை யருட் பெருஞ்ஜோதியராகி விளங்குகின்ற தேவரீரது தனிப் பெருந் தன்மைக்கு மெய்யறிவுடையோரால் விதிக்கப் பட்ட வேதாகமங்களும் பெருந்தகை வாசகத்தைப் பெறாது சிறுதகை வாசகங்களைப் பெற்றுத் திகைப் படைகின்றன வென்றால், மலத்திற் புழுத்த புழுவினுஞ் சிறியே மாகிய யாங்கள் திருச்சமுகத்தில் விண்ணப் பித்தற் குரிய பெருந்தகை வாசகத்தை எவ்வா றறி வோம்! எங்ஙனஞ் செய்வோம்! ஆகலில் கருணாநிதி யாகிய கடவுளே! யாங்கள் விண்ணப்பிக்கின்ற அற்ப வாசகத்தில் உரிமை நோக்காது அங்கீகரித்தருளி யெங்களைக் காத்தருளல் வேண்டும்.

தாயினுஞ் சிறந்த தயவுடைக் கடவுளே! இயற்கையே அஞ்ஞான விருளில் அஞ்ஞான வுருவில் அஞ்ஞானிகளாய் அஞ்ஞானத்திற் பயின்று ஏதுந் தெரியாது கிடந்த எங்களைத் தேவரீர் பெருங் கருணையாற் பவுதிக வுடம்பிற் சிறிதறிவு தோற்றி விடுத்த அஞ்ஞான்றுதொட் டிஞ்ஞான்றுவரையும், அது கொண்டு அறிவே வடிவாய் அறிவே யுருவாய் அறிவே பொறியா யறிவே மனமா யறிவே யறிவா யறிவே யநுபவமா யநுபவிக்கத் தெரிந்துகொள்ளாது, குற்றமே வடிவாய்க் குற்றமே யுருவாய்க் குற்றமே பொறியாய்க் குற்றமே மனமாய்க் குற்றமே யறிவாய்க் குற்றமே யநுபவமாய் அநுபவிக்கின்ற சிறியேங்கள் திருச்சமுகத்தில் விண்ணப்பிக்கின்ற விண்ணப்பமும் குற்றமே வடிவாய்க் குற்றமே குறிக்கு மென் றறிந்தோ மாயினும், குற்றங் குறியாத வகை விண்ணப்பஞ் செய்தற்கு ஒரு வாற்றானு முணர்ச்சியில்லோ மாதலிற் றுணிவு கொண்டு விண்ணப்பிக்கின்றோம். குற்றங்களையே குணங்களாகக் கொள்ளுதல் தேவரீர் திருவருட் பெருமைக் கியற்கை யாதலின் இவ் விண்ணப்பங்களிற் குற்றங் குறியாது கடைக்கணித்தருளிக் கருணை செய்தல் வேண்டும்.

அஞ்ஞான விருளில் ஒன்றுந் தெரியா துணர்ச்சியின்றிக் கிடந்த காலம் போக அவ் விருளை விட்டு நீங்கிய காலத்தே, இவ் வுலகினிடத்து புல் நெல் மரஞ் செடி பூடு முதலியவாகவும் கல் மலை குன்று முதலியவாகவும் பிறந்து பிறந்து களையுண்டல் வெட்டுண்டல்

அறுப்புண்டல் கிள்ளுண்டல் உலர்ப்புண்டல் உடைப் புண்டல் வெடிப்புண்டல் முதலிய பல வேறு அவத் தைகளால் இறந்து இறந்து அத் தாபரயோனி வர்க் கங்களெல்லாஞ் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தேம்; பின்னர் எறும்பு செல் புழு பாம்பு உடும்பு பல்லி முதலியவாகவும் தவளை சிறு மீன் முதலை சுறா திமிங்கில முதலியவாகவும் பிறந்து பிறந்து தேய்ப்புண்டல் நசுக்குண்டல் அடியுண்டல் பிடியுண்டல் முதலிய பல வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அவ் வூர்வன நீர்வாழ்வன யோனிவர்க் கங்களெல்லாஞ் சென்று சென்று உழன்று உழன்று அலுப்படைந்தேம்; பின்னர் ஈ வண்டு தும்பி குருவி காக்கை பருந்து கழுகு முதலியவாகப் பிறந்து பிறந்து அடியுண்டல் பிடியுண்டல் அலைப்புண்டல் உலைப்புண்டல் முதலிய பல வேறு அவத்தைகளால் இறந் திறந்து அப் பறவையோனி வர்க்கங்க ளெல் லாஞ் சென்று சென்று உழன் றுழன்று அலுப்படைந் தேம்; பின்னர் அணில் குரங்கு நாய் பன்றி பூனை ஆடு மாடு யானை குதிரை புலி கரடி முதலியவாகப் பிறந்து பிறந்து பிடியுண்டல் அடியுண்டல் குத்துண்டல் வெட்டுண்டல் தாக்குண்டல் கட்டுண்டல் தட்டுண் டல் முதலிய பல்வேறு அவத்தைகளா லிறந் திறந்து அவ் விலங்குயோனி வர்க்கங்க ளெல்லாஞ் சென்று சென்று உழன் றுழன்று அலுப்படைந்தேம்; பின்னர் பசாசர் பூதர் இராக்கதர் அசுரர் சுரர் முதலியராகப் பிறந்து பிறந்து அலைப்படுதல் அகப்படுதல் அகங்கரித்

தல் அதிகரித்தல் மறந்து நிற்றல் நினைந்து நிற்றல் மயக்குறுதல் திகைப்புறுதல் போரிடுதல் கொலைபடுதல் முதலிய பல்வேறு அவத்தைகளால் இறந்து இறந்து அத் தேவயோனி வர்க்கங்க ளெல்லாஞ் சென்று சென்று உழன் றுழன்று அலுப்படைந்தேம்; பின்னர் காட்டகத்தார் களவுசெய்வார் கொலைசெய்வார் முதலியராகப் பிறந்து பிறந்து பயப்படல் சிறைப்படல் சிதைபடல் முதலிய அவத்தைகளால் இறந்திறந்து அந் நரகயோனி வர்க்கங்க ளெல்லாஞ் சென்று சென்று உழன் றுழன்று அலுப்படைந்தேம்.

அங்ஙனம் யாங்கள் அப் பிறவிகள்தோறும் அடைந்த அலுப்பும் அச்சமும் அவலமுங் களைப்புந் துன்பமுந் திருவுளத் தடைத்து இரங்கியருளி அழியாப் பெரு வாழ்வைப் பெறுதற்குரிய வுயரறிவுடைய விம் மனித தேகத்திற் செலுத்தி யருளிய தேவரீரது பெருங் கருணைக்கு யாங்கள் செய்யுங் கைம்மாறு ஒன் றுந் தெரிந்தோ மில்லை: உயிர்களின் அகத்தும் புறத்தும் அகப் புறத்தும் புறப் புறத்தும் நீக்கமின்றி நிறைந்து விளங்குகின்ற அருட் பெருஞ் ஜோதி யாண் டவரே!

இம் மனித தேகத்திற் செலுத்திய காலத்திலும் தாய் வயிற்றிலும் சிசுப் பருவத்திலும் குமாரப் பருவத் திலும் பலவேறு அவத்தைகளால் அறிவின்றி யிருந் தோமாகலில் தேவரீர் பெருங்கருணைத் திறத்தை யறி ந்து கொள்ளாமல் வீண்போது கழித்தோம். அப் பரு வங் கழிய இப் பருவத்தினிடத்தே, எல்லா அண்

டங்களையும் எல்லா வுலகங்களையும் எல்லா வுயிர்களையும் எல்லாப் பொருள்களையும் மற்றை யெல்லாவற்றையுந் தோற்றுவித்தும் விளக்கஞ் செய்வித்தும் துரிசு நீக்குவித்தும் பக்குவம் வருவித்தும் பலன்றருவித்தும் எங்கும் பூரணராகி விளங்குகின்ற ஓர் உண்மைக் கடவுள் உண்டென்றும், அக்கடவுளை உண்மையன்பாற் கருத்திற் கருதி வழிபாடு செய்யின் அக்கடவுள் திருவருள் நமது கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்கு மென்றும், அத் திருவருள் விளக்கத்தால் மரணம் பிணி மூப்பு பயம் துன்ப முதலிய அவத்தைகளெல்லாவற்றையும் தவிர்த்து எக்காலத்தும் எவ்விடத்தும் எவ் விதத்தும் எவ்வளவுந் தடைபடாத பேரின்ப சித்திப் பெருவாழ்வை யடைதல்கூடு மென்றும், எங்கள் அறிவில் தேவரீர் திருவருளால் உண்மைப்பட வுணர்த்தியருளப் பெற்றோம். அவ் வுணர்ச்சியைப் பெற்றது தொடங்கிக் கடவுள் வழிபாடு எஞ்ஞான்று செய்வோம்? கடவுள் திருவருள் விளக்கம் எந் நாளடைவோம்? மரணம் பிணி மூப்பு முதலிய அவத்தைகள் எப்போது நீங்கும்? என்று மழியாத பேரின்ப சித்தி எக்காலங் கிடைக்கும்? என்று எண்ணி யெண்ணி வழிதுறை தெரியாமல் வருந்தி நின்ற தருணத்தே—

களைப்பறிந் துதவுங் கருணைக்கடலாகிய கடவுளே! தேவரீர் நெடுங்கால மரண முதலாகிய அவத்தைகளாற் றுன்பமுற்றுக் களைப்படைந்த எங்களை அவ்வவத்தைகளி னின்றும் நீக்கிக் களைப்புங் கலக்கமுந்

தவிர்த்து அழியாத பேரின்பசித்தியை அடைவித்தற் பொருட்டாகவே பூர்வ ஞான சிதம்பரத்தின் வடபால் பார்வதிபுர மென்று குறிக்கப்படுகின்ற உத்தர ஞான சித்திபுரத்தில் யாம் அளவு கடந்த நெடுங் காலம் சித்தி யெல்லாம் விளங்கத் திருவருள் நடஞ்செய்வோ'மென் றும் 'அது தருணம் மிகவும் அடுத்து சமீபித்த தருண' மென்றும் 'அப் பதியினிடத்தே யாம் அருணடம் புரி தற்கு அடையாளமாக ஓர் ஞான சபை காணுதல் வேண்டு'மென்றும் திருவருட் குறிப்பால் அறிவித்தது மன்றி, அருளுருவாகி யெங்களகத்தும் புறத்தும் அமர் ந்தருளி யாதோர் தடைகளு மின்றி அத் திரு ஞான சபையுந் தோன்றி விளங்கச் செய்வித்தருளிய தேவரீர் பெருங் கருணையைக் கருதுந்தோறும் பெருங் களிப் படைகின்றோம். இனி அத் திரு ஞான சபையை அலங் கரித்தல்வேண்டு மெனக் குறிப்பித்த வண்ணம் அலங் கரிக்கத் தொடங்குகின்றோம். அருட் பெருஞ் ஜோதி யாண்டவரே! தேவரீர் அருளுருவாகி யெங்கள் அகத் தும் புறத்தும் அமர்ந்தருளி யாங்கள் செய்யும் இவ் வலங்காரத் திருப்பணியில் எவ்விதத்தா லும் யாதொரு தடையும் வாராத வண்ணஞ் செய்வித்து அவ் வலங் காரத் திருப்பணியை முற்றுவித்தருளல் வேண்டும்.

சர்வ வல்லபராகிய தனித்தலைமைக் கடவுளே! அத் திருவலங்காரத் திருப்பணி முற்றிய தருணத்தே தேவரீர் அமர்ந்தருளி அற்புதத் திருவருள் விளக்கத் தால் எங்களையும் இவ் வுலகில் இத் தேகத்தைப் பெற்ற மற்றவர்களையும் உண்மையடியார்களாக்கி யுண்மையறி

வை விளக்கி யுண்மை யின்பத்தை அளித்துச் சமரச சுத்த சன்மார்க்க நிலையில் வைத்துச் சத்திய வாழ்வை யடைவித்து நித்தியர்களாக்கி வாழ்வித்தல்வேண்டும். எல்லாம் உடைய அருட்பெருஞ் ஜோதி யற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடையாகிய சமயங்கள் மதங்கள் மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் வருணம் ஆசிரம முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்திற் பற்றாதவண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்.

எல்லா மாகிய தனிப் பெருந் தலைமை அருட்பெருஞ் ஜோதி யாண்டவரே! தேவரீர் திருவருட் பெருங் கருணைக்கு வந்தனம்! வந்தனம்!

திருச்சிற்றம்பலம்

சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்

முற்றிற்று

## ௨. சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம்[436]

### திருச்சிற்றம்பலம்

இயற்கை யுண்மை நிறைவாகி யுள்ள ஓர் சுத்த சிவாநுபவ வெளியில், இயற்கை விளக்க நிறைவாகி விளங்கிய அருட்பெருஞ்சோதி சொரூபராய்,இயற்கை யின்ப நிறைவாகி யோங்கிய சிவானந்த வொருமைத் திருநடச் செய்கையை எல்லா உயிர்களும் இன்பமடை தற் பொருட்டுத் திருவுளக் கருணையாற் செய்தருளு கின்ற சர்வ வல்லபராகிய தனித்தலைமைக் கடவுளே!

அறிவென்பது ஓர் சிறிதுந் தோற்றாத அஞ் ஞான மென்னும் பெரிய பாசாந்தகாரத்தில் நெடுங் காலம் சிற்றணுப்பசுவாகி யருகிக் கிடந்த அடியேனுக் குள் உள்ளொளியாகி யிருந்து அப் பாசாந்தகாரத்தி னின்றும் எடுத்து, எல்லாப் பிறப்புடம்புகளினும் உயர்வுடைத்தாகிய ஆறறிவுள்ள இம் மனிதப் பிறப் புடம்பில் என்னை விடுத்துச் சிறிது அறிவு விளங்கச் செய்த தேவரீரது திருவருட் பெருங் கருணைத் திறத்தை எங்ஙன மறிவேன்! எவ்வாறு கருதுவேன்! என் னென்று சொல்வேன்!

---

436. சுவாமிகளது தெய்வத் திருக்கரத்தால் எழுதிய மூலமே இங்கு இதற்கு ஆதாரம். இதற்காகக் கிடைத்த அன்பர்கள் கைஎழுத்துப் பிரதிகள் ஆறு. இது சுவாமி களின் இரண்டாவது வாசக விண்ணப்பமாக எல்லாப் பிரதிகளிலும் கொண்டிருக்கிறது. இவ் விண்ணப்பத்தின் பெயர் மூலத்தில் சுவாமிகளால் குறிக்கப்படவில்லை.

எல்லாம் வல்ல இயற்கை யுண்மைக் கடவுளே! உபசாரத்தாற் பெற்ற தந்தை யென்பான் ஒருவனது சுக்கிலத் துளியின்கண் என்னை யோர் பகுதிப் பேரணு வுருவிற் பெருகி வெளிப்பட விருத்திய காலத்திலும், எனக்குள் உள்ளொளியாகி யிருந்து அப் பகுதிப் பேரணு வுருவைச் சிருட்டித் தருளினீர். அன்றிப் புறத்தில் யாவராலுஞ் சகிக்கப்படாத அதன் அருவருப்பையும் அசுத்தத்தையும் தீ நாற்றத்தையும் சகித்து, அச் சுக்கிலத் துளியினிடத்து ஓர் ஆவியுருவாகி யிருந்து, அத் துளியின்கண் ணுள்ள பல் வகை விரோத தத்துவங்களாற் சிறிதுந் தடைபடாமல் என் னுருவையுங் காத்தருளினீர். அன்றி, அங்ஙனம் அரும்பிய ஆன்மசத்திக் கலைகள் வெளிப்பட விளக்கி வளர்த்து மருளினீர்.

உபசாரத்தாற் பெற்ற தா யென்பாள் ஒருத்தியின் சோணிதத் திரளில் என் னுருவைச் சேர்க்கும் வரையில், அப்போது அப்போது என் னுருவைச் சிதைப்பதற்கு எதிரிட்ட தூரிசுக ளெல்லாவற்றையு நிக்கிரகஞ் செய்தருளினீர். இங்ஙனம் புரிந்த தேவரீரது திருவருட் பெருங் கருணைத் திறத்தை எங்ஙன மறிவேன்! எவ்வாறு கருதுவேன்! என் னென்று சொல்வேன்!

எல்லாம் உடைய இயற்கை விளக்கக் கடவுளே! தாய் கருப்பையிற் சோணிதத் திரளிற் சேர்த்து என்னை ஓர் பூதப் பேரணு உருவிற் பெருகி வெளிப்பட இருத்திய காலத்திலும், எனக்குள் உள்ளொளி

யாகி யிருந்து அப் பூதப் பேரணு வுருவைச் சிருட்டித் தருளினீர். அன்றிப் புறத்தில் எவராலுஞ் சிறிதுஞ் சகிக்கப்படாத அதனசுத்தம் அருவருப்பு துற்கந்த முதலியவற்றைப் பொறுத்து அச்சோணிதத் திரளில் ஓர் ஆவி யுருவாகி யிருந்து, அத் திரளி னுள்ள பல் வகை விரோத தத்துவங்களால் சிறிதுந் தடைபடா மல் என்னுருவைக் காத்தருளினீர்.

அன்றியும், அவ்விடத் தெதிரிட்ட தூரிசுக ளெல் லாவற்றையும் நிக்கிரகஞ் செய்தருளினீர். அன்றி, அங்ஙனம் பூத்த ஆன்ம சத்திக் கலைகள் வாட்டமடை யாது வெளிப்பட்டு விளங்க வளர்த்தருளினீர்.

அன்றியும், தாய் கருப்பையினிடத்துப் பூதப் பேரணு வுருவிற் கிடந்த என்னை அக் கருப்பையிற் பவு திக பிண்ட வடிவி லிருத்தும் வரையில், நச்சுக் கிருமி நச்சுக் காற்று நச்சுச் சுவாலை முதலிய வுற்பாத வகை களால் எனது பூதப் பேரணுவுருச் சிதறி வேறுபடா மலுங் காத்தருளினீர். அன்றியும், தாய் கருப்பையிற் பவுதிகபிண்ட வடிவில் என்னை யிருத்திய காலத்திலும், எனது இச்சை ஞானக் கிரியைகளை வெளிப்படுத்துதல் முதலிய உபகாரிப் பதிகரிப்புகளுக் குரிய உபயோக தத் துவ வுறுப்புக ளெல்லாவற்றையும் குறைவின்றி வகுத் தமைத்து வளர்த்துக் காத்தருளினீர்.

அன்றியும், அடியேன் தாய் கருப்பையிற் பிண்ட வடிவிற் கிடந்தகாலத்து, இருப்பிற் பெரிதுங் கடினமு டையதாய் இருட் குகையிற் பெரிதும் இரு ளுடைய தாய் மிகவுஞ் சிற்றள வுடையதாய் அசுத்த முதலிய

வற்றால் நிரம்பிய அக் கருப்பையினுள் நெருக்கத் தாலும் வெப்பத்தாலும் புழுங்கிய புழுக்கத்தினால் வருந்தி வருந்திக் களைத்தபோ தெல்லாம், அங்ஙனம் அமுதக் காற்றை அடிக்கடி மெல்லென வீசுவித்து, அவ் வருத்தமுங் களைப்புந் தவிர்த்துக் காத்தருளினீர்.

அன்றியும், தாய் கருப்பையிற் பிண்ட வடிவிற் கிடந்து பசியினாற் பரதவித்து மூர்ச்சித்தபோ தெல் லாம், பூதகாரிய அமுதத்தை எனக்கு ஊட்டுவித்துப் பசியை நீக்கி மூர்ச்சை தெளிவித் தருளினீர். அன்றி யும் தாய் கருப்பையிற் பிண்டவடிவிற் கிடந்து பேய் வெருட்டாலும் பேரிருட்டாலும் பயந்தபோ தெல் லாம், நாத வொலியாற் பேய் வெருட்டையும் விந்து விளக்கத்தாற் பேரிருட்டையுந் தவிர்த்து, என் பயத்தை நீக்கியருளினீர். அன்றி, தாய் கருப்பையின் கண் நேரிட்ட பெருந் தீ பெருங் காற்று பேரோசை பெரு வெள்ளம் பெரும் புழு முதலிய உற்பாத துரிசு கள் அனைத்தையுந் தவிர்த்துக் காத்து, அப் பிண்ட வடிவில் எனக்கு ஓரறிவையும் விளக்கி யருளினீர்.

அன்றியும், உலகினிடத்தே பிறந்து அனுபவிப் பதற்குரிய சுப வனுபவப் பெருக்கம் ஆயுட் பெருக்கம் முதலிய நன்மைகளையும் எனக்கு அப் பிண்ட வடிவின் கண்ணே அமைத் தருளினீர்.

அன்றியும், சோணிதக் காற்றின் அடிபடல் யோனிநெருக் குண்ணல் முதலிய அவத்தைகளால் அபாயம் நேரிடவொட்டாமற் காத்து இவ் வுலகி னிடத்தே தோற்றுவித் தருளினீர். இங்ஙனம் புரிந்த

தேவரீரது திருவருட் பெருங் கருணைத் திறத்தை எங்ஙன மறிவேன்! எவ்வாறு கருதுவேன்! என்னென்று துதிப்பேன்!

எல்லா மாகிய இயற்கை யின்பக் கடவுளே! தந்தை யென்பவனது சுக்கிலப் பையின்கண் யான் வந் தமைந்த கணப்போது தொடங்கி தா யென்பவளது சோணிதப் பையின்கண் சென் றடைந்த கணப்போதிற்கு முன் கணப்போது வரையுமாக, என்னொருவாறு அளவிடப்பட்ட ஒரு கோடி ஒன்பது லக்ஷத் தறுபதினாயிரங் கணப்போது பரி யந்தம் எவ்வகைத் தடைகளும் வாராதபடி, பகுதிப் பேரணு வுருவிற் கிடந்த எனது அகத்திலும் புறத் திலும் அருவாகியும் உருவாகியும் சலித்தல் முதலிய வின்றி அன்பொடும் அருளொடும் பாதுகாத் திருந்த தேவரீரது திருவருட் பெருங்கருணைத் தன்மைக்கு இவ்வுலகில் ஒருவாறு ஒரு கணப்போது பாதுகாத் தலிற் சலிப்படைந்தும் தளர்ச்சியடைந்தும் அருவருப் புற்றும் சுதந்தரமற்றும் பராக்கிலிருந்துந் தடைபடு கின்ற தந்தை முதலிய ஜீவர்கள் கருணைத் தன்மையை ஒப்பென்று சொல்வதற்கு எவ்விதத்தினுஞ் சிறிதாயி னும் மனந் துணியாமையால், அங்ஙனம் உபசரியாத வனாகி யிருக்கின்றேன். ஆகலில் தேவரீரது திருவருட் பெருங் கருணையை யென்னென்று கருதுவேன்! என் னென்று துதிப்பேன்!

அருட்பெருஞ் ஜோதித் தனித் தலைமைக் கடவுளே! தா யென்பவளது சோணிதப் பையின்கண் யான்

வந்தமைந்த கணப்போது தொடங்கி இவ்வுலகிற் றோன்றிய கணப்போதிற்கு முன் கணப்போது வரையுமாக, என்னு லொருவாறு அளவிடப்பட்ட ஆறுகோடி நாற்பத்தெட்டு லக்ஷங் கணப்போது பரியந்தம், எவ்வகைத் தடைகளும் எவ்வகை ஆபத்துகளும் வாராதபடி, பூதப்பேரணு வுருவிலும் பிண்டப் பெரு வடிவிலும் கிடந்த என தகத்திலும் புறத்திலும் அருவாகியும் உருவாகியும் சலித்தல் முதலியவின்றிப் பெருந் தயவினோடு பாதுகாத்திருந்த தேவரீரது திருவருட் பெருங் கருணைத் தன்மைக்கு இவ்வுலகில் ஒருவாறு ஒரு கணப்போது பாதுகாத்தலிற் சலித்தும் தளர்ந்தும் அருவருத்தும் பரதந்திரித்தும் பராக்கடைந்தும் தடைபடுகின்ற தாய் முதலிய ஜீவர் கருணைத் தன்மையை லொப்பென்று சொல்வதற்கு எவ்வகையினும் எத்துணையும் மனந் துணியாமையால், அங்ஙனம் உபசரியாதவனுகி யிருக்கின்றேன். ஆகலில் தேவரீரது திருவருட் பெருங் கருணையை என்னென்று கருதுவேன்! எங்ஙனந் துதிப்பேன்!

யாவராலும் பிரித்தற் கொருவாற்றானுங் கூடாத பாச மென்னு மகாந்தகாரத்தில் யா னது வென்னும் பேதந் தோன்றாது அழுங்கிக் கலந்து அளவிறந்த காலம் முன்பின் னென்ப தின்றி மூர்ச்சித்துக் கிடந்த என்னை அம் மகாந்தகாரத்தி னின்றும் ஓர் கணப்பொழுதினுள் அதிகாரணக் கிரியையால் அதிகாரணப் பகுதி யுருவிற் பிரித்தெடுத் தருளிய தேவரீரது திருவருட் பேராற்றலை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!

சத்திய ஞானானந்தத் தனித்தலைமைக் கடவுளே! காரணக் கிரியையாற் காரணப் பகுதி யுருவினும் அதி சூக்குமக் கிரியையால் அதிசூக்குமப் பகுதி யுருவினும் சூக்குமக் கிரியையாற் சூக்குமப்பகுதி யுருவினும் பரத்துவ சத்திசத்தரால் பூதவுருவினும் அபரத்துவ சத்தி சத்தால் பவுதிக வடிவினும் ஓர் கணப்போதினுள் என்னைச் செலுத்தாமற் செலுத்திய தேவரீரது திருவருட் பேராற்றலை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!

அகண்ட பூரணானந்தராகிய அருட் பெருஞ்ஜோதிக் கடவுளே! ஜீவனை ஆதரிப்பிக்கும் பூதப் பிருதிவித் தோற்றமும் ஜீவனை விருத்தி செய்விக்கும் பூத நீர்த் தோற்றமும் ஜீவனை விளக்கஞ் செய்விக்கும் பூதாக் கினித் தோற்றமும் ஜீவனை யதிகரிப்பிக்கும் பூத வாயுத் தோற்றமும் ஜீவனை வியாபகஞ் செய்விக்கும் பூதவெளித் தோற்றமும் உபப் பிருதிவி உபநீர் உபாக் கினி உப வாயு முதலிய தோற்றங்களும் அவைக ளிருக்கு மிடங்களும் தொழிலிட முதலிய விடங்களும், ஒலியறிவு உருவறிவு சுவையறிவு நாற்றவறிவு பரிசவறிவு என்னும் ஐவகைக் குண வறிவுகளும் அவைக ளிருத்தற் குரிய செவி கண் நாக்கு மூக்கு மெய் யென்னு முள்ளிடப் பொறிகளும் அவைகள் உத்தி யோகித்தற் குரிய வெளியிடப் பொறிகளும், வசனித் தறிதல் நடந்தறிதல் கொடுத்தெடுத் தறிதல் மலம் விடுத்தறிதல் சலம் விடுத்தறிதல் என்னும் ஐவகைத் தொழிலறிவுகளும் அவைக ளிருத்தற் குரிய வாக்கு

பாதம் கை நீர்வாயில் அபானவாயில் என்னும் கரும உள்ளிடப் பொறிகளும் அவைகள் தொழிற்படற்குரிய கருமப் புறவிடப் பொறிகளும், நினைத்தல் விசாரித்தல் நிச்சயித்தல் அகங்கரித்தல் என்னும் சூக்குமக் கரணத் தொழில்களும் அவைகளை யியற்றும் மனம் புத்தி சித்தம் அகங்கார மென்னும் சூக்கும கரணங்களும் அவைகளை யியற்றுவிக்கும் அதிசூக்கும கரணங்களும், அக் கரணங்களின் உபகரணங்களாகிப் பலபல பேதப்பட்டு விரிந்த சத்துவம் ராஜதம் தாமச முதலிய குணங்களும் அவைக ளிருத்தற்கும் உத்தியோகித்தற்கும் இடங்களும் பருவஞ் செய்தல் தகுதி செய்தல் இச்சை செய்தல் தெரிவு செய்தல் அதிகாரஞ் செய்தல் காரணஞ் செய்தல் காரியஞ் செய்தல் முதலிய இடைப் பாட்டுத் தொழில்களும் அவைகளை யியற்றும் பொழுது இயைபு இச்சை அறிவு முதலிய கருவிகளும் அக் கருவிகளுக் குரிய இடங்களும் அவைக ளுத்தியோகித்தற் குரிய இடங்களும், துரிசு நீக்குவித்தல் சுகம் விளைவித்தல் தூய்மைசெய்வித்தல் இன்பமடைதற்கு வழியா யிருத்தல் துணையா யிருத்தல் முதலிய பரத்துவத் தொழில்களும் அவைகளை இயற்றுதற் குரிய தத்துவங்களும் அவைக ளிருத்தற் குரிய இடங்களும் பிரேரித்தற் குரிய இடங்களும், அறிதல் அறிவித்தல் அனுபவித்தல் அனுபவிப்பித்தல் முதலிய முக்கியத் தொழில்களும் அவைகளை இயற்றுகின்ற சத்திசத்தர்களும் அவர்க ளிருத்தற் குரிய இடங்களும் அவர்கள் அதிகரித்தற் குரிய இடங்களும், வாத விருத்தி பித்த

விருத்தி சிலேட்டும விருத்திகளும் அவைக ளிருக்கு மிடங்களும் உத்தியோகிக்கு மிடங்களும், சூரியசத்தி சந்திரசத்தி அக்கினிசத்தி தாரகைசத்தி பிரமசத்தி மாயாசத்தி ருத்திரசத்தி முதலிய சத்திகளும் அவர்க ளிருத்தற்கும் அதிகரித்தற்கும் உரிய இடங்களும் அச் சத்திகளை நடத்துஞ் சத்தர்களும் அவர்க ளிருத் தற்கும் அதிகரித்தற்கும் உரிய இடங்களும், நனவு கனவு சுழுத்தி முதலிய அவத்தைகளும் அவைக ளிருத்தற் குரிய இடங்களும் இங்ஙனம் இன்னும் பற் பல அக வுறுப்புகளும் அகப்புற வுறுப்புகளும்; மீத் தோல் புடைத்தோல் வன்தோல் மென்தோல் முதலிய தோல்வகைகளும், வெண்ணரம்பு செந்நரம்பு பசுநரம்பு சிறுநரம்பு பெருநரம்பு முதலிய நரம்பின் வகை களும், பேரென்பு சிற்றென்பு நீட்டென்பு முடக் கென்பு முதலிய என்பின் வகைகளும், நல்லிரத்தம் புல்லிரத்தம் கலவையிரத்தம் கபிலையிரத்த முதலிய இரத்தவகைகளும், மெல்லிறைச்சி கல்லிறைச்சி மண்ணிறைச்சி நீரிறைச்சி முதலிய இறைச்சி வகை களும், மேனிலைச் சுக்கிலம் கீழ்நிலைச் சுக்கில முத லிய சுக்கில வகைகளும், ஓங்கார மூளை ஆங்கார மூளை முதலிய மூளை வகைகளும், தலையமுதம் இடையமுத முதலிய அமுத வகைகளும், வெண்மை செம்மை பசுமை கருமை பொன்மை என்னும் வண்ண வகை களும், வெண்மையிற் செம்மை வெண்மையிற் பசுமை வெண்மையிற் கருமை வெண்மையிற் பொன்மை செம்மையின் வெண்மை செம்மையிற் பசுமை செம்

மையிற் கருமை செம்மையிற் பொன்மை பசுமையின் வெண்மை பசுமையிற் செம்மை பசுமையிற் பொன்மை பசுமையிற் கருமை கருமையின் வெண்மை கருமையிற் செம்மை கருமையிற் பசுமை கருமையிற் பொன்மை பொன்மையின் வெண்மை பொன்மையிற் செம்மை பொன்மையிற் பசுமை பொன்மையிற் கருமை என்னும் வண்ண பேத வகைகளும், இவைகள் இவைகள் இருத்தற் குரிய இடங்களும் செயல்வகைகளும் பயன் வகைகளும், இங்ஙன மின்னும் பற்பல புறவுறுப்புகளும் புறப்புற வுறுப்புகளும் எனக்கு உபகரிக்கும் பொருட்டு இப் பவுதிக வடிவின்கண் ஒருங்கே உண்ணின்று தோன்ற உண்ணின்று தோற்றுது தோற்றுவித்த தேவரீரது திருவருட் பேராற்றலை எங்ஙன மறிந்து எவ்வாறு கருதி என்னென்று துதிப்பேன்!

சுத்த சன்மார்க்க லக்ஷிய சத்திய ஞானக் கடவுளே! ஜீவர்களாற் கணித்தறியப்படாத பெரிய உலகின் கண்ணே, பேராசை பெருங்கோபம் பெருமோகம் பெருமதம் பேருலோபம் பேரழுக்காறு பேரகங்காரம் பெருவயிரம் பெருமடம் பெருமயக்க முதலிய பெருங் குற்றங்களே பெரும்பாலும் விளைவதற் குரிமையாகிய மற்றை யிடங்களிற் பிறப்பியாமல், குணங்களே பெரும் பாலும் விளைதற்குரிய இவ் விடத்தே, உறுப்பிற் குறைவுபடாத உயர் பிறப்பாகிய இம்மனிதப் பிறப்பில் என்னைப் பிறப்பித்தருளிய தேவரீரது பேரருட் பெருங் கருணைத் திறத்தை யென்னென்று கருதி யென்னென்று துதிப்பேன்!

அருட் பெரு வெளியின்கண்ணே அருட்பெருஞ் ஜோதி வடிவாகி விகற்ப மில்லாது விளங்குகின்ற மெய்ப்பொருட் கடவுளே! சிசுப் பருவந் தொடங்கிக் குமாரப் பருவம் வரையில் பேய் வெருட்டல் தோஷந் தாங்கல் பாலெதிரெடுத்தல் சவலைக் குருந்தாதல் நோய்ப் பிணிப்புண்டல் பசியா லரற்றல் பயத்தா லுலம்புதல் உண்டி புவட்டல் உடம்பொடு நோதல் முதலிய எவ்வகைத் தடைகளாலுந் தடைபடாமல், எனதகத்தும் புறத்தும் காத்திருந்து வளர்த்தருளிய தேவரீரது பேரருட் பெருங் கருணைத் திறத்தை என் னென்று கருதி யென்னென்று துதிப்பேன்!

அறிவா ரறியும் வண்ணங்க ளெல்லா முடையபேர ருட் பெருஞ்ஜோதிப் பெருந்தகைக் கடவுளே! குமாரப் பருவத்திற்றானே உலகிற் சிறுவர்களுடன் கூடிச் சிறு விளையாட் டியற்றல் சிற்றுண்டி விழைதல் சித்திரம் பயிறல் அதிசயம் பார்த்தல் அசங்கியம் பேசல் அவ லித் தழுதல் சிறுசண்டைசெய்தல் சிறுகுறும்பியற்றல் தன்வசத் துழலல் தாய்வயிற் சலித்தல் முதலிய குற் றங்களில் என்னைச் சிறிதுஞ் செலுத்தாமல், ஓர் சிறிது அறிவு விளங்கப் புரிந்து இடந் தனித் திருத்தல் இச்சை யின்றி நுகர்தல் ஜெபதபஞ் செய்தல் தெய்வம் பரா வல் பிறவுயிர்க் கிரங்கல் பெருங்குணம் பற்றல் பாடிப் பணிதல் பத்திசெய் திருத்தல் முதலிய நற்செய்கை களில் என்னைச் செலுத்திய தேவரீரது பேரருட் பெருங் கருணைத் திறத்தை என்னென்று கருதி என் னென்று துதிப்பேன்!

எல்லா மானவராயும் ஒன்று மல்லாதவராயும் எல்லா அண்ட சராசரங்களின் அகத்தும் புறத்து நிறைந்து விளங்குகின்ற தனித்தலைமைக் கடவுளே! குமாரப் பருவத்தில் என்னைக் கல்வியிற் பயிற்றும் ஆசிரியரை யின்றியே என்றாத்திற் பயின் றறிதற் கருமையாகிய கல்விப் பயிற்சியை என துள்ளகத்தே யிருந்து பயிற்றுவித் தருளினீர்.

இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெருமறைப்பையும் போதுபோக்கையும் உண்டு பண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது, பயிலுதற்கு மறிதற்கும் மிகவு மிலேசுடையதாய்ப் பாடுதற்கும் துதித்தற்கு மிகவு மினிமையுடையதாய் சாகாக் கல்வியை இலேசிலறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி யொன்றனிடத்தே மனம்பற்றச் செய்து அத் தென்மொழிகளாற் பல்வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித் தருளினீர்.

அச் சிறு பருவத்திற்றானே ஜாதி யாசாரம் ஆசிரம ஆசாரம் என்னும் பொய்யுல காசாரத்தைப் பொய் யென் றறிவித்து அவைகளை யநுட்டியாமற் றடை செய்வித்து, அப்பருவம் ஏறுந்தோறும் ஏறுந்தோறும் எனதறிவை விளக்கஞ் செய்து செய்து என்னை மேனிலையில் ஏற்றி ஏற்றி நிலைக்க வைத் தருளினீர்.

வாலிபப் பருவம் அடுக்குந் தருணத்திற்றானே, அப் பருவத்திற்கு மிகவும் உரிய விடய இச்சைகளைச்

சிறிதுந் தலையெடுக்க வொட்டாது அடக்குவித் தருளினீர்.

அவ் வாலிபப் பருவந் தோன்றுதற்கு முன்னரே, எல்லா உயிர்கட்கும் இன்பந் தருவதற்கு அகத்தும் புறத்தும் விளங்குகின்ற அருட் பெருஞ் ஜோதி யுண்மைக் கடவுள் ஒருவரே யுள்ளார் என் றறிகின்ற மெய்யறிவை விளக்குவித் தருளினீர். வாலிபப் பருவந் தோன்றியபோதே, சைவம் வைணவம் சமணம் பவுத்த முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும் அச் சமயங்களிற் குறித்த சாதனங்களும் தெய்வங்களுங் கதிகளும் தத்துவ சித்தி விகற்பங்க ளென்றும், அவ்வச் சமயங்களிற் பலபட விரிந்த வேதங்கள் ஆகமங்கள் புராணங்கள் சாத்திரங்கள் முதலிய கலைக ளெல்லாம் தத்துவ சித்திக் கற்பனைக்கலைக ளென்றும், உள்ளபடியே எனக் கறிவித்து அச் சமயாசாரங்களைச் சிறிதும் அனுட்டியாமற் றடைசெய்வித் தருளினீர். அன்றியும் வேதாந்தம் சித்தாந்தம் போதாந்தம் நாதாந்தம் யோகாந்தம் கலாந்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த மதங்களும் மார்க்கங்களும் சுத்த சன்மார்க்கானுபவ லேச சித்திபேதங்க ளென் றறிவித்து, அவைகளையும் அனுட்டியாதபடி தடைசெய்வித் தருளினீர்.

அங்ஙனஞ் செய்வித்ததுமன்றி, உலகியற்கண் பொன் விஷய விச்சை பெண் விஷய விச்சை மண் விஷய விச்சை முதலிய எவ் விஷய இச்சைகளிலும்

என்னறிவை யோரணுத் துணையும் பற்றுவிக்காமல், எல்லா வுயிர்களையும் பொதுமையி னோக்கி யெல்லா வுயிர்களும் இன்பமடைதல் வேண்டுமென்னுங் கருணை நன்முயற்சியைப் பெறுவித்துச் சுத்த சன்மார்க்கத் தனிநெறி யொன்றையே பற்றுவித்து எக்காலத்தும் நாச மடையாத சுத்த தேகம் பிரணவ தேகம் ஞான தேகம் என்னுஞ் சாகாக் கலாநுபவ தேகங்களும் தன் சுதந்தரத்தால் தத்துவங்க ளெல்லாவற்றையும் நடத்து கின்ற தனிப்பெரு வல்லபமும் கடவு ளொருவரே யென் றறிகின்ற வுண்மை ஞானமும் கருமசித்தி யோக சித்தி ஞானசித்தி முதலிய எல்லாச் சித்திகளும் பெறு கின்ற அருட்பேறும் பெற்று வாழ்கின்ற பேரின்பப் பெருவாழ்வில் என்னை அடைவிப்பதற்குத் திருவுளங் கொண்டு, அருட்பெருஞ் ஜோதியராகி, நான் எவ் விதத்தும் அறிதற்கு அரிய உண்மைப் பேரறிவை யறிவித்தும், நான் எவ்விதத்தும் காண்பதற்கு அரிய உண்மைப் பெருங் காட்சிகளைக் காட்டுவித்தும், நான் எவ்விதத்தும் செய்தற்கு அரிய உண்மைப் பெருஞ் செயல்களைச் செய்வித்தும், நான் எவ்விதத்தும் அடைதற்கு அரிய உண்மைப் பெரு நன்மைகளை அடைவித்தும், நான் எவ்விதத்தும் அநுபவித்தற்கு அரிய உண்மைப் பேரநுபவங்களை அநுபவிப் பித்தும், எனது அகத்தினும் புறத்தினும் இடை விடாது காத்தருளி யெனது உள்ளத் திருந்து உயிரிற் கலந்து பெருந் தயவாற் றிருநடஞ் செய் தருளுகின்றீர்.

இங்ஙனஞ் செய்தருள்கின்ற தேவரீரது திருவருட் பெருங்கருணைத் திறத்தை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்!

திருச்சிற்றம்பலம்

சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்பம்

முற்றிற்று

# ௩. சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்[437]

திருச்சிற்றம்பலம்

இயற்கை விளக்கம் என்கின்ற சத்திய ஞான சபைக்கண்ணே, இயற்கை உண்மை என்கின்ற சத்தியத் திருவுருவினராய், இயற்கை இன்பமென்கின்ற[438] சத்தியத் திருநடஞ் செய்தருள்கின்ற[439] இயற்கைத் தனிப் பெருங் கருணைத் தனிப் பெரும் பதியாய[440] தனித் தலைமைக் கடவுளே!

தேவரீர் திருவருட் சமுகத்தை யடைந்த உண்மை ஞானிகளின் சித்திவல்லப தரத்தை வகுத்தறிந்து வாழ்த்துதுமென்று அளவிகந்த முகங்களைக்கொண்டு அளவு கடந்த நெடுங்காலம் தத்தம் அளவைகளால்

---

437. இங்கு இதற்காதாரம் அன்பர்கள் கையெழுத்துப் பிரதிகள் ஆறு. 'மூன்றாவது அருளிச்செய்த விண்ணப்பம்' என்று ஸ்ரீ மகாதேவ முதலியாரது பிரதியிலும், 'திருவருட் சமுக விசேஷ விண்ணப்பம்' என்று ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை அவர்களது பிரதியிலும் 'ஞான விண்ணப்பம்' என்று வேறு இரண்டு பிரதிகளிலும், 'இஃது மூன்றாவது வாசக விண்ணப்பம். திருவருட் சமுகத் திருவண்ணத் தருமையினையும் அத்திருவருட் சமுகத்தை யடைந்த உண்மை ஞானிகளின் சித்தி வல்லப தரத்தினது பேரருமையினையுங் கூறுகின்றது' என்று மற்றொன்றிலும் இவ் விண்ணப்பத்தின் தலைப்பில் எழுதியிருக்கிறது.

438. என்கிற—பி-ம்.

439. செய்தருளுகின்ற—பி-ம்.

440. பெரும்பதியாகிய—பி-ம்.

## ௩. சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்[437]

*திருச்சிற்றம்பலம்*

இயற்கை விளக்கம் என்கின்ற சத்திய ஞான சபைக்கண்ணே, இயற்கை உண்மை என்கின்ற சத்தியத் திருவுருவினராய், இயற்கை இன்ப மென்கின்ற[438] சத்தியத் திருநடஞ் செய்தருள்கின்ற[439] இயற்கைத் தனிப் பெருங் கருணைத் தனிப் பெரும் பதியாய[440] தனித் தலைமைக் கடவுளே!

தேவரீர் திருவருட் சமூகத்தை யடைந்த உண்மை ஞானிகளின் சித்திவல்லப தாத்தை வகுத்தறிந்து வாழ்த்துது மென்று அளவிகந்த முகங்களைக் கொண்டு அளவு கடந்த நெடுங்காலம் தத்தம் அளவைகளால்

---

437. இங்கு இதற்காதாரம் அன்பர்கள் கைஎழுத்துப் பிரதிகள் ஆறு. 'மூன்றாவது அருளிச்செய்த விண்ணப்பம்' என்று ஸ்ரீ மகாதேவ முதலியாரது பிரதியிலும், 'திருவருட் சமூக விசேஷ விண்ணப்பம்' என்று ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை அவர்களது பிரதியிலும் 'ஞான விண்ணப்பம்' என்று வேறு இரண்டு பிரதிகளிலும், 'இஃது மூன்றாவது வாசக விண்ணப்பம். திருவருட் சமூகத் திருவண்ணத் தருமையினையும் அத்திருவருட் சமூகத்தை யடைந்த உண்மை ஞானிகளின் சித்தி வல்லப தாத்தினது பேரருமையினையுங் கூறுகின்றது' என்று மற்றொன்றிலும் இவ் விண்ணப்பத்தின் தலைப்பில் எழுதியிருக்கிறது.

438. என்கிற—பி-ம்.

439. செய்தருளுகின்ற—பி-ம்.

440. பெரும்பதியாகிய—பி-ம்.

தனித்தனி யளந்தளந்தும் ஒருமித் தளந்தளந்தும் ஒருவாற்றினு[441] முடிவு தோற்றாமையின்[442] வேதாகமங்களனைத்தும் ஆங்காங்கு கோடித் ததிசயிக்கின்றனவென்றும், அண்ட சராசரங்க ளெல்லாவற்றையும் படைத்தல் காத்தல் துரிசுநீக்கல்[443] முதலிய தொழில்களால் நிகழ்த்துகின்ற அதிகாரத் தலைவர்களும் எவ்வகைத் தத்துவங்களையும் காரண காரிய திறத்தால் நடத்துகின்ற சத்தி சத்தர்களும் உணர்ந் துணர்ந்தும் உணர்ச்சி செல்லாமையின் முயற்சி பற்றாது மயங்குகின்றன ரென்றும், பேரறிவாற் சிறந்த பெரியர்க ளெல்லாம் வியந்து வியந்து விளம்புகின்றனர். அதனால் திருவருட் சமுகத்தை யடைந்த உண்மை ஞானிகளின் சித்தி வல்லப தரத்தை ஒருவராலும் ஒருவாற்றானும் உணர்ந்து கொள்ளுதல் கூடா வென்று ஐயுற வின்றி அறிந்து கொண்டேன். இங்ஙனம் அறிந்துகொண்ட சிறியேன் அவ்வுண்மை ஞானிகளுக்குச் சித்தி வல்லப தரத்தைக் கொடுத்தருளிய திருவருட் சமுகத்தினியற்கை யுண்மை விளக்கத் தரத்தை எங்ஙனம் அறியத் தொடங்குவேன்!

மலத்திற் புழுத்த புழுவினுஞ் சிறியேன் பொய்யறிவாற் புனைந் துரைத்த பொய்யுரைகளையும் மெய்யுரைகளாகக் கருணையினாற் கடைக்கணித் தருளிய அருட் பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீரது[444] திரு

441. ஒருவாற்றானு—1896.
442. தோன்றாமையின்—பி-ம்.
443. துரிசுநீக்குதல்—பி-ம். 444. தேவரீர்—பி-ம்.

வருட் சமுகத்தின் இயற்கைப் பெருங் கருணைப் பெருந் தன்மையைக் கருதுதற்கு விரும்பிய ஐந்தொழிற் கருத்தர் முதலியோர் தூய்மையுடைமை அன்புடைமை முதலிய சுபகுணங்களைக் கருதுதற்[445] கருவியாய[446] தமது கரணங்கள் முற்றப் பெற்றில வென்று கருதுத லின்றி எண்ணி எண்ணி இரங்குகின்றன ரென்று[447] அறிவுடையோர் வியந்துரைத் தலைப் பலகாற்[448] பயின்று கேட்டறிந்தேன். இங்ஙனங் கேட்டறிந்த சிறியரிற் சிறியேன் அத் திருவருட் சமுகத்தின் இயற்கைப் பெருங் கருணைப் பெருந் தன்மையைக் காமம் வெகுளி முதலிய அவகுணங்கட் கெல்லாம் வைப்பிடமாகிய பாராய் முருட்டன்ன கருங்கற் கரணத்தால் எங்ஙனங் கருதத் தொடங்குவேன்!

நாயிற் கடையேன் செய்த குற்றங்களை யெல்லாம் குணங்களாகக் கொண்டு என்னுள்ளகத்தே யமர்ந்து உயிரிற் கலந்த பெருங்கருணைப் பெருமானே! தேவரீரது திருவருட் சமுகத்தின் இயற்கைப் பெருங் குணப் பெரும் புகழைத் துதித்தற்கு விரும்பிய மூர்த்திகண் முதலியோர் துதித்தற் கருவியாய தத்தஞ் செந்நாவுறுப்புகள் வாய்மைகூறல் இன்சொற்புகறல் முதலிய ஒழுக்கங்களிற் சான்றில வென்று துதித்த லின்றி அச்சுற்று நிற்கின்றன ரென்று அறிஞருண்மை வாசகத்தா

445. கருதுதற்குக்—1885.

446. கருவியாகிய—பி-ம்.

447. இரங்குகின்றன ரென்றும்—பி-ம்.

448. பல்கால், பற்பலகால்—பி-ம்.

லறிந்தேன். இங்ஙன மறிந்த கடையேன் பொய்யுரைத்தல்பயனிலகூறன் முதலிய தீமைக்கட் பயின்று தடித்த எனது அசுத்த நாவினால் தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கைப் பெருங்குணப்[449] பெரும் புகழை எங்ஙனந் துதிக்கத் தொடங்குவேன்!

அண்ட பிண்ட முதலிய எல்லாவற்றிற்கும் அகத்தும் புறத்தும் நிறைந்து விளங்குகின்ற அருட்பெருஞ் ஜோதித் தனிப் பெரும் பதியாய பூரணரே! தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கையுண்மைத் தரத்தை யறிதல் வேண்டு மென்றும், இயற்கைப் பெருங் கருணைப்[450] பெருந் தன்மையைக் கருதுதல் வேண்டு மென்றும், இயற்கைப் பெருங் குணப் பெரும் புகழைத் துதித்தல் வேண்டு மென்றும், எனதுள்ளகத்தே ஓவாதுறைந் தூற் றெழுந்து விரைந்து விரைந்து மேன்மேற் பெருகுகின்ற பேராசைப் பெருவெள்ளம் அணை கடந்து செல்கின்ற தாகலின்,[451] 'அறிவா ரறிகின்ற வண்ணங்களும் கருதுவார் கருதுகின்ற வண்ணங்களும் துதிப்பார் துதிக்கின்ற வண்ணங்களும் ஆகிய எல்லா வண்ணங்களையு முடையவர் அருட் பெருஞ் ஜோதித் தனிப் பெருங் கடவுள்' என்ற சத்திய ஞானிகளது உண்மை வாசகத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு, தன்மை சாலாத் தமியேன்[452] அறிதற்கும் கருதுதற்கும் துதித்தற்குந் தொடங்கினேன்.

---

449. பெருங்கருணை — பி-ம். 450. பெருங்குண — பி-ம்.
451. செல்கின்ற தாகலில் — பி-ம்.
452. சாலாத தமியன் — பி-ம்.

இங்ஙனந் தொடங்குதற்கு முன்னர், என தறிவிற்கும் கருத்திற்கும் நாவிற்கும் இயல்வனவாகத் தோற்றிய வண்ணங்களுள் ஒன்றேனும் ஈண்டு இயற்படத் தோற்றாமையின், அருட்பெருஞ்சோதித் தனிப்பெருங் கடவுளே! தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கை வண்ணங்கள் எத்தன்மையவோ! எத்தன்மையவோ![453] வென்று உணர்ந் துணர்ந்து கருதிக் கருதி யுரைத் துரைத்து அதிசயிக்கின்றவ னானேன்.

இயற்கை யுண்மைத் தனிப்பெரும் பொருளாயும் இயற்கை விளக்கத் தனிப்பெரும் பதமாயும் இயற்கை யின்பத் தனிப்பெருஞ் சுகமாயும் பிரிவின்றி நிறைந்த பெருந் தன்மையராய அருட் பெருஞ் ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருள் வலத்தால் பொறிபுலன்கரண முதலிய தத்துவங்க ளனைத்தையும் வென்று நின்மல ராகித் தத்துவாந்தத்தில் நின்று[454] தம்முண்மை[455] யுணர்ந்து இயற்கை யுணர்ச்சியைப் பெற்று இயற்கை யுண்மைக்கண் இயற்கை யின்பானுபவஞ் செய்கின்ற சுத்த யோகாந்தர்களும் சுத்த கலாந்தர்களும் சுத்த போதாந்தர்களும் சுத்த நாதாந்தர்களும் சுத்த வேதாந்தர்களும் சுத்த சித்தாந்தர்களு மாகிய சுத்தசன்மார்க்க ஞானிகளின் திருக் கூட்டங்களை நன் முயற்சியாற் றனித்தனி யடைந்து பத்தியாற் பணிந்து 'அற்புதப் பெருஞ் செயல் புரிகின்ற ஐயர்களே! அருட் பெருஞ்

---

453. எத்தன்மையனவோ! எத்தன்மையனவோ!—பி-ம்.

454. நின்றும்—பி-ம்.

455. தம்முண்மையை—பி-ம்.

ஜோதித் தனிப் பெரும் பதியாய[456] கடவுளின் இயற்கைத் திருவருட்சமுகம்[457] இருந்த வண்ணம் உள்ளம் உவந்துரைத்தருளல்வேண்டும்' என்று[458] விண்ணப்பிக்கின்ற தோறும், 'எல்லாப் பொருள்கட்கும் எல்லாக் குணங்கட்கும் எல்லாச் செயல்கட்கும் எல்லாப் பயன்கட்கும் எல்லா வநுபவங்கட்கும் மற் றெல்லாவற்றிற்கும் உருவ சொரூப[459] சுபாவ முதலிய இலக்கணங்கள் அனைத்தும் தாமேயாகியும் தாமல்லராகியும்[460] தாக்கியுந் தாக்கற்றும் அகத்தும் அகப்புறத்தும புறத்தும் புறப்புறத்தும் நீக்கமின்றி நிறைந்து விளங்குகின்ற இயற்கை உண்மைக் கடவுளது இயற்கைத் திருவருட்சமுக மிருந்த வண்ணம் அந்தோ! அந்தோ!! எங்ஙனமறிவோம்![461] எவ்வாறு கருதுவோம்! என்னென்று கூறுவோம்!' என்று அவ்வக் கூட்டங்களினுந் தனித் தனி உரைத் துரைத்து நெகிழ்ந்து நெகிழ்ந்து நெட்டுயிர்க்கின்றார்க ளென்றும்; எல்லாத் தத்துவங்களையும் எல்லாத் தத்துவிகளையும் தோற்றுவித்தலும் இயக்குவித்தலும் அடக்குவித்தலும் மயக்குவித்தலும் தெளிவித்தலு மாகிய தொழில்களை எளிதிற் கொடுக்தற்குரிய பூரண சுதந்தரத்தவர்களாய், இயற்கைச் சத்திய ஞான சுகானுபவ பூரண சொரூப சாத்தியர்களாய்,[462]

---

456. தனிப் பெரும் பதியாகிய—பி-ம்.

457. திருச்சமுகம்—பி-ம். 458. என்றும்—பி-ம்.

459. சொருப—பி-ம். 460. தாமல்லாராகியும்—பி-ம்.

461. எவ்வண்ண மறிவோம்—பி-ம்.

462. சொருப சாத்தியர்களாய்—பி-ம்.

எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் தடை படாத நித்திய சுத்த சத்த ஞானதேகிகளாய், பூத சித்தி கரணசித்தி இந்திரியசித்தி[463] குணசித்தி பிர கிருதிசித்தி புருடசித்தி விந்துசித்தி பரசித்தி சுத்த சித்திகாலசித்தி கலாசித்தி விசுவசித்தி வியோமசித்தி பிரமசித்தி[464] சிவசித்தி முதலிய பிண்டசித்தி அண்ட சித்தி பகிரண்டசித்தி அண்டாண்டசித்தி[465] என் கின்ற அந்தரங்க பகிரங்க தத்துவ தத்துவி சித்திக ளெல்லாவற்றையும் திருக்கடைக் கணிப்பாற் செய்ய வல்லவராய், சடாந்த சமரச சத்தியராய் விளங்குகின்ற சமரச சுத்த சன்மார்க்க ஞானிகளது சித்விலாசத் திருச்சபைக்கண்ணே, புண்ணிய வசத்தாற் புகுதப் பெற்று மனங்கனிந்து வணங்கி நின்று, 'சர்வ சுதந்தர ராய சத்தியர்களே! இயற்கை யுண்மைத் தனிப்பெரும் பதியாய கடவுளின் இயற்கைத் திருவருட் சமுக மிருந்த வண்ணம் திருவுளம் பற்றித் திருவாய்மலர்ந்து திருவார்த்தை யளித் தருளல்வேண்டும்' என்று விண் ணப்பிக்கின்ற[466] தோறும் திருவார்த்தை யளித்த லின் றிப் பெருங் கருணைத் திருக்கண்களில் ஆநந்தநீர் பொழிந்து சும்மா விருக்கின்றன ரென்றும்; உணர்ந் தோர்[467] வியந்துரைப்பக் கேள்வியுற்று 'இயற்கைத்

463. இந்தியசித்தி—பி-ம்.
464. 'பரமசித்தி—பி-ம்.
465. அண்டரண்டசித்தி—பி-ம்
466. விண்ணப்பிக்குந் — பி-ம்.
467. உயர்ந்தோர்—பி-ம்.

திருவருட் சமுக மிருந்த வண்ணம் என்னையோ! என்னையோ!!' வென்று குலாவிக் குலாவிக் கூவுகின்றவனானேன்.

அடிநிலைக் கரும ஞானசித்தி யனுபவங்களினும் முடிநிலைக் கரும ஞானசித்தி யனுபவங்களினும், அடிநிலை யோக ஞானசித்தி யனுபவங்களினும் முடிநிலை யோக ஞானசித்தி யனுபவங்களினும், அடிநிலைத் தத்துவ ஞானசித்திய னுபவங்களினும் முடிநிலைத் தத்துவ ஞான சித்தி யனுபவங்களினும், அடிநிலை ஆன்ம ஞானசித்தி யனுபவங்களினும் முடிநிலை ஆன்ம ஞான சித்தி யனுபவங்களினும், சுத்த ஞானசித்தி யனுபவங்களினும், சமரச சுத்த ஞானசித்தி யனுபவங்களினும், அதுவதுவாகி நிறைந்தும், அதுவதுவாகி விளங்கியும், அதுவதுவாகி யினித்தும், ஆங்காங்கு அதீதமாகிக் கலந்தும், இவை யனைத்துமாகி ஒருமித்தும், அதீதாதீதமாகித் தனித்தும் வயங்குகின்ற பெருங் கருணைப் பெரும் பதியாய கடவுளே! எல்லாச் சத்திகளுக்கும் எல்லாச் சத்தர்களுக்கும் எல்லா மூர்த்திகளுக்கும் எல்லா மூர்த்தர்களுக்கும் எல்லாத் தேவிகளுக்கும் எல்லாத் தேவர்களுக்கும் எல்லாச் சாதனர்களுக்கும் எல்லாச் சாத்தியர்களுக்கும் எல்லா வுயிர்களுக்கும் எல்லாத் தத்துவங்களுக்கும் எல்லாப் பொருள்களுக்கும் எல்லாக் குணங்களுக்கும் எல்லாச் செயல்களுக்கும் எல்லா அனுபவங்களுக்கும் மற்றெல்லாவற்றிற்கும் முதற் காரணமாயும் நிமித்த காரணமாயும்[468] துணைக்

468. நிமித்திய காரணமாயும்—1885.

காரணமாயும் இவை யல்லவாயும்[469] விளங்குகின்ற திருவருட்சமுக மிருந்த வண்ணம் அறிந்துகொள்ளுத லிங்ஙன மானால், திருவருட் சமுகப் பெருங் கருணைப் பெரும் பதியாய தேவரீர் இயற்கைத் திருவண்ண மறிந்து கொள்ளுதல்[470] எங்ஙனமோ! எங்ஙனமோ!!

ஓ! ஒப்புயர் வின்றி விளங்குகின்ற ஒருவரே! தேவரீர் திருவண்ணமும் திருவருட் சமுகத் திரு வண்ணமும் அறிதற்கும் கருதுதற்கும் துதித்தற்கும் எத் திறத்தானும் கூடாவாயினும் அடிமை யளவிற் கியன்றபடி அறியா தறிந்தும் கருதாது கருதியும் துதி யாது துதித்தும் எனது உரிமையை ஊற்றஞ்செய் கின்றவனானேன். வந்தனம்! வந்தனம்!

திருச்சிற்றம்பலம்

சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்
முற்றிற்று

---

469. இவையெல்லாமாயும் — 1892.
470. திருவண்ணமறிதல் — பி-ம்.

## சு. சமரச சுத்த சன்மார்க்க சங்க

# சத்திய விண்ணப்பம்[471]

*திருச்சிற்றம்பலம்*

உத்தர ஞான சித்திபுர மென்றும் உத்தர ஞான சிதம்பர மென்றும் திருவருளா லாக்கப்பட்ட ஆக்கச் சிறப்புப் பெயர்களும் பார்வதிபுர மென்றும் வடலூ ரென்றும் உலகியலாற் குறிக்கப்பட்ட குறிப்புப் பெயர்களும் பெற்று விளங்குகின்ற தெய்வப் பதி யினிடத்தே, இயற்கை விளக்க நிறைவாகி யுள்ள ஓர் சுத்த சிவானுபவ ஞானசபையில், இயற்கை யுண்மை நிறைவாகிய திருவுருவைத் தரித்து, இயற்கை யின்ப நிறைவாகிய சிவானந்த ஒருமைத் திருநடச் செய் கையை எவ்வுயிரும் இன்பமடைதற் பொருட்டே செய்தருளுகின்ற எல்லாம் வல்ல தனித்தலைமைக் கடவுளாகிய அருட் பெருஞ் ஜோதி யாண்டவரே!

---

471. இங்கு இதற்காதாரம் அன்பர்கள் கைஎழுத்துப் பிரதிகள் நான்கு. இதன் பெயர் விண்ணப்பத்திலேயே கண்டிருக்கிறது. கிடைத்த பிரதிகளில் இது முன் போந்த மூன்று விண்ணப்பங்களோடு தொடர்ந்து எண் ணப்படாம லிருக்கிறது.

தேவரீரது திருவருட் சமுகத்தில் யான் செய்து கொள்ளுகின்ற சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்.

இவ் வுலகினிடத்து ஆறறி வுள்ள உயர் வுடைத் தாகிய[472] தேகத்தைப் பெற்ற யான் இத் தேகத்திற்கு இடைக்கிடை நேருகின்ற மரணம் பிணி மூப்பு பயம் துன்ப முதலிய அவத்தைக ளெல்லாவற்றையும் நிவர்த்திசெய்து, இத் தேகத்தையே நித்திய தேக மாக்கிக்கொண்டு, எக்காலத்தும் எவ்விடத்தும் எவ் விதத்தும் எத்துணையும் தடைபடாத பேரின்ப சித் திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் வேண்டு மென் பதே எனது சத்தியமான அதிதீவிர விருப்ப முயற்சி யாக இருக்கின்றது.

எனது விருப்ப முயற்சி இங்ஙனமாக, அவத்தைக ளெல்லாவற்றையும் நீக்கி இத் தேகத்தை நித்திய தேகமாக்கி எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வைப் பெற்று வாழ்தல் எதனுற் பெறுதல் கூடுமென்று அறியத் தொடங்கிய தருணத்து, வேறு எந்த வழியாலும் பெறுதல்கூடாது, எல்லாமுடைய கடவுளது திருவருட் சுதந்தரம் ஒன்றுலே பெறுதல் கூடு மென்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ள படி யறிந்தேன்.

பின்னர், திருவருட் சுதந்தரம் நமக்கு எந்த வழி யாற் கிடைக்கு மென்று அறியத் தொடங்கிய தருண

472. உயிர் உடைத்தாகிய—1885

த்து, எனது யானென்னும் தேகசுதந்தரம் போகசுதந்தரம் ஜீவசுதந்தரம் என்னு மூவகைச் சுதந்தரங்களும் நீங்கியவிடத்தே கிடைக்கு மென்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி யறிந்தேன்.

ஆகலில்,[473] எனது சுதந்தரமாகக் கொண்டிருந்த தேக சுதந்தரத்தையும் போக சுதந்தரத்தையும் ஜீவ சுதந்தரத்தையும் தேவரீர் திருவருட்கே சர்வ சுதந்தரமாகக் கொடுத்து விட்டேன். கொடுத்த தருணத்தே, இத்தேகமும் ஜீவனும் போகப் பொருள்களும் சர்வ சுதந்தர ராகிய கடவுள் பெருங் கருணையாற் கொடுக்கப்பெற்றன மன்றி, நமது சுதந்தரத்தாற் பெற்றனவல்ல வென்னும் உண்மையை அருளா லறிவிக்கவும் அறிந்துகொண்டேன். இனி இத்தேகத்தினிடத்தும் ஜீவனிடத்தும் போகப் பொருள்களிடத்தும் தேவரீர் திருவருள் சாட்சியாக எனக்கு எவ்விதத்தும் யாதோர் சுதந்தரத் தோற்றமும் தோற்ற மாட்டாது. தேவரீர் திருவருட் சுதந்தரத்தை என்னிடத்தே வைத்தருளி, மரணம் பிணி மூப்பு பயம் துன்ப முதலிய அவத்தைக ளெல்லாவற்றையும் தவிர்த்து, இத்தேகத்தையே நித்திய தேகமாக்கி எக்காலத்து மழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வில் என்னை வாழ்வித்தல் வேண்டும்.

இத்தேகத்தைப் பெற்ற எல்லாச் சீவர்களுக்கும் எனக் கறிவித்த வண்ணமே அறிவித்து, அவரவர்களை

---

473. ஆதலில்—பி-ம்.

யும் உரிமையுடையவர்க ளாக்கி வாழ்வித்தல் வேண்டும்.

தேவரீர் பெருங் கருணை ஆட்சிக்கு வந்தனம்! வந்தனம்![474]

இங்ஙனம்
சிதம்பரம் இராமலிங்கம்[475]

திருச்சிற்றம்பலம்

சமாச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்
முற்றிற்று

சன்மார்க்க விண்ணப்பங்கள் முடிந்தன

---

474. ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளையவர்கள் பிரதியில் மூன்றாந் தரமும் 'வந்தனம்' என்றிருக்கிறது.

475. கையெழுத்துப் பிரதிகள் மூன்றிலும் 1896-ம் வருஷப் பதிப்பிலும் 'இங்ஙனம் சிதம்பரம் இராமலிங்கம்' என்பது காணப்படுகிறது.

# அநுபந்தம்

## 1. மநுநீதிகண்ட புராணம்[476]

சொன்ன நாட்டிடைத் தொன்மையில் மிக்கது
மன்னு மாமல ராள்வழி பட்டது
வன்னி யாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னி யார்திரு வாரூர்த் திருநகர். ௧

வேத ஓசையும் வீணையின் ஓசையும்
சோதி வானவர் தோத்திர ஓசையும்
மாதர் ஆடல் மணிமுழ வோசையும்
கீத ஓசையு மாய்க்கிளர் வுற்றதே. ௨

பல்லி யங்கள் பரந்த ஒலியுடன்
செல்வ வீதிச் செழுமணித் தேரொலி
மல்லல் யானை ஒலியுடன் மாவொலி
எல்லை இன்றி எழுந்துள எங்கணும். ௩

---

476. பெரிய புராணத்துள் 'திரு நாட்டுச் சிறப்பு' என்பதனை அடுத்து வரும் இது 'திரு நகரச் சிறப்பு' என்பதில் ஐயமில்லை. ஆனால் இது புராண சம்பிரதாயப்படி அல்லாது வேறுவகையில் கூறப்பட்டிருத்தலால், இதன் தலைப்பு சில ஏட்டுப் பிரதிகளில் 'மநுநீதி கண்ட புராணம்', 'மநுநீதி கண்ட சோழ சரித்திரம்' என்பன போன்ற பெயர்களாலும், 'திருவாரூர்ச் சிறப்பு' என்றும் குறிக்கப்பட்டிருக்கிறதாகவும் வேறு சில ஏட்டுப் பிரதிகளில் 'திருவாரூர்ச் சிறப்பு' என்று தொடக்கத்தில் தலைப்பிட்டு, ௧௨-வது திருவிருத்தத்திற்குப் பின் 'மநுநீதிகண்ட புராணம்' முதலிய பெயர்களில் ஒன்று காணப்படுவதாகவும் தெரிகிறது.

'நவசக்தி' ஆசிரியர் ஸ்ரீ திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களது 1932-ம் வருஷப் பதிப்பின் பாடப்படி, திருவிருத்தங்கள் இங்கு அச்சிட்டிருக்கின்றன.

மாட மாளிகை சூளிகை மண்டபம்
கூட சாலைகள் கோபுரம் தெற்றிகள்
நீடு சாளர நீடரங் கெங்கணும்
ஆடல் மாதர் அணிசிலம் பார்ப்பன. ௪

அங்கு ரைக்கென் னளவப் பதியிலார்
தங்கள் மாளிகை யின்றொன் றுசம்புவின்
பங்கி னாள்திருச் சேடிப் பரவையாம்
மங்கை யார்அவ தாரஞ்செய் மாளிகை.[477] ௫

படர்ந்த பேரொளிப் பன்மணி வீதிபார், இடந்த ஏனமும் அன்னமும் தேடுவார், தொடர்ந்து கொண்ட வன் தொண்டர்க்குத் தூதுபோய், நடந்த செந்தாமரையடி நாறுமால். ௬

செங்கண் மாதர் தெருவில் தெளித்தசெங்
குங்கு மத்தின் குழம்பை அவர்குழல்
பொங்கு கோதையின் பூந்துகள் வீழ்ந்துடன்
அங்கண் மேவி அளறு புலர்த்துமால். ௭

உள்ளம் ஆருரு காதவர் ஊர்விடை
வள்ள லார்திரு வாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள். ௮

---

477. அங்கு உரைக்கு அளவு என் - அத்திருவாரூரின் மாண்பைக் கூறுதற்கு அளவை என்னை; என்னளவில் ஆகாது என்றபடி. அப் பதியிலார் தங்கள் மாளிகையில் - மேற்கூறிய ஆடல் மாதர்களாகிய பதியிலாருடைய மாளிகைகளுள்.—திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் பதிப்பு, 1932. இனி, இதுபோல்வன "திரு. வி. க, 1932." என்று மட்டும் குறிக்கப்படும்.

விளக்கம் மிக்க கலன்கள் விரவலால்
துளக்கில் பேரொலி யால்துன்னு பண்டங்கள்
வளத்தொ டும்பல ஆறு மடுத்தலால்
அளக்கர் போன்றன ஆவண வீதிகள். ௯

ஆர ணங்களே அல்ல மறுகிடை
வார ணங்களும் மாறி முழங்குமால்
சீர ணங்கிய தேவர்க ளேயலால்
தோர ணங்களில் தாமமுஞ் சூழுமால். ௧௦

தாழ்ந்த வேணியர் சைவர் தபோதனர்
வாழ்ந்த சிந்தை முனிவர் மறையவர்
வீழ்ந்த இன்பத் துறையுள் விரவுவார்
சூழ்ந்த பல்வே றிடத்தத் தொல்நகர். ௧௧

நிலம கட்கழ கார்திரு நீள்நுதல்
திலகம் ஒப்பது செம்பியர் வாழ்பதி
மலர்ம கட்குவண் தாமரை போல்மலர்ந்
தலகில் சீர்திரு வாரூர் விளங்குமால். ௧௨

அன்ன தொல்நக ருக்கர சாயினான்
துன்னு செங்கதி ரோன்வழித் தோன்றினான்
மன்னு சீர்அந பாயன் வழிமுதல்
மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே. ௧௩

மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்
விண்ணு ளார்மகிழ் வெய்திட வேள்விகள்
எண்ணி லாதன மாண இயற்றினான். ௧௪

கொற்ற ஆழி குவலயஞ் சூழ்ந்திடச்
சற்ற மன்னர் திறைகடை சூழ்ந்திடச்
செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம்மனுப்
பெற்ற நீதியுந் தன்பெயர் ஆக்கினான்.478 கரு

பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்
எங்கும் ஆகி இருந்தவர் பூசனைக்
கங்கண் வேண்டும் நிபந்தமா ராய்ந்துளான்
துங்க ஆகமம் சொன்ன முறைமையால். கசு

### வேறு

அறம்பொரு ளின்ப மான அறநெறி வழாமல் புல்லி
மறங்கடிந் தரசர் போற்ற வையகங் காக்கும் நாளில்
சிறந்தநல் தவத்தால் தேவி திருமணி வயிற்று மைந்தன்
பிறந்தனன் உலகம் போற்றப் பேர்அரிக் குருளை அன்னான்.

தவமுயன் றரிதில் பெற்ற தனிஇளங் குமரன் நாளுஞ்
சிவமுயன் றடைந்த தெய்வக் கலைபல திருந்த ஓதிக்
கவனவாம் புரவி யானை தேர்படைத் தொழில்கள் கற்றுப்
பவமுயன் றதுவும் பேறே எனவரும் பண்பில் மிக்கான்.

---

478. மனு பெற்ற நீதியையும் தன் பெயராலாக்கினான் என்க. மனுநீதி சோழன் என்னும் பெயர் பெற்றான் என்பது. மற்ற நலன்களுடன் 'இவனே மனு' என்று சொல்லுமாறு பழைய மனுநீதியைக் கடைப்பிடித் தொழுகுவதிலும் மனு என்றே தன் பெயரை ஆக்கிக் கொண்டான் என்க. ஈண்டுக் கூறிய மனுநீதி பழைய காலத்தது. இடைக்காலத்தில் மனுநீதி இடத்துக்கேற்றவாறு திரிக்கப்பட்டது. நாளடைவில் அதன் உருக்குலைக்கப்பட்டது. இப்பொழுது மனுவின் பெயரால் வழங்கப்படுவது ஸ்மிருதி. பண்டை மனுதர்மம் இறந்துபட்டது. மனுநீதிச் சோழன் பண்டை மனுநீதி வழிநின்று அரசு புரிந்தான் என்பது பின்னே வரும் வரலாற்றால் நனி விளங்கும்.—திரு. வி. க, 1932.

அளவில்தொல் கலைகள் முற்றி அரும்பெறல் தந்தை மிக்க
உளமகிழ் காதல் கூர ஓங்கிய குணத்தால் நீடி
இளவர சென்னுந் தன்மை எய்துதற் கணிய னாகி
வளரிளம் பரிதி போன்று வாழுநாள் ஒருநாள் மைந்தன்,

திங்கள்வெண் கவிகை மன்னன் திருவளர் கோயில்
நின்று, மங்குல்தோய் மாட வீதி மன்னிளங் குமரர் சூழக்,
கொங்கலர் மாலை தாழ்ந்த குங்குமக் குவவுத் தோளான்,
பொங்கிய தானை சூழத் தேர்மிசைப் பொலிந்து போந்
தான். உ0

பரசுவந் தியர்முன் சூதர் மாகதர் ஒருபால் பாங்கர்
விரைநறுங் குழலார் சிந்தும் வெள்வளை ஒருபால் மிக்க
முரசொடு சங்கம் ஆர்ப்ப முழங்கொலி ஒருபால் வென்றி
அரசிளங் குமரன் போதும் அணிமணி மாட வீதி. உக

தனிப்பெருந் தருமந் தானோர் தயாஇன்றித் தானை
மன்னன், பனிப்பில்சிந் தையினில் உண்மைப் பான்மை
சோதித்தால் என்ன, மனித்தர்தன் வரவு காணா வண்ண
மோர் வண்ண நல்ஆன், புனிற்றிளங் கன்று துள்ளிப்
போந்ததம் மறுகி னூடே. உஉ

அம்புனிற் றாவின் கன்றோர் அபாயத்தின் ஊடு
போக்கி, செம்பொனின் தேர்க்கால் மீது விசையினால்
செல்லப் பட்டே, உம்பரின் அடையக் கண்டங் குருகு
தாய் அலமந் தோடி, வெம்பிடும் அலறும் சோரும் மெய்ந்
நடுக் குற்று வீழும். உ௩

மற்றது கண்டு மைந்தன் வந்ததிங் கபாயம் என்று
சொல்தடு மாறி நெஞ்சில் துயருழந் தறிவ ழிந்து, பெற்ற
மும் கன்றும் இன்றென் உணர்வெனும் பெருமை மாளச்,

செற்றனன் செய்கேன் என்று தேரினின் றிழிந்து வீழ்ந்தான். உச

அலறுபேர் ஆவை நோக்கி ஆர்உயிர் பதைத்துச் சோரும்
நிலமிசைக் கன்றை நோக்கி நெடிதுயிர்த் திரங்கி நிற்கும்
மலர்தலை உலகங் காக்கும் மனுவெனும் என்கோ மானுக்
குலகிலிப் பழிவந் தெய்தப் பிறந்தவா ஒருவன் என்பான்.

வந்தஇப் பழியை மாற்றும் வகையினை மறைநூல் வாய்மை, அந்தணர் விதித்த ஆற்றால் ஆற்றுவ தறமே ஆகில், எந்தைஈ தறியா முன்னம் இயற்றுவன் என்று மைந்தன், சிந்தைவெந் துயரந் தீர்ப்பான் திருமறையவர் முன் சென்றான். உரு

தன்னுயிர்க் கன்று வீயத் தளர்ந்தஆத் தரியாதாகி, முன்னெருப் புயிர்த்து விம்மி முகத்தினில் கண்ணீர் வார, மன்னுயிர் காக்குஞ் செங்கோல் மனுவின்பொன் கோயில் வாயில், பொன்னணி மணியைச் சென்று கோட்டினால் புடைத்த தன்றே. உஎ

பழிப்பறை முழக்கோ ஆர்க்கும் பாவத்தின் ஒலியோ வேந்தன், வழித்திரு மைந்தன் ஆவி கொளவரு மறலி ஊர்திக், கழுத்தணி மணியின் ஆர்ப்போ என்னத்தன் கடைமுன் கேளாத், தெழித்தெழும் ஓசை மன்னன் செவிப்புலம் புக்க போது. உஅ

ஆங்கது கேட்ட வேந்தன் அரியணை இழிந்து போந்து, பூங்கொடி வாயில் நண்ணக் காவலர் எதிரே போற்றி, ஈங்கிதோர் பசுவந் தெய்தி இறைவ நின் கொற்ற வாயில், தூங்கிய மணியைக் கோட்டால் துளக் கிய தென்று சொன்னார். உகூ

மன்னவன் அதனைக் கேளா வருந்திய பசுவை நோக்கி, என்னிதற் குற்ற தென்பான் அமைச்சரை இகழ்ந்து நோக்க, முன்னுற நிகழ்ந்த எல்லாம் அறிந்துளான் முதிர்ந்த கேள்வித், தொன்னெறி அமைச்சன் மன்னன் தாளிணை தொழுது சொல்வான். ௩௦

வளவனின் புதல்வன் ஆங்கோர் மணிநெடுந் தேர்மேல் ஏறி, அளவில்தேர்த் தானை சூழ அரசுலாந் தெருவில் போங்கால், இளையஆன் கன்று தேர்க்கால் இடைப்புகுந் திறந்த தாகத், தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்தது இத் தன்மை என்றான். ௩௧

அவ்வுரை கேட்ட வேந்தன் ஆவுறு துயரம் எல்லாம், வெவ்விடந் தலைக்கொண் டாற்போல் வேதனை அகத்து மிக்கிங், கிவ்வினை விளைந்த வாறென் றிடருறும் இரங்கும் ஏங்கும், செவ்விதென் செங்கோல் என்னும் தெருமரும் தெளியும் தேறான். ௩௨

மன்னுயிர் புரந்து வையம் பொதுக்கடிந் தறத்தில் நீடும், என்னெறி நன்றால் என்னும் என்செய்தால் தீரும் என்னும், தன்னிளங் கன்று காணுத் தாய்முகங் கண்டு சோரும், அந்நிலை அரசன் உற்ற துயரம்ஓர் அளவிற் றன்றால்.479 ௩௩

வேறு

மந்திரிகள் அதுகண்டு மன்னவனை அடிவணங்கிச், சிந்தைதளர்ந் தருளுவது மற்றிதற்குத் தீர்வன்றால், தொந்

479 பொதுக்கடிந்து - பொதுமை நீக்கித் தனதாக்கி—திரு வி. க, 1932.

தலர்தார் மைந்தனைமுன் கோவதைசெய் தார்க்குமறை, அந்தணர்கள் விதித்தமுறை வழிநிறுத்தல் அறம் என்றார்.[480] ௫௪

வழக்கென்று நீர்மொழிந்தால் மற்றதுதான் வலிப் பட்டுக், குழக்கன்றை இழந்தலறுங் கோவுறுநோய் மருந்தாமோ, இழக்கின்றேன் மைந்தனைஎன் றெல்லீருஞ் சொல்லியஇச், சழக்கின்று நானிசைந்தால் தருமந்தான் சலியாதோ. ௫௫

மாநிலங்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த் தறங்காப்பான் அல்லனே. ௫௬

என்மகன்செய் பாதகத்துக் கிருந்தவங்கள் செய இசைந்தே, அன்னியன்ஓர் உயிர்கொன்றால் அவனைக் கொல் வேனுனல், தொன்மனுநூல் தொடைமனுவால் துடைப்புண்ட தெனும்வார்த்தை, மன்னுலகில் பெற மொழிந்தீர் மந்திரிகள் வழக்கென்றான்.[481] ௫௭

என்றரசன் இகழ்ந்துரைப்ப எதிர்நின்ற மதி அமைச்சர், நின்றநெறி உலகின்கண் இதுபோல்முன் நிகழ்ந்ததால், பொன்றுவித்தல் மரபன்று மறைமொழிந்த

---

480. மந்திரிகள் ஸ்மிருதி முறைப்படி கழுவாய் தேடுமாறு அரசனுக்கு அறிவுறுத்தினார்கள்.—திரு. வி. க, 1932.

481. தொன்மை மனுநூல் தொடை - பழைய மனுதர்ம சாத்திர ஒழுங்கு முறை. (தற்போது வழங்கும் மனு ஸ்மிருதி யன்று.) அரசர் மகிழுமாறு பொருளைத் திரித்துக் கூறுவது மந்திரிகள் வழக்கு.—திரு. வி. க, 1932.

அறம்புரிதல், தொன்றுதொடு நெறியன்றோ தொன்
னிலங்கா வலஎன்றார். ௩௮

அவ்வண்ணந் தொழுதுரைத்த அமைச்சர்களை முக
நோக்கி, மெய்வண்ணந் தெரிந்துணர்ந்த மனுவென்னும்
விறல்வேந்தன், இவ்வண்ணம் பழுதுரைத்தீர் என்றெரி
யின் இடைத்தோய்ந்த, செவ்வண்ணக் கமலம்போல்
முகம்புலர்ந்து செயிர்த்துரைப்பான். ௩௯

அவ்வுரையில் வருநெறிகள் அவைநிற்க அறநெறி
யின், செவ்வியஉண் மைத்திறநீர் சிந்தைசெயா துரைக்
கின்றீர், எவ்வுலகில் எப்பெற்றம் இப்பெற்றித் தாமிட
ரால், வெவ்வுயிர்த்துக் கதறிமணி எறிந்துவிழுந் தது
விளம்பீர்.[482] ௪௦

போற்றிசைத்துப் புரந்தரன்மால் அயன்முதலோர்
புகழ்ந்திறைஞ்ச, வீற்றிருந்த பெருமானார் மேவியுறை
திருவாரூர்த், தோற்றமுடை உயிர்கொன்றான் ஆதலினால்
துணிபொருள்தான், ஆற்றவுமற் றவற்கொல்லும் அதுவே
யாம் எனநினைமின். ௪௧

எனமொழிந்து மற்றிதனுக் கினியிதுவே செயல்
இவ்ஆன், மனம்அழியுந் துயர்அகற்ற மாட்டாதேன் வருந்
தும்இது, தனதுறுபேர் இடர்யானும் தாங்குவதே தருமம்
என, அநகன்அரும் பொருள்துணிந்தான் அமைச்சரும்
அஞ்சினர்அகன்றார். ௪௨

மன்னவன்தன் மைந்தனைஅங் கழைத்தொருமந் திரி
தன்னை, முன்னிவனை அவ்வீதி முரண்தேர்க்கால் ஊர்க

482. அவ்வுரையில் வருநெறிகளவை நிற்க - நின் கூறும் மறை மொழிகளிலுள்ள பிராயச்சித்த முறைகள் கிடக்க —திரு. வி. க, 1932

என, அன்னவனும் அதுசெய்யா தகன்றுதன்னூர் உயிர் துறப்பத், தன்னுடைய குலமகனைத் தான்கொண்டு மறு கணைந்தான். ௪௩

ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளானென் பதும்உணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி உறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்.[483] ௪௪

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரி யாது, மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைசொரிந்தார், அண்ணலவன் கண்ணெதிரே அணி வீதி மழவிடைமேல், விண்ணவர்கள் தொழநின்றான் வீதி விடங் கப்பெருமான்: ௪௫

சடைமருங்கில் இளம்பிறையுந் தனிவிழிக்குந் திரு நுதலும், இடமருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூத கணம், புடைநெருங்கும் பெருமையும்முன் கண்டரசன் போற்றிசைப்ப, விடைமருவும் பெருமானும் விறல்வேந் தற் கருள்கொடுத்தான். ௪௬

அந்நிலையே உயிர்பிரிந்த ஆன்கன்றும் அவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்றும் மந்திரியும் உடன்எழலும்
இன்னபரி சானென்என் றறிந்திலன்வேந் தனும்யார்க்கும்
முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ. ௪௭

அடிபணிந்த திருமகனை ஆகமுற எடுத்தணைத்து
நெடிதும்கிழ்ந் தருந்துயரம் நீங்கினான் நிலவேந்தன்

---

483. அருமந்த அரசாட்சி அரிதோ எளிதோ - நல்ல அரசாட்சி யானது அரியதே யன்றி எளிதன்று. மற்று, தான் அசை.—ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகளது 1890-வருஷப் பதிப்பு.

மடிசுரந்து பொழிதீம்பால் வருங்கன்று மகிழ்ந்துண்டு
படிநனைய வரும்பசுவும் பருவரல்நீங் கியதன்றே. சஅ

பொன்தயங்கு மதிலாரூர்ப் பூங்கோயில் அமர்ந்தபிரான்
வென்றிமனு வேந்தனுக்கு வீதியிலே அருள்கொடுத்துச்
சென்றருளும் பெருங்கருணைத் திறங்கண்டு தன்னடியார்க்
கென்றும்எளி வரும்பெருமை எழுலகும் எடுத்தேத்தும்.

இனையவகை அறநெறியில் எண்ணிறந்தோர்க் கருள்புரிந்து
முனைவரவர் மகிழ்ந்தருளப் பெற்றுடைய மூதூர்மேல்
புனையும்உரை நம்மளவில் புகலலாந் தகைமையதோ
அனையதனுக் ககமலராம் அறவனார் பூங்கோயில். [484] ௪௦

484. அறவனாராகச் சிவபெருமா னிருத்தலினால் அவ்வூரில் அறக்கோல் நடைபெறற தென்க.

வாயிற கடைமணி நடுநா நடுங்க - ஆவின் -
கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியில் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே.

- சிலப்பதிகாரம், 20. வழக்கு, 53-56.

(இது கண்ணகியின் கூற்று. கண்ணகியின் பதி புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினம். காவிரிப்பூம்பட்டினம் சோழமன்னர் தலைநகரங்களுள் ஒன்று. 'புதல்வனை ஆழியில் மடித்த' இடம் திருவாரூர். திருவாரூரும் சோழமன்னர் தலைநகரங்களுள் ஒன்று. திருவாரூரையும் புகாரையும் ஆண்ட மன்னர் சோழராதலின், சோழர் தம் மாண்பு கூறப் புகுந்த கண்ணகி 'புதல்வனை ஆழியில் மடித்த' அருஞ்செயலையுங் குறிப்பிடலானாள்.)

குறைவி லுடம்பரிந்த கொற்றவன்முன் வந்த
கறவை முறைசெய்த காவலன்காண் அம்மானை.

- சிலப்பதிகாரம், 29. வாழ்த்து, அம்மானை வரி.

மகனை முறைசெய்த மன்னவன்.

- மணிமேகலை, 22. சிறை, 210.

கறவைக்கன்று ஊர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்.

- பழமொழி, 93.

—திரு. வி. க, 1932.

## 2. மநுநீதிகண்ட புராண வசனம்[485]

தமிழகத்துள்ள மூன்று நாடுகளுள் மிகவுஞ் செழியது சோழநாடு. அந் நாட்டைக் காவிரி என்றும் வளஞ்செய்த வண்ணமா யிருக்கிறது. காவிரி பலமுகங் கொண்டு கால்வாய்கள் வழியே ஓடிப் பாய்ந்து சோழநாட்டை நீரால் நிரப்பலால் அந் நாட்டிற்கு நீர்நாடு (புனல்நாடு) என்றொரு பெயரு முண்டு. காவிரியால் அந்நாட்டு மருத நிலங்கள் நலம்பெறுதலால், அந் நாட்டில் எங்கணும் மருத நிலப் பொருள்கள் கொழுமையாக விளைகின்றன. அந் நாட்டு மன்னர்கள் செங்கோன்மையிலும், வண்மையிலும், வீரத்திலும், பிறவற்றிலும் பேர்பெற்றவர்கள். அவர்கள் புலிக்கொடி இமயத்தில் பொறிக்கப்பெற்ற தென்றால், அவர்கள்தம் ஆட்சித் திறங்களை விரித்துக் கூறவேண்டுவதில்லை.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த சோழநாட்டில் பழமையிற் சிறந்து விளங்குவது திருவாரூர் என்னுந் திருநகரம். அத் திருநகரில் திருமகள் என்றும் வீற்றிருப்பாள். அங்கே அறவோர்களும் துறவோர்களும் நீங்காம விருப்பார்கள். அவ்வூரில், திருப் பதிகங்களைக் கிள்ளைகள் பாடும்; பூவைகள் கேட்கும்.

திருவாரூரில் பரவையார் திருவவதாரஞ் செய்த திருமாளிகை ஒன்றிருக்கிறது. அவ் வம்மையார் வன்றொண்டரை மணந்து இல்வாழ்க்கை நடாத்திய பெருமை

485. 'நவசக்தி' ஆசிரியர் ஸ்ரீ திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களது—1932-ம் வருஷத்திய பெரிய புராணப் பதிப்பில் உள்ள—இவ்வசனம் இங்கு இந்நூலைப் பயில்பவர்க்கு அநுகூலமாக அச்சிட்டிருக்கிறது. இதில் முதற்பத்தி நாட்டுச்சிறப்பின் வசனம்.

யுந் திருவாரூருக் குண்டு. அவ் விருவர்க்கும் நேர்ந்த புலவி தீர்க்கவேண்டித் தியாகேசப் பெருமானே திருவாரூர்த் திருவீதியில் தூது சென்றிருக்கிறார். இப்பெற்றி வாய்ந்த திருவாரூரில் என்றுந் தெய்வ மணமுஞ் சைவ மணமுங் கமழ்ந்துகொண்டே யிருக்கும்.

இத் திருவாரூரை ஆண்ட மன்னர்களுள் ஒருவர் மனுநீதிகண்ட சோழர் என்பவர். அவர் அநபாயச் சோழரின் குல முதல்வர்; எல்லா உயிர்கட்குங் கண்ணும் உயிரும் போன்றவர்; ஊனமில் வேள்வி பல செய்தவர்; புற்றிடங் கொண்ட பெருமானுர்க்குப் பூசனை முதலியன முறைப்படி நிகழ்த்தியவர். அம்மன்னர் ஆட்சி அறம் பொருள் இன்பம் என்னும் பேற்றிற்கு அடிப்படையாக நிலவி யிருந்தது.

அவ் வரசர்பெருமானுக்கு ஓர் அரிய புதல்வன் பிறந்தான். அவனுக்கு இளமையில் பல கலைகளும், குதிரை யேற்றம், யானை யேற்றம், தேரூர்தல், விற்பயிற்சி முதலியனவும் பயிற்றுவிக்கப்பட்டன. அவன் பிறை யென வளர்ந்து இளங்கோ வாகும் பருவத்தை அடைந்தான். அப் பருவத்தில் அவன் தேரி லேறி அரசிளங்குமரர்களும் சேனைகளும் மற்றவர்களும் புடைசூழ்ந்து வரத் திருவீதி உலா வருவது வழக்கம். வழக்கம்போல ஒருநாள் அவன் உலா வரலானான். அன்று வழியில் ஓரிடத் திருந்த பசுங் கன்று ஒன்று துள்ளிப் பாய்ந்து தேருருளையில் அகப்பட்டு இன்னுயிர் துறந்தது. அக் காட்சிகண்ட தாய்ப்பசு அங்கே ஓடி வந்து, கதறிக் கதறித் துடித்துத் துடித்துக்கீழே விழுந்தது. அதன் கதறலும் துடிப்பும் வீழ்ச்சியும் இளங்கோவின் நெஞ்சைப் பிளந்து, அவனைத் தேரினின்றுஞ் சாய்த்துத் தள்ளின. தள்ளுண்ட இளங்கோ, மெய் விதிர் விதிர்ப்ப,

வாய் குழற, நாவறளத் தாய்ப் பசுவைப் பார்க்கிறான்; கன்றைப் பார்க்கிறான்; கண்ணீர் உகுக்கிறான்; அலமருகிறான்; பெருமூச்சு விடுகிறான்; 'அந்தோ! அறக்கோலோச்சும் என் தந்தைக்கு நான் எற்றுக்கோ பிள்ளையாய்ப் பிறந்தேன்' என்கிறான்; 'மனுவென்னும் பெரும் பேர் தாங்கும் அவருக்கு இப் பெரும்பழி சுமத்தவோ நான் பிறந்தேன்.' என்கிறான்; அழுகிறான். அழுது அழுது, 'இப் பெரும் பாவத்திற்குக் கழுவாயுளதோ? உளதாயின் இக் கொலையை என் தந்தை அறியா முன்னரே அக் கழுவாய் தேடுவது நலன்' என்று சொல்லிக்கொண்டே, அவன் அந்தணரிருக்கை நோக்கிச் சென்றான். வாயில்லாப் பசு என்ன செய்தது?

பசு, மனங்கலங்க, முகத்தில் கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருக, நெருப்புயிர்த்து, மன்னுயிர்களைத் தன்னுயிர் போற் காக்கும் மனுச்சோழ மன்னரின் அரமனை நோக்கி விரைந்து நடந்தது; நடந்து அரமனை அடைந்தது; அடைந்து மனைவாயிலில் தூங்கிக்கொண்டிருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் புடைத்தது. அம் மணியோசை அரசர் பெருமான் செவியில் விழுந்தது. விழுந்ததும், அவர் திடுக்கிட்டு அரியாசனத்தினின்றுங் குதித்து வாயிலை அடைந்தார். வாயில் காப்போர், மன்னர் பிரானை வணங்கி, "இப்பசு தன் கோட்டினால் இம் மணியை அடித்தது" என்றார். மன்னர் பெருமான் சினந்து அமைச்சர்களை நோக்கினார். அமைச்சருள் ஒருவன் நிகழ்ந்ததைக் கூறினான். கருணை மன்னர் ஆவுறு துயரம் எய்தினார்; நஞ்சு தலைக்கேறினா லென மயக்குற்றார்; விழுந்தார்; எழுந்தார்; பசுவைப் பார்க்கிறார்; "என்னரசாட்சி நன்று! நன்று!!" என்று ஏங்குகிறார்; இரங்குகிறார்.

இவ்வாறு துயருறும் வேந்தரை அமைச்சர்கள் பார்த்து, "அரசே! சிந்தை தளரற்க. இப் பழிக்குக் கழுவாயுண்டு. அதைச் செய்வதே முறை" என்று சொன்னார்கள். அதற்கு அரசர், "அமைச்சர்களே! நீங்கள் கூறுங் கழுவாய்க்கு யான் இசையேன். அக் கழுவாய் கன்றை இழந்தலறும் பசுவின் நோய்க்கு மருந்தாகுமோ? மைந்தன் பொருட்டுக் கழுவாய் தேடினால் அறக்கடவுள் சலிப்புறாதோ? உயிர்களுக்குத் தன்னாலாவது, பரிசனங்களாலாவது, பகைவர்களாலாவது, கள்வர்களாலாவது, பிற உயிர்களாலாவது விளையும் ஐந்து பயத்தையுந் தீர்த்து அறத்தைக் காப்பவனல்லனோ அரசன்? இன்று உங்கள் உரைக்கு யான் இசைந்து, நாளை வேறொருவன் ஓர் உயிரைக் கொன்றால், அவனுக்கு மட்டுங் கொலைத் தண்டனை விதிக்கலாமோ? 'பண்டை மனுவின் நீதி, பாவி மனுவால் தொலைந்தது' என்னும் பழிமொழி உலகில் நிலவாதோ? நீங்கள் மந்திரிகள் வழக்கப்படி மொழிந்தீர்கள்!" என்று இயம்பினார். மன்னரின் மனோநிலையை யுணர்ந்த மந்திரிகள் அவரைப் பார்த்து, "இத் தகைய நிகழ்ச்சி முன்னரும் நிகழ்ந்துள்ளது. இதன் பொருட்டு அருமைப் புதல்வனை இழப்பது முறையாகாது. கழுவாய் தேடுவதே முறை" என்று வேண்டி நின்றார்கள். சோழர் பெருமான் "இத்தகைய நிகழ்ச்சி எங்கே நடைபெற்றது? எங்கே எந்தப் பசு துன்பத்தால் மணியடித்தது? ஆகவே, பசு உற்ற துயரை யானும் உறுதல்வேண்டும். திருவாரூரில் பிறந்த உயிரை யன்றோ என் மைந்தன் கொன்றான்? அவனைக் கொல்வதே தகுதி" என்று கூறி அவ்வாறு செய்ய உறுதிகொண்டார். அவ்வுறுதி கண்ட அமைச்சர்கள் நடுக்குற்று அகன்றார்கள். நீதிமன்னர் தம் ஒரு

புதல்வனை வரவழைத்து, ஓர் அமைச்சரை விளித்து, "இவனைக் கன்றிறந்த இடத்திலே கிடத்தித் தேரைச் செலுத்தக் கடவை" என்று ஆணையிட்டார். அவ் வமைச்சர் அவ் வாணைவழி நின்று கடனாற்ற ஒருப்படாது, அவ் விடத்தி னின்றும் அகன்று, தம்முயிரை மாய்த்துக் கொண்டார். அதற்குமேல் அரசர் பெருமான் தம்முடைய குலமகனைத் தாமே அழைத்துச் சென்று, எண்ணியவாறு செய்து முடித்தார்.

கருணை வேந்தரின் செயற்கருஞ் செயல்கண்டு மண்ணவர்கள் கண்மழை பொழிந்தார்கள்; விண்ணவர்கள் பூமழை சொரிந்தார்கள். வீதிவிடங்கப் பெருமான் விடைமேல் எழுந்தருளிச் சோழர் பெருமானுக்குக் காட்சி வழங்கினார். சோழர் பெருமான் ஆண்டவனைத் தொழுது இன்பக் கடலில் திளைத்தார். அந் நிலையில் பசுவின் கன்று எழுந்தது; அரசிளங்குமரனும் விழித்தெழுந்தான்; அமைச்சரும் உயிர்பெற் றெழுந்தார். தம்மை வணங்கிய புதல்வனை மார்புறத் தழுவிச் சோழவேந்தர் வரம்பிலா மகிழ்வெய்தினார். பாலூட்டிய கன்றைக் கண்டு பசு துன்பம் நீத்தது. தியாகேசப் பெருமான், வெற்றிவேந்தர்க்கு வீதியிலே திருவருள் புரிந்த கருணைத் திறத்தை ஏழுலகமும் வியந் தோதின.

இங்ஙனம் அறவழி நின்று ஒழுகும் மெய்யன்பர்கட்கு ஆண்டவன் அருள் புரியும் பெருமை வாய்ந்த திருவாரூரின் சிறப்பு எம்மொழியில் எவ் வளவில் அடங்குவதாகும்? அத் திருநகரினுக்குப் புற்றிடங் கொண்டவர்தம் பூங்கோயில் அகமலராகப் பொலிகிறது.

# 3. திருவாரூர் தியாகராஜர் கோவில் சுவரில் பொறித்துள்ள மநுச்சோழ சரித்திரம்[486]

---

3........கண்டருளா நிற்ப ஸ்ரீகாரியும் சுப்பிர

4. மங்கல • முடையான் மாதவந் இரவியாந மாகாலைய மூவெந்த வேளார் விண்ணப்பத்திநால் பதிபாத மூலப் பட்டுடை பஞ்சாசாரிய [தேவ] கந்மி [க]ளுக்கும் கொயிலங்.....யார்க்கும் திருவாய் மொழி தெருளினபடி நம் ஏவலால் ஹுமொகுராஜநுஞ் செகிற ஸமயத்து வத்ஸந் மநு தந் வத்ஸந் ஏறிவருகிற [தெரில்] பசுவி[ன் கன்ற]கப்பட்டு ம்ருதமாய்ப்பட அதிந் மாதாவாந ஸுரபி கண்டு து:க்கித்து உத்தமவிந் வாச(ல்)லில் மணி[யை]ய யெறிய [அது கெ]ட்டு மநு தந் மந்த்ரி இங்கணாட்டு பாலையூருடையாந் உபய குலாமலனைப் பார்த்து நி(ய்) செந்[று] இதி[னை] அறிந்து..................[வாயிற்]ப் புறத்து ஒரு [பசு] மணி எறியாநிந்றிது எந்று சொல்ல அது கெட்டு மநு புறப்பட்டு பசுவையும் பட்டுக்கிடந்த.............படி கண்டு தந் வத்ஸந் ஏறிந தெரி-

5. லே பட்டமைய் அறிந்து அக்கந்றுக்கு நோக்கத் தந் வத்ஸந் ப்ரியபுத்ர(ந்) தனை தெரிலே ஊர்ந்து கு[டு]க்க வெந்று உபயகுலாமலநுக்குச் சொல்ல அவந் ஸஞ்தாபத்தொடும் புறப்பட்டு தந் செவிகளை[த்

---

486. No. 456. A. R. No. 164 of 1894 'On the North Wall of the Second Prakara of the Tyagaraja Temple at Tiruvarur Negapatam Taluq Tanjore District.

[From page 175 of Vol. V of South Indian Inscriptions (Texts)]

பாயிரம் 2-வது அடிக்குறிப்பைப் பார்க்க.

தரையி]லெ குடைஞு கொடு பட்டது கண்டு ஊா
பாலகந் புகுஞு உஷயகுலாமலந் தந் செவிகளோ குடை
ஞு கொண்டு ஒ்: விதநாய் மறு தாநெ புறப்பட்டு
தந் வாதுநை தாநெ தெரி(ல்) லெ ஊர் ஞு குடுக்க
அப்பொதெ நாம் அவநை சுறு ஹரி ஹித்து கந்றுக்கும்
மஞிரிக்கும் மறு வாதநாக்கும் ஜிவந் குடுக்க அது
கண்டு மறு ஸநொஷித்து கந்றிநை எடுத்து கொண்டு
பசுவுக்கு காட்டிக்குடு..........ாஹிஷெகம் பண்ணி
இவநுக்கு உஷயகுலாமலந் மகந் வீயஉநை மஞிரி
யாக்கி இவனுக்கு தந் வாதுந் மாளிகை............மங்
கல.........முநும் குடுத்து மறுவும் உ—
6. ஷயகுலாமலநும் தவஷிநை தலைநிந்றமையில்
பாலையூர் உடையாந் உஷயகுலாமலந் வம்ஸத்தா
நாகிய பாலையூர் உடையார் சஷிர [செகரநாதி விடங்க]
நாந குலொத்துங்க—ஸொஷ ஊஹாஸஷிவாண.......
வம்ஸாதி ஆக வருகிற மாளிகை மனை பழெயபடி
மாளிகை ஆக [எடு]த்து குடிவைய்ப்பிப்பதாக நாம்
சொல்ல .....

## 4. மூவர் அம்மானைப் பாடல்[487]

ஈசன் பசுவாகி எமன்இளங் கன்றாகி[488]
வீசுபுகழ் ஆரூரின் வீதிவந்தார் அம்மானை
வீசுபுகழ் ஆரூரின் வீதிவந்தா ராமாகில்
காசளவு பாற்றான் கறக்குமோ அம்மானை
கன்றை உதைகாலி கறக்குமோ அம்மானை.

487. பாயிரம் 2-வது அடிக்குறிப்பைப் பார்க்க.
488. தியாகராஜர் குறவஞ்சி 4-வது வரி பார்க்க.

# 5. தியாகராஜர் குறவஞ்சி[489]

## அகவல்

அறுநெறி தழைக்க வையகம் புரக்கும்
தினகர குலத்தில் திகழ்மநு வேந்தன்
மெய்யன் புலகில் விளங்கிட வேண்டி
ஐயன் பசுவாய் அந்தகன் கன்றாய்[490]
அணிமுடி நெடிய அம்பொன்வீ தியிலே
மணிமுடி மன்னர் வருநெருக் கத்தில்
அன்றர சிளங்கன் றரியதேர்க் காலில்
கன்றரை படவே கபிலையுங் கதறி
செம்பியன் அரசு செலுத்திய மணியைக்
கொம்பினால் அசைக்கக் கொற்றவன் நடுங்கி
முன்னைநாள் விதியின் முறைமையோ இதுதான்
என்னகா ரணமென் றியம்பவே அமைச்சன்
ஆவின்மெய்த் துயரம் அரசனுக் குரைக்கப்
பாவியே னிந்தப் பழிகழி வதற்கு
இளவர சனையூர்ந் திடுவதே வழக்கென்
றளவிலாக் குறையா லமைச்சனை யனுப்ப
மந்திரி யரசன் மதலைதன் முகத்தில்
எந்தென உரைப்போ மென்றுயி ரிழந்த
சேதிகேட் டரசன் சிவாய நமவென்
றோதியஞ் செழுத்தை உளந்தளர்ந் துருகி

---

489. பாயிரம் 2-வது அடிக்குறிப்பைப் பார்க்க. தஞ்சாவூர்ப் பிரதியின் பாடத்தோடு மஹா மஹோபாத்தியாயர் டாக்டர் ஸ்ரீ உ. வே. சுவாமிநாதையரவர்கள் அன்புடன் உதவிய இருபிரதிகளின் பாடங்களையும் ஒத்துப்பார்த்து இது இங்கு அச்சிடப்பட்டிருக்கிறது. இது 'திருவாரூர்க் குறவஞ்சி' என்றும் வழங்குகிறது.

490. மூவர் அம்மானைப்பாடல் பார்க்க.

துடரிளம் பசுவின் துயர்க்குமெய்ச் சுதனும்
படர்புகழ் அமைச்சன் பழிக்குநா னென்றே[491]
உன்னியே மகனை யூர்ந்தபின் னுடனே
தன்னுயிர் மாய்க்குந் தகைமைகண் டிரங்கி
பொன்னிலத் தமரர் பூமழை பொழிய
இந்நிலத் தவர்கள் இருகணீர் சொரிய
செந்திரு மாயன் திசைமுகன் முனிவர்
இந்திரன் முதலோர் இருபுடை நெருங்க
தவளமால் விடைமேல் தண்ணிலா வணிந்த
பவளவார் சடையார் பரிதிமன் னவன்முன்
ஆட்சியாய்த் தோன்ற அனைவருங் காணக்
காட்சியே கொடுக்கும் கமலநா யகர்முன்
ஆவிளங் கன்றும் அமைச்சனும் மநுவின்
கோவிளங் கன்றும் கூடவே எழுந்து
சுந்தரக் கன்றும் சுரந்தபா லுண்ண
மைந்தனு மமைச்சனு மன்னனை வணங்க
மன்னனு மகிழ்ந்து மழவிடைப் பாகன்
பொன்னடி வணங்கவப் பொழுதுள மிரங்கி
அரசனே உன்றன் அன்புகண் டுகந்தோம்
வரிசைசேர் புவியில் மநுநெறி நடத்தி
உன்பெருங் கீர்த்தி உலகினில் நிறுத்தி
பின்புபே ரின்பம் பெறுவை நீயென
திருவருள் புரிந்த தேவர கண்டர்
அருமறைப் பொருளா யமர்ந்ததி யாகர்.

---

491. பாயிரம் 9-வது அடிக்குறிப்பைப் பார்க்க.

## 6. ஜீவகாருண்ய ஒழுக்கம் முதற் பதிப்பின் தலைப்பும் அறிவிப்பும்[492]

உ

அருட்பெருஞ்சோதி

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும்

சிதம்பரம்

# இராமலிங்க பிள்ளையவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# சீவகாருண்யவொழுக்கம்.

இஃது

கூடலூர் டிஸ்ட்ரிக்ட்-இஸ்கூல் இனிஸ்பெக்டர்

## சீ - இரங்கசாமி பிள்ளை

புதுவைக்கடுத்த

வைத்திருப்பம் - மே - அப்பாசாமி நாயகர்

இவர்கள் கேட்டுக்கொள்ள

கலவை - முத்தியாலு செட்டியார் குமாரர்

## சங்கர செட்டியார் முயற்சியில்

பு - பெ - கிருஷ்ணசாமி நாயகரால்

சபா - மாணிக்க பிள்ளை - அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

---

492. 374-வது அடிக்குறிப்பைப் பார்க்க.

உ.

கடவுடுணை.

கல்வி அறிவு ஒழுக்கங்களாலான்ற

## பெரியோர்களுக்கு - அறிவிப்பு.

புண்ணியவான்களாகிய சில தீர்க்கதரிசிகள் உலகோபகாரமாகச் செய்தருளிய நூல்களைச் சிற்சிலர் தாங்கள் மாத்திர முணர்ந்து நற்கதியடைய விரும்பிப் பொருமை யுள்ளத்தராய் வெளிப்படுத்தக் கூடாதென்று சொல்லித் தாங்களுந் தெரிந்துகொள்ளாமல் சிதலுக்கிரையாக்குவதற்கு வைத்திருக்கின்றார்கள் அப்படிச் செய்வது நீதியல்ல ஆதலால் யாவருமுணர்ந்து நற்கதியடைதற்கேதுவாக ஷை நூல்களை வெளியிடுவதே உத்தமம்.

மேலும் ஒருவன் றானீன்ற பெண்மகவை யயலானுக்கீவதன்றித் தானே மணஞ் செய்துகொள்வானோ இக்கருத்தைப் பற்றியே பெரியோர்கள் பின்சென்று நின்றார்கள் போலும்.

க அ எ உ ஆ

அன்பன் - பு - பெ - கிருஷ்ணசாமி

சீவகாருண்ணிய வொழுக்கமும் இன்னும் பற்பல நூல்களும் புதுவை - ம-ா-ா-ஸ்ரீ கலவை சுப்பராய செட்டியார் காலேஜிலிருக்கும் பு - பெ - கிருஷ்ணசாமி நாயகரிடத்தில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

[illegible]

## 7. கையெழுத்து மூலத்தின் ஸ்வரூபம்[493]



493. அளவு நூலில் ஒன்று. 189-வது பக்கம் பார்க்க. சுவாமி



களின் கையெழுத்து மூல ஏடுகளைப் போட்டோ எடுத்தபின் வரை



பவர் அதைத் துப்புரவு செய்தபோது தவறுதலாக 247-ம் பக்கம்



21-ம் வரியில் 'ண்' இல் ஒரு சுழியும், 250-ம் பக்கம் முதல் வரி



யில் 'க' உம், 22-ம் வரியில் 'ம்' உம் மறையவும்; 252-ம் பக்கம்

[illegible]

13-ம் வரியில் இரட்டைக்கொம்பு அடிபட்டது அடிபடாததாகத்



திரிபுபடவும்; ஐந்தாறு இடங்களில் எழுத்துக்களின் வடிவம் அற்பவேற்றுமையடையவும் நேர்ந்தது வருந்தத்தக்கது. இவை தவிர்த்து இதில் வேறு குற்றங்குறை யில்லை.

# 8. பிரயோக விளக்கம்[494]

அசுத்த மாயா கரண விளக்கம்-The Atmic light dimly seen through gross matter as mind.

அருள் - God's Grace in action.

அருள் சுதந்தரம் - Freedom inherent in Grace.

அருள் தேகம் - The Divine Body or Form being Spiritual Attainment.

அறிவு நூல் - Science.

ஆகாமிய கர்த்தா - One acting in Atmic freedom.

ஆகாமிய முயற்சி ஆகாரம் - Food Secured by exercise of Atmic freedom.

ஆசார சங்கற்ப விகற்பங்கள் - Conducts resolves and doubts.

ஆன்ம உருக்கம் - Atmic compassion.

ஆன்ம சுதந்தரம் - Atmic freedom.

ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை - The inherent Atmic attitude of Universal Brotherhood.

ஆன்ம லாபம் - The Atmic End or Summum Bonum.

ஆன்ம விளக்கம் - The Atmic grace or enlightenment.

இயற்கை இன்பம் - The Bliss inherent in God.

இயற்கை உண்மை - The Being inherent in God.

இயற்கை விளக்கம் - The Light or Grace inherent in God.

உண்மைப் பொது நெறி - That Religious System which is the Greatest Common Denominator.

ஏகதேசம் - Fraction.

ஒன்றுன விலக்கு - Absolute prohibition.

சங்கம் - Order, Brotherhood or Association.

சத்திய ஞானசபை - The Institution symbolising and for attaining the Eternal Religious Truth.

சத்திய தர்மச்சாலை - The Institution for performing the

---

494. பாயிரம் 12-வது அடிக்குறிப்பைப் பார்க்க.

Eternal Religious Duty in and through Atmic Compassion.

சத்தியம் - The Eternally Operative.

சத்விசாரம் - Prayerful meditation.

சமரசம் - Reconciliation or Harmony.

சன்மார்க்கம் - The Religious Path that leads to Perfection.

சாதனம் - The Religious Practice as distinguished from the Religious End or Attainment.

சாத்தியம் - The Religious End or Attainment as distinguished from the Religious Practice.

சித்தி - The Attainment.

சித்திவளாகம் - The Institution symbolising and for attaining the Religious End or Perfection.

சிற்சத்தி - The Active Light of God.

சுத்தம் - Transcending or Inclusive.

ஜீவகாருண்ய ஒழுக்கம் - The Religious Conduct consisting in the active relief of suffering in and through Atmic Compassion.

ஜீவகாருண்யம் - Atmic compassion or Compassion for suffering jeevas.

தயாவடிவு - Being Compassion itself.

நியதி ஆகாரம் - Ordained food.

பங்கி - Parcel.

பரம்பரை ஆகாரம் - Traditional or habitual food.

பரோபகாரம் - Atmic service.

பிராரத்தம் - Prenatal conduct operating as cause.

பூதகாரிய தேகங்கள் - Bodies resulting from elemental Combination.

முத்தி - The Deliverence.

வழிபாடு - Worship consisting in the growing realisation of the Bliss inherent in God.

# 9. இப்பதிப்பின் சிறப்பு

1. இதுவரையில் வெளிவராத பலப்பல அரும் பகுதிகளும் சுவாமிகள் கை எழுத்திலுள்ள திருப்பாடல்கள் முதலியவற்றின் போட்டோப் பிரதிகளும் இப்பதிப்பில்தான் முதல்முதலாக வெளி வருகின்றன.
2. இப்பதிப்பில் வெளி வரும் பகுதிகளில் அடங்கியவை எல்லாம் சுவாமிகள் திருக்கரத்தால் எழுதிய தெய்வத் திரு ஏடுகள், அவர்களை அடுத்திருந்த பேரன்பர்களின் கை எழுத்துப் பிரதிகள் முதலியவற்றினின்றும் எடுத்த சுத்த பாடங்களாகும்.
3. இப்பதிப்பின் ஒவ்வொரு பகுதியும் நுநுவித் துநுவி எழுத்தெழுத்தாக நுட்பமாக ஆராயப்பட்டு, சிறு பிள்ளைகளும் தெரிந்து கொள்ளக்கூடிய ஓர் ஒர் பொருத்தமான முறையில் பாகுபாடு செய்து ஏராளமான ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு வெளிப்படுத்தப் படுகிறது.
4. இப்பதிப்பு, உயர்ந்த காகிதத்தில், நல்ல திருத்தமான வகையில், திறமான கட்டடத்தோடு, அழகான அளவில், அடக்கவிலையில், பகுதி பகுதியாகத் தொடர்ந்து அச்சிடப்பட்டு வருகின்றது.
5. இப்பதிப்பு ஆரம்பித்த 1931-ம் வருஷம் முதல் இது வரையில் பின் வரும் ஆறு பகுதிகள் வெளிவந்துள்ளன:—

| | |
|---|---|
| கீர்த்தனைப் பகுதி (2-ம் பதிப்பு) | உபதேசப் பகுதி |
| வசனப் பகுதி (2-ம் பதிப்பு) | திருமுகப் பகுதி |
| வியாக்கியானப்பகுதி | தனிப்பாசுரப் பகுதி |

இதைக் குறித்த எச்சரிக்கையைப் பாயிரம் 4-ம் பக்கம் பார்க்க.

---

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

53-56, *பவழக்காரத் தெரு, மண்ணடி, சென்னை.*